

மதுரா

# மண்ணுக்கு ஒரு முத்தம்

# அணிந்துரை

மதுரா - இனிய நண்பர். இளம் தலை முறை எழுத்தாளர்களில், 'வரலாற்றுக்கதை எழுதுபவர்' என்ற தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்கிறார்.

இவருடைய சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள் ஏராளமான பரிசுகளைப் பெற்றுள்ளன.

ஒளிமிக்க எதிர்காலம் நோக்கித் தம் எழுத்துலகப் பயணத்தை அமைத்துக் கொண்டு, சிறந்த எழுத்துகளைப் படைத்துவரும் மதுரா, 'மண்ணுக்கு ஒரு முத்தம்' என்னும் இந்த நவீனத்தையும் சிறப்பாகவே எழுதியுள்ளார்.

கவிஞர் கண்ணதாசன் எழுதிய 'ஊமையன் கோட்டை' நவீனம், ஊமைத்துரையின் விடுதலையில் ஆரம்பமாகிறது. அந்த விடுதலைக்கான பகீரதப் பிரயத்தனங்களைக் களமாகக் கொண்டு மதுரா இந்த 'மண்ணுக்கு ஒரு முத்தம்' நவீனத்தைப் படைத்திருக்கிறார்.

வீரபாண்டிய கட்ட பொம்மனைத் தூக்கிலிட்டு, பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை வெள்ளையர் சேனை வீழ்த்தித் தரைமட்டமாக்கிய நிலையில், அப்பகுதி மக்களின் வாழ்க்கைப் போராட்டம் எப்படியிருந்தது என்கிற சூழ்நிலையை விவரித்தபடி இந்த நவீனம் துவங்குகிறது.

குதிரைமோகினி, கடற்கரை நாயக்கர், இளைய பாண்டியன் என்று அற்புதமான சில பாத்திரங்களை வைத்துக் கொண்டு, ஊமைத் துரையின் விடுதலைக்காகப் பாடுபட்டிருக்கிறார் மதுரா.

இடையில், திருநெல்வேலிச் சீமையில் பரவலாகப் பேசப்படுகிற இரு கர்ணபரம்பரைக் கதைகளை மிகப் பொருத்தமான சூழ்நிலையில் விவரிக்கிறார். புதிய தகவலாக இருப்பதோடு அவை, இந்த நவீனத்திற்கு ஓர் அர்த்தமும் அழுத்தமும் சேர்க்கின்றன.

நல்ல தமிழ்நடை - தெளிவான கதைப்போக்கு - தேவையற்ற வருணனைகள் ஏதும் இல்லை, படிக்க ஆயாசம் தட்டாது. விறு விறுப்பாகச் செல்லும் உத்தி... இவற்றால் இக்கதை மெருகேறி மிளிர்கிறது.

மதுராவின் 'மண்ணுக்கு ஒரு முத்தம்' தமிழ் மக்களின் நெஞ்சில் அகலாது பதிந்து, தனக்கென ஓர் சிறப்பிடம் பிடித்துக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க மதுரா - வளர்க அவர்தம் எழுத்துப் பணி

அன்புடன்

**கௌதம நீலாம்பரன்**

# என்னுரை

வணக்கம்.

"நீருக்கு முத்தமிட்டால்
கரைந்து விடும்!
நெருப்புக்கு முத்தமிட்டால்
சுட்டு விடும்!
காற்றுக்கு முத்தமிட்டால்
பறந்து விடும்!
விண்ணுக்கு முத்தமிட்டால்
தொலைந்து விடும்!
அதனால் இந்த மண்ணுக்கு
ஒரு முத்தம் - அது
சிதைத்தாலும் உரமாகும்
புதைத்தாலும் வைரமாகும்!"

- என்றாள் கவிப்பெண் ஒருத்தி. அவள் வழிநின்று தமிழ் மண்ணுக்கு ஒரு முத்தமாக இந்த நவீனத்தை படைத்து உங்கள் முன் வைத்திருக்கிறேன்.

"திக்கெட்டும் புகழ் வளர்க்கும் திரு நெல்லைச் சீமையதன்
பக்கத்தே வட கிழக்கில் பாஞ்சாலங் குறிச்சியினில்
சக்கம்மா தேவியவள் சந்நிதிக்கே அல்லாமல்
திக்கெட்டும் மானிடர்க்குச் சிரம் தாழ்த்தி அறியாமல்
பேச்சில் தடுமாறிப் பேசிடினும், கை வாளின்
வீச்சில் பகைவரையே தடுமாறி விழ வைக்கும்
ஊமைத்துரை..."



- என்று திருச்சிற்றம்பலக் கவிராயன் யாரைக் குறிப்பிட்டானோ அவனே என் புதினத்து நாயகன். வீழ்ந்த கோட்டை மண்ணோடு மண்ணாவதற்கு முன் நிமிர்ந்து நிற்க வைத்தவன். வெள்ளையனை இரத்தம் கக்க வைத்தவன். அண்ணன் கதிரவன் என்றால் இவன் சந்திரன். கட்டபொம்மன் கோபச் சூரியனாய் ஏழைகளை தகிக்க, அவர்கள் சாபக் கண்களால் திரும்பி பார்த்ததால்தான் சுடர்விட்ட வேகத்திலேயே அணைந்து போனான் என்றும் சொல்பவர்கள் உண்டு. ஆனால் ஊமைத்துரை குளிர் நிலவாய், பகல் நிழலாய், அருமருந்தாய் மக்கள் கண்களுக்குத் தெரிந்தான். இவனை தலைவனாக ஏற்றுக் கொண்டது மக்கள் கூட்டம். மகுடம் தரித்த மன்னவனை முதன் முதலாக மக்கள் தலைவனாக கண்டது தமிழ் மண். அதிகாரத்தால் கோட்டை எழுப்பினான் அண்ணன். அன்பால் கோட்டை எழுப்பினான் தம்பி. மக்கள் எழுச்சி என்ற குழந்தை பிறக்க கட்டபொம்மன் காரணம் என்றால் அதற்கு பால் ஊட்டியவன் ஊமைத்துரை என்று வரலாறு சொல்லும். அந்த வரலாற்று நாயகனின் வாழ்க்கைச் சம்பவங்களிடையே என் கற்பனையை ஓட விட்டிருக்கிறேன். காகித வானத்தில் எழுது கோலை ஆடவிட்டிருக்கிறேன். தமிழ் மண்ணுக்காய் வாழ்ந்து, வீழ்ந்து, இன்றும் தமிழ் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த வீரனின் கதை என் எழுது கோலின் உடலுக்குள் புகுந்து அதன் உதடுகளை அதிரச் செய்து சிந்திய முத்தம்தான்- 'மண்ணுக்கு ஒரு முத்தம்.' இந்த முத்தத்தை சுமந்து நின்ற எண்பத்தாறு நாட்கள் இரவும் பகலும் என் நாயகன் காலத்து நினைவுகள்தான் எனக்கு உணவு. கனவில் வந்து காது மடல் தொட்ட வாளின் உரசொலிதான் எனக்குத் தாலாட்டு. இனி தங்கள் தீர்ப்பு.

இதய அன்புடன்

மதுரா

கொளத்தூர், செங்கல்

# 1

## மண்ணுக்குள் சந்தனப் பேழை

வானத்து மஞ்சள் நிலவு மேகக் காவலர்களின் பிடியில் சிக்கி இருந்தது. தொலை தூரத்து நட்சத்திரங்கள் சுதந்திரமாய் கண் இமைத்துக் கொண்டிருந்தன. துக்கம் அனுஷ்டிப்பது போல கறுப்பாய் நின்று கொண்டிருந்தன பனை மரங்கள். 'செந்தலையனிடத்தில் எனக்கு பயமில்லை' என்று சொல்வது போல வடகிழக்குப் பருவக் காற்று வேகமாய் வீசிக்கொண்டிருந்தது.

தூரத்து ஒற்றைக் குயில் ஒன்று சோகமாய் தன் துணையை அழைத்துக் கொண்டிருந்தது. சில வண்டுகள் தைரியமாய் கத்திக் கொண்டிருந்தன. மின்மினிப் பூச்சிகள் தங்கள் பின்புற விளக்குகளைச் சுமந்து கொண்டு அங்கும் இங்குமாய் எதையோ தேடிக் கொண்டிருந்தன. இளைஞன் ஒருவனும் எதையோ தேடும் பாவனையில் இடிபாடுகளுக் கிடையில் நடந்து கொண்டிருந்தான். அவன் நடையின் வேகத்திற்கேற்ப இடுப்பிலிருந்து தொங்கிய நீண்ட வாள் அசைந்து கொண்டிருந்தது.

அவன் கண்கள் சுழன்று சுழன்று ஏமாற்றத்தை மட்டும் வாங்கிக் கொண்டிருந்தது. அவன் காலடியில் சரிந்து கிடந்த கோட்டை ஆயிரம் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தது.

மண் மேடாகிப் போயிருந்த கோட்டையின் இடிபாடு களுக்கிடையில் சிரமமின்றி தாவி ஏறி அதன் உச்சத்தை

அடைந்தான். நான்கு திசைக்கும் பார்வையைப் படர விட்டான். அவன் கண்கள் கலங்கின. உதடுகள் துடித்தன. நீளமாய் பெருமூச்சொன்று வெளிப்பட்டு அந்த வாலிப வீரனின் நெஞ்சைத் தாலாட்டியது. மெல்ல வாய் திறந்து அவனுக்கே கேட்கும் குரலில் பேசவும் தொடங்கினான்.

"விண் தொட கம்பீரமாய் எழுந்து நின்ற கோட்டை, இன்று
மண் மேடாய் காலடியில். மானம் காக்கும் மறவா
பாசறையாய் நிமிர்ந்து நின்ற கோட்டை, இன்று
சருகாய் பூமியின் மடியில். விந்தை. விடை காண முடியா
விந்தை. காலம் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்"

- மீண்டும் நீளமாய் ஒரு பெருமூசசு அவனிடமிருந்து வெளிப்பட்டது. கலங்கிய கண்களின் ஓரங்கள் நனைந்தது. துளிர்த்த விழிநீர் முத்தாகத் திரண்டு தரை தொட ஆயத்தம் ஆனது. தடையாக வந்தது சுட்டு விரல். அவசரமாய் விழி நீர் துடைத்தது. துடைத்த விரல் அசைவற்று நின்றது. கலங்கிய கண்களில் மத்தாப்பூ பூத்தது. துடித்த உதடுகள் "ஜக்கம்மா" என்றது. உற்சாகத்தின் விளிம்பிற்கே அழைத்துச் சென்றிருந்தது அவன் கண்ட காட்சி. அவன் பார்வை விழுந்து கிடந்த இடத்தில் - நிலவின் மஞ்சள் ஒளியில் மினுக்கியது அந்தப் பொருள்.

நிதானமாய் குதித்து இறங்கினான். அந்தப் பொருள் கிடந்த திசை நோக்கி வேக நடை நடந்தான். கண்கள் அந்த இடம் வந்ததும் நின்றது. அந்தப் பொருளை ஆசையுடன் கையில் எடுத்து முத்தமிட்டான். அது சூலாயுதம். ஜக்கம்மா கை ஆயுதம். 'எங்கே ஜக்கம்மா' அவன் கண்கள் தேடின.

சற்று தள்ளி குப்புற கவிழ்ந்த நிலையில் கிடந்தது ஜக்கம்மா தேவி சிலை. அதை சிரமமாய் புரட்டினான். கோபப் பார்வையுடன் இருந்தது சிலை.



"தேவி, உன்னை வடக்கே பெல்லாரியிலிருந்து தெற்கே பாஞ்சாலங்குறிச்சிக்கு கூடையில் சுமந்து வந்தார்கள் கட்ட பொம்மு மகாராஜாவின் முன்னோர்கள். *அதையெல்லாம் மறந்து விட்டாய். கடைசி நேரம் கட்டபொம்மு மகாராஜா வை கைவிட்டாய் நீ கட்டபொம்மு மகாராஜா தூக்குக் கயிற்றை முத்தமிட்ட போது கண்ணை இறுக்கமாய் மூடிக்கொண்டவள் நீ இப்பொழுது எதற்காக இந்த கோபப் பார்வை. வெள்ளையர்கள் மண் என்று இந்த கோட்டையைச் சரிக்கும்போது நீ வேடிக்கை பார்த்தாய். இப்பொழுது பார் உன்னையும் கல் என்று தரையில் தள்ளி விட்டார்கள். உன் கை ஆயுதத்தை பறித்து மண்ணில் எறிந்து விட்டார்கள். இன்று நான் உன்னை நிமிர்த்தி வைக்கிறேன். நீயும் இந்த கோட்டையை நிமிரச் செய். பாஞ் சாலங்குறிச்சி மண்ணில் வெள்ளையர் கால் தடங்களை அகற்றிப் போடு. இளையவர் ஊமைத்துரையை விடுதலைப் பறவையாக்கு தாயே, விடுதலைப் பறவை யாக்கு"

பொங்கிய உணர்ச்சியில் குரல் தழுதழுத்தது. சிலையின் அருகே மண்டியிட்டு அமர்ந்தான். குழி ஒன்றை தோண்டினான். மண்ணை இரண்டு பக்கமும் வாரியிறைத் தான்.

நிமிர்ந்த போது வியர்த்துப் போயிருந்தான். நனைந்த அங்கி மேனியோடு ஒட்டிக் கொண்டிருந்தது. கை, கால் களில் ஒட்டியிருந்த ஈர மண்ணைத் தட்டினான். எழுந்தான். படுத்த நிலையிலிருந்து சிலையை அசைத்து தூக்கினான். சிரமமாயிருந்தது. இன்னும் இரண்டு பேர் தேவை. மூச்சடக்கி சிலையைத் தூக்கி குழியில் நிறுத்தினான்.

* கொத்து பல்லாரியை ஆண்டவளே, கூடையில் கூடவே வந்தவளே...

- கட்ட பொம்மு கூத்து, பக்கம் 9
பதிப்பாசிரியர் நா. வானமாமலை.

கோபமாய் நின்றாள் ஜக்கம்மா தேவி. குழிக்குள் சரமண்ணைத் தள்ளி தரையை சமப்படுத்தினான். காலடியில் கிடந்த வேலை கையில் எடுத்தான். சிலைக்கு எதிரில் கண்மூடி நின்றான். திடீரென்று ஆவேசம் வந்தவனாய் கையிலிருந்த வேலின் பின் பகுதியை பூமியில் குத்தினான். பதிந்து நின்ற வேல் மெலிதாக நடுங்கியது.

"ஜக்கம்மா, உன்னையும் தூக்கி நிறுத்தி விட்டேன். உன் கை வேலையும் உன்னிடம் தந்து விட்டேன். உன்னை குப்புறத் தள்ளிய வெள்ளையரைக் கடலில் தள்ளம்மா. செந்தலைகளை மண்ணில் வீழ்த்திட எங்களுக்கு சக்தி தந்தருளம்மா. சின்னவரை மன்னவராக்கி பாஞ்சாலங் குறிச்சியை நிமிர்த்திடச் செய்யம்மா. இடுப்பில் உறை வாளும், நெஞ்சில் சாதிக்க முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையும் இருக்கிறது. அதன் துணையோடு என் லட்சியப் பயணத்தைத் தொடர்கிறேன். உன் அக்கினி வளையமும் என்னுடன் வரட்டும். அடுத்த முறை உன் சந்நிதானம் வரும் பொழுது என் உடலில் உயிர் இருந்தால் என்னுடன் இளையவர் ஊமைத்துரையும் வருவார் இது சத்தியம்".

- ஆவேசமாய் வலது உள்ளங்கையை வேலின் நுனியில் அடித்தான். பொங்கி வந்த இரத்தம் வேலை நனைத்தது. பெருவிரலில் தொட்டு சிலையின் நெற்றியில் திலகம் வைத்தான். இரு கரம் கூப்பி வணங்கினான். கண் திறந்தான்.

"வருகிறேன்"

- என்ற ஒற்றை சொல்லை உதிர்த்து விட்டு வேக நடை நடந்தவனை இழுத்து நிறுத்தியது குதிரைகளின் குளம் பொலி. திரும்பிப் பார்த்தான். மங்கிய நிலவொளியில் எதுவும் புலப்படவில்லை.

அவசரமாய் ஓடி சிதைந்து கிடந்த கோட்டைச் சுவரின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்தான். சுவரோர இருட்டு



அவனை மறைத்துக் கொண்டது. ஒலி வந்த திசையில் கண்களை வைத்து காத்திருந்தான். குதிரைகளின் குளம்பொலி சங்கீதம் போல காதில் விழுந்தது. திடீரென்று ஒலி அறுந்தது. மயான அமைதி. 'ஏன் நின்று விட்டார்கள்'.

மீண்டும் குதிரைகளின் குளம்பொலி கேட்டது. சிறிது நேரத்தில் நிலவொளியில் இரண்டு குதிரைகள் தெரிந்தது. அவற்றின் முதுகில் மேலாடை அணியாத இரண்டு உருவங்கள்.

அந்த இளைஞனின் வலது கரம் இடுப்பு வாளை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டது.

அவன் இருந்த இடம் நோக்கி வேகமாய் வந்து கொண்டிருந்த குதிரைகள் சட்டென்று நின்றன. இரண்டு பேரில் ஒருவன் கோட்டையின் மேற்குப் பகுதியை நோக்கி கையை நீட்டி ஏதோ சொன்னான். மற்றவன் எந்த அசைவுகளுமின்றி அமர்ந்திருந்தான்.

இரண்டு குதிரைகளும் மெல்ல நடந்து, இடிந்து கிடந்த கோட்டையின் மேற்குப் பகுதியை நெருங்கியது.

"இந்த இடம்தான்"

- என்றான் கறுப்பாய் இருந்தவன். அதைத் தொடர்ந்து இரண்டு பேரும் குதிரையிலிருந்து குதித்து இறங்கினார்கள். அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் அந்த வாலிப வீரன் மறைந்திருந்த இடத்திற்கும் இருபது அடிதான் இடைவெளி இருந்தது. தலையை நீட்டி எட்டிப் பார்த்த இளைஞன் அதிர்ந்தான். வாய் பிளந்தது. 'முத்துக் கருப்பன்... போரில் இறந்து போய் விட்டான் என்றல்லவா எண்ணியிருந்தோம். கட்ட பொம்முவின் மெய்க் காவல் படையில் இருந்தவன் அல்லவா... ஏன் காணாமல் போய்விட்டான்... போரில் உயிர் பிழைத்தவன் இத்தனை நாளும் எங்கே போயிருந்தான்... இன்று எதற்காக இங்கே வந்திருக்கிறான்...

தகர்ந்து கிடக்கும் கோட்டையைப் பார்க்கவா.. அப்படி ஒரு எண்ணம் இருப்பது போல தெரியவில்லையே.. அவனுடன் வந்திருக்கிறானே அவன் யார்...?" ஆயிரம் கேள்விகள் நெஞ்சில் பிறந்தது. காதுகளைத் திறந்து வைத்தான் அவர்கள் குரலுக்காய்.

"யாராவது வருகிறார்களா என்று பார்!"

"முத்துக் கருப்பா, நீ பயப்படவே வேண்டாம். யாரும் இங்கே துணிந்து வர மாட்டார்கள். எட்டப்ப மகாராஜா அதற்கும் ஏற்பாடு செய்து விட்டார் புத்திசாலித்தனமாய். நீ தைரியமாய் உன் வேலையை ஆரம்பிக்கலாம்".

"அப்படி என்ன பெரிய புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்து விட்டார் உங்க மகாராஜா...?"

"உங்க கட்டபொம்மன் போல எங்கள் மகாராஜாவை கட்ட புத்திக்காரர் என்று நினைத்தாயா... வரி கட்ட மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்து, கிரீடத்தையும் இழந்து உயிரையும் இழப்பதற்கு... வெள்ளையன் காலில் விழுவது போல் விழுந்து உயிரையும் உடலையும் காப்பாற்றிக் கொண்டவராக்கும். கோட்டை பக்கத்தில் எவனும் வரக் கூடாது என்று புதுக்கதை ஒன்றை பக்கத்து கிராமங்களில் பரப்பி விட்டிருக்கிறார் எங்கள் மகாராஜா."

"புதுக் கதையா...?"

ஆச்சரியமாய் கேட்டான் முத்துக் கருப்பன்.

"ஆம். சொல்கிறேன். கேள். பாஞ்சாலங்குறிச்சி கோட்டையில் ஆவியாக-அலைகிறாராம் கட்டபொம்மன். நடு ராத்திரியில் 'எதற்காக கொடுக்க வேண்டும் கப்பம்' என்று கத்துகிறாராம். அந்த கத்தல் இரண்டு கல் தொலைவுக்கு கேட்கிறதாம். கோட்டைப் பகுதியை சுற்றி யிருக்கும் பனை மரங்கள், கருவேல மரங்களில் எந்த பறவையும் தங்குவதில்லையாம். சில மாதங்களுக்கு முன்னால் ஒரு நாள் உச்சிப் பொழுது இருக்குமாம். ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன், உடைந்து கிடக்கும் கோட்டையை வேடிக்கை பார்க்க அருகில் வந்தானாம். கட்டபொம்மன் ஆவி கோபத்தில் அடித்து விட்டதாம். அந்த சிறுவன் அந்த இடத்திலேயே ரத்தம் கக்கிச் செத்துப் போனானாம்".



"நீ சொல்வது உண்மைதானா...?"

முத்துக்கருப்பனின் குரலில் பயம் தெரிந்தது. எதிரில் நின்றவன் கடகடவென்று சிரிக்க ஆரம்பித்தான்.

"முட்டாள். சிரிக்காதே."

பயத்தில் அவசரமாய் எதிரில் நின்றவன் வாயை பொத்தினான் முத்துக்கருப்பன். பொத்திய கையை விலக்கி விட்டு ஏளனம் தொனிக்க பேசினான்.

"நீ சரியான வீரன்தான். கட்டபொம்மன் பேரைக் கேட்டதும் நடுங்க ஆரம்பித்து விட்டாயே. நீ செய்த துரோகத்துக்கு ஆவியாய் வந்து தண்டித்து விடுவார் என்ற பயம் வந்து விட்டதா.. ம்.. மீண்டும் சொல்கிறேன். நான் சொன்னது கதைதான். இந்த கதை காதில் விழுந்த எந்த கிராமத்துக்காரனும் கோட்டை இருந்த திசையில் தலை வைத்துக் கூட படுக்க மாட்டான். கட்டப்பொம்மன் ஆவியும் கயத்தாறு கட்டை புளிய மரத்தை விட்டுவிட்டு இறங்கி இங்கே வராது. நீ பயத்தை மூட்டை கட்டி வைத்து விட்டு புதைத்த இடத்தை கண்டுபிடித்துச் சொல். நான் தோண்டுகிறேன்".

என்றான் எட்டயபுரத்து வீரன். முத்துக்கருப்பன் சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்து விட்டு, தைரியத்தை வரவழைத்துக் கொண்டவனாய், கையிலிருந்த துப்பாக்கி முனையால் தரையில் கோடு கிழித்தான். ஏதோ கணக்கிடு பவன் போல முணுமுணுத்துக் கொண்டான். கிழக்கும்

வடக்குமாய் கால்களில் அளந்தான். கண்மூடி யோசித்தான். எட்டடி தென் திசையில் நடந்து துப்பாக்கி முனையை தரையில் ஊன்றினான்.

'ம்.. இந்த இடம்தான்.. தோண்டு"

"கட்டபொம்மன் இங்கேதான் புதைத்தானா...?"

"நிச்சயம் இந்த இடம்தான். கடைசி வரை நானும் உடன் இருந்தேனே..."

"நீ மட்டும்தான் இருந்தாயா..."

"இல்லை. மூன்று பேர் இருந்தோம்"

"யார் அந்த இரண்டு பேர்...?"

"மெய்க்காவல் படையைச் சேர்ந்தவர்கள்தான். ஒருவன் கனி அமுதன். மற்றவன் வேல்முருகன்."

"கட்டபொம்மன் இறந்து பத்து மாதங்கள் ஆகிவிட்டது. கனி அமுதனும் வேல் முருகனும் தோண்டி எடுத்துச் சென்றிருக்கலாம் அல்லவா..."

"நிச்சயம் எடுத்துச் சென்றிருக்க முடியாது"

-என்றான் முத்துக்கருப்பன் உறுதியான குரலில்.

"ஏன்?"

-என்று கேட்டான் எட்டையபுரத்து வீரன்.

"அவர்கள் உயிரோடு இருந்தால் தானே. கட்டப் பொம்மனைக் காப்பாற்றுகிறேன் என்று பீரங்கிக்கு உயிரைக் கொடுத்து விட்டார்கள்"

"வேறு யாருக்காவது.."

-தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சொல்லாமல் செத்து விட்டான் கட்டபொம்மன். அது நம் அதிஷ்டம். பாஞ்சாலங் குறிச்சிக்கு துரதிஷ்டம்...ம்... சீக்கிரம் தோண்டு. மக்காலே துரையின் ஆசையை நிறைவேற்றுவோம்"



- என்றான் முத்துக்கருப்பன். இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த மண்வெட்டி போன்ற ஆயுதத்தை கையில் எடுத்து முத்துக்கருப்பன் சுட்டிக்காட்டிய இடத்தை வெட்டத் தொடங்கினான் எட்டயப்புரத்து வீரன். பருவ மழையால் நனைந்து போயிருந்த பூமியில் வேகமாய் குழி பிறந்தது.

சற்று நேரத்தில் மார்பளவு பள்ளத்தில் நின்று கொண்டிருந்தான் எட்டயபுரத்து வீரன். குழியைச் சுற்றி ஈர மண் இறைந்து கிடந்தது. முத்துக் கருப்பன் அடிக்கொருதரம் சுற்றிலும் கண்களை பயத்துடன் சுழல விடுவதும் மீண்டும் பதட்டமாய் குழியைப் பார்ப்பதுமாய் இருந்தான்.

வியர்வையில் நனைந்து போயிருந்த எட்டயபுரத்து வீரன், கண்களில் வழிந்த வியர்வைத் துளிகளை துடைத்த படி நிமிர்ந்து முத்துக்கருப்புனைப் பார்த்தான். அந்த பார்வையில் மிதமிஞ்சிய எரிச்சல் தெரிந்தது. அதைத் தொடர்ந்து கோபமாய் வந்தன வார்த்தைகள்.

"முத்துக் கருப்பா, இடுப்பளவில்தான் புதைத்தோம் என்றாய். மார்பளவு தோண்டி விட்டேன். எந்த இழவையும் காணவில்லை. இந்த இடம்தானா.. இல்லை கட்ட பொம்மனே ஆவியாய் வந்து எடுத்துப் போய்விட்டாரா..."

"மூடனுக்குத்தான் கோபம் வரும். அது உனக்கு வரலாமா... இதை எடுத்துக் கொண்டு போய் மக்காலே துரையிடம் கொடுத்தால், அவர் கை நிறைய தரப் போகும் வெகுமதியை எண்ணிப்பார். எட்டப்ப மகாராஜா தரப்போகும் பதவியை நினைத்துப்பார். இனி தோண்டு. புதைத்தது இதே இடம்தான்."

- என்று சொல்லி முடிக்கவும் தன் கை ஆயுதத்தை வேகமாய் பூமியில் இறக்கினான் எட்டயபுரத்து வீரன்.

"ட்ணங்" - என்ற சத்தம் பிறந்தது. கையிலிருந்த துப்பாக்கியை தரையில் போட்டு விட்டு மண்டியிட்டு அமர்ந்தான் முத்துக் கருப்பன்.

"அதே தான். அதே தான்"

- என்றான் உற்சாக மிகுதியால். அந்த உற்சாகம் எட்டயபுரத்து வீரனையும் தொற்றிக் கொண்டது. இரு கை மண்ணை அள்ளி வானத்தில் எறிந்தான். அது பூவாணமாய் சிதறியது.

அடுத்த நாழிகையின் ஆரம்பத்தில் கனமில்லாத இரும்புப் பெட்டி ஒன்றை தூக்கி வெளியில் வைத்தான் எட்டயபுரத்து வீரன். அந்த கனமில்லாத இரும்புப் பெட்டிக்கு காவலாக ஒரு கனமான இரும்புப் பூட்டு தொங்கியது.

"ம்.. பூட்டை உடைத்து விடு"

- என்றான் எட்டயபுரத்து வீரன்.

முத்துக்கருப்பனின் வன்முறைக்கு இரும்புப் பூட்டு அவசரமாய் திறந்து கொண்டது. ஆர்வமாய் பெட்டியைத் திறந்து பார்த்தான் முத்துக்கருப்பன்.

உள்ளே.

மூன்றரை அடி நீளமும், அரையடி அகலமும், அரையடி உயரமும் உடைய செவ்வக சந்தனப் பேழை ஒன்று இருந்தது.

# 2

## பறந்து வந்த குறுவாள்

இரும்புப் பெட்டிக்குள் இருந்த சந்தனப் பேழையைக் கண்டதும் இருவர் கண்களும் அகலமாய் விரிந்தன. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர் புன்சிரிப்புடன்.

அந்த பேழை சந்தன பளபளப்புடனும், நிறைய கலை நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் இருந்தது. ஒரு விரல் உயரத்தில் நிறைய பெண்கள் பரத நாட்டிய முத்திரையுடன் நின்று கொண்டிருந்தனர்.

"என்னிடம் கொடு, நானும் பார்க்கட்டும்"

-என்றான் எட்டயபுரத்து வீரன் ஆர்வமாய். இரும்புப் பெட்டிக்குள் இருந்த சந்தனப் பேழையை எடுத்து, குழிக்குள் நின்று கொண்டிருந்தவனிடம் கொடுத்தான்.

மண் ஒட்டியிருந்த கரங்களை அவசரமாய் பின்புறத்தில் துடைத்து விட்டு பேழையை கையில் வாங்கினான். அவன் கண்கள், இரையைப் பார்த்து விட்ட ஓநாயின் கண்கள் போல மினுக்கின. விரல்கள் வேகமாய் பேழையைத் திறக்க முயற்சி செய்தன. பேழையோ திறக்க மாட்டேன் என்று பிடிவாதம் செய்தது.

"என்ன முத்துக்கருப்பா... இந்த சந்தனப் பெட்டியை திறக்க கட்ட பொம்மன்தான் வர வேண்டுமா..."

"என்னிடம் கொடு. நான் திறக்கிறேன்"

சந்தனப் பேழையை கையில் வாங்கி நிலவொளியில புரட்டிப் பார்த்தான். திறப்பதற்கான எந்த மார்க்கமும் புலப்படவில்லை, சாவி துவாரம் எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை.

''திறக்குமா என்பதே சந்தேகமாய் இருக்கிறது. அப்படியே கொண்டு போய் துரையிடம் கொடுத்துவிடலாம்'' என்றான் முத்துக்கருப்பன்.

"அப்படி உள்ளே என்னதான் இருக்கும்...?''

''யாருக்குத் தெரியும். கோட்டை பீரங்கி குண்டுகளால் உடைந்து சிதறிக் கொண்டிருந்தது. வீரர்கள் பதட்டமாய் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரம் இந்த இடத்தில் குழி தோண்டச் சொன்னார் கட்ட பொம்மன். காரணம் கேட்காமலே தோண்டினோம். அரண்மனைக்குள்ளிருந்து இரும்புப் பெட்டி ஒன்றை ஊமைத் துரை தூக்கி வந்தார். கட்ட பொம்மன் அந்த பெட்டியை குழிக்குள் போட்டு மூடச்சொன்னார். மூடினோம். பெட்டிக்குள் என்ன பொருள் இருந்ததென்றே எனக்குத் தெரியாது. என்னுடன் இருந்த வீரர்களுக்கும் தெரியாது. அதற்குள் வெள்ளையர் படை கோட்டைக்குள் நுழைந்தது. கட்ட பொம்மனும் ஊமைத்துரையும் ரகசிய வழியாய் செல்ல, அவர்களைக் காப்பாற்ற உயிர் துறந்தனர், என்னுடன் இருந்த மெய்க் காவல் வீரர்கள் இரண்டு பேரும். நான்...''

''வெள்ளையர் படையுடன் சேர்ந்து கொண்டாய் உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்தாய். பிறகு...''

"பிறகென்ன.. மெக்காலே துரையின் நிழல் ஆனேன். என் என்று சொல்லும் முன் எண்ணெயாய் நின்றேன். துரைக்கு என்னை நிரம்பப் பிடித்துப் போயிற்று. என்னை பிளாக்கி என்று செல்லமாய் கூப்பிடுவார். ஒரு நாள் சந்தர்ப்பம் கிடைத்த போது புதைக்கப்பட்ட பெட்டியைப்



பற்றி சொன்னேன். அன்று எட்டப்ப மகாராஜா துரையை பார்க்க வந்திருந்தார். துரை அவரிடம் சொல்ல என் துணைக்கு உன்னை அனுப்பியிருக்கிறார்கள்.''

''பகலில் வெள்ளைச் சிப்பாய்களுடன் வந்தால்தான் எளிதில் தோண்டி எடுத்துச் சென்றிருக்கலாமே''

''துரையவர்கள் ஏதாவது செய்தால் அதற்கு ஒரு காரணம் நிச்சயம் இருக்கும். கட்டபொம்மன் குடும்பத்துக் காக உயிரையும் கொடுக்கத் தயாராய் இன்றும் நிறைய பேர் இருக்கிறார்கள் நீறு பூத்த நெருப்பாய். பகலில் இந்தப் பெட்டியை கோட்டைக்குள் இருந்து தோண்டி எடுத்துச் சென்றால் அவர்கள் உணர்வுகள் தூண்டப்படலாம். அதைத் தடுக்கத்தான் இந்த ஏற்பாடு.. அதனால் தான் இரவில் நம் இருவரை மட்டும் அனுப்பி இருக்கிறார்கள். புரிகிறதா..''

"புரிகிறது, புரிகிறது. வா போகலாம்''

''போவது இருக்கட்டும். முதலில் பெட்டியைக் கொடுங்கள்''

- என்று அதட்டிக் கேட்டது கம்பீரமாய் ஒரு ஆண் குரல். அவசரமாய் திரும்பினார்கள் இருவரும். புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான் மறைவிலிருந்து வெளிவந்திருந்த இளைஞன். இவன் இடது கால் மண்ணில் கிடந்த துப்பாக்கியை மிதித்துக் கொண்டிருந்தது.

அந்த இளைஞனைக் கண்டதும் இருவர் முகமும் பேயைக் கண்டது போல் பாவம் மாறியது. பயத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். முத்துக் கருப்பன் மெல்ல வாய் திறந்து கேள்வி கேட்டான் வியப்பு கலந்த குரலில்.

"நீ இளைய பாண்டியன்தானே..''

"இறந்து போன முத்துக்கருப்பனே மீண்டும் வந்து இரவோடு இரவாக பாஞ்சாலங்குறிச்சி கோட்டையில் குழி தோண்டும் போது, உயிரோடிருக்கும் இந்த இளைய பாண்டியன் வரக்கூடாதா..."

என்று கிண்டல் தொனிக்கும் குரலில் கேட்டு விட்டு கடகடவென்று சிரிக்கவும் செய்தான். அவன் சிரிப்பை சட்டென்று உறையச் செய்தது எட்டயபுரத்து வீரன் செயல். தன் இடுப்பிலிருந்த குறுவாளை மின்னல் வேகத்தில் உருவி இளைய பாண்டியனின் கழுத்தைக் குறி வைத்து வீசினான்.

இளைய பாண்டியன் அலட்சியமாக நின்றிருந்தாலோ போர் பயிற்சி இல்லாதவனாயிருந்தாலோ அந்தக் குறுவாளுக்கு இரையாகியிருப்பான். பாஞ்சாலங்குறிச்சி மண்ணில் குருதி கொட்டியிருப்பான்.

வீரபாண்டிய கட்டபொம்மனுடன் பல களங்களைச் சந்தித்த இளைய பாண்டியனோ, கண் இமை மூடு பொழுதுக்குள் ஒரு அடி பக்க வாட்டில் நகர்ந்து, தன்னை நோக்கி வந்த குறுவாளை இடுப்பு வாள் உருவி தடுத்தான். செயல் இழந்த குறுவாள் மண்மேட்டில் விழுந்தது.

அடுத்தவினாடியின் முடிவில் முத்துக் கருப்பனின் கழுத்துப் பகுதியை தடவிக் கொண்டிருந்தது, இளைய பாண்டியனின் மெல்லிய நீண்ட வாள்.

"குறுவாளை வீசி தன் முட்டாள் தனத்தைக் காட்டி விட்டான் எட்டயபுரத்து வீரன். இன்னொரு முறை தன் முட்டாள் தனத்தை வெளிப்படுத்தினால் இரண்டு பேர் உயிரும் உடலில் தங்காது என்பதை என் வாயால் சொல்கிறேன். கேட்க மறுத்தால்" என்றான் உறுதியான குரலில்.



இந்த எச்சரிப்பில் எட்டயபுரத்து வீரன் அசைவற்று சிலையாக உருமாறிப் போயிருந்தான். முத்துக்கருப்பனின் வஞ்சகக் கண்களோ, இதுவரை கழுத்தை தடவிக் கொண்டிருந்த வாளின் நுனி ஒரே இடத்தில் தேங்கி நின்று விட்டதையும், வாளைப் பிடித்திருந்த இளைய பாண்டியனின் பார்வை தன் மீது விழுந்து கிடப்பதையும், அவன் இடது கால் அழுத்தமாகத் தன் துப்பாக்கி மீது பதித்து இருப்பதையும் தன் சகா மண் குழிக்குள் மரமாக மாறி விட்டதையும் கவனிக்கவே செய்தான்.

இந்த நிலையில் அசைந்தாலோ, ஓட முயற்சி செய்தாலோ தன் உயிர் அரைக் காசும் பெறாதென்பது தெளிவாய் தெரிந்து போயிற்று. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் அகலமாய் சிரித்தான் இளைய பாண்டியனை நோக்கி. அந்த சிரிப்பில் ஆயிரம் விலை மாதர்களின் சாகசம் தெரிந்தது. சிரிப்புக் கிடையில் இனிப்பு தடவிய குரலில் பேசவும் செய்தான்.

"இளைய பாண்டியா, நீ வேறு நான் வேறல்ல. இருவரும் ஒரே இனம். உன் நோக்கமும் என் நோக்கமும் ஒன்றுதான். ஆனால் முறைதான் வேறு"

"முறையைப் பற்றி சாவகாசமாக ஒரு நாள் பேசலாம் கருப்பா. ஒரே மண்ணில் பிறந்திருந்தாலும் நீ எருக்கு. நான் சந்தனம். கட்டபொம்மன் கோட்டையில் உப்பைத் தின்று விட்டு, மக்காளி துரை மாளிகையில் தண்ணீர் குடிப்பவன் நீ. கட்ட பொம்மன் சொத்தை எடுத்து கடல் கடந்து வந்தவனுக்கே கொடுக்க இரவோடு இரவாக குழி பறிக்கும் குள்ள நரி நீ. சரிதானா..."

"என்னைத் தப்பாகப் புரிந்து கொண்டிருக்கிறாய்"

"ஆம். நீ சொல்வது சரிதான். நேற்று வரை உன்னைத் தப்பாக புரிந்து கொண்டிருந்தேன், ராஜ விசுவாசியென்று. சற்று நேரத்துக்கு முன்னால்தான் தெரிந்து கொண்டேன்,

நீ புலி வேஷம் போட்டுக் கொண்டிருந்த நரியென்று. ஏமாந்தது போதும் இனியும் ஏமாறத் தயாராயில்லை. பெட்டியை கொடுக்கிறாயா..."

- என்று கேட்டான் அழுத்தமான குரலில்.

"நீ கேட்டால் நான் தரமாட்டேன் என்றா சொல்லப் போகிறேன். ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லிவிடு. பெட்டியை என்ன செய்வதாக உத்தேசம் இளைய பாண்டியா..."

- என்று மெல்லிய குரலில் கேட்டான் முத்துக்கருப்பன். புன்னகை ஒன்று பிறந்தது இளையபாண்டியனின் வதனத்தில்.

"பாலுக்கு காவல் இல்லை என்று பூனை அழுததாம்.. நல்ல வேடிக்கை. காலம் வரும் போது *சிவத்தையாவிடம் பெட்டியை ஒப்படைப்பேன். உனக்கு அந்த கவலை வேண்டாம். இனி தருகிறாயா பெட்டியை"

- என்றான் கிண்டல் தொனிக்க.

"தாராளமாக நானே இதை எடுத்துப் போய், சின்னவர் ஊமைத்துரை சிறையிலிருந்து வெளியே வந்ததும் கொடுக்க வேண்டுமென்றுதான் நினைத்திருந்தேன். நீ அதைச் செய்கிறேன் என்கிறாய். ரொம்ப சந்தோஷம். ம்.. பெட்டியை வாங்கிக் கொள்"

- என்றான் கையிலிருந்த சந்தனப் பெட்டியை இரும்புப் பெட்டிக்குள் வைத்து மூடி, பெட்டியை கையில் தூக்கினான்.

'வாங்கிக் கொள் இளைய பாண்டியா'

* வீர பாண்டிய கட்டபொம்மனை கறுத்தையா என்றும், அவன் தம்பி குமாரசாமியைச் சிவத்தையா என்றும் மக்கள் அழைத்தனர். குமாரசாமி செவ்வையாக பேசும் திறனற்றிருந்ததால் ஊமைத்துரை என்றும் அழைக்கலாயினர்.



- என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த இரும்புப் பெட்டியை முழு பலத்தையும் பிரயோகித்து இளைய பாண்டியன் முகத்தைக் குறி வைத்து வீசினான்.

தன்னை நோக்கி முத்துக்கருப்பன் இரும்புப் பெட்டியை வீசுவான் என்று கிஞ்சித்தும் இளைய பாண்டியன் எதிர் பார்க்காததாலும், கையில் வாளிருந்த தைரியத்தில் சற்று அலட்சியமாகவே நின்று கொண்டிருந்ததாலும் தன் முகத்தைக் குறி வைத்து வந்த இரும்புப் பெட்டியைப் பார்த்து அதிர்ந்து போனான்.

அதிர்ச்சியில் அப்படியே அசைவற்று நின்றிருந்தால் அந்த இடத்திலேயே அமர கதி அடைந்திருப்பான். இந்தக் கதையில் அவன் பங்கும் அந்த வினாடியே முற்றுப் பெற்றிருக்கும். நல்ல வேளை அப்படி எதுவும் நடக்க வில்லை.

சட்டென்று அபாயம் உணர்ந்து பின்னால் விலக கைவாளை பெட்டி பறித்துச் சென்றது. கால் பிறழ நிலை தடுமாறி மல்லாந்து விழுந்தான். அனிச்சையாய் வாய் திறந்து, 'ஜக்கம்மா' என்றான்.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் வாயில் சிரிப்பும் கையில் துப்பாக்கியுமாய் நின்று கொண்டிருந்தான் முத்துக்கருப்பன். அவன் கையிலிருந்த துப்பாக்கியின் குறி கோட்டையின் இடிபாடுகளுக்கிடையில் மல்லாந்து கிடந்த இளைய பாண்டியனின் நெஞ்சை நோக்கி இருந்தது.

"இளைய பாண்டியா, என் கையில் இருப்பது தென் பாண்டிச் சீமையின் இரும்புத் தகடல்ல. வெள்ளைச் சீமையின் உயிர் குடிக்கும் ஆயுதம். நான் விரல் நுனியை அழுத்தினால் வினாடியில் பரலோகம் போய் விடுவாய். ம்.. ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லிவிடு. சாகப் போகிறாயா இல்லை வாழ ஆசைப்படுகிறாயா..."

ஏகத்தாளமாய் வந்தது கேள்வி முத்துக்கருப்பனிட மிருந்து.

"வாழ ஆசைப்படுகிறேன்"

- என்றான் இளைய பாண்டியன்.

"ஏன் அந்த ஆசை...?"

"இன்று விழுந்து கிடக்கும் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை நாளை நிமிர்ந்து நிற்கப் போகிறது. அதை என் கண்ணால் காணவேண்டும். அதுவரை வாழ ஆசைப் படுகிறேன்"

- என்றவன் எழுந்து நின்றான் இடிபாடுகளுக்கிடையில். அவன் கண்கள் சற்று தள்ளி மண்ணில் கிடந்த வாளை ஒருமுறை பார்த்துக் கொண்டன.

"முட்டாள், முட்டாள்... செத்த பாம்பு பிழைக்கப் போவது மில்லை விழுந்த கோட்டை நிமிரப் போவது மில்லை. உன் கனவு கனவில்தான் நிறைவேற வேண்டும். *வெள்ளை துரைகளை எதிர்த்த கட்ட பொம்மனால் கட்ட மண்ணாகிப் போனது பாஞ்சாலகுறிச்சி கோட்டை மட்டு மல்ல. வாய் பொத்தி நின்றவர்களின் கோட்டைகளும்தான். இருப்பவர்களின் கோட்டைகளே இல்லாமல் - போய் விட்ட பிறகு இறந்தவனின் கோட்டையா எழுந்து நிற்கப் போகிறது..."

- முத்துக்கருப்பன் பேசிக் கொண்டிருக்கும் போதே வாளை நோக்கி மெல்ல நகர்ந்தான் இளைய பாண்டியன்.

"இளைய பாண்டியா, நாம் வாளோடு வாள் மோதி

* கிழக்கிந்திய கம்பெனி... வீர பாண்டியனைக் கொன்ற ஏழே நாட்களில் திருநெல்வேலிச் சீமையில் பாஞ்சாலங் குறிச்சி உட்பட 42 கோட்டைகளை இடித்துத் தள்ளினர். ந. சஞ்சீவி எம்.ஏ., மானங் காத்த மருது பாண்டியர், முதல் பதிப்பு, பக்கம் 25.



இருக்கிறோம் பயிற்சிக்காக. தோளோடு தோள் நின்றிருக் கிறோம் கட்டபொம்மன் வெற்றிகளுக்காக. அந்த நேசத்தில் கேட்கிறேன். என்னுடன் வந்து விடு. உன்னைப் போன்ற வீரர்கள் கும்பினி படைக்குத் தேவை. மாண்டவனுக்காக போராடி நீயும் மாண்டு போகாதே. இடிந்ததை எழுப்ப நினைத்து நீயும் இடிந்து போகாதே. இனியும் இந்த சுடுகாட்டில் உனக்கென்ன வேலை. வா வசந்தத்தைக் காட்டுகிறேன்"

"அழைக்கிறாய் வசந்தத்தை காட்டுகிறேன் என்று. காட்டிக் கொடுத்தவர்களின் அணியில் சேர நான் ஒன்றும் மானம் கெட்டவன் அல்ல"

- என்றான் இளைய பாண்டியன்.

"நான் மட்டும் மானம் கெட்டவன் என்று சொல்கிறாயா..."

- கோபத்தில் இரைந்தான்.

"அதில் சந்தேகம் என்ன முத்துக்கருப்பா"

- என்றான் இகழ்ச்சியாக.

"உன்னை இத்தனை நேரம் உயிரோடு விட்டு வைத்திருக்கிறேன் பார். அதற்கு பிரதிபலன் மானங் கெட்டவன் பட்டம். நல்லது. மன்னிக்கிறேன். கடைசி முறையாய் கேட்கிறேன். பதில்சொல். உன் பதில் எனக்கு பிடிக்க வில்லையென்றால் நான் பேச மாட்டேன். இந்த துப்பாக்கிதான் பேசும். மூளையைப் பயன்படுத்தி சொல். நீ வாய் திறந்தால் ஓடி வர காவலர்கள், நீ கண் அசைத்தால் பாடி வர பாவையர்கள். வாய் மணக்க குப்பி குப்பியாய் சீமைச் சாராயம் அத்தனையும் கிடைக்கும். கும்பினி ஆளாய் நீ மாறி விட்டால். எப்படி சம்மதம்தானே..."

"உன்னைப் போல் தாயை விற்பவனிடம் போய் சொல்"

-என்றவன் சட்டென்று ஒரே தாவாய் தாவி இடிபாடுகளுக்கிடையில் கிடந்த வாளின் கைப்பிடியைத் தொட்ட மாத்திரத்தில்-

"டுமீல்"

- என்ற பெருஞ்சத்தத்துடன் குண்டை உமிழ்ந்தது முத்துக்கருப்பனின் துப்பாக்கி. சீறிக் கிளம்பி வந்த குண்டு வாளில் மோத வாள் இரண்டு துண்டாக சிதறியது.

ஏமாற்றத்துடன் எழுந்து நின்றான் இளைய பாண்டியன். துப்பாக்கியின் இரும்புக் கண்கள் இளைய பாண்டியனின் நெஞ்சை இரக்கம் இல்லாமல் பார்த்தது. முத்துக்கருப்பன் பற்கள் கோபத்தில் ஒன்றொடொன்று மோதி சப்தம் எழுப்பின. அவன் ஆட்காட்டி விரல் துப்பாக்கியின் குதிரையை தொட்டும் தொடாமலும் உறவாடிக் கொண்டிருந்தது.

மரணம் தன்னை சில விநாடிகளில் தொடப்போவதை ஐயமின்றி உணர்ந்து கொண்ட இளைய பாண்டியன் நெஞ்சு நிமிர்த்தி நின்றான். அவன் கண்களோ கடைசி மரண விநாடிகளில் தப்புவதற்கு ஏதாவது மார்க்கமிருக்கிறதா என்று வேகமாய் ஆராய்ந்தது. அதை அறிந்து கொண்ட முத்துக்கருப்பனின் உதட்டோரம் விஷமப் புன்னகை ஒன்று பிறந்தது.

"வாழ்வளிக்க வந்த வெள்ளை துரைகளை எதிர்க்கத் துணிந்து விட்டாய் நீ. பாஞ்சாலங்குறிச்சியின் ராஜவிசுவாசியாய் சாகவும் முடிவு செய்து விட்டாய். இருந்தாலும் நீ தமிழன். நல்லவர்களாக இருந்தாலும் வெள்ளையர்கள் அன்னியர்கள். எனவே அவர்கள் கையால் நீ சாவது நம் இனத்துக்கு அவமானம். அதனால் என் கையால் இறந்து விடு. என்னால் முடிந்தது".



-என்று சொல்லிவிட்டு துப்பாக்கி விசையை ஆட்காட்டி விரலால் அழுத்த முற்பட்டவன்-

"ஆ"

- என்று அலறினான். கையிலிருந்த துப்பாக்கி நழுவி மண்ணில் விழுந்தது. வலது கை புஜத்தில் குத்தி நின்றது குறுவாள் ஒன்று. இரத்தம் வேகமாய் குபுக்கிட்டது.

ஆறு கண்களும் குறுவாள் சீறி வந்த திசை நோக்கி ஆர்வமாய் திரும்பின. அங்கே-

கரும்புரவி ஒன்றில் கம்பீரமாய் அமர்ந்திருந்தாள் இளம் பெண் ஒருத்தி.

# 3

## குதிரை மோகினி

இனி இறப்பதை தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் இளைய பாண்டியன் அசைவற்று நின்று கொண்டிருக்க, கோபத்தில் பற்களைக் கடித்த முத்துக் கருப்பன் கையிலிருந்த துப்பாக்கியின் கண்களை இளைய பாண்டியனின் நெஞ்சுக்கு குறிவைத்து விசையை பின்னோக்கி இழுக்க முற்பட்ட நேரத்தில் - பறந்து வந்த குறுவாள் ஒன்று அவன் புஜத்தில் பாய்ந்து நின்றது. அலறலுடன் கைத்துப்பாக்கியைத் தவறவிட்டான்.

எதிர்பாரா சம்பவத்தால் திகைத்துப் போன மூவரின் கண்களும் குறுவாள் வந்த திசையில் திரும்ப - அங்கே கரும் புரவி ஒன்றின் முதுகில் கம்பீரமாய் வீற்றிருந்தாள் இளம் பெண் ஒருத்தி.

மேகத்தின் பிடியிலிருந்து தப்பிய மஞ்சள் நிலவு, அந்த பெண்ணிடம் கம்பீரம் மட்டும் அல்ல அழகும் இருக்கிறது. அது மட்டுமல்ல, ஆபத்தும் இருக்கிறது என்பதை சொல்லாமல் சொன்னது. நிலவின் மஞ்சள் ஒளியில் அவள் வலது கையிலிருந்த குறுவாள் மினுக்கியது. அவள் விரல்கள் குறுவாளை இடதும் வலதுமாய் அசைத்த விதம் தேவைப் பட்டால் கையிலிருக்கும் குறுவாளையும் வீசத் தயங்க மாட்டேன் என்பதைப் பறை சாற்றியது.

நிலவின் மஞ்சள் ஒளியால் அந்த ஆரணங்கின் ஒரு பாதி முகத்தை மட்டும் காட்ட முடிந்ததென்றாலும், அந்த



ஒரு பாதியே இளைய பாண்டியனை பெரும் மயக்கத்தில் ஆழ்த்தியது. மறுபாதி முகம் நிழலின் பிடியில் இருந்தபோதும் அவள் பேரழகு என்பதை மறுக்க ஏதும் சான்று கிடைக்க வில்லை.

வானத்து நட்சத்திரம் ஒன்று மேகத் துணுக்கின் முதுகில் அமர்ந்திருப்பது போல் இருந்தது. அவள் புரவியில் அமர்ந்திருந்த அழகு. 'இவள் பூமியின் மகள் அல்ல... என்னைக் காப்பாற்ற தேவன் அனுப்பி வைத்த தேவதை. பொன் மகள்..' பலவாறு திசை தெரியாமல் ஓடிக் கொண்டிருந்த இளைய பாண்டியனின் சிந்தனைக் குதிரையை இழுத்து நிறுத்தியது அந்த காரிகையின் குரல். குரலா அது... மயிலின் தொண்டைக்குள் குயில்.

''யாரும் இருக்குமிடத்தை விட்டு அசைந்து என் குறுவாளுக்கு வேலை வைத்து விட வேண்டாம்''

குரலில் இனிப்பு தடவப்பட்டிருந்தாலும் எச்சரிக்கை யின் தொனியே அதிகமிருந்தது.

முத்துக்கருப்பன் இடது கையால் வலது கையை பிடித்த படி அசைவற்று நின்றிருந்தான். அவன் முகத்தில் வலியின் வேதனை தெரிந்தது. குழிக்குள் நின்று கொண்டிருந்த எட்டயபுரத்து வீரனோ முத்துக்கருப்பன் கையில் குத்தி நிற்கும் குறுவாளையும் குதிரை பெண்ணின் கையில் மினுக்கும் குறுவாளையும் இருமுறை மாறி மாறிப் பார்த்த வன் பயத்தில் சிலை போல நின்றான். காலில் மொய்க்கும் 'கடி' எறும்பையும் பொருட்படுத்தாமல்.

''பறல் ஆடி வீரரே''

அழைத்தாள் அந்தப் பாவை. திகைத்துப் போனான் இளைய பாண்டியன். 'யார் இவள்... என்னை எப்படி இந்த பெண்ணுக்குத் தெரியும். கட்டபொம்மு மகாராஜா அழைப்பது போலவே என்னை அழைக்கிறாளே. இவள் எதாவது...''

"ஆராய்ச்சியை சாவகாசமாய் வைத்துக் கொள்ளலாம் வீரரே. முதலில் காலடியில் கிடக்கும் துப்பாக்கியை கையில் எடுங்கள். துப்பாக்கியின் குறி முத்துக்கருப்பரின் நெஞ்சில் இருக்கட்டும்"

கட்டளை போல வந்தது குரல். 'மனதையேபடித்து விடுவாள் போலிருக்கிறதே. முத்துக்கருப்பனையும் தெரிந்து வைத்திருக்கிறாள்.. மந்திரப் பெண்ணோ..' சிந்தனையை மறைத்தபடி குனிந்து துப்பாக்கியை கையில் எடுத்து முத்துக் கருப்பனின் நெஞ்சுக்கு குறி வைத்தான். அடுத்து என்ன நடக்குமோ என்ற திகிலில் இருந்தது முத்துக்கருப்பனின் முகம்.

குதிரையிலிருந்து குதித்து இறங்கினாள் வனிதை. அவள் அழகு மேனி சிரமப்பட்டதை விட அதிகம் சிரமப்பட்டது இளைய பாண்டியனின் மனது. இமை மோதாமல் கவனித்தன அவன் கண்கள்.

"பறல் ஆடி வீரனின் பார்வை துப்பாக்கியின் குறியில் இருக்கட்டும்"

வேகமாய் வந்து விழுந்தன வார்த்தைகள். அவசரமாய் திருப்பிக் கொண்டான் பார்வையை. மனதுக்குள் சுருண்டு போனான் வெட்கத்தால். கொஞ்சம் கோபம் கூட எட்டிப் பார்த்தது.

அந்த காரிகையின் மனநிலையோ வேறுவிதமாய் இருந்தது. வீரத்தில் பேர் போன ஆண்மகன் ஒருவன் தன்னை குறுகுறுவென்று பார்த்ததால் ஏற்பட்ட நாணத்தில் சிவந்து கிடந்தது அவள் வதனம். சக்தியற்ற நிலவின் ஒளியால் அதை வெளிக்காட்ட இயலவில்லை.

அந்த வனிதை நாணத்தின் வசப்பட்டிருந்தாலும் ஆபத்தான அந்த வேளையில் எதிரியை மறந்து அவன் நடந்து கொண்ட விதம் அவள் கோபத்தைக் கிளறி விட்டதால் வாய் வார்த்தைகள் சற்று சூடாகவே வந்து



விழுந்து விட்டன. 'கண்டித்துப் பேசியிருக்க வேண்டாமா' என்று மனம் எண்ணமிட்டாலும் 'அதைப் பற்றி சிந்திக்க இது தருணமல்ல' என்ற முடிவோடு முதுதுக்கருப்பனை நோக்கி நிதானமாய் நடந்தாள்.

முத்துக்கருப்பனை நெருங்கியவள் சட்டென்று அவன் எதிர்பாராவிதமாய்; கையில் குத்தி நின்ற குறுவாளைப் பிடுங்கினாள்.

"ஆ"- அலறல் பிறந்தது முத்துக்கருப்பனிடமிருந்து.

"ஆள வந்திருக்கும் * மக்காளி தொரையின் நண்பர் கோழை போல் அலறலாமா.. வரலாறு சிரிக்காதா.."

- என்று கிண்டல் தொனிக்கும் குரலில் கேட்டவள் தன் கையிலிருந்த குருதி தோய்ந்த குறுவாளை முத்துக் கருப்பனின் கறுப்பு மேனியில் அலட்சியமாய் துடைத்து தன் இடுப்பில் செருகிக் கொண்டாள்.

அந்த இளம் பெண்ணின் செயல் முத்துக்கருப்பனுக்கு மூர்க்கமான கோபத்தை உண்டாக்கினாலும், தன்னை நோக்கி குறி வைக்கப்பட்டிருக்கும் துப்பாக்கிக்கு பயந்து அரை அங்குலம் கூட அசையாமல் நின்றான். அவனை அலட்சியமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு-

"எட்டயபுரத்து வீரரே. குழி தோண்டியது போதும். வெளியே வாருங்கள்"

- என்றாள் கேலி கலந்த குரலில். எட்டயபுரத்து வீரன் தயக்கமாய் மேலேறி வந்தான். அதற்குள் இளைய பாண்டியன் கையிலிருந்து வனிதையின் கைக்கு இடம் மாறி இருந்தது.

---

*மெக்காலே என்பான் கம்பெனி படைகளின் தளபதியாயிருந்தான். இவனை 'மக்காளி துரை' என்றே மக்கள் அழைப்பர். -ம.பொ. சிவஞானம். வீரபாண்டிய கட்ட பொம்மன் - பக்கம் 78.

"பறல் ஆடி வீரரே, என் குதிரையின் கழுத்தில் நூல் கயிறு ஒன்று தொங்குகிறது. எடுத்து வாருங்கள்" - என்றாள் அமைதியான குரலில்.

இளைய பாண்டியன் குதிரையை நோக்கி நடந்தான். தன்னை கயிற்றால் கட்டப் போகிறார்கள் என்பதை உணர்ந்த முத்துக்கருப்பனின் முகம் கோபத்தில் சிவந்தது. துப்பாக்கியின் கண்களுக்குப் பயந்து உடலை அசைக்கா விட்டாலும் வாயை அசைத்தான்.

"யார் நீ..?" - சீற்றமாய் வந்தன வார்த்தைகள்.

"நீ சீற ஆரம்பித்தால் என் துப்பாக்கியும் சீற ஆரம்பித்து விடும். எதைக் கேட்பதாயிருந்தாலும் அமைதியாய் கேள்" - என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

"நீ யார்...?" என்று கேட்டான். குரல் நடுங்கியது.

"நானா... குதிரை மோகினி" - என்று சொல்லிவிட்டு 'களுக்' எனச் சிரித்தாள் அந்த மோகனாங்கி. அந்தச்சிரிப்பே பேயின் சிரிப்பு போல்தான் இருந்தது அந்த இரவு வேளையில். பயத்தில் முத்துக் கருப்பனின் முகம் வெளிறிப் போயிற்று. எட்டிப் பார்த்த தைரியமும் ஓடி ஒளிந்து கொண்டது.

"முத்துக்கருப்பா, என்ன யோசிக்கிறாய்.. மோகினிக்கு கால் இருக்கிறது என்றுதானே.. நான் குட்டி மோகினி தானே.. இனிதான் கால் கொஞ்சம் கொஞ்சமாய் தேய ஆரம்பிக்கும்" - என்று சொல்லி விட்டு மீண்டும் சிரிக்க ஆரம்பித்தாள் அந்த பூங்கொடியாள். முதன் முதலாய் பேய்தானோ என்ற சந்தேகம் முத்துக்கருப்பனுக்கு.

இளைய பாண்டியனுக்கு சந்தேகம் வரவில்லை. உறுதியே செய்து விட்டான். அவள் மயக்கும் மோகினி என்று. நிலவின் மஞ்சள் ஒளியில் நனைந்து போயிருந்த அவள், வெண்பற்கள் பளீரிட அவள் சிரித்த அழகு,



அவனை நூல் கயிற்றுடன் நின்ற இடத்திலேயே நிற்க வைத்து விட்டது.

"வீரரே கயிற்றைக் கொண்டு வாருங்கள்" என்றாள் சிரிப்புக்கிடையில்.

குரலில் கலைந்து போன இளைய பாண்டியன் சற்று வெட்கம் கலந்த தயக்கத்துடன் அவளை நெருங்கினான்.

"பறல் ஆடி வீரரே, இரண்டு பேர் கைகளையும் முதுகுக்குப் பின்னால் இணைத்து இறுக்கமாய் கட்டுங்கள்" என்றாள் அவசரப்படுத்தும் வேகத்தில்.

முத்துக்கருப்பனும், எட்டயப்புரத்து வீரனும் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் போகவே எளிதாய் இருவர் கைகளையும் பின்புறமாய் இணைத்து இறுக்கி கட்டினான். இனி என்ன செய்வது என்ற பாவனையில் அந்த இளம் பெண்ணை நோக்கினான்.

"குழியில் இறக்கி நிற்க வைத்து விடுங்கள்" - என்று அவள் சொன்னதும் முத்துக்கருப்பனும், எட்டயபுரத்து வீரனும் திகிலுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அடுத்த சில விநாடிகள் கழித்து பரிதாபமாய் குழிக்குள் நின்று கொண்டிருந்தனர் இருவரும். முகம் முழுவதும் பயம் மண்டிக் கிடந்தது. கண்கள் அவள் வாய் அசைவுக்காய் காத்துக் கிடந்தன. கருங்கல்லாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

"வீரரே, குழியை மணலால் நிரப்பி விடுங்கள்"

"வேண்டாம், வேண்டாம். எங்களை விட்டு விடுங்கள் இந்த திசைக்கே வர மாட்டோம்" - பரிதாபமாக கத்தினான் முத்துக்கருப்பன்.

"திரும்பி வர மாட்டாய் என்பது என்ன நிச்சயம். அதை விட திரும்பி வரமுடியாத இடத்துக்கே அனுப்பிவிட்டால்..." - என்று இழுத்தவள் பெரிதாக சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

அந்தச் சிரிப்பு மோகினியின் பேய்ச் சிரிப்பாகவே காதில் விழுந்தது முத்துக்கருப்பனுக்கு. அந்த சிரிப்பொலி கோட்டையின் இடிபாடுகளில் மோதி எதிரொலித்தது புதியதொரு பயங்கரத்தை சிருஷ்டிப்ப தாகவே அமைந்தது.

சிரித்த உதடுகளில் இறுக்கம் வந்து அமர்ந்தது. குழிக்குள் மண்ணைத் தள்ளும்படி சைகை செய்தாள் இளைய பாண்டியனை நோக்கி. அந்த வனிதையின் கட்டளைக்கு கட்டுப்பட்டவன் போல மண்ணைத் தள்ளினான் குழிக்குள் வேக வேகமாய். முத்துக்கருப்பனும், எட்டயபுரத்து வீரனும் அவசரமாய் கண்களை மூடிக் கொண்டனர். மனதுக்குள் இஷ்ட தெய்வங்களை துணைக்கு அழைத்தனர். தமிழ் அன்னையின் அடிமை விலங்கொடிக்க தன்னுயிர் தந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் அழைப்புக்கு வராத தெய்வங்கள் இந்த தமிழ் துரோகிகளின் அழைப்புக்கா ஓடி வரப் போகின்றன.

மண்ணில் பூத்த மனிதத் தலைகளாக வெளியில் தெரிந்தன இருவருடைய தலைகளும். மண்ணுக்குள் புதைந்து போயிருந்தன மேனிகள். கண்கள் மட்டும் பொறிக்குள் சிக்கிய எலியின் கண்கள் போல் மினுக்கின.

"நினைவிருக்கிறதா முத்துக்கருப்பா, பாஞ்சாலங் குறிச்சி பிரதம அமைச்சர் தானாபதி பிள்ளையைக் கொன்று, தலையை வெட்டி வேலில் செருகி கோட்டை முன் வைத்து வேடிக்கை பார்த்தான் வெள்ளையன். * அதற்கு துணை போன துரோகிகளின் கூட்டத்தை சேர்ந்தவர்கள் நீங்கள்.

* தானாபதியை ஒரு வேப்ப மரத்தில் தூக்கிலிட்டு, பிரேதத்திலிருந்து தலையை வெட்டி எடுத்து, அதனை நீண்டதொரு வேல் கம்பின் முனையில் செருகி பாஞ்சாலங் குறிச்சி கோட்டை முன் வைத்து வேடிக்கை பார்த்தது வெள்ளை ராணுவம்.

- ம.பொ. சிவஞானம், விடுதலைப் போரில் தமிழகம்.

முதல் தொகுதி, இரண்டாம் பதிப்பு.



உங்கள் தலையையும் துண்டித்து வேலில் செருகி வைத்தால் என்ன..?" என்ற கேள்வியை சர்வ சாதாரணமாக முத்துக் கருப்பனை நோக்கி வீசி விட்டு புன்னகை புரிந்தாள் அந்த மொய்குழலாள்.

தன் நிலையை எண்ணிப் பார்த்த முத்துக் கருப்பனின் மேனி மண்ணுக்குள் வியர்த்து, கண்ணுக்குத் தெரியாமல் மெலிதாக நடுங்கவும் செய்தது. அதுவரை வாய் திறக்காத எட்டயபுரத்து வீரன் சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டவனாய் மெல்ல பேசினான் நடுங்கும் குரலில்.

"அம்மா தாயே, நீ யாரோ எனக்குத் தெரியாது. ஆனால் நீ என் கண்களுக்கு ஜக்கம்மாவின் வடிவமாகவே தெரிகிறாய். தவறுதலாய் உன் கோட்டைக்குள் நுழைந்து விட்டோம். மன்னிக்க வேண்டும் தாயே. எங்களை உயிரோடு விட்டு விடு தாயே. கையெடுத்து கும்பிட இயலா விட்டாலும் சிரம் தாழ்த்துகிறேன் தாயே. உயிர்ப்பிச்சை கொடு" அவன் கண்கள் கெஞ்சியது.

"நான் உங்களை இந்த நிலையில் விட்டு விட்டு சென்றாலும் இந்த பகுதி நரிகள் உங்களை விடப்போவதில்லை. கத்திக் கத்தி அழைத்தாலும் யாரும் உதவிக்கு வரப்போவதில்லை. கட்டபொம்மன் ஆவி அழைக்கிறது என்று காத தூரம் - ஓடிப்போய் விடுவார்கள். எட்டப்பன் கட்டிவிட்ட கதை உங்கள் இருவர் கழுத்துக்கே சுருக்குக் கயிறு ஆகிவிட்டது. துரோகத்தை கற்றுத் தரும் மக்காளி துரையாவது உங்களுக்கு விவிலியத்தையும் கற்றுத் தந்திருக்கலாம். படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான் என்பது தெரிந்திருக்கும். இத்தகைய இக்கட்டான நிலையும் உங்களுக்கு ஏற்பட்டிருக்காதும்.."

கொஞ்ச நேரம் யோசிக்கும் பாவனையில் நின்று கொண்டிருந்தாள். ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டவள் போல் மீண்டும் பேசத் தொடங்கினாள்.

"முத்துக்கருப்பா, உங்கள் இருவரையும் கொன்று ரத்தம் குடிக்கும் நோக்கம் எனக்கு இல்லை. உங்கள் இருவரையும் இங்கேயே விட்டு விட்டுச் செல்கிறேன். உங்கள் தலைகள் நரிகளுக்கும், கழுகுகளுக்கும் இரையாகாமல் தப்பி, துரோகிகளுக்கு இரக்கம் காட்டியே கெட்டுப் போன தமிழன் எவன் கண்ணிலாவது பட்டு உயிர் பிழைத்தால் அந்த மக்காளி பயலிடம் போய் சொல், குதிரை மோகினி ஒன்று திரிகிறது என்று. மறக்காமல் கட்டபொம்மன் ஆவிக்கு உறவுக்காரி குதிரை மோகினி என்பதையும் தெரிவித்துவிடு. மீண்டும் சந்திக்க வேண்டாம்" - என்று சொல்லி விட்டு வேகமாய் குதிரையை நோக்கி நடந்தவள், முதுகுக்கு பின்னால் தொடர்ந்து வரும் காலடி ஓசைகளை கேட்டுத் திரும்பினாள். இளைய பாண்டியன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன.." என்றாள் வனிதை.

"எதுவும் சொல்லாமல் போகிறீர்களே.."

"சொல்லாமல் தானே வந்தேன்"

"அந்த சந்தனப் பேழையை.."

"உரியவரிடம் உரிய நேரத்தில் சேர்த்து விடுவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் உங்களிடம் விட்டு விட்டு போகிறேன்"

"தங்கள் பெயர்.." -என்று மெல்ல குரலை இழுத்தான்.

"குதிரை மோகினி" - ன்றவள் இளைய பாண்டியனை குறும்பாய் ஒரு பார்வை பார்த்து விட்டு, குதிரையில் தாவி ஏறினாள்.

"இனி தங்களை எங்கே சந்திப்பது..?"

"சுடுகாட்டில்"



வார்த்தைகள் வாயிலிருந்து விழவும், அந்த கரும்புரவி அந்த வாலிப மங்கையை சுமந்து வாயு வேகத்தில் ஓட ஆரம்பித்தது.

"யார் இந்த குதிரை மோகினி" என்ற கேள்வி மட்டும் மனதில் சுழன்று கொண்டிருக்க - அந்த கரும்புரவி சென்ற திசையையே கண் இமைக் காமல் பார்த்தபடி சிலை போல நின்று கொண்டிருந்தான் பறல் ஆடி வீரன் இளைய பாண்டியன்.

# 4

## உளவு பார்த்த ஒற்றைக் கண்

**க**டந்து போன இரவில் வானக் காதலன் தந்த பனி முத்தங்களால் நனைந்து போன மலர்க்கொடிகள் விடி காலைச் சூரியனின் சுகமான வெப்பத்தில் தங்களை உலர்த்திக் கொண்டிருந்தன.

பனை ஓலைத் தொப்பி அணிந்திருந்த முப்பது குடிசைகள் கொண்ட அந்த கிராமம் கதிரவன் விழிப்பதற்கு இரண்டரை நாழிகைக்கு முன்னாலேயே விழித்துக் கொண்டிருந்தது.

ஊருக்கு தென்புறமிருந்த பெரிய வைக்கோல் படப்பின் உச்சியில் நின்று கொண்டிருந்த இளவயது சேவல் ஒன்று புதிதாக கற்றுக் கொண்ட பெருமை குரலில் தொனிக்க ஏழாவது முறை 'கொக்கரக்கோ' என்றது. ஊர் பொதுக் கிணற்றில் பெருசுகளும் சிறுசுகளும் *பட்டையால் நீர் இறைத்து தங்கள் மண் குடத்தை நிரப்பிக்கொண்டிருந்தனர்.

பொங்க வைச்சான் ஓடையில் குளித்து விட்டு ஈரச் சேலை கெண்டைக் காலில் உரச, இல்லாத இடுப்பில் நீர்க் குடம் அமர்ந்திருக்க, மஞ்சள் முகத்து பருவப் பெண்கள் தங்கள் இல்லங்களுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். இவர்கள் யாரையும் கவனிக்காதவன் போல் அமர்ந்திருந்த வாலிப வீரனை சுமந்து கொண்டு கபில நிறக் குதிரை ஒன்று

* பனை ஓலை வாளி



வேகமாய் ஓடி, ஊரின் தென் கோடியில் இருந்த சிறிய குடிசை முன் நின்றது. அந்த ஓலைக் குடிசை பூட்டிக் கிடந்தது. பனங்கம்புகளால் ஆன கதவு யாரையும் நுழைய விடாதபடி காவல் இருந்தது. கதவின் வலப்பக்கத்தில் இருந்த சாவித் துவாரம் கதவின் முதுகில் தாழ்ப்பாள் இருப்பதை சொல்லாமல் சொன்னது.

குதிரையின் முதுகில் இருந்து குதித்து இறங்கினான் இளைய பாண்டியன். குதிரை அவனையே கண் இமைக் காமல் பார்த்துக் கொண்டு நின்றது.

"ஏய் குமுதா.. ம்.. போ" - என்றான் கட்டளையிடும் தொனியில்.

குதிரை 'போகமாட்டேன்' என்று குறுக்கு வாக்கில் தலை அசைத்தது. கக்கத்தில் இருந்த இரும்புப் பெட்டி யுடன் சுற்றும் முற்றும் ஒருமுறை நோட்டம் விட்டான். யாரும் இல்லை.

இரும்புப் பெட்டியை தரையில் வைத்து விட்டு, பனங் கதவை தள்ளினான். அது 'திறக்கமாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்தது.

சுவரோரம் கவிழ்ந்து கிடந்தது உரல் ஒன்று. அதை அசைத்து நிமிர்த்தினான். உரலின் அடியில் இரும்புத் திறவு கோல் ஒன்று இருந்தது. அதை அவசரமாய் கையில் எடுத்து, சாவித் துவாரத்தில் நுழைத்து திருகினான். நிதானமாய் திறந்து கொண்டது.

வேகமாய் இரும்புப் பெட்டியை தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான். குதிரை இன்னும் அவனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றது.

"குமுதா, நீ போகப் போகிறாயா, இல்லையா..". என்றான் கோபமாக.

அடுத்த வினாடியே அந்த கபில நிறக் குதிரை தன் எஜமானனின் கோபததைப் புரிந்து கொண்டது போல சற்று தள்ளியிருந்த கருவேலங்காட்டை நோக்கி ஓட ஆரம்பித்தது.

உதட்டில் பிறந்த புன்னகையை துடைத்தெறிந்து விட்டு ஓங்கி கதவைச் சாத்தினான். 'சப்பக்'கென்று கதவு நிலையுடன் ஒட்டிக் கொண்டது. இரும்பு பெட்டியை குடிசையின் தரைப் பகுதியில் வைத்து விட்டு, தாழ்ப்பாளை அழுந்தித் தள்ளினான். பூட்டிக் கொண்டது.

நிம்மதிப் பெருமூச்சுடன் குடிசைக்குள் சுற்றிலும் ஒரு முறை பார்வையை ஓடவிட்டான். மண் பானைகளின் தலைகளில் மண் பானைகள் அடுக்கடுக்காய் அமாந்திருந்தன. குடிசையின் தென் மேற்கு மூலையில் உயரமாய், பருமனாய் 'மண்குதில்' ஒன்று நின்று கொண்டிருந்தது. அதன் இடுப்பு பகுதியில் கை நுழையும் அளவுக்கு துவாரம், குதிலுக்குள் எந்த தானியமும் இல்லை என்பதை ஒளிவு மறைவின்றி சொன்னது.

குதிலின் அடிப்பாகத்தைப் பிடித்துக் கொண்டிருந்த மண்ணை வேகமாய் அகற்றினான். குதிலை மெல்ல அசைத்தான். பிடிப்பு ஆடியது.

குதிலை இரு கைகளாலும் அணைத்துத் தூக்கி ஒரு ஓரமாய் வைத்தான். ஏதோ சிந்தனை வசப்பட்டவன் போல சிறிது நேரம் நின்று கொண்டிருந்தான்.

அண்ணாந்து கூரையைப் பார்த்தான். மண்வெட்டி ஒன்று செருகி வைக்கப்பட்டிருந்தது. அதை உருவி கையில் எடுத்துக் கொண்டான்.

குதில் இருந்த இடத்தில் குழி ஒன்றை தோண்டத் தொடங்கினான். அதி வேகமாய் குழி ஒன்று பிறந்தது. நெற்றியில் துளிர்ந்த வியர்வையை துடைத்துக்கொண்டான்.



குடிசையின் நடுநாயகமாய் இருந்த இரும்புப் பெட்டியைத் தூக்கி குழிக்குள் இறக்கினான்.

"தட்— தட்— தட்" கதவு வேகமாய் தட்டப்பட்டது. திடுக்கிட்டு நிமிர்ந் தான் இளைய பாண்டியன். கதவைப் பார்த்தான் கலவரத் துடன். கதவு மெலிதாக ஆடியது.

மின்னல் வேத்தில் மண்ணை குழிக்குள் தள்ளி மூடினான். காலால் சமப்படுத்தினான் தரையை. கதவு மீண்டும் தட்டப்பட்டது வேகமாய்.

"தட்... தட்... தட..."

- கதவை ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டு, அந்த குதிலை தூக்கி இருந்த இடத்தில் வைத்தான். கதவைத் தொடர்ந்து தட்டிக் கொண்டிருப்பதால் அந்த பனங்கதவு இன்னும் அதிர்ந்து கொண்டிருந்தது. ஏதோ குழறலாய் ஒரு குரல் வெளியே கேட்டது. தாழ்ப்பாளை நீக்கி கதவை உள் பக்கமாய் இழுத்தான்.

வாசலில் -

தோல் சுருங்கி, தலை நரைத்து, பல் இழந்த கிழவி ஒருத்தி வேடன் கை வில்லாக நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் இளைய பாண்டியனின் முகம் தாயைக் கண்ட சேயின் முகம் போல பூவாய் மலர்ந்தது.

"என்ன பேரப்புள்ள, கதவைப் பூட்டிக் கிட்டு உள்ளுக்கு என்ன செய்றே.. ஒரு நாழிகை நேரம தட்டியிருப்பேன், கதவைத் தட்டி தட்டியே இந்த கிழவி வாநாள் பாதிமுடிஞ்சு போச்சு"

"மீதி கொஞ்சம் இருக்குதில்லை. என் கல்யாணம் வரைக்கும் அது போதும். உள்ள வா பாட்டி"

அந்த கிழவி இடுப்பிலிருந்த மண் குடத்துடன் உள்னே நுழைந்து, குடிசையின் மூலையில் கிடந்த 'பனஞ்

சில்லாட்டை' மீது குடத்தை இறக்கி வைத்தாள். அதற்குள் கதவை தாழ் போட்டு விட்டு முதியவளின் அருகே வந்தான் இளைய பாண்டியன்.

'ஏலேய் பாண்டியா, பௌர்ணமிக்கு போனவன் அமாவாசை கழிச்சி வந்திருக்கே. ஏதாவது பொண்ணு கிண்ணுதான் தேடிப்போயிட்டியோன்னு நினைச்சேன். கையை வீசிட்டு வந்திருக்கே. உனக்காக இங்க ஒரு கிழவி காத்துக்கிட்டிருப் பாங்கிறதே உனக்கு மறந்துபோச்சு. வந்ததும் வராததுமா கதவைப் பூட்டிகிட்டு என்னத்தை குடைஞ்சே?'' என்று பெரிய குரலில் கேட்டாள் அந்தக் கிழவி. அவளுக்கு எந்தவித பதிலும் சொல்லாமல் அவள் கரத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு குதில் இருந்த மூலைக்குச் சென்றான்.

"கையை பூய்ச்சி எடுத்துருவ போலயிருக்கே'' என்று கத்தினாள் கிழவி.

"வா இப்படி.. கொஞ்ச நேரம் கத்தாமல் நான் சொல்வதைக்கேள். கட்டபொம்மு மகாராஜாவை தெரியுமா உனக்கு.." - என்று கேட்டான் இளைய பாண்டியன்.

"அட பாண்டியா, கட்ட பொம்மு மகாராஜாவை எனக்குத் தெரியுமான்னு கேட்கிறே.. இந்த ஜெகத்துக்கே தெரியுமே அந்த தர்ம தொரையை. அவரைக் கொண்டு போயி புளிய மரத்தில் தூக்கு போட்டுட்டானே வெள்ளைக் காரப்பய.. அவன் உருப்படுவானா.. அவன் பிள்ளை குட் டிங்க நல்லா இருக்குமா... நாசமா, நத்தைப் பாழாப் போக.."

- கிழவியின் வாயை அவசரமாகப் பொத்தினான். பறல் ஆடி வீரன்.

"ஆ, ஊன்னு கத்தி ஊரைக் கூட்டிடாத.. சொல்றதை செடிக்குள்ள விழுந்த பனங்காய் மாதிரி அமைதியாய் கேள்.. கட்டபொம்மன் மகாராஜா கோட்டைக்குள்ள இருந்து



இரும்பு பெட்டி ஒன்றை தோண்டி எடுத்து வந்திருக்கேன். இளையவர் ஊமைத்துரை சிறையில் இருந்து வெளியே வந்ததும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும்"

"எங்கே வைத்திருக்கிறாய் அந்த பெட்டியை"

- மெல்லிய குரலில் கேட்டாள் அந்த முதியவள். குழிக்குள் கிடந்த கண்கள் வெளியே வர முயன்றன ஆர்வத்தால்.

"குதிலுக்கு நேர் கீழே புதைத்து வைத்திருக்கிறேன்"

"கதவைபூட்டிக் கொண்டு இந்த வேலைதான் பார்த்தாயா. என்னிடம் பெட்டியை காட்டாமல் போய்விட்டாயே.." வருத்தம் வார்த்தைகளில் படிந்திருந்தது.

"பாட்டி ஒன்றை மட்டும் கவனமாய் கேட்டுக் கொள். இந்த பெட்டியை எடுத்துச் செல்ல எட்டயபுரத்து எட்டப்பன் ஆட்கள் தீவிரமாய் அலைகிறார்கள். போதாத குறைக்கு மெக்காலே துரையும் தன் சிப்பாய்களை ஏவி விட்டிருக்கிறானாம். எந்த நேரமும் அவர்கள் துப்பு துலக்கி நமது கிராமத்துக்கு வரக்கூடும். எதற்கும் நீ கவனமாய் இருந்து கொள்வது நல்லது. யாரிடமும் இதைப் பற்றி பேசி உன் ஓட்டை வாயைக் காட்டி விடாதே".

"நான் ஏண்டாப்பா சொல்லப் போறேன். மகாராஜா சொத்தையே என் வீட்டுக்குள்ள கொண்டு புதைச்சிருக்கே. அதுக்கு ஒரு பங்கம் வராம நான் பார்த்துக்க மாட்டேனா.. வேண்டாதவங்க கையில் பெட்டியைச் சிக்க விட்டுவேனா.. அந்த பெட்டி இந்த வீட்டை விட்டு வெளியே போக ணும்னா இந்த கூட்டை விட்டு உசுரு போயிருக்கணும்" - என்றாள் உறுதியான குரலில்.

"பாட்டி, உன் மேல எனக்கு நிறைய நம்பிக்கை இருக்குது. இல்லைனா உன் வீட்ல வந்து நான் தங்குவேனா.. இல்லை கட்ட பொம்மு சொத்தை உன்கிட்ட ஒப்படைப்

பேனா. நான் சொல்வது எல்லாம் நீ கவனமாய் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். எட்டப்பன் ஒற்றர்கள் காதுகளை திறந்து வைத்துக் கொண்டு கிராமம் கிராமமாக அலைகிறார்கள். கட்டபொம்மனுக்கு ஆதரவாக எந்த மூலையில் குரல் கேட்டாலும் அதை காதுகளால் விழுங்கி மெக்காலே துரையில் காலடியில் கிடக்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீ எது பேசுவதாயிருந்தாலும் கவனமாய் பேசவேண்டும் என் வாயிலிருந்து விழும் வார்த்தைகள் கட்ட பொம்மனைத் தூக்கியோ வெள்ளையனைத் தாக்கியோ இருக்கக்கூடாது. துரோகிகளின் சந்தேகக் கண்கள் நம் மீது திரும்பக்கூடாது. பேச்சிலும் செயலிலும் மிகுந்த கவனம் வேண்டும் பாட்டி"

- அவன் பேச்சுக்கு பலமாக தலையசைத்தாள் அந்த கிழவி. பொக்கை வாய்ச் சிரிப்புடன் பேசவும் செய்தாள்.

"நீ கவலைப்பட வேண்டாம்" என்று.

- அதில் திருப்தி அடையாதவன் போல இளைய பாண்டியனின் முகம் காணப்பட்டது. நினைவூட்டும் தொனியில் மீண்டும் பேசினான்.

"நான் யார் தெரிகிறதா பாட்டி"

"பாஞ்சாலங் குறிச்சி வீரன் என்று நீ சொன்னதை அத்தனை சீக்கிரத்தில் இந்த கிழவி மறந்திருப்பாள் என்று நினைத்து விட்டாயா இளைய பாண்டியா.." - என்று பெருமை பொங்க கேட்டாள் அந்த முதியவள்.

"கொக்கு வெள்ளை என்று சொல்லி விட்டு பெருமை பேசுகிறாயே பாட்டி. நான் சொன்னதை மறந்து விட்டு மறக்கவில்லை என்கிறாய். நான் உன் மகள் வயிற்றுப் பேரன் என்பதை மறந்து விட்டாயே.."

"ஆமாம், ஆமாம். மறந்தே போய் விட்டேன். நீ என் மகள் வயிற்று பேரன். தாயையும் தகப்பனையும் இழந்த நீ



என்னுடன் வந்து தங்கி விட்டாய். விவசாயம் பார்த்துக் கொண்டிருக்கிறாய் சொந்த நிலத்தில். உனக்கும் பாஞ்சாலங் குறிச்சிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. சரிதானா.." - என்றாள் மனனம் செய்து ஒப்புவிப்பது போல.

"இனி மறந்து விடாதே பாட்டி" - என்று சொல்லிவிட்டு கடகடவென்று சிரிக்க ஆரம்பித்தான் இளைய பாண்டியன். பனமரக் கதவின் இடைவெளி வழியே ஒரு ஒற்றைக்கண் இருவரையும் இமைக்காமல் கவனித்துக் கொண்டிருந்தது.

# 5

## கடற்கரையின் அழைப்பு

பாளையங்கோட்டை நகர் மீது மழை மேகங்கள் கூட்டம் போட்டிருந்தன. சூரியக் காதலனை சந்திக்க இயலாத தடாகத் தாமரைகள் சோர்ந்து கிடந்தன. பருவக் காற்று அலைந்து அலைந்து தளர்ந்த பூக்களை மண்ணில் வீழ்த்திக் கொண்டிருந்தது.

குளிர் சுமந்த காற்றின் வருடல் தந்த சுகத்தில் துள்ளல் நடை போட்டுக் கொண்டிருந்தது கரும்புரவி ஒன்று. அதன் முதுகில் அமர்ந்திருந்தான் முத்துக்கருப்பன். அவன் முகத்தில் கவலை ரேகை படிந்திருந்தது.

ஆடு மேய்ப்பவர்களின் உதவியால் உயிர் தப்பி விட்ட மகிழ்ச்சியை, கண்டெடுத்த பெட்டியை இளைய பாண்டியன் அபகரித்து சென்று விட்டானே என்ற துயரம் விழுங்கியிருந்தது.

'கட்டபொம்மன் புதைத்த பெட்டியை கொண்டு வந்து காலடியில் வைக்கிறேன் என்று மெக்காலே துரையிடம் மார் தட்டி விட்டு வந்தேனே.. இப்பொழுது கையை வீசிக் கொண்டு சென்றால் என்ன நினைப்பார்.. பொய் சொல்கிறேன் என்று எண்ணி விடுவாரோ..'

உண்மையைச் சொல்லவா இல்லை பொய் சொல்லி விடலாமா.. நானும் எட்டயபுரத்து வீரனும் தோண்டி பெட்டியை எடுத்ததையும், இளைய பாண்டியன் பறித்துச்



சென்றதையும் அவனுக்குத் துணையாக திடீரென்று குதிரை மோகினி வந்ததையும் சொன்னால நம்புவாரா.. நம்புவார். ஆனால் நம் மீது வைத்திருக்கும் நம்பிக்கை குறைந்து விடும். நம்மை கையாலாகாதவன் என்று எண்ணி விடுவார். துரோகி பட்டம் ஏற்கெனவே கிடைத்து விட்டது. கோழை என்ற பெயரும் வாங்க வேண்டுமா.. கூடாது.. கூடாது.. என்று மனம் ஓலமிட்டது.

சின்ன சின்னதாய் மழைத் துளிகள் மேனியில் விழுந்து சிந்தனையைக் கலைத்தது. நிமிர்ந்து வானம் பார்த்தான். கனிந்து கொண்டிருக்கும் மேகங்கள் அரை நாழிகைக்குள் பூமியை நனைக்கும் உத்தேசம் தெரிந்தது.

தூரத்து கோட்டையின் தலையில் வெள்ளையர்களின் யூனியன் ஜாக் கொடி பிடிவாதமாய் படபடத்துக் கொண்டிருந்தது.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டவன் போல கரும் புரவியின் வயிற்று பிரதேசத்தில் பெருவிரலால் நிரடினான். வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல கோட்டையை நோக்கிப் பறந்தது கரும்புரவி.

கோட்டையை நெருங்கியதும் குதிரையின் வேகம் குறைந்தது. கோட்டை வாசலில் நின்று கொண்டிருந்த இந்தியமுக பிரிட்டிஷ் சிப்பாய்கள் புன்னகையுடன் மரியாதை செலுத்தினர் முத்துக்கருப்பனுக்கு. விலகி வழி விட்டனர் உள்ளே நுழைவதற்கு.

குதிரை மெல்ல கோட்டைக்குள் நுழைந்தது. உள்ளே இருந்த பெரிய கட்டடத்தின் முகப்புக்கு வந்ததும் குதித்து இறங்கினான். கட்டடத்தின் பக்கவாட்டிலிருந்த வேப்பமரம் ஒன்றில் குதிரையை கட்டிவிட்டு, அந்த கட்டடத்து வாசலை சமீபித்து வரிசையாய் படிகளை கடந்து, நீளமான நடை பாதையில் நடந்து சற்று ஒதுக்குப்புறமாய் இருந்த அறையின்

முன்னால் போய் நின்றான். அறை வாசலில் நின்று கொண்டிருந்த கருப்பு முக சிப்பாய் இவனைக் கண்டதும் அகலமாய் சிரித்தான்.

"துரை இருக்கிறாரா..." என்று கேட்டான் முத்துக்கருப்பன்.

"இருக்கிறார்" - என்று பதில் சொன்னவன், வாசலில் தொங்கிக் கொண்டிருந்த திரையை விலக்கி உள்ளே சென்று சிறிது நேரத்தில் திரும்பி வந்தான்.

"உங்களை அழைக்கிறார்" - என்றான். முத்துக்கருப்பன் பவ்யமாய் அந்த அறைக்குள் நுழைந்தான். அந்த அறை வெறுமையாய் கிடந்தது. அந்த அறையின் பக்கவாட்டில் இன்னொரு வாசல் தெரிந்தது. மெல்ல அந்த வாசல் திரையை விலக்கி எட்டிப் பார்த்தான்.

அந்த அறை மிகவும் விசாலமாக இருந்தது. அறையின் நடுநாயகமாய் கிடந்த மேஜையின் மீது நிறைய காகிதங்களைப் பரப்பி வைத்து தன்னுடைய நீல கண்களால் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். மேஜையில் சுருட்டு பெட்டி ஒன்று இருந்தது. அதற்கு காவல் போல அருகே கைத் துப்பாக்கி. சற்று தள்ளி அடுக்கு குலைந்த ஆங்கிலச் சட்டப் புத்தகங்கள்.

அவருக்கு மேலே கான்வஸ் மரச் சட்டத்தில் தொங்கிக் கொண்டிருந்த பங்க்கா காற்றை அள்ளி அவர் மேல் வீசிக் கொண்டிருந்தது. பங்க்காவை கர்ம சிரத்தையாய் இயக்கி விட்ட பொம்மை போல இயக்கிக் கொண்டிருந்தான் ஒரு கறுப்பு முக வேலையாள். அவன் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இருந்ததாகத் தெரியவில்லை.

சுவரில் சலனமற்ற பார்வையுடன் வெள்ளை முகங்கள் படங்களாய் தொங்கின. இரண்டு இரட்டைக் குழல்





துப்பாக்கிகள் ஒன்றை ஒன்று குறிபார்த்துக் கொண்டிருந்தன. அருகே சுருட்டி வைக்கப்பட்ட சவுக்கு.

அந்த அறையை புதிதாய் பார்ப்பவன் போல ஒருமுறை பார்த்து விட்டு மெல்ல உள்ளே அடி எடுத்து வைத்தான். காலடி ஓசையில் நிமிர்ந்தார் மெக்காலே.

'வா.. முட் கர்ப்பன் வா" - என்றார் புன்னகையுடன்.

"குட்மார்னிங் தொரை" - என்று சொல்லிவிட்டு தலை குனிந்து வணங்கினான் முத்துக்கருப்பன்.

பங்க்கா இழுத்துக் கொண்டிருந்தவனை வெளியே போகும்படி சைகை செய்தார். அவன் பங்க்கா கயிற்றை விட்டு விட்டு மௌனமாய் வெளியேறினான். அவன் காலடி ஓசைகள் தேய்ந்து கரைந்ததும் "என்ன ஆச்சு?" என்று கேட்டார் மெக்காலே.

"அது.. வந்து.. அங்கே பெட்டி கிடைக்கவில்லை. நாங்கள் போவதற்கு முன்னால் வேறு எவனோ பெட்டியை எடுத்துச் சென்று விட்டான்"

"கட்டபொம்மன் உறவுக்காரன் எவனாவது வெளியில் இருக்கிறானா..?"

"தலை மறைவாய் இருக்கிறார்கள் துரை. கட்டபொம்மன் புதுக்கோட்டை மகாராஜாவிடம் அகப்படுவதற்கு முன்னால் உறவுக்காரர்களிடம் புதைத்த பெட்டியைப் பற்றி கூறி இருக்கலாம். அவர்கள் தான் எடுத்துச் சென்றிருக்க வேண்டும்."

"இனி அந்த பெட்டி கிடைக்காதா முட் கர்ப்பு"

"கிடைக்கும் துரை கண்டிப்பா கிடைக்கும். அந்த பெட்டியை கொண்டு உங்கள் காலடியில் வைக்கும் வரை இந்த முத்துக்கருப்பன் தூங்க மாட்டான்."

"உனக்கு மட்டுமா தூக்கம் இல்லை. எனக்கும் தான் தூக்கம் இல்லை. என்று ஊமைத்துரை வாழ்வுக்கு முற்றுப்

புள்ளி வைக்க மெட்ராசிலிருந்து உத்தரவு வருகிறதோ அன்றுதான் எனக்கு நிம்மதி. போதாத குறைக்கு சிவ கெங்கை மருது பாண்டியர்களும் கப்பம் கட்ட மறுக்கிறார்களாம். அவர்களுக்கும் இறந்து பார்க்க ஆசை வந்து விட்டது போலும். எங்களை எதிர்த்து ஒரு இந்திய நாய் குரைத்தாலும் தூக்குக் கயிற்றில் தொங்க விடாமல் விட மாட்டோம். இது உறுதி" என்றார் ஆங்கிலத்தில்.

"துரைகளை எதிர்க்க சின்ன மருது, பெரிய மருது என்ன.. இன்னும் எத்தனை மருதுகள் வந்தாலும் நடக்காது. இந்த பாரத பூமியை ஆள்வதற்கு கடல் கடந்து வந்த வெள்ளைத் தூதர்கள் நீங்கள். இருந்தாலும்.."

"இருந்தாலும்.."

"பாஞ்சாலங்குறிச்சி மக்கள் ஆபத்தானவர்கள். தங்களுக்கு ஒரு தலைவன் கிடைத்தால் கை தூக்க தயங்க மாட்டார்கள். இறந்து போன கட்டபொம்மனையே தெய்வமாக பூஜிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கட்ட பொம்மன் தூக்கில் தொங்கவிடப்பட்ட கட்டை புளிய மரத்தை கடவுளாக கும்பிடுகிறார்களாம். மரத்தின் அடி மண்ணை அள்ளிச் சென்று பாலில் கரைத்து குழந்தைகளுக்கு புகட்டுகிறார்களாம். கட்டபொம்மனின் வீரம் தங்கள் குழந்தைகளுக்கும் வந்துவிடும் என்று நம்புகிறார்கள். நாம் உடனே அவர்கள் நம்பிக்கையை தகர்த்தாக வேண்டும்"

"என்ன செய்ய வேண்டும் சொல் முட் கர்ப்பு.." - என்று கேட்டார் மேஜர் மெக்காலே.

"அந்த புளிய மரத்தை வெட்டி வேரோடு வேரடி மண்ணோடு இல்லாமல் செய்ய வேண்டும்"

"குட் ஐடியா" - என்றார் வெள்ளைத் தளபதி. அதே நேரம் உள்ளே நுழைந்தான் ஒரு வேலைக்காரன். அவன்



கைகளில் இருந்த தட்டில் பொரித்த கோழி ஒன்றும், பிராந்தி பாட்டில் ஒன்றும் இருந்தது.

அவன் உள்ளே நுழைந்ததும் பேச்சு பாதியில் அறுந்தது. சற்று தள்ளியிருந்த குட்டை மேஜையில் கொண்டு தட்டை வைத்து விட்டு - பணிவாய் ஒதுங்கி நின்றான்.

"போகலாம்" - என்ற ஒற்றைச் சொல் உதிர்ந்தது மெக்காலேயின் வாயிலிருந்து. அடுத்த வினாடியே அந்த அறையிலிருந்து அகன்றான் வேலையாள். உடனே வாய்திறந்தான் முத்துக் கருப்பன்.

"உடனே பத்து ஆட்களை அனுப்பி இரவோடு இரவாக புளிய மரத்தை வெட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து விடட்டுமா துரை" - என்று கண்கள் பளபளக்க கேட்டான்.

"முட் கர்ப்பு.. பார்க்கலாம்.. அவசரப்பட வேண்டாம்.. இந்த தமிழ் பேசும் பூமியில் மன்னர்களை விட தெய்வங்கள் அதிகமாய் இருக்கிறது. மன்னர்களைக் கொன்றால் கூட கோபப்படாத மக்கள் கடவுள் சிலையை தொட்டால் கோப முகம் காட்டுகிறார்கள். கடவுள் வரிசையில் கட்டை புளிய மரமும் சேர்ந்து விட்டது. புளிய மரத்தில் கை வைக்கப் போய் புதிய வம்புகள் வந்து சேர்ந்து விடக்கூடாது. ஊமைத் துரை மீது கத்தி வைக்கும் போது, புளியமரத்தின் மீதும் வைக்கலாம்". - என்றார் மெக்காலே. பலமாகத் தலையாட்டனான் முத்துக்கருப்பன்.

வெளியே போவது போல் பாவனை செய்து விட்டு இதுவரை திரை மறைவில் நின்று கவனித்துக் கொண்டிருந்த வேலையாள் அவசரமாய் நகர்ந்தான்.

சூரியன் மடிந்து போயிருந்த மாலைப் பொழுது மஞ்சள் துகிலில் இரத்தத் துளிகள் சிதறியது போல மேல் வானம் அழுதழுது வற்றிப்போன வான் மேகங்கள்.

வீச மனமில்லாமல் நகர்ந்து கொண்டிருந்தது வட கிழக்கு பருவக்காற்று. துக்கம் அனுஷ்டிப்பது போல மௌனமாய் நின்று கொண்டிருந்தன கறுப்புப் பனை மரங்கள்.

தூரத்து இளை மரங்களில் மூர்க்கமாய் கத்திக் கொண்டிருந்தன சாயங்காலப் பறவைகள். துள்ளிக் குதித்துச் செல்லும் தாமிர வருணி நதி கூட சற்று பயந்தது போல சலசலப்பின்றி ஓடிக்கொண்டிருந்தது. தமிழர்களின் நிலை போல கரையோர நாணல்களின் தலை குனிந்தே கிடந்தது.

பாரதத்தில் வெள்ளையரின் ஆதிக்கம் போல இருட்டு வேக வேகமாய் வெளிச்சத்தை விழுங்கிக் கொண்டிருந்தது. ஓடுகின்ற நதியையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் சிவதைதயா ஆற்றின் ஓட்டத்துக்கு இணையாக அவன் சிந்தனையும் ஓடிக் கொண்டிருந்தது.

"அங்ங்.. கங்.. அங்ங்.. க்ங்.."

- கழுதையின் கனைப்பில் சிந்தனை கலைந்தது. அவசரமாய் திரும்பிப் பார்த்தான். நான்கு கழுதைகளை விரட்டிக் கொண்டு சலவைத் தொழிலாளி ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவன் வாயிலிருந்து கிளம்பிய பாட்டு காற்றில் மிதந்து வந்தது.

"வெள்ளை வேட்டி மடிச்சி கட்டி
மசசான் நான் வீதி வந்தா
மயக்கும் விழி வீசுறியே
ஜோக்கான கறுத்த குட்டி..."

-மெல்லச் சிரித்துக் கொண்டான் சிவத்தையா. 'யாருக்குச் சொந்தம் என்று தெரியாமலே காற்றில் பரவி, பாமர மக்களின் சந்தோஷத்திலும், துக்கத்திலும் கலந்து



ஒலிக்கும இந்த சுகமான கீதங்கள் ஒரு மாபெரும் இலக்கிய பொக்கிஷம். அதை எடுப்பாரும், கோர்ப்பாரும் இன்றி, கடலில் போட்ட சர்க்கரை போல கரைந்துதான் போகப் போகிறதோ. வெள்ளையனின் ஆதிக்கம் கன்னித் தமிழை யும் சுபளீகரம் செய்து விடுமோ' மனதில் புதிதாய் ஒரு கவலைப் பந்து வந்து உட்கார்ந்து கொண்டது. கண்களை மூடி நீளமாய் ஒரு பெருமூச்சு விட்டவன் திடுக்கிட்டு விழித்தான். அவன் முதுகை உரசிக்கொண்டு கழுதை ஒன்று சென்றது. கோபமாய் எழுந்தான். அகலமாய் சிரித்தான் சலவைத் தொழிலாளி.

"முட்டாள் கழுதையை மேலே உரச விட்டு சிரிக்கவா செய்கிறாய்.. அடிக்கிற அடியில் பல்லெல்லாம் உதிர்ந்து விடும். பிறகு காலம் முழுசும் பொக்கை வாய்ச் சிரிப்பு தான்" - கோபம் கொப்பளிக்க பேசினான் சிவதைதயா.

தன்னுடைய கழுதை உரசிவிட்டுச் சென்றதையோ, அதனால் கோபமுற்றவன் கத்தியதையோ அந்த சலவைத் தொழிலாளி பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவன் முகத்திலிருந்த சிரிப்பு கொஞ்சமும் மாறவில்லை.

"கழுதை தெய்வம் மாதிரிசாமி" - சலவைத் தொழிலாளி.

- "அது உனக்கு எனக்கு அல்ல".

"கழுதை மட்டும் அல்ல. நானும் தெய்வம் மாதிரி தான் சாமி"

"பொழுதடைஞ்ச நேரத்தில் உனக்கு பொழுது போக்க நான்தான் கிடைத்தேனா.." எரிச்சலுடன் கேட்டான் சிவத்தையா.

"பொழுது போக்குக்காக சொல்லல சாமி. மனசில இருக்கிற அழுக்கை கடவுள் காலடியில் வைக்கிறோம். உடம்பில இருக்கிற அழுக்கை நதியோட மடியில் வைக்கிறோம். உடையில இருக்கிற அழுக்கை வண்ணாங்க கையில வைக்கிறோம். இதிலிருந்து.."

"உன் தத்துவத்தை எவனாவது இரண்டு பொண்டாட்டிகாரன் வந்தா சொல்லு'' என்று கோபமாய் சொல்லிவிட்டு எழுந்து கொண்டான் சிவத்தையா.

''மூன்று வேளை சோறு முறையாக கிடைக்கா விட்டாலும் முறைப்பு மட்டும் குறையவில்லை சிவத்தையாவுக்கு"- என்றான் சலவைத் தொழிலாளி. அதிர்ச்சியுடன் திரும்பினான் சிவத்தையா. 'இவனுக்கு எப்படி என் பெயர் தெரியும். எட்டயபுரத்து ஒற்றனாய் இருப்பானோ' கண்களில் சந்தேகம் பிறந்திருந்தது.

"சிவத்தையாவுக்கு என்னைத் தெரியவில்லையா'' என்று கேட்ட சலவைத் தொழிலாளி தன் தலைப்பாகையை அவிழ்த்தான்.

''ஆ- முத்துவீரன்" - ஆச்சர்யக் குரல் எழுப்பினான் சிவத்தையா.

''மதுரையிலிருந்து எப்பொழுது வந்தாய்..?'' என்று கேள்வியும் கேட்டான்.

அதே நேரம் -

நதிக் கரையில் தோன்றியது இரண்டு செம்புரவி.

அவற்றின் முதுகில் எட்டயபுரத்து வீரர்கள்.

அவசரமாய் கழுதைகளை விரட்டிக் கொண்டு நகர்ந்தான் முத்துவீரன். போகின்ற நேரத்தில் சிவத்தையா பக்கம் திரும்பி - ''அமாவாசை இரவு, கடற்கரை அழைக்கிறது" என்றான்.

# 6

## கடற்கரையின் சிரிப்புக்குத் தடை

வானம் நிலவை விரட்டி விட்ட கறுப்பு இரவு. தாயைக் காணாத குழந்தைகள் போல விண்மீன்கள் சோகமாய் இமைத்துக் கொண்டிருந்தன. மூன்றாம் ஜாமத்தின் ஆரம்பத்தில் அந்த கிராமம் வெளிச்ச மனைவியை விரட்டி விட்டு இருட்டு வைப்பாட்டியை இறுக்கமாய் பிடித்திருந்தது. அதன் நடுநாயகமாய் விளங்கும் பெரிய கோவில் தெரு கல்தூண் தலை விளக்குகளுக்கு ஓய்வு கொடுத்து விட்டு கறுப்பு சுமந்து நின்றது. ஆள் அரவமற்ற அந்த வீதியில் கறுப்புக்குள் கறுப்பாய் ஒரு உருவம் நடந்து கொண்டிருந்தது. நடையில் கொஞ்சம் தயக்கம் தெரிந்தது. பத்தடிக் கொருமுறை தெருவின் இருமுனைகளையும் பயப்பார்வை பார்த்துக் கொண்டே - மெல்ல மெல்ல நடந்து தெருக்கோடி வீட்டுமுன் நின்று கொண்டிருக்கும் பூவரசு மரத்தை அடைந்தது. நான்கு பக்கமும் ஒரு முறை கண்களைச் சுழலவிட்டது. பின் வேகமாய் அந்த வீட்டுக் கதவை நெருங்கி, மெலிதாய் இரு முறை தட்டியது. சிறிது நேரம் அமைதியாய் நின்றது. உள்ளேயிருந்து மூன்று முறை கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. வெளியே நின்ற அந்த உருவம் மீண்டும் இரண்டு முறை தட்டியது.

அடுத்த விநாடி கதவு மெல்ல திறந்து கொண்டது. உள்ளே அடி எடுத்து வைத்தது அந்த உருவம். அங்கேயும் கும்மிருட்டு. நுழைந்த வேகத்தில் அவசரமாய் தாழ்ப்பாளை

போட்டுக் கொண்டது. அந்த அறையில் யாரும் இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

திடீரென்று அறையின் மூலையில் ஒரு வெளிச்ச மத்தாப்பூ தெரிந்தது. கையில் எரியும் குச்சியுடன் நின்று கொண்டிருந்தான் முத்துவீரன். அவன் கையிலிருந்த குச்சியின் நெருப்பை மேற்கூரையில் மாட்டியிருந்த சங்கிலியில் தொங்கிக் கொண்டிருந்த * சங்குத் தூக்கு விளக்கின் முகத்துக்கு நீட்டினான். நெருப்பு அவசரமாய் விட்டு கூடு பாய்ந்திருந்தது. அந்த விளக்கின் ஒளி வேகமாய் அறை இருட்டை விரட்டியது.

கதவோரம் நின்று கொண்டிருந்த உருவம் மெல்ல புன்னகை பூத்தது.

"வா சிவத்தையா.. உன்னைத் தான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்" என்றது ஒரு கனத்த குரல். அந்த குரலுக்குச் சொந்தக்காரர் அறையின் நடு நாயகமாய் கிடந்த மர ஆசனம் ஒன்றில் அமர்ந்திருந்தார்.

கறுத்த மேனி, உருட்டும் விழிகள். காதோரம் மட்டும் முடியை மிச்சம் வைத்திருந்த தலை, நரைத்த மீசை, பெரிய உதடுகள்.

அவர் - கடற்கரை நாயக்கர். கட்டபொம்மனின் தாய்வழி உறவுக்காரர். அரசியலில் இவர் தன் தலையை நீட்டியதே கிடையாது. மக்களுக்கு ஏதாவது துன்பம் என்றால் மட்டும் ஓடிப்போவார் பாஞ்சை காவலனிடம். இதனால் பாஞ்சை யம்பதி கிராமங்களில் இவருக்கு தனி மரியாதை.

* தமிழ்நாட்டு திரு விளக்குகள்.
எழுதியவர் அ. ராகவன்.



கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டு, ஊமைத்துரை உட்பட பதினாறு பேர்கள் சிறை வைக்கபபட்ட போது, தேடப்பட்டவர்களில் இந்த எழுபத்திரெண்டு வயது கிழவரும் ஒருவர். அவருடைய உடல் தளர்ந்து போயிருந்ததே தவிர உள்ளம் தளர்ந்து போய்விடவில்லை. மேனியின் தோல் சுருங்கி இருந்ததே தவிர அவர் வீரம் சுருங்கவில்லை. வெள்ளை வீரர்கள் குதிரையில் பாய்ந்து தேடியபோது இவர் பறந்து போயிருந்தார் பாளையம் விட்டு பாளையம். பத்து அமாவாசைகளை பாஞ்சாலங்குறிச்சி மண் சந்தித்த பிறகு அந்த மண்ணில் காலடி எடுத்து வைத்திருக்கிறார்.

"வணக்கம் ஐயா" - என்றான் சிவத்தையா, மரியாதை கலந்த குரலில்.

"வா புரட்சி வீரனே வா. வந்து என் அருகில் அமரு. வானத்தை வில்லாக வளைத்து விடலாம். மணலை கயிறாக திரித்து விடலாம். அது கூட எளிது. அதை விட கஷ்டமான பணி ஒன்று நமக்காக காத்திருக்கிறது.

"சொல்லுங்கள் பணி முடிக்க காத்திருக்கிறோம்" - என்று சொன்ன சிவத்தையா கடற்ரை நாயக்கரின் காலடியில் அமர்ந்தான்.

விளக்கின் ஒளியை கால் பாகமாக குறைத்துவிட்டு முத்துவீரனும் அவன் அருகில் அமர்ந்தான். இருவர் கண்களும் கடற்கரை நாயக்கரின் முகத்தில் நிலைத் திருந்தன. அவரோ வீட்டின் கூரையைப் பார்த்தபடி, தன் நரை மீசையை நீவி விட்டுக் கொண்டிருந்தார்.

பின் சிறிது நேரம் கண்களை மூடி சிந்தனையில் ஆழ்ந்தவர். மெல்ல கண் திறந்தார். அமைதியான குரலில் பேச ஆரம்பித்தார்.

"அந்த மாபெரும் பணியை தொடங்குவதற்கு முன் ஆரம்பப் பணி ஒன்று இருக்கிறது. அதை உங்கள் இருவர்

கையிலும் ஒப்படைக்க முடிவு செய்திருக்கிறேன். நீங்கள் எதற்கும் தயாராய் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில் தான் உங்களை அழைத்திருக்கிறேன். என் அழைப்பு வியப்பை தந்ததா சிவத்தையா..?"

"உங்கள் அழைப்பு வியப்பைத் தரவில்லை. உரிய நேரத்தில் உரியவரிடத்தில் இருந்து வந்த அழைப்பு இது. பாஞ்சாலங்குறிச்சி விழுந்த நேரத்தில் சொந்தக் கிராமத்தை விட்டு அசையாத நீங்கள் வெள்ளை வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டீர்கள். ஆனால் அவர்கள் கரம் உங்கள் மேனியை தொடவில்லை. அதற்குள் மாயமாய் மறைந்து விட்டீர்கள். அதுதான் இன்றுவரை எனக்கு வியப்பாய் இருக்கிறது."

"அதில் வியப்பென்ன இருக்கிறது. கடலை மடக்கி சீசாவில் அடைக்க முடியுமா.. கடற்கரை நாயகனை பிடித்து சிறையில் வைக்க இயலுமா?..." - என்று கேட்டு விட்டு கடகடவென்று சிரிக்க ஆரம்பித் தவரின் சிரிப்பு பாதியிலேயே உறைந்தது, முத்துவீரனின் பயக் கண்களைப் பார்த்து.

"என் சிரிப்பு முத்துவீரனுக்கு பயதனை தந்து விட்டதா?" - என்று கேட்டார் கேலி தொனிக்க.

"உங்கள் சிரிப்பு எனக்கு பயத்தை தரவில்லை. நீங்கள் சிரித்த நேரம்தான் எனக்கு பயத்தைத் தந்து விட்டது. இருட்டில் சிக்கியிருக்கும் பாஞ்சாலங்குறிச்சி மக்களுக்கு வழிகாட்ட வந்திருக்கும் ஒளி விளக்குகளுக்கும் ஆபத்து வந்து விடுமோ என்ற பயத்தால் எழுந்த பயம்தான் எனக்கு" - என்றான் முத்துவீரன் மெல்லிய குரல்.

"முத்துவீரா.. இந்த கிழவனுக்கு கொஞ்சம் புரியும் படியாக பேசேன்.. நானும் தெரிந்து கொள்கிறேன்" என்றார் கடற்கரை நாயக்கர். தன் முகத்தை ஒருமுறை கைகளால் துடைத்து விட்டு மீண்டும் பேசினான் முத்துவீரன்.



"பாஞ்சாலங்குறிச்சி முழுமையாக இறந்து போய் விட்டது என்று முடிவு கட்டி விட்டான் மெக்காலே. வெள்ளை ஒற்றர்களின் நடமாட்டம் சில மாதங்களாய் அறவே நின்று விட்டது. ஆனால் எட்டப்பன் தூங்க வில்லை. அவனுடைய ஒற்றர்கள் எந்த நேரமும் நம் கிராமங்களில் தான் சுற்றித் திரிகிறார்கள். நாம் அவர்கள் விஷக் கண்களுக்குத் தப்பி நள்ளிரவில் கூடியிருக்கிறோம ரகசியமாக. நீங்கள் சிரிக்கிறீர்கள் இடி இடிப்பது போல. இது வேலியில் போகும் ஓணானை காதில் பிடித்து விட்டுக் கொண்டது போல் இருக்கிறது, திசை தெரியாமல் தவிக்கும் பாஞ்சாலங் குறிச்சி மக்களுக்கு வழிகாட்ட..!" என்று ஆதங்கத்துடன் கேட்டான் முத்துவீரன்.

'முத்துவீரன் சொல்வதிலும் உண்மை இருக்கிறது ஐயா. நம்மை விழுங்க வெள்ளைத் திமிங்கலம் காத்திருக்கிறது. அதன் வாய்க்குள் நம்மைப் பிடித்துத் தள்ள எட்டப்பன் நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறான்.. அதனால்.." - என்று இழுத்தான் சிவத்தையா.

"என் சிரிப்பை பூட்டி வைக்கச் சொல்கிறீர்கள் இருவரும். நாட்டைக் காக்கப் புறப்பட்டிருக்கும் உங்கள் வார்த்தைக்குச் செவியாய் சாய்க்கிறேன் நாம் சிரிப்பதற்கும் அழுவதற்கும் கூட நேரம் பார்க்க வேண்டியிருக்கிறது." - என்று சொல்லிவிட்டு சிரிக்க எத்தனித்தவர், அவசரமாய் தன் வாயைப் பொத்திக் கொண்டார். அதைக் கண்ட முத்துவீரனுக்கும் சிவத்தையாவுக்கும் அடக்க முடியாத அளவுக்கு சிரிப்பு வந்தது.

"ம்.. நீங்கள் மட்டும்.."

"சிரிக்கவில்லை. சிரிக்கவில்லை" என்றனர் இருவரும் ஒரே குரலில்.

"நாம் இப்படியே பேசிக்கொண்டிருந்தால் இரவு முடிந்து விடும்" என்றான் சிவத்தையா.

'ம்.. சொல்கிறேன் கேள்..'' என்று ஆரம்பித்தார் கடற்கரை நாயக்கர்.

இருவரும் நிமிர்ந்து அமர்ந்தனர்.

''பாஞ்சாலங்குறிச்சியை மீண்டும் தூக்கி நிறுத்த வேண்டும். அந்த வெள்ளையனுக்கு எதிரே கோட்டை எழுந்து நிற்க வேண்டும். அதுதான் நம் மகத்தான பணி. இலட்சியம். அந்த மாபெரும் பணியில் உயிரை இழக்கவும் நான் தயாராய் இருக்கிறேன். இந்த கிழவனுக்கு இருக்கிற துணிச்சல் எவனுக்கெல்லாம் இருக்கிறதோ அவர்களை யெல்லாம் ஒரே அணியில் சேர்க்க வேண்டும். வெள்ளை யர்கள் நெஞ்சுக்கு எதிரே வாள் தூக்க தயாராய் இருப்பவர் களையெல்லாம் அடையாளம் கண்டு நம் பாசறைக்கு அழைத்து வரவேண்டும். இதுதான் உங்கள் இருவருடைய பணி. முத்துக்கருப்பனும், பறல் ஆடி வீரன் இளைய பாண்டியனும் நம்முடன் இருந்தால் நம் பணி எளிதாய் முடிந்துவிடும்.ம்.. முத்துக்கருப்பன் துரோகி ஆகி விட்டான். பறல் ஆடி வீரன் எங்கிருக்கிறான் என்றே இன்னும் தெரிய வில்லை..''

பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது கடற்கரை நாயக்க ரிடமிருந்து.

''கட்டபொம்மு மகாராஜா கண்ணசைத்திருந்தால் அன்றே புரட்சிப்படை ஒன்று அவர் பின்னால் நின்றிருக் கும். அவருக்கு மனமில்லாமல் போய்விட்டது. இன்று அதற்கான நேரம் வந்திருக்கிறது. கிராமம் கிராமமாய் சென்று விடுதலை வீரர்களை ஒன்று திரட்டுவோம். இந்த மண்ணின் விடுதலைக்காய் இரத்தம் சிந்த புரட்சிப்படை ஒன்று தயாராகியிருக்கும் இன்னும் ஒரு திங்களுக்குள். என்ன செய்யவேண்டும் என்று கட்டளையிடுங்கள் காத்திருக்கிறோம் அன்னை பூமிக்காய் உயிர் துறக்க''. என்றான் சிவத்தையா ஆவேசம் பொங்க.



''என்ன செய்ய வேண்டும் எப்படி செய்ய வேண்டும் என்பதை அடுத்த கூட்டத்தில் முடிவு செய்வோம்''

''அடுத்த கூட்டம்..?''

''விரைவில் ஓலை அனுப்புகிறேன். அதுவரை நாம் சந்திக்காமல் இருப்பது நல்லது. மிகவும் அவசரம், அவசியம் என்றால் மட்டும் யானைத் தோப்பில் சந்தித்துக் கொள்வோம். இன்று காலையில் எனக்கு ஒரு செய்தி கிடைத்தது. கட்ட பொம்மனை தூக்கிலிட்ட கட்டை புளிய மரத்தை வெட்டிவிட முடிவு செய்திருக்கிறானாம் மெக்காலே''

''என்ன...'' - என்றனர் இருவரும் அதிர்ச்சி கலந்த குரலில்.

''உண்மைதான். பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரே இருக்கக்கூடாது என்றுதான் கோட்டையை இடித்து மண்ணோடு மண்ணாக்கினான் வெள்ளையன். கட்ட பொம்மன் தூக்கிலிட்ட புளியமரமோ அவன் பெயர் சொல்ல ஆரம்பித்து விட்டது. மரத்தையே தெய்வமாக வணங்க ஆரம்பித்து விட்டார்கள் மக்கள். பயம் வந்து விட்டது மக்காளிக்கு. புளியமரத்தை வெட்ட முடிவு செய்து விட்டான். இதற்கெல்லாம் காரணம் துரோகி முத்துக் கருப்பன்தான்'' என்றார் கடற்கரை நாயக்கர்.

''யாரையும் புளியமரத்தை தொட விடமாட்டோம்'' - என்றான் சிவத்தையா.

''தொட்டவன் கரங்களை வெட்டி கட்டைப் புளிய மரத்துக்கு உரமாகப் புதைத்திடுவோம்'' - என்றான் முத்துவீரன் உறுதியான குரலில்.

''நான் சொல்ல நினைத்ததை நீங்கள் சொல்லி

விட்டார்கள். செய்கின்ற பணியில் கவனம் இருக்கட்டும். புரட்சிப் படையில் புல்லுருவிகளும் ஊடுருவி விடக்கூடும். வீரர்கள் உருவில் துரோகிகளும் நுழைந்து விடக்கூடும். ராஜ விசுவாசிகளின் வேடத்தில் எட்டப்பன் ஒற்றர்கள் நம்மை சூழ்ந்து விட வாய்ப்பிருக்கிறது. விழிப்புடன் இருக்க வேண்டிய தருணம் இது. நாம் கொஞ்சம் கவனப் பிசகாக இருந்தாலும் சாவுக் கடலுக்குள் விழுந்து விடுவோம். பாஞ்சாலங்குறிச்சியை தூக்கி நிறுத்தும் திட்டமும் சரிந்து விடும். இருவருக்கும் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்" என்றார் கடற்கரை நாயக்கர். இருவரும் மௌனமாய் தலையாட்டினர்.

"சிவத்தையா நீ நாளைக்கே கட்டைப் புளிய மரத்தை கண்காணிக்க நான்கு வீரர்களை ஏற்பாடு செய்... பறல் ஆடி வீரன் எங்கிருக்கிறான்.. என்ன ஆனான்.. என்ற கேள்விகளுக்கு விடையோடு இன்னும் பத்து தினங் களுக்குள் என்னை வந்து பார்" என்றார் கட்டளையிடும் குரலில்.

"பறல் ஆடி வீரரையே அழைத்து வந்து விடுகிறேன்" என்றான் சிவத்தையா.

"மகிழ்ச்சி" என்றவர் முத்துவீரன் பக்கம் திரும்பி - "வீரா, நான் ஓலை நறுக்கு ஒன்று தருகிறேன். அதை ஊமைத்துரையின் மனைவி சவுந்தர வடிவிடம் கொண்டு சேர்த்து விடு" - என்றார். இடுப்பைத் துழாவி ஓலை நறுக்கென்று எடுத்து முத்துவீரன் கையில் கொடுத்தார்.

"ஓலை எதிரிகள் கையில் சிக்கி விடக் கூடாது. கவனம்"

"என் உயிர் போனாலும் ஓலை பறி போகாது" - என்றான் முத்துவீரன்.



அருகிலிருந்த சிவத்தையா அவசரமாய் எழுந்தான். 'என்ன' என்று கண்களால் கேள்வி கேட்டார் கடற்கரை நாயக்கர். கதவை நோக்கி கையை நீட்டினான் சிவத்தையா.

வெளியே குதிரைகளின் குளம்பொலி மெலிதாகக் கேட்டது. கடற்கரை நாயக்கரின் கண்கள் விளக்கை நோக்கித் திரும்பியது. அவர் எண்ணத்தை புரிந்து கொண்ட சிவத்தையா சங்குத் தூக்கு விளக்கை ஊதி அணைத்தான்.

## 7

## எட்டப்பனுக்கு வந்த எச்சரிக்கை

மங்கிய நிலவொளியில் மங்கம்மா சாலையில் கரும் புரவி ஒன்று நிதான வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அதன் முதுகில் கவலையுடன் அமர்ந்திருந்தான் இளைய பாண்டியன். அவன் கண்கள் சாலையோர புளிய மரங்களையே கவனித்துக் கொண்டிருந்தன.

கற்குவியல் ஒன்றைக் கண்டதும் குதிரையின் அடி வயிற்றில் பெருவிரலால் அழுத்தினான். எஜமானன் சொல்லுக்கு கட்டுப்பட்டு அந்த இடத்திலேயே நின்றது அந்த புரவி. குதித்து இறங்கினான்.

சுற்றிலும் பார்த்தான். சற்று தள்ளி கட்டை புளியமரம் ஒன்று நின்று கொண்டிருந்தது. இலை அசையாமல் அது நின்றிருந்த கோலம், கட்டபொம்மன் கழுத்தை இறுக்கிய கயிற்றை தன் கிளைக்கரம் சுமந்து விட்டதே என்ற வருத்தத்தில் இருப்பது போலிருந்தது. தவழ்ந்த தென்றல் கூட அந்த கட்டை புளியைத் தொடுதல் பாவம் என்பது போல் சற்று ஒதுங்கியே நகர்ந்தது.

புளிய மரத்தை நோக்கி மெல்ல நடந்தான் இளைய பாண்டியன். அவனைப் பின்தொடர்ந்து வந்தது மின்மினிப் பூச்சி ஒன்று. அவனுடைய புரவியோ தன் எஜமானன்



உத்தரவிடுவதற்கு முன்னால் நகரக்கூடாது என்ற எண்ணத்தில் அந்த மண் சாலையில் அசையாமல் நின்று இளைய பாண்டியன் முதுகையே பார்த்துக் கொண்டு நின்றது.

மரத்தின் அடியில் வந்து நின்று அண்ணாந்து பார்த்தான். நிலவின் ஒளிச்சிதறல்கள் இலைகளுக்கிடையில் தெரிந்தன. 'ஏ மரமே தமிழ் மண்ணில் முளைத்த நீயா கட்டபொம்மனை பிணமாக்க வெள்ளையனுக்கு துணை புரிந்தாய். நீயும் துரோகிகள் வரிசையில் சேர்ந்து விட்டாயே மரமே. ஏன் புரிந்தாய் இந்த இழி செயல்.' என்று பறல் ஆடி வீரன் மனம் கேள்வி கேட்டது. அந்த மரமோ மௌனமாய் நின்றது. 'நான் ஒன்றும் இனத்துரோகி அல்ல. இந்த இடத்தை விட்டு பெயர்ந்து ஓட முடிந்திருந்தால் ஓடியிருப்பேன் தொலை தூரம். அசைய முடியாததால் அழுகையோடு நிற்கிறேன். எனக்குள்ளே கொஞ்சம் கொஞ்சமாய் இறந்து போகிறேன்' பேச முடிந்தால் இப்படியெல்லாம் பேசியிருக்குமோ என்னவோ...

மரத்தை ஒருமுறை சுற்றி வந்தான். காலடியில் கிடந்த மண்ணுக்கு குனிந்து தன் உதடுகளால் அழுத்தமாய் முத்தம் ஒன்றைப் பதித்தான். மண்ணுக்கு ஒரு முத்தம். உதடுகளில் ஒட்டிய மண் துகள்களை நாவால் வருடி சுவைத்தபடி எழுந்தான்.

சற்று தள்ளி நினைவுச் சின்னமாய் மக்களால் எழுப்பப் பட்டிருந்த கற்குவியலை நோக்கி நடந்தான்.

திடீரென்று வித்தியாச குரல் எடுத்து கனைத்தது பறல் ஆடி வீரனின் கரும்புரவி. ஏதோ ஆபத்து என்பதை உணர்ந்து கொண்ட இளையபாண்டியன் வேகமாய் திரும்ப எத்தனித்தான். பின்னாலிருந்து அவனை அசைய விடாமல் பிடித்தன நான்கு வலுவான கரங்கள்.

நிலைமையின் விபரீதம் புரிய, தன்னைச் சுதாரித்துக் கொண்டவன், தன்னைப் பிடித்திருப்பவர்கள் இரண்டு பேர்

என்பதையும், அவர்கள் சற்று உயரமானவர்கள் என்பதையும் அடுத்த விநாடியே அறிந்து கொண்டாள்.

கண இமை மூடுபொழுதுக்குள் சற்று பக்கவாட்டில் நகர்ந்து, அவசரமாய் குனிந்து வலப்பக்கம் நின்றவனை தூக்கி தரையில் வீசினான். "அம்மா" என்று தரையில் மல்லாந்து விழுந்தவன் அலறவும், இடப்பக்கம் நின்றவன் இடுப்பு பிரதேசத்தில் உதை ஒன்றை வாங்கிக் கொண்டு சரியவும் சரியாக இருந்தது.

அதற்குள் நான்கு கூர் முனை ஈட்டிகள் இளைய பாண்டியன் நெஞ்சை குறி வைத்து உயர்ந்தன.

**எ**ட்டயபுரத்து அரண்மனை. உற்சாகம் பொங்கிக் கொண்டிருந்தது. பம்பரமாய் பணிப் பெண்கள் சுழன்று கொண்டிருந்தார்கள். அலங்கார அமைச்சர்கள் அவசர பணிகளுக்காய் எறும்பின் சுறுசுறுப்பை விலைக்கு வாங்கியிருந்தனர்.

வாயிற் காவலர்கள் கூட அன்று நிமிர்ந்து நின்றனர். வீரர்களை சுமந்து கொண்டு குதிரைகள் ராஜவீதியில் வேக நடை பயின்று கொண்டிருந்தன.

வீரர்கள் கட்டளைக்கு அடி பணிந்து தங்கள் இல்ல வாசல்களில் மாக்கோலம் போட்டிருந்தனர். எட்டய புரத்து மகளிர், தெருக்களில் வாழை மரங்களை கட்டிக் கொண்டிருந்தனர் கூலிக்கு வேலை செய்பவர்கள்.

கீழ் வானத்தில் உதய ஞாயிறு எழுந்து விட்ட அந்த காலைப்பொழுதில் வழக்கத்துக்கு மாறாய் விழித்திருந்தது கணிகையர் இல்லங்கள். அந்தி அலங்காரங்களை மிஞ்சும் வகையில் தங்களை அலங்கரித்துக் கொண்டிருந்தனர் கணிகையர்கள். அதற்குக் காரணமும் இருந்தது. அழைப்பு வந்திருந்தது அரண்மனையில் இருந்து. என்றாவது, யாருக்காவது அந்த அதிர்ஷ்டம் தேடிவரும். இன்றோ



அத்தனை கணிகையர்க்கும் அழைப்பு வந்திருக்கிறது அரண்மனை அரங்கத்தில் நடனம் ஆட

உற்சாக மிகுதியில் கணிகையர் ஆடுவதும், பாடுவதும், ஓடுவதுமாகயிருந்தனர். அவர்களை விரட்டிப் பிடித்து அழகு படுத்தினர் தாய்மார்கள். அவசரப் படுத்தினர் கூஜா தூக்கிகள்.

அலங்கரிக்கப்பட்ட வீதிகளைப் பார்வையிட்டனர் அரசு அதிகாரிகள். ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்தனர் சின்னஞ்சிறுசுகள்.

வீதிகளின் குறுக்கே பனை ஓலை தோரணங்களை கட்டிக் கொண்டிருந்தனர் சிலர். அதை அருவருப்பு கலந்த வெறுப்புடன் பார்த்துக்கொண்டு, தன் இல்ல வாசலில் நின்று கொண்டிருந்தாள் தமிழ் பெண் ஒருத்தி.

எட்டையபுரத்து மன்னன் எட்டப்பனோ அரண்மனை மேல்மாடத்தில் நின்றிருந்தான் விழி அசைக்காமல். அவன் பார்வை இருந்த திக்கில் பாளையங் கோட்டை இருந்தது! 'இன்னும் ஏன் வரவில்லை' மனம் கேள்வி எழுப்பியது. முகத்தில் கவலை ரேகைகள் படந்தது. நீளமாய் பெருமூச்சு ஒன்று பிறந்தது.

மேன்மாடத்தில் அங்கும் இங்கும் நடந்தான். தென் திசையில் திரும்பிப் பார்த்தான். திடீரென்று கண்கள் பளபளத்தது. சூரியனைக் கண்ட பனி போல கவலை ரேகைகள் காணாமல் போயிருந்தன. உதட்டில் புன்னகை ஒன்று அவசரமாய் ஒட்டிக் கொண்டது.

அவன் பார்வை தொட்ட தூரத்தில் இரண்டு செம் புரவிகள் வேகமாய் வந்து கொண்டிருந்தன அரண்மனை இருந்த திசையை நோக்கி. அவசரமாய் படிகளில் இறங்கினான் எட்டப்பன்.

அரண்மனை முகப்பில் வந்து நின்றன இரண்டு புரவிகளும். குதித்து இறங்கினர் முத்துக்கருப்பனும் எட்டய

புரத்து வீரன் குஞ்சப்பனும். அதற்குள் அவர்கள் அருகில் வந்து விட்டான் எட்டயபுரத்து மன்னன் எட்டப்பன்.

"அவர் வரவில்லையா...?" பதட்டமாய் கேள்வியும் கேட்டான்.

''வந்து கொண்டிருந்தார். இன்னும் இரண்டு நாழிகைக்குள் எட்டயபுரத்துக்கு வந்து விடுவார்" . என்றான் முத்துக்கருப்பன்.

"நல்லது, நல்லது" - என்றான் எட்டப்பன் மகிழ்ச்சி பொங்க. கோட்டைக் காவல் தலைவன் முன்னால் வந்து வணங்கி நின்றான்.

"என்ன' என்று கண்களால் கேட்டான்.

"ஆடல் மகளிர் வந்து விட்டனர் மாளிகைக்கு"

"நல்லது. நொடியில் வருகிறேன். அரங்க ஏற்பாடுகளை கவனி"

கோட்டைக் காவல் தலைவன் தலை வணங்கி நகர்ந்தான்.

"மன்னா, கோபம் வேண்டாம். ஒரு சின்ன சந்தேகம்.." என்று இழுத்தான் முத்துக்கருப்பன்.

"சந்தேகம் வரக்கூடாது முத்துக்கருப்பா. உடனே சொல்.. நான் தீர்த்து வைக்கிறேன்"

''ஆடல் மகளிரை கவனிக்க கோட்டைக் காவல் தலைவனை அனுப்பி வைப்பது..."

''முறைதானா என்று கேட்கிறாய்.. கோட்டையே இல்லாமல் போய் விட்ட பிறகு கோட்டைக் காவல் தலைவனுக்கு என்ன வேலை... அதனால்தான் இந்தப் பணியை ஒப்படைத்திருக்கிறேன். எனக்குக் கூட கொலையை விட கலைதான் பிடிக்கும். நீங்கள் இருவரும் துரை தங்கப் போகிற மாளிகையின் வசதிகளை கவனி



யுங்கள். நான் ஆடல் மகளிரை நேரில் சந்தித்து ஆட்டத்தின் வரிசை முறைகளை சொல்லி விட்டு வந்து விடுகிறேன்.." என்று சொல்லி விட்டு குதிரையை நோக்கி நடந்தான் எட்டப்பன்.

எட்டுபேர பல்லக்கு ஒன்றைத் தூக்கி வந்தனர். பல்லக்கின் இருபுறமும் வெண்குதிரைகளில் வெண்உடல் வீரர்கள். நீலநிற தொப்பி, நீல கால்சராய். குறுக்கே பட்டையாய் வார் அணிந்த ட்யுனிக் வகை மேலங்கி அணிந்திருந்தனர் வெள்ளைச் சிப்பாய்கள்.

பல்லக்கின் பின்னால் வந்து கொண்டிருந்த குதிரைகளில் அமர்ந்திருந்தனர் இந்திய முகச் சிப்பாய்கள். சிவப்பில் அங்கியும், குறுக்கே வெண் பட்டையும் அணிந்திருந்தனர். இடுப்பில் உறைவாள் தொங்கியது. முதுகில் துப்பாக்கி.

அந்த பல்லக்கு வேகவேகமாய் நகர்ந்து எட்டய புரத்து எல்லையைத்தொட்டது. பிரதம அமைச்சர் வரவேற்று அழைத்துச் சென்றார். ஒதுக்கப் பெற்ற தனி மாளிகை வந்ததும் கையசைத்தார். பல்லக்கு அப்படியே அசையாமல் நின்றது.

"தகர தகர தம்.. தகர தகர தம்" - தாரைத் தம்பட்டங்கள் முழங்கின. வானவெடிகள் வெடித்துச் சிதறின. பல்லக்கின் மீது பன்னீர் மழை பொழிந்தது. பெரிய பெரிய தட்டுகளில் மலர் இதழ்களை ஏந்திய வண்ணம் நின்றனர் மங்கையர். சந்தன கிண்ணங்களை சுமந்தபடி நின்றனர் பாவையர். ஆள் உயர மாலை ஒன்றை தூக்க முடியாமல் தூக்கியபடி நின்று கொண்டிருந்தான் எட்டயபுரத்து மன்னன் எட்டப்பன்.

பல்லக்கை தரை இறக்கினர் பல்லக்கு தூக்கிகள். திரை விலக்கி இறங்கினார் மெக்காலே.

"குட் மார்னிங் தொரை" - என்றான் எட்டப்பன். பதிலுக்கு தலை அசைத்தார் மெக்காலே. தன் கரத்திலிருந்த மாலையை வெள்ளைத் தளபதி கழுத்தில் அணிவித்தான் எட்டயபுரத்தான்.

எங்கிருந்தோ குரல் ஒன்று எழுந்து - "எட்டயபுரத்து மாமன்னர்" - என்றது.

"வாழ்க"- என்றது மக்கள் கூட்டம்.

அதே குரல் - "மக்காளி தொரை" - என்றது.

"வாழ்க" என்றது தேய்ந்த சில குரல்கள்.

மலர் இதழ்கள் பாதத்தை நனைக்க, பன்னீர் சாரல்கள் கேசத்தை நனைக்க, நீட்டப்பட்ட சந்தனக் கிண்ணத்தில் ஒற்றை விரல் நனைத்து விட்டு மாளிகைக்குள் நுழைந்தார் மெக்காலே. பின்னால் நடந்தான் எட்டப்பன். விதி சிரித்தது சத்தம் இல்லாமல்.

# 8

## யார் அந்தப் பெண்...?

மூன்று நாழிகை ஓய்வுக்குப் பின் விருந்து மண்டபத்துக்கு வந்தார் மேஜர் மெக்காலே. அவருடன் வெள்ளை தளபதியும், வெள்ளைச் சிப்பாய்களும் வந்தனர்.

விருந்து மண்டபத்தில் காத்திருந்தன கொதிக்கின்ற எண்ணெயில் குளித்த ஆடுகளும், கோழிகளும். பழவகைகள் போட்டு ஊறவைத்து வடித்தெடுக்கப்பட்ட நாட்டுச் சாராயமும், வெள்ளையர்களால் பரிசளிக்கப்பட்ட சீமை சாராயமும் வரிசையாக குப்பிகளில் இருந்தன. அவற்றை பரிமாற வண்ண ஆடைகளில் வயதுக்கு வந்த வயது போதாத இளம் பணிப்பெண்கள்.

விருந்து உற்சாக போதையுடன் ஆரம்பமானது. வெள்ளைச் சிப்பாய்கள் உணவு பதார்த்தத்தைத் தொட்டுக் கொண்டே பணிப் பெண்களையும் தொட்டனர். அவர்கள் விலகி ஓடவில்லை. பணிப்பெண்கள் வேடத்தில் விலைப் பெண்களை அல்லவா உலாவ விட்டிருக்கிறான் எட்டப்பன்.

மெக்காலே கண்கள் போதையில் சிவந்து போயிருந்தன. காரணம் இல்லாமலே அடிக்கொருதரம் சிரிக்க ஆரம்பித் திருந்தார். இதுதான் தருணம் என்று பேச்சை ஆரம்பித்தான் எட்டப்பன்.

"தொரை அவர்களே, நானும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறேன்... நீங்கள்தான் காதில் போட்டுக் கொள்வதே இல்லை"

"எனக்கு மறதி அதிகம். அடிக்கடி சொன்னதை இன்றும் ஒருமுறை சொல்லும். காதில் போட்டுக் கொள்கிறேன்" என்றார் மெக்காலே.

"ஊமைத்துரையை தூக்கில் போடாமல் இன்னும் உயிரோடு வைத்திருக்கிறீர்கள். சிறையில் இருக்கும் பதினாறு பேரையும் தூக்கில் போட்டு விட்டால் பாஞ்சாலங்குறிச்சி ஒரு முடிவுக்கு வந்து விடும். உங்களுக்கும் தொந்தரவு இல்லை. என் மனமும் சந்தோஷப்படும்."

"இது குறித்து மேலிடத்துக்கு கடிதம் எழுதிக் கேட்டார் பானர்மென். சம்மதம் கிடைக்கவில்லை மேலிடத்திலிருந்து. நானும் இந்த பதினாறு பேரையும் என்ன செய்யலாம் என்று மேலிடத்தில் கேட்டிருக்கிறேன். உத்தரவுதான் இன்னும் சேர்ந்த பாடில்லை." என்றார் கவலையுடன்.

"மேலிடத்திலிருந்து விடுதலை செய்ய உத்தரவு வந்தாலும் விடுதலை மட்டும் செய்து விடாதீர்கள். ஆபத்தை நாமே விலை கொடுத்து வாங்கியது போலாகி விடும். எங்களுக்கு மட்டும் அல்ல ஆபத்து திருநெல்வேலி சீமையில் கும்பினி ஆட்சிக்கும் ஆபத்துதான். சிறையிலேயே ஊமைத்துரைக்கு சமாதி கட்டுவதுதான் சிறந்த வழி"

"பாஞ்சாலங்குறிச்சி மக்கள் எழுந்து விட்டால்.."

"கட்டை புளிய மரத்தில் கட்ட பொம்மனை தொங்க விட்டபோது கோபப்படாத மக்களா, அவன் தம்பி ஊமைத் துரைக்காய் பொங்கி எழுந்து விடப்போகிறார்கள்... சீத பேதியில் சிறைக்குள்ளேயே இறந்து விட்டதாக கதை கட்டி விட்டு விட வேண்டியதுதானே.." - என்றான் எட்டப்பன்.

"பார்க்கலாம்" என்றார் வெள்ளை தளபதி.

"யோசிக்காதீர்கள். முடிவு கட்டுங்கள் கட்டபொம்மன் சந்ததிக்கு" என்றான் எட்டயபுரத்தான்.



"எட்டயபுரத்து மன்னருக்கு அப்படியென்ன தீராத கோபம் கட்டபொம்மன் சந்ததி மீது..?"

புன்முறுவலுடன் கேட்டார் மெக்காலே.

"பாஞ்சாலங்குறிச்சிக்கும், எட்டயபுரததுக்கும் ஏற்பட்ட பகை இன்று, நேற்று ஏற்பட்டதில்லை. பரம்பரை, பரம்பரை யாய் தொடர்ந்து வருகிறது. கட்டபொம்மனும், அவன் முன்னோர்களும் எட்டயபுரத்துக்கு இழைத்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவன் பரம்பரை எங்களுக்கு செய்த துரோகங்களை இன்று நினைத்தாலும் மனம் கொதிக்கிறது *." என்றான் எட்டப்பன். அதே நேரம் வேகமாய் விருந்து மண்டபத்துக்குள் நுழைந்து, எட்டப்பனையும், மெக்காலே யையும் வணங்கி நின்றான் எட்டயாபுரத்து வீரன் குஞ்சப்பன். அவன் முகம் வியர்த்து போயிருந்தது.

"என்ன குஞ்சப்பா, ஆடல் அரங்கம் தயாராகி விட்டதா.." என்று கேட்டான் எட்டப்பன்.

"அரசே.. தங்களை உடனே அழைத்து வரும்படி கோட்டை காவல் தலைவர்.." - தயங்கி தயங்கி வார்த்தைகளை உதிர்த்தான் குஞ்சப்பன்.

"என்ன.. என்னை அழைத்து வரவா.."

கோபமாய் கேட்டான் எட்டயாபுரத்து மன்னன்.

"மன்னா, அவசரம். நீங்கள் வரவேண்டியது அவசியம்" - என்றான் பயக்குரலில். ஏதோ நடக்ககூடாதது நடந் திருக்கிது என்பதைப் புரிந்து கொண்டான் எட்டப்பன்.

* கட்டபொம்மனும், அவனது முன்னோர்களும் எட்டயாபுரத்துக்கு இழைத்து வந்திருக்கும் கொடுமைகளையும், துரோகங்களையும் எண்ணி யெண்ணி மனம் புழுங்கிக் கொண்டிருந்த எட்டயபுரம் பாளையக்காரன்-

- தமிழ்வாணன், கட்டபொம்மன் கொள்ளைக்காரன். பக். 205.

அவசரமாய் எழுந்தான். மெக்காலேயை நோக்கி தணிந்த குரலில் "மன்னிக்கவும். அவசர பணி. விரைவில் வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு வேகமாய் அந்த மண்டபத்தை விட்டு வெளியேறினான்.

குஞ்சப்பன் சுட்டிக் காட்டிய அறைக்குள் இருந்து முனகல் ஒலி கேட்டது. சாத்தியிருந்த கதவை தள்ளித் திறந்தான் எட்டயபுரத்து வீரன்.

உள்ளே

உடம்பெல்லாம் வரிவரியாய் இரத்தக் கோடுகளுடன் முகம் குப்புற கவிழ்ந்து படுத்திருந்தனர் இருவர். அரண்மனை வைத்தியர் மயில் இறகை உடம்பின் இரத்த கோடுகளை தொடும்போதெல்லாம் "அம்மா.. அப்பா" என்று இறந்து போனவர்களை அழைத்துக் கொண்டிருந்தனர்.

"என்ன இதெல்லாம்..?" கோபமாய் கத்தினான் எட்டப்பன். திடுக்கிட்டு திரும்பிய வைத்தியரின் கையிலிருந்த மூலிகை கிண்ணம் நழுவி தரையில் விழுந்து உடைந்தது. முகம் குப்புற படுத்துக் கிடந்தவர்கள் அவசரமாய் எழுந்து நின்றனர் வலியை பொருட்படுத்தாமல். அவர்கள் வாய் அவசரகதியில் வார்த்தைகளை உதிர்த்தன உளறலாய்.

"சிவஞானபுரம்.. காவல்.. நாங்கள்.. சவுக்கு.. மோகினி"

"அட முட்டாள்களா.. என்ன நடந்தது என்பதை தெளிவாய் சொல்லாமல் என்ன உளறுகிறீர்கள்.. ஏதாவது மோகினி அடித்து விட்டதா..?" - எரிச்சலாய் கேட்டான் எட்டப்பன்.

"ஆமாம்.. ஆமாம்" என்று தலையை ஆட்டினார்கள் பரிதாபமாய்.



"குஞ்சப்பா இவர்களுக்கு என்ன புத்தி பிசகி விட்டதா.. பேய் அடித்ததாய் சொல்கிறார்கள்.. என்ன நடந்தது.. விளக்கமாகச் சொல்" என்று கேட்டான் எட்டப்பன் குஞ்சப்பனை நோக்கி. அவன் தயங்கியபடியே சொன்னான்.

"நம் எட்டையாபுரம் சமஸ்தானதுக்கு துரை அவர்களால் வெகுமதியாய் அளிக்கப்பட்ட சிவஞான புரத்துக்கு வரி வசூலிக்க சென்றிருந்தார்கள் இருவரும். மக்கள் வரி தர முன்வந்தார்களாம். அந்த நேரம் எங்கிருந்தோ பறந்து வந்ததாம் கரும்புரவி ஒன்று. அதன் முதுகில் காளி போல் அமர்ந்திருந்தாளாம் பெண்ணொருத்தி. அவள் கரத்தில் நீளமாய் சவுக்கு ஒன்றும் இருந்ததாம். 'யாரும் எட்டயா புரத்துக்கு வரி கட்ட வேண்டாம்' என்று மக்களைத் தடுத்து விட்டாளாம். அத்தோடு நின்று விடவில்லை அவள். 'பாஞ்சாலங்குறிச்சிக்கு சொந்தமான கிராமத்தில் நீங்கள் எப்படி வரி வசூலிக்க வரலாம்.. ஓடுங்கள் எட்டயாபுரத்தை நோக்கி' என்று கத்திக் கொண்டே இவர்களை சவுக்கால் அடித்து விரட்டினாளாம். சிவஞானபுரத்து எல்லை வரை அடித்து விரட்டிவிட்டே திரும்பிச் சென்றாளாம். கிராமத்து மக்கள் அனைவரும் கை கொட்டிச் சிரித்தார்களாம்.."

"எட்டப்பனை எதிர்ப்பவர்களுக்கு கட்ட பொம்மனுக்கு நேர்ந்த கதிதான் என்று தெரிந்த பிறகு சிலை கட்டும் ஒரு பெண் பிள்ளைக்கு இத்தனை துணிச்சலா.. யார் அந்தப் பெண்..?"

கருங்கல்லை விட்டெறிந்தது போல் வந்தது கேள்வி.

"குதிரை மோகினி" என்றான் குஞ்சப்பன்.

# 9

## இரகசிய சந்திப்பு

மேகச் சிறைக்குள் சிக்கியிருந்தது மஞ்சள் நிலவு. தப்பிய ஒன்றிரண்டு நட்சத்திரங்களும் பயத்துடன் கண் இமைத்துக் கொண்டிருந்தன. மண் சாலையின் ஓரத்தில் நின்று கொண்டிருந்த ஒற்றைப் பனை மரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த காய்ந்த ஓலை காற்றில் அசைந்து, பனை உடம்பில் உராய்ந்து வினோத ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது.

அதே நேரம் மண் சாலையில் வேகமாய் வந்த மூன்று குதிரைகள், அந்த ஒற்றைப் பனைமரத்தை ஒட்டி இறங்கிச் சென்ற ஒற்றையடிப் பாதையில் இறங்கி ஓட ஆரம்பித்தன. அதன் முதுகில் அமர்ந்திருந்தவர் கண்கள் தூரத்து இருட்டை இமைக்காமல் கவனித்தன.

ஒற்றையடிப் பாதை நெருக்கமாய் வளர்ந்திருந்த வேலா மரங்களுக்கிடையில் வளைந்து வளைந்து சென்றது. தயங்காமல் சென்றன குதிரைகள் ஒன்றன் பின் ஒன்றாய்.

சற்று நேரத்தில் காற்றுக்குத் தலை அசைத்துக் கொண்டிருக்கும் தென்னைகள் தெரிந்தன. நெருங்க நெருங்க தென்னைகள் இடைவெளி இல்லாமல் கை கோர்த்து நிற்பதைக் காண முடிந்தது. வெளிச்சம் உள்ளே நுழைய வழி இல்லாமல் இருந்தது. இருட்டின் பூரணப் பிடியில் இருந்தது அந்த தென்னந்தோப்பு.



தோப்பை சமீபித்ததும் குதிரைகளிலிருந்து குதித்து இறங்கினர் மூன்று பேரும். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மேகத்துக்குள் இருந்து வெளியே வந்தது மஞ்சள் நிலவு. வெளிச்சம் மூன்று பேரையும் நமக்கு அடையாளம் காட்டியது. முத்து வீரன், சிவத்தையா, இளையபாண்டியன். மௌனமாய் தோப்பின் பகுதியை நோக்கி நடந்தனர். அவர்களைப் பின் தொடர்ந்தன குதிரைகள்.

கொஞ்ச நேரம் நடந்ததும் நின்றனர். சுற்றும் முற்றும் பார்த்து விட்டு சிவத்தையா சைகை செய்தான். மூன்று குதிரைகளையும் தென்னை மரங்களில் கட்டினான் முத்து வீரன். இளைய பாண்டியன் மௌனமாய் நின்று கொண்டிருந்தான்.

"முத்து வீரா, சரியான இடத்துக்கு வந்து விட்டோம். இனி வந்திருப்பதை தெரிவித்து விடு" - என்றான் சிவத்தையா.

அடுத்த விநாடியே முத்து வீரன் உதடுகளைக் குவித்து சீழ்க்கை அடித்தான். அந்த குரல் காதலனை பிரிந்த கானகத்துப் பறவையின் சோகத்தை தன்னில் அடக்கியிருந்தது. விட்டு விட்டு ஒலித்தது குரல்.

அடுத்த சில விநாடிகள் கழித்து இருட்டுப் பெண்ணுக்கு நட்சத்திர பொட்டு வைத்தது போல, அடர்ந்த தோப்புக்குள் ஒரு வெளிச்சப் புள்ளி தெரிந்தது. அது மேலும், கீழும் அசைந்து அவர்களை அழைப்பது போலிருந்தது.

வெளிச்ச புள்ளியை நோக்கி நடந்தனர் மூன்று பேரும். நெருங்க நெருங்க கையில் விளக்கொன்றை வைத்துக் கொண்டு நிற்கும் வீரனும், சோள வைக்கோல் கூரை சுமந்த குடிசை ஒன்றும் கண்ணில் தெரிந்தது. குடிசையைச் சுற்றி காவலர்கள் போல நின்று கொண்டிருந்தனர் சில

இளைஞர்கள்.

அவர்களைக் கண்டதும் விலகி வழிவிட்டனர். 'பறல் ஆடி வீரர்.. சிவத்தையா' என்று கிசுகிசுப்பாய் அந்த வாலிபர்கள் பேசிக்கொள்வது அவர்கள் காதில் விழுந்தது. கவனிக்காதவர்கள் போல குடிசையின் மூடிக்கிடந்த வாசலை நோக்கி நடந்தனர்.

குடிசையின் கதவு யாருடைய தொடுதலுமின்றி அகலமாய் திறந்து கொண்டது. உள்ளேயிருந்த விளக்கின் ஒளி அவர்கள் காலடியில் விழுந்தது. மூவரும் குடிசைக்குள் காலடி எடுத்து வைக்கத் தயங்குவது போல வாசலில் நின்றனர். குடிசைக்குள் யாரும் இருப்பதற்கான எந்தவித அறிகுறியும் இல்லை.

"பறல் ஆடி வீரா, வா. வெற்றி தேவதையும் உன்னுடன் வரட்டும்" - அழைத்தது அசரீரியாய் ஒருகுரல்.

கட்டுப்பட்டவர்களாய் உள்ளே நுழைந்தனர் மூவரும்.

அறையின் ஒரு மூலையில், விரிக்கப்பட்ட கம்பளத்தின் மீது அமர்ந்திருந்தார் கடற்கரை நாயக்கர். அவருடைய கண்களில் கவலை அமர்ந்திருந்தது. உள்ளே நுழைந்த மூவரும் அவரை குனிந்து வணங்கினார்கள். தலையில் அமரும்படி சைகை செய்தார். அவருக்கு நேர் எதிரில் அமர்ந்தனர் மூவரும்.

"பறல் ஆடி வீரா, நலம்தானே..."

"நலம் இல்லை ஐயா. பாஞ்சாலங்குறிச்சி என்று நிமிர்ந்து நிற்கிறதோ அன்றுதான் நான் நலம்" - என்றான் இளைய பாண்டியன்.

"பாஞ்சை நலன்தான் தன் நலன் என்று கருதும் உன்னைத்தான் தேடிக்கொண்டிருந்தேன் ஐந்தாறு மாதங்களாய். உன்னை கண்டுபிடிக்கவே இயலவில்லை. கும்பினி ஒற்றர்களின் பார்வை நம் மண்ணை விட்டு அகல ஆரம்பித்ததும் ஓடி வந்துவிட்டேன். விடுதலை வீரர்களை



ஒன்று திரட்டும் பணியை புரட்சி வீரன் சிவத்தையாவிடம் ஒப்படைத்திருக்கிறோம்," என்று சிவத்தையாவை சுட்டிக் காட்டினார் கடற்கரை நாயக்கர்.

"தகுதியான ஆளிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள்" என்றான் இளைய பாண்டியன்.

"புரட்சிப் படைக்குத் தலைமை தாங்கும் தளபதி யார் தெரியுமா...?"

"யார்...?"

"நீதான் இளைய பாண்டியா!"

"நானா...?" என்றான் வியப்பு குரலில்.

"நீயேதான்" என்றார் உறுதியான தொனியில்.

"பெரியவர்கள் எத்தனையோ பேர் இருக்கும்போது..."

"நாம் நடத்தப்போவது பெண்ணுக்காகவோ, பொருளுக்காகவோ வாள் தூக்குகின்ற போர் அல்ல. இந்த மண்ணுக்காக, இந்த மண்ணின் விடுதலைக்காய் வெடிக்கப் போகின்ற புரட்சி, மடிந்து கொண்டிருக்கின்ற இன, மான உணர்வுகளை விழிக்கச் செய்யும் சுடுநெருப்பு. காலத்தால் அழியாத கன்னித் தமிழும் கயவர்களால் கரைந்து விடாமல் காப்பாற்றும் போராட்டம். பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை நிமிரச்செய்வதும், புதிய தலைக்கு கிரீடம் சூட்டுவதும் மட்டும் நம் நோக்கமல்ல. நெல்லைச்சீமையில் தொற்று நோயாய் பரவிக்கொண்டிருக்கின்ற வெள்ளையர் ஆதிக்கத்தை தமிழ் மண்ணில் நிமிர்ந்து நின்ற நாப்பத்திரண்டு கோட்டைகளை இடித்து தரை மட்டமாக்கிய சீமைப் பன்றிகளின் அதிகாரத்தை, மண்ணோடு மண் ஆக்க வேண்டும். கும்பினியின் சுரண்டல் வியாபாரத்துக்கும் நாடு பிடிக்கும் ஆசைக்கும் சாவு மணி அடிக்க வேண்டும். இந்த மகத்தான பணியை செய்து முடிக்கப் போகின்ற புரட்சிப் படைக்குத் தலைமை தாங்க என்னைப் போன்ற கிழவர்களோ, கட்டம் போட்டு கோடு கிழிக்கும் ராஜ

தந்திரிகளோ, பெயரை மட்டும் வைத்திருக்கும் பெருங்காய சிசாக்களோ தேவையில்லை. பிறந்த மண்ணுக்கு இரத்த முத்தம் தர சித்தமாய் இருக்கின்ற உன் போன்ற வீர இளைஞர்கள்தான் தேவை" - என்றார் கண்டிப்பான குரலில். மறுப்பேதும் சொல்லாமல் மௌனமாயிருந்தான் இளைய பாண்டியன்.

"புரட்சிப் படையை வெற்றிப் பாதையில் நடத்த உனக்கு உறுதுணையாய் நிற்பார்கள் சிவத்தையாவும், முத்து வீரனும்." - என்றார் கடற்கரை நாயக்கர்.

"நாம் பிறந்த மண்ணுக்காய், மரணம் என்னைத் தொடும்வரை போராடிக் கொண்டேயிருப்பேன். இது சத்தியம்" என்று தரையில் தன் வலக்கரத்தை அழுத்தமாய் பதித்தான் சிவத்தையா.

"என் உடலில் கடைசி சொட்டு இரத்தம் இருக்கும் வரை தமிழ் மண்ணின் விடுதலைக்காய் வாய் தூக்குவேன்" என்ற முத்துவீரன் தரையில் பதிந்திருந்த சிவத்தை யாவின் வலக்கரத்தின் மீது தன் கரத்தை வைத்து அழுத்தினான்.

"இது போதும் எனக்கு. தைத் திங்களில் மீண்டும் பாஞ் சாலங்குறிச்சி கோட்டை எழுந்து நிற்கும். மாசி சிவராத்திரி தேவி ஜக்காம்மாவுக்கு விழா. ஆடிப்பாடும் பாஞ்சாலங் குறிச்சி பெண்கள், வீரர்களின் சிலம்பாட்டம், கலைஞர் களின் ஒயிலாட்டம்..." கண்களில் கனவு விரிய சொல்லிக் கொண்டிருந்தார் கடற்கரை நாயக்கர்.

"தட்... தட்... தட்..."

கதவு மெலிதாக தட்டப்பட்டது. பேச்சு அறுந்தது. எழுந் திருக்க முயன்ற முத்துவீரனை, சைகையால் 'அசைய வேண்டாம்' என்று சொல்லிவிட்டு, கடற்கரை நாயக்கர் நாவசைத்தார்.

"யாரது..?" என்று அதட்டியது குரல்.

"ஐயா மன்னிக்க வேண்டும். தங்களைச் சந்திக்க



கல்யாணத் தேவர் வந்திருக்கிறார்" - என்று வெளியேயிருந்து சொன்னது பணிவாய் ஒரு குரல்.

"வரச்சொல்" என்றார்.

அடுத்த சில விநாடிகளில் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார் கல்யாணத் தேவர்.

"வணக்கம் நாயக்கர் பெருமானே" என்றார் மரியாதை கலந்த குரலில்.

"வாருங்கள் வாருங்கள்.. இப்படி அமருங்கள். இன்று தான் உங்களுக்கு கண் தெரிந்ததா.. நாள் கணக்கில் அல்ல, மாதக் கணக்கில் கல்யாணத்தை எதிர்பார்த்துக் கொண்டி ருக்கிறேன்" என்றார் நாயக்கர்.

"மீசை நரைத்தும், பெரியவருக்கு கல்யாண ஆசை இன்னும் நரைக்கவில்லை போலிருக்கிறது" - என்றான் இளையபாண்டியன், குறும்புச் சிரிப்புடன். அந்த விநாடியே குடிசை அதிரும்படி எழுந்தன சிரிப் பலைகள்.

சிரிப்புக்கிடையில் நின்று கொண்டிருந்த கல்யாணத் தேவரை அமரும்படி சைகை செய்தார் கடற்கரை நாயக்கர். கம்பளத்தில் அமர்ந்த கல்யாணத்தேவர், இளைய பாண்டியன் பக்கம் திரும்பி, "பறல் ஆடிவீரர் எங்கிருந்து முளைத்தார்.." - என்றார் வியப்பாய்.

"நானும் அதைத்தான் கேட்க வேண்டுமென்று நினைத் திருந்தேன். இளையபாண்டியனை எங்கிருந்து அழைத்து வந்தாய்..?" என்று சிவத்தையாவை நோக்கிக் கேட்டார் கடற்கரை நாயக்கர்.

"புளிய மரத்தை காவல் காக்கும் புரட்சி வீரர்களை சந்திக்க கயத்தாறுக்குச் சென்றோம் நானும் முத்து வீரனும். மங்கிய நிலவொளியில் மங்கம்மா சாலையில் வந்தது புரவி ஒன்று. அதிலிருந்து குதித்து இறங்கியது ஒரு உருவம். மெல்ல நடந்து கட்டபொம்மு மகாராஜா தூக்கில் தொங்கிய கட்டைப் புளியை நெருங்கியது, தொட்டது, குனிந்தது, சுற்றி சுற்றி வந்தது. சந்தேகம் வந்துவிட்டது எனக்கும், முத்து

வீரனுக்கும். பாய்ந்து பிடித்தோம். அடுத்த விநாடியே தூக்கி எறியப்பட்டோம். அடிபட்ட வலியுடன் கோபமாய் எழுந்தோம். எங்களை உற்றுப் பார்த்தபடி அசையாமல் நின்று கொண்டிருந்தது அந்த உருவம். முகத்தைப் பார்த்ததும் திகைத்தோம். அது இளைய பாண்டியார். அன்று விழுந்தது இன்றும் வலிக்கிறது இடுப்பில்'' சிரித்தபடி சொன்னான் சிவத்தையா.

"எப்படியோ பறல் ஆடி வீரர் வந்து சேர்ந்து விட்டார். வெள்ளையரை கதி கலங்க வைக்கும் நேரம் வந்து விட்டது என்றுதான் நினைக்கிறேன்" என்றார் கல்யாணத் தேவர்.

"உண்மைதான். அதனால்தான் வெள்ளையர் கையில் சிக்க இருந்த ராஜவாள், ஜக்கம்மா தேவி அருளால் நம்மிடம் வந்து சேர்ந்து விட்டது'' - என்று இளையபாண்டியன் சொன்னதும் அவசரமாய் நிமிர்ந்தார் கடற்கரை நாயக்கர், படபடப்பாய் கேள்விகளையும் அடுக்கினார்.

"என்ன.. கட்டபொம்முவின் பரம்பரை ராஜ வாளா.. நம்மிடம் வந்து சேர்ந்து விட்டதா.. வெள்ளையரிடம் சிக்க இருந்ததா.. இதுவரை எங்கேயிருந்தது வாள்.. இப்பொழுது யாரிடம் இருக்கிறது.. பத்திரமாக இருக்கிறதா.."

''என்னிடம்தான் இருக்கிறது.. வாள் என் கைக்கு கிடைத்ததை விளக்கமாய்ச் சொல்கிறேன்'' என்றான் இளைய பாண்டியன்.

சுற்றியிருந்த நால்வரும் நிமிர்ந்து உட்கார்ந்தனர். காதுகளை திறந்து, கண்களை அகலமாக்கி இருந்தனர். சொல்ல ஆரம்பித்தான் நடந்த கதையை.

"கோட்டை விழுந்த பின் பல மாதங்கள் நாகலாபுரம் பாளையத்து கிராமம் ஒன்றில் ஒரு முதியவளின் குடிசையில் அவள் பேரனாக இருந்து வந்தேன் மாற்றுப் பெயரில். உரிய நேரம் வந்ததும் புறப்பட்டேன் ஜக்கம்மா தேவியைச் சந்திக்க. அங்கே சந்தித்தேன் துரோகியாய் மாறி இருக்கும் மெய்க் காவல் படை வீரன் முத்துக்கருப்பனையும், எட்டயாபுரத்து வீரன் குஞ்சப்பனையும். யுத்த நெருக்கடியில் கட்டபொம்மு மகாராஜாவால் புதைக்கப்பட்ட இரும்புப் பெட்டியை நள்ளிரவில் திருடர்கள் போல் தோண்டி எடுத்தனர். இரும்புப் பெட்டிக்குள் இருந்தது சந்தன பேழை ஒன்று. சந்தனப் பேழைக்குள் இருக்கிறது ராஜவாள். மறைவிலிருந்து வெளியே வந்தேன் நான். பெட்டியை கேட்டேன் முத்துக்கருப்பனிடம். தருவது போல நடித்தவன் எதிர்பாராத தருணத்தில் என்னைத் தாக்கிவிட்டான். அந்த நேரம் ஜக்கம்மாவே உதவ வந்தது போல ஒரு பெண் வந்தாள். முத்துக்கருப்பனை காயப்படுத்தி, பெட்டியை கைப்பற்றி என்னிடம் தந்தாள். அவர்கள் கை கால்களை கட்டி அவர்கள் வெட்டிய குழிக்குள் அவர்களையே தள்ளி கழுத்து வரை மண்ணால் மூடச் சொன்னாள். மூடினேன். அடுத்த விநாடியே பறந்து விட்டாள் தன் குதிரையில் ஏறி. முத்துக்கருப்பனும், குஞ்சப்பனும் என்ன ஆனார்களோ'' - என்று முடித்தான் இளைய பாண்டியன்.

''உயிருடன் தான் இருக்கின்றன அந்த விஷப் பாம்புகள்'' - என்றார் கடற்கரை நாயக்கர்.

"பறல் ஆடி வீரரே, அந்தப் பெண்ணின் பெயர் தெரியுமா உங்களுக்கு..?'' - என்று கேட்டார் கல்யாணத் தேவர்.

"குதிரை மோகினி என்று சொன்னாள்."

"குதிரை மோகினியின் கதை ஒன்றை சொல்லத்தான் நானும் இங்கே அவசரமாய் வந்திருக்கிறேன்'' - என்றார் முகம்மலர.

''கல்யாணத் தேவரிடம் கதை இருக்கிறதா...'' - என்று கேட்டுவிட்டு கடகடவென்று சிரித்த கடற்கரை நாயக்கர் இளைய பாண்டியனை நோக்கி, "இரும்பு பெட்டி எங்கே இருக்கிறது'' - என்று கேட்டார்.

"நான் இருக்கும் குடிசையின் மூலையில் புதைத்து வைத்திருக்கிறேன்."

"உள்ளே இருந்த சந்தனப் பேழையை திறந்து பார்த்தாயா நீ?"

"இல்லை" - என்றான் இளைய பாண்டியன்.

"திறக்காத பெட்டிக்குள் இருப்பது ராஜ வாள் என்று உனக்கு எப்படித் தெரிந்தது இளையபாண்டியா....?"

கொக்கியாய் மாறி வந்தது கேள்வி.

"கோட்டை விழப் போகின்ற நேரத்தில் அவசர அவசரமாய் இளையவர் ஊமைத்துரையால் கொண்டு வரப்பட்டு கட்டபொம்மு மகாராஜா கண் எதிரில், மெய்க் காவல் வீரர்களால் கோட்டைக்குள் புதைக்கப்பட்டிருக் கிறது இரும்புப் பெட்டி. அத்தனை முக்கியத்துவம் வாய்ந்த பெட்டிக்குள் முத்தோ, வைரமோ, தங்கமோ இருந்திருக்க வாய்ப்பில்லை. விலைமதிப்பற்ற பொருளாகத்தான் இருக்க வேண்டும். அதுவும் பரம்பரை வழி வந்த அரசு அணிகலனில் ஒன்றாக இருக்கலாம் என்று யூகித்தேன். மேலும்.." - என்றவன் உலர்ந்த உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தான்.

"இரும்புப் பெட்டிக்குள் இருந்த சந்தனப் பேழையின் நீளம் மூன்றரை அடி, அகலம் அரை அடி, உயரம் அரை அடி. அந்த சந்தனப் பேழைக்குள் மூன்றடி நீள வாள் ஒன்று இருப்பது சாத்தியம் என்பதை யாரும் ஊகிக்கலாம். விழாக் காலங்களில் கட்டபொம்மு மகாராஜாவின் இடுப்பில் மூன்றடி நீளத்தில் வாள் ஒன்று தொங்கும். அதன் உடம்பில் சூரியன்பட்டு மினுக்கும். கைப்பிடியில் வைரங்கள் ஜொலிக்கும். பரம்பரை பரம்பரையாய் வந்த ராஜவாள் தான்



பேழைக்குள் இருக்கும் என்று முடிவு செய்தேன். இரண்டும் இரண்டும் நான்கு என்பது சுலபமான கணக்குத்தானே.."

"சரியாகத்தான் இருக்கும்.. அடுத்த பௌர்ணமி கூட்டத்துக்கு அந்த சந்தனப் பேழையை எடுத்து வா" என்றார் கடற்கரை நாயக்கர்.

"எடுத்து வந்து உங்களிடம் தந்து விடுகிறேன். அரசு கருவூலத்தில் வைத்துப் பூட்டிவிட்ட திருப்தி எனக்கு கிடைக்கும்" என்றான் பறல் ஆடி வீரன்.

"இனி கல்யாணத் தேவர் கதை சொல்லலாம்" - கடற்கரை நாயக்கர் கையசைத்ததும் வாய் திறந்தார் கல்யாணத்தேவர்.

"சொந்த இனத்துக்கு துரோகம் செய்ததற்காக, எட்டப்பனுக்கு வெள்ளையர்கள் வழங்கிய சிவஞானபுரத்தில்..*"

"ஓ... அந்த துரோகத்தின் பரிசு. கலெக்டர் லூஷிங்டன் எட்டப்பனுக்கு போட்ட பிச்சை. ம்... அங்கு என்ன நடந்தது..?"

"சிவஞானபுரத்தில் வரி வசூலிக்க எட்டப்பன் ஆட்கள் சென்றார்களாம். திடீரென்று எங்கிருந்தோ குதிரையில் ஒரு இளம் பெண் வந்தாளாம்... கையில் சவுக்கு இருந்ததாம்.. இடுப்பில் வாள் தொங்கியதாம்.. வரி வசூலிக்க வந்தவர்களை சவுக்கால் அடித்து கிராமத்து எல்லை வரை விரட்டினாளாம்"

* கட்டபொம்மனை ஒடுக்க எல்லா வகையிலும் ஒத்துழைப்புத் தந்த எட்டப்பனுக்கு 'சிவஞானபுரம்' என்னும் ஒரு கிராமத்தை பிரிட்டிஷ் கம்பெனி பரிசளித்தது.

: ம.பொ. சிவஞானம், விடுதலைப் போரில் தமிழகம், முதல் தொகுதி, இரண்டாம் பதிப்பு, பக்கம் 57.

"யார் அவள்..." - வியபபு குரலில் கேட்டான் முத்து வீரன்.

"குதிரை மோகினி என்று கிராமங்களில் பேசிக்கொள்கிறார்கள்" - என்றார் கல்யாணத் தேவர். எதுவும் பேசாமல் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார் கடற்கரை நாயக்கர்.

"என்ன யோசனை...?" - என்று கேட்டான் சிவத்தையா.

"குதிரை மோகினியைச் சந்திக்க வேண்டும்" - என்றார் கடற்கரை நாயக்கர்.

**பா**ளையங்கோட்டை சிறைச்சாலை, தமிழ் மண்ணுக்காவும், தமிழுக்காகவும் போராடியவர்களை அடைத்து வைத்த பெருமை உடையது. அன்று மாவீரன் ஊமைத்துரையை பிடித்து வைத்திருந்தது.

கோட்டை போல் உயர்ந்து நிற்கும் மதில் சுவரையும், தனி ஒருவனால் திறந்து மூட முடியாத பெருங்கதவுகளையும், மூன்று வேளைச் சோற்றுக்காய் கும்பினி ஆளாய் மாறிப் போன துப்பாக்கியை கையில் ஏந்தி காவல் நிற்கும் தமிழர்களையும் கடந்து உள்ளே போனால் வெள்ளையரின் நெஞ்சங்கள் போல கடினமான கல் கட்டடங்களைப் பார்க்கலாம்.

அந்த கட்டிடங்களில் ஒன்றில் பூட்டிய அறைக்குள் காவல் கம்பிகளுக்கு பின்னால் அமர்ந்திருந்தார் ஊமைத்துரை. அவர் கண்கள் சுவரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. வலது கை அடர்ந்த தாடியை தடவிக் கொண்டிருந்தது. சற்றுத்தள்ளி மண் கலம் ஒன்றில் உணவு காத்திருந்தது.

"ஏய் இன்னுமா சாப்பிடவில்லை...?"



கோபமாய் அதட்டினான் தமிழ் முக கும்பினிச் சிப்பாய். சிந்தனை கலைந்து நிமிர்ந்தார் ஊமைத்துரை.

"சாமி அவசரம்" என்று கிசு கிசுப்பான குரலில் சொன்னான் சிப்பாய். கையசைத்து அழைத்தான். அவன் முகத்தில் பதட்டம் தெரிந்தது. அவசரமாய் எழுந்து அருகில் போனார். இடுப்பில் மறைத்து வைத்திருந்த ஓலை நறுக்கொன்றை எடுத்து அவர் கையில் திணித்தான் அந்தச் சிப்பாய்.

அதே நேரம் -

அந்த கட்டிடத்தின் - நீல நிற மேலங்கி அணிந்த வெள்ளை லெப்டினன்ட் ஒருவன் உள்ளே நுழைந்தான்.

# 10

## தை பிறந்தால் வழி பிறக்கும்

தன் கையிலிருந்த ஓலை நறுக்கை அவசரமாய் வாய்க்குள் போட்டுக் கொண்டார் ஊமைத்துரை. எதிரில் நின்ற சிப்பாயின் உடல் மெலிதாக நடுங்கியது. மெல்ல நகர முயன்றான் அந்த இடத்தை விட்டு-

"நில், அசையாதே" என்றது ஆங்கிலக் குரல். அந்த இடத்தை விட்டு அசையாது நின்றான் சிப்பாய். அவனை நோக்கி பூட்ஸ் காலால் ஒலி எழுப்பிக் கொண்டே வந்தான் லெப்டினன்ட் கார்வெள்ஸ். அவன் கையில் நீளமாய் ஒரு சவுக்கு இருந்தது.

அவனுக்குப் பின்னால் சுபேதாரும், நான்கைந்து இந்தியச் சிப்பாய்களும் வந்து கொண்டிருந்தனர்.

சிறை அறைக்குள் நின்று கொண்டிருந்த ஊமைத்துரை அவர்கள் கண்ணில்பட சாத்தியமில்லையென்பதால் மெல்ல நடந்து முன்பு போலவே கற்படுக்கையில் அமர்ந்து கொண்டார். வாய்க்குள் பத்திரமாக இருந்தது ஓலை.

காலணி ஓசைகள் அந்த சிறை அறையை சமீபித்தன. லெப்டினன்ட் கார்வெள்ஸ் வாய் திறப்பதற்குள் முந்தி கொண்டார் சுபேதார்.

"ஏன் இங்கு வந்து நிற்கிறாய்..?"

கேள்வி கேட்டார், பரிதாபமாய் நின்று கொண்டிருந்த தமிழ்ச் சிப்பாயை நோக்கி.



"உணவு கொடுத்து மூன்று நாழிகை நேரமாகி விட்டது இன்னும் உணவைத் தொடவில்லை. கேட்டால் பதில் சொல்ல மறுக்கிறான்" - என்று ஊமைத்துரையை கைநீட்டிச் சொன்னான் தமிழ்ச் சிப்பாய்.

சிப்பாய் சொன்னதை மொழி பெயர்த்து கார்வெள்ளிடம் ஆங்கிலத்தில் சொன்னான் சுபேதார். கோபத்தில் சிவந்தது வெள்ளை முகம்.

"ஏய் ஊம்மைத் தொரைய்" - என்று கோபமாய் கத்தினான். இருந்த இடத்தை விட்டு அசையாமல் சிலை போல அமர்ந்திருந்தார் ஊமைத்துரை.

"ம்.. கதவைத் திற" என்றான் கார்வெள்ஸ். வேகமாய் திறக்கப்பட்டது சிறைக் கதவு. கோபமாய் உள்ளே நுழைந்த கார்வெள்ஸின் கைச் சவுக்கு சுழன்றது. ஊமைத்துரையின் முதுகில் சுளீரென்ற வலியையும் ரத்த கோடு ஒன்றையும் உண்டாக்கியது. முகம் இறுக்கி, பல் கடித்து வலி பொறுத்து அமர்ந்திருந்தார் வீரபாண்டியனின் தம்பி.

".. எழுந்திரு" - என்று ஆங்கிலத்தில் கட்டளையிட்டான் கார் வெள்ஸ். அசைந்து கொடுக்கவில்லை.

சுபேதார் முன்னால் வந்து -

"உன்னை எழுந்திருக்கச் சொல்கிறார் தொரை" - என்றான்.

ஊமைத்துரை முகத்தில் எந்தவித சலனமுமின்றி அமர்ந்திருந்தார்.

அடுத்த விநாடி நான்கு வீரர்கள் ஊமைத்துரையின் இரண்டு கைகளையும் பிடித்து தூக்கி நிறுத்தினார்.

"சிறையிலேயே செத்து விட முடிவு செய்துவிட்டாயா.. ஏன் சாப்பிட மறுக்கிறாய்.. வாய் திறந்து பதில் சொல்" என்றான் சுபேதார்.

வாய் திறக்கவில்லை ஊமைத்துரை.

"வாய்க்குள் என்ன பழமா இருக்கிறது. இல்லை வாய் திறந்தால் முத்து உதிர்ந்து விடுமா.." எரிச்சலாய் கேட்டான் சுபேதார்.

எந்தவித பதிலும் சொல்லாமல் நின்று கொண்டிருக்க, மீண்டும் ஒருமுறை வெள்ளையனின் கைச் சவுக்கு கோபமாய் பேசியது.

"நீ. பெரிய கிங்.. தூ.."

காறி உமிழ்ந்தான் கார்வென்ஸ். முகத்தில் சிதறிய எச்சிலை மௌனமாய் துடைத்தார் பாஞ்சையம்பதி வாரிசு.

"பாளையங்கோட்டைக்கு வரும் பிரிட்டிஷ் பிரஜைகளை இவன் முகத்தில் காறி உமிழ்ச் செய்யுங்கள். எங்களின் எச்சில் பட்டாவது இந்த கறுப்பு நாய்க்கு விமோசனம் கிடைக்கட்டும்.'' என்று ஆங்கிலத்தில் சொன்னவன் மீண்டும் ஒருமுறை சவுக்கைச் சொடுக்கினான் ஊமைத் துரை மார்பின் மீது. சவுக்கு போட்டவளை கோட்டில் வரிசையாய் துளிர்த்தது இரத்தத் துளிகள்.

''தண்ணீரை கொண்டு வந்து இவன் தலையில் கொட்டுங்கள். வாய் திறக்கிறதா என்று பார்ப்போம்'' என்றான் கார்வென்ஸ், கண்களில் குரூரம் கொப் பளிக்க.

அடுத்த சில விநாடிகளில் தண்ணீர்க் குடங்களைச் சுமந்து வந்தனர் வேலையாட்கள். குடங்கள் கவிழ்க்கப் பட்டது ஊமைத்துரையின் தலையில். தண்ணீர் சொட்ட சொட்ட மண் பொம்மை போல நின்று கொண்டிருந்தார். நீரின் குளிரை அவரால் உணர முடிந்தது. ஆனாலும் வாய் திறக்கவில்லை.

"இவனை இப்படியே விட்டு விட்டால் என்ன ஆகும் சுபேதார்..?"



"ஜுரம் வரும் தொரை," "ஜுரம் வந்ததும் இவன் தலையில் பத்து குடம் தண்ணீர் ஊற்றுங்கள். அப்பொழுது என்ன ஆகும சுபேதார்..?"

"ஜன்னி வரும் தொரை" - என்றான் சுபேதார்.

''வரட்டும், வரட்டும்'' - என்ற கார்வென்ஸ் கடகடவென்று சிரித்தான். கண்களில் சந்தோஷம் தெரிந்தது.

"வாய் திறக்காதவனுக்கு சாப்பாடு எதற்கு. மூன்று நாள் எதுவும் கொடுக்க வேண்டாம். திமிர் குறைகிறதா பார்ப்போம்" - என்று சொல்லிவிட்டு வெளியே சென்றான் வெள்ளை அதிகாரி. அவனை பின்தொடர்ந்தனர் சுபே தாரும் வீரர்களும். சிறைக்கதவு இழுத்துப் பூட்டப்பட்டது.

அந்த அறையெங்கும் கொட்டிய தண்ணீர் தேங்கி கிடந்தது. இருக்கவோ, படுக்கவோ முடியாமல் நின்று கொண்டிருந்தார். மெல்ல வந்தது இருட்டு.

அதை தொடர்ந்து வந்தான் வீரன் ஒருவன். அறையின் மூலையிலிருந்த சிறு விளக்குக்கு ஒளி தந்து விட்டு சென்றான். கிடைத்த வெளிசசத்தை அறை எங்கும் அள்ளி வீசியது விளக்கு.

மெல்ல நடந்து விளக்கின் இருகே சென்றார். மூன்று நாழிகை நேரம் திறக்காத வாயை மெல்ல திறந்தார். வாய்க்குள் இருந்த ஓலை நறுக்கை வெளியே எடுத்தார்.

சுண்டுவிரல் நீளத்திலும், சுண்டுவிரலில் அகலத்திலும் இருந்தது அந்த ஓஊலை நறுக்கு. விளக்கொளியில் புரட்டிப் பார்த்தார். எந்தவித எழுத்தோ, குறியீடோ ஓலையில் இல்லை. வெறுமையாய் இருந்தது.

ஓலை நறுக்கை விளக்கின் சூடான புகையில் காட்டினார் ஊமைத்துரை. ஓலையில் புகை படிந்ததும் மீண்டும் விளக்கொளியில் பார்த்தார். வெண்முத்துக்களாய் எழுத்துக்கள் தெரிந்தன.

புகைக் கறுப்புக்குள் பால் நட்சத்திரங்களாய் பளிச்சிட்ட எழுத்துக்களை மனதுக்குள் வாசித்தார். பின் புன்னகையுடன் முணுமுணுத்தார்.

"தை பிறந்தால் வழி பிறக்கும்."

தூரத்தில் காவல் வீரர்களின் பேச்சுக் குரல் கேட்டது. அவசரமாய் ஓலை நறுக்கை விளக்கின் நெருப்புக்குத் தின்னக் கொடுத்தார். ஓலையை நெருப்பு நாக்குகள் சுருட்டின.

வேகமாய் உள்ளே நுழைந்தான் முத்துக்கருப்பன். வியப்புக் கண்களால் நோக்கினார் மேஜர் மெக்காலே.

"என்ன முட்கர்ப்பு.. வேகம்" வினா எழுப்பினார்.

"நம்மை சுற்றி வேக வேகமாய் எது எதோ நடக்கிறது" என்றான்.

"ஒற்றர்கள் காதுக்கு வராத செய்திகள் கூட உன் காதுக்கு வந்து விடுகிறது. ம்.. என்ன நடக்கிறது சொல்" என்று கேட்டார் மெக்காலே.

"கும்பிட ஆரம்பித்து விட்டார்கள் கட்டை புளியை, வெட்டி விடுவோம் என்றேன் மறந்து விட்டீர்கள். இப்பொழுது என்னடாவென்றால் தெருக்கூத்தில் கட்ட பொம்மனை புகழ்ந்து பாட ஆரம்பித்து விட்டார்கள்." என்றான் எரிச்சலாய்.

"தெருக் கூத்தா..?" புரியாமல் விழித்தார் மேஜர்.

"இரவில் தெருக்களில் போடும் நாடகம் தொரை. மேடையும் கிடையாது. திரையும் கிடையாது. ஒரு கிராமத்தில் ஏதாவது ஒரு தெருவில் போட்டால் ஒரு கிராமம் முழுவதும் அங்கு கூடி விடும். பக்கத்து கிராமங்களில் இருந்து கூட ஆட்கள் கூட்டம் வந்து சேர்ந்து



விடுவார்கள். இராமாயணக் கதை, பஞ்ச பாண்டவர்கள் பாஞ்சாலி கதை, வள்ளி திருமணம் என்று இந்து மதத்தின் புராணக் கதைகளை எல்லாம் பாடுவார்கள் கூத்துக் காரர்கள்."

"ஓ.. அப்புறம்.."

"அப்புறம் என்ன.. கொஞ்ச காலமாய் சனி கூத்துக் காரரின் தலையில் ஏறி அமர்ந்திருக்கிறார். அதனால்தான் கட்ட பொம்மன் கதையை கூத்துப் பாடலாக பாட ஆரம்பித்திருக்கிறார்கள் தெருத் தெருவாய்!"

"பாடி விட்டு போகட்டுமே.. கும்பினியை எதிர்த்தால் கட்ட பொம்மன் செத்தான் என்று நாலு பேருக்கு தெரியட்டுமே.." என்றார் வெள்ளைத் தளபதி.

"பாடி விட்டு போகட்டுமா.. வீரபாண்டிய கட்ட பொம்மனை பெரிய வீரனாகவும், அவனை தூக்கில் விட்ட கும்பினி தொரைகளை மிகவும் இழிவு படுத்தியும் அல்லவா பாடுகிறார்கள்..."

"என்ன.." கோபமாய் நிமிர்ந்தார் மெக்காலே.

"தொரைமாருக்கு பயந்து கோட்டையை விட்டு ஓடியவன் வீரன். விரட்டி விரட்டி அடித்த பானர்மேன் தொரை கோழையாம். கட்டை புளியமரத்தில் தூக்கில் தொங்கிய கட்ட பொம்மன் மானஸ்தனாம். குற்றவாளியை தண்டித்த வெள்ளைக்கார தொரைகள் மானங் கெட்டவா களாம்..."

"யார் சொன்னது..?" கண்கள் சிவக்க கேட்டார் வெள்ளைத் தளபதி.

"தெருக் கூத்துக் காரர்கள்தான் தெருத் தெருவாய் பாடிக் கொண்டு திரிகிறார்கள்" என்றான் முத்துக்கருப்பன்.

"'அவர்கள் வாயை அடைத்தாக வேண்டும் என்ன செய்யலாம் முட்கர்ப்பு..'' அவசரமாய் கேட்டார் மெக்காலே.

"கட்டபொம்மன் தெருக் கூத்து பாடல்களுக்கு உடனே தடை விதியுங்கள். எல்லா பாளையக்காரருக்கும் உடனே விகிதம் அனுப்புங்கள்'' என்றான் உற்சாகமாய்.

"தடையை மீறுகிறவர்களுக்கு.."

"சவுக்கடியும், சிறைவாசமும்'' என்று சொல்லி விட்டுச் சிரித்தான் முத்துக்கருப்பன்.

குதிரை உற்சாகமாய் ஓடியது இளைய பாண்டியனை சுமந்து கொண்டு. இன்னும் சிறிது நேரத்தில் ஊரைத் தொட்டு விடலாம் என்ற எண்ணமே மனதுக்குள் உற்சாகத்தை விதைத்திருக்க வேண்டும் குதிரைக்கு. அதே மன நிலையில்தான் இருந்தான் பறல் ஆடி வீரனும்.

வேக வேகமாய் குதிரைக்கும் ஊருக்கும் இருந்த இடைவெளி குறைந்தது.

ஓலைக் குடிசைகளும், பெரிய, சிறிய வைக்கோல் படப்புகளும் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்தன.

கால் நாழிகைக்குள் ஊரின் பொதுக் கிணறு தெரிந்தது. ஆச்சரியமாயிருந்தது இளைய பாண்டியனுக்கு. ஊர் கிணற்றில் யாரும் இல்லை. 'விடிகாலை நேரத்தில் பத்து, இருபது பேராவது தண்ணீர் இறைப்பார்களே.. ஏன் இன்று வரவில்லை' - வியப்புடன் கிணற்றை உற்றுப் பார்த்தான்.

கிணற்றோரத்தில் மண் குடத்தின் உடைந்த துண்டுகள் சிதறிக் கிடந்தன. அருகில் நின்ற வேலா மரத்தில் கிழிந்த பனை ஓலை வாளி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.



வேகமாய் குதிரையை ஓட விட்டான் இளைய பாண்டியன். வழியில் வைக்கோல் படப்பு ஒன்று எரிந்து சாம்பலாய் கிடப்பது கண்ணில் பட்டது. 'என்ன நடந்திருக்கும்' கவலை நிரம்பிய சிந்தனையுடன் அமர்ந்திருந்தான்.

ஊரின் தென் கோடியில் தெருவில் ஓடி குறிப்பிட்ட இடம் வந்ததும் நின்றது குதிரை. சிந்தனையிலிருந்து விடுபட்டான் இளைய பாண்டியன்.

பாட்டியின் குடிசையைக் காணவில்லை.

# 11

## அதிர்ச்சி அலைகள்

அதிர்ச்சியில் சிலையாகிப் போனான் இளைய பாண்டியன். குடிசை இருந்த இடம் வெற்றிடமாய் இருந்தது. மண் சுவர்கள் மண்ணோடு மண் ஆக்கப்பட் டிருந்தது. உயரமாய் நின்ற குதில்கள் உடைந்து நொறுங்கிக் கிடந்தன. குதில்கள் இருந்த இடத்தில் வாய் பிளந்து கிடந்தன மண் குழிகள். குதித்து இறங்கினான்.

"பாஞ்சையம்பதியின் சொத்து பறிபோய் விட்டது!"

முணுமுணுத்தன அவன் உதடுகள். 'என்ன ஆனாள் பாட்டி' மனதில் பயம் எட்டிப் பார்த்தது.

"பாட்டி" என்று கத்தினான். எந்த பதிலும் இல்லை. அந்த தெரு குடிசையின் கதவுகள் மெல்ல திறந்தன. எட்டிப் பார்த்தன பூவையரின் தலைகள். பின்வேகமாய் உள்ளே இழுத்துக் கொண்டது.

தைரியம் வந்தவர்கள் போல இரண்டு பெண்கள் மட்டும் இளைய பாண்டியனை நோக்கி வந்தார்கள். அவனோ அசையாமல் நின்று கொண்டிருந்தான்.

அவனை நெருங்கிய பெண்களில் ஒருத்தி தயக்கமாய் வாய் திறந்தாள்.

"பாண்டியா, குடிசை என்ன ஆயிற்று என்று யோசிக் கிறாயா.."





'ஆம்' என்பதற்கு அடையாளமாக தலை ஆட்டினான்.

"நேற்று இரவு கும்பினி வீரர்கள் கிராமத்துக்குள் நுழைந்து விட்டார்கள். தெருவில் நின்றவர்களை எல்லாம் சவுக்கால் அடித்தார்கள். எந்த கேள்வியும் கேட்காமல். களை பறிக்கச் சென்று விட்டு அந்திப் பொழுதில் திரும்பிய சில இளம் பெண்கள் முன் இரவில் ஊர் கிணற்றுக்கு தண்ணீர் எடுக்கச் சென்றிருக்கிறார்கள். அந்த இளம் பெண்களை மானபங்கம் செய்ய முயன்றார்களாம். அது மட்டுமல்ல " என்று சொல்லி நிறுத்தினாள் அந்த பெண்.

"ம் எதுவாயிருந்தாலும் சொல்லுங்கள்" - என்றான் சுரத்தில்லாமல்.

"உன் பாட்டியின் குடிசைக்குள் நுழைந்து, 'உன் பேரன் எங்கே' என்று மிரட்டினார்கள், அவள் 'தெரியாது' என்று ஒரே வரியில் பதில் சொல்லி விட்டாள். 'பெட்டி இருக்கும் இடத்தை சொல' என்று திரும்பத் திரும்ப சவுக்கால் அடித்திருக்கிறார்கள். மயங்கி விழுந்து விட்டாள். குடிசையை உடைத்து, சிதைத்து தோண்டி இரும்புப் பெட்டி ஒன்றை எடுத்துச் சென்று விட்டார்கள். போகின்ற நேரத்தில் வைக்கோல் படப்புக்கு தீ வைத்ததோடு மட்டுமல்லாமல் 'இளைய பாண்டியன் இனி ஊருக்குள் வர அனுமதித்தால் ஊரையே கொளுத்தி விடுவோம்' என்று எச்சரித்தும் சென்றிருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி ஊருக்குள் வந்தால் ஊர் என்ன ஆகும் என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்... வீட்டுக்கு வீடு வயதுக்கு வந்த பெண்கள் இருக்கிறார்கள். அதனால் தயவு செய்து-"

அதற்கு மேல் பேசமுடியாதவளாய் தயங்கினாள் அந்த கிராமத்து பெண்.

"எங்கள் ஊருக்கு வரவேண்டாம் என்று சொல்கிறீர்கள். என் வருகை உங்களுக்கு துன்பம் தருகிறதென்றால் நிச்சயம் நான் வரமாட்டேன். ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள். போய் விடுகிறேன்" என்றான் அமைதியாய்.

"கேள் பாண்டியா, சொல்கிறேன்" - என்றாள்.

"பாட்டி எங்கே.." - என்றான் உடைந்த குரலில். அவன் கேள்விக்கு வாய் வார்த்தையாய் பதில் சொல்லாமல் வடதிசையில் கை காட்டினாள்.

"அங்கே யார் வீட்டில்..?"

"சுடுகாட்டில்"

- என்றாள் அமைதியாய்.

"என்ன.. பாட்டி இறந்து விட்டாளா.."

- படபடப்பாய் கேட்டான்.

"கொசுக்கடி தாங்க முடியாத அந்த தேகம், சவுக்கடி தாங்குமா.. மயங்கியவள் மீண்டும் எழுந்தால் அடிப்பார்களோ என்று பயந்து விழி திறக்காத மயக்கத்துக்குச் சென்று விட்டாள். நள்ளிரவு தாண்டியின் இறந்த பாட்டியை, நான்குபேர் எரிக்கச் சென்றிருக்கிறார்கள்," - என்று அவள் சொல்லிய மாத்திரத்தில் அவன் கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தது. 'அந்த பெட்டி.. உசுரு போயிருக்கணும்' பாட்டி சொன்ன வார்த்தைகள் கண்முன் வந்தன.

"வருகிறேன்" - என்ற ஒற்றை சொல்லை உதிர்த்து விட்டு சுடுகாட்டை நோக்கி நடந்தான்.

சிதையிலிருந்து நெருப்பும், புகையும் எழுந்து நடனமாடிக் கொண்டிருந்தது. சிதையருகே இரண்டு பேர் நின்று கொண்டிருந்தார்கள். ஒருவர் கையில் நீளமாய் ஒரு கம்பு இருந்தது.

சற்று தள்ளியிருந்த மண் மேட்டில் இரண்டு பேர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

இளைய பாண்டியன் சுடுகாட்டுக்குள் நுழைந்து சிதையை நோக்கி நடந்தான். அவனைக் கண்டதும் சிதை



அருகே நின்று கொண்டிருந்தவர்கள் அவசரமாய் விலகினார்கள்.

மண்மேட்டில் அமர்ந்திருந்த இருவரும் எழுந்து சிதையை நோக்கி வந்தார்கள்.

எரிந்து கொண்டிருந்த சிதையின் முன் வந்து நின்றான் இளைய பாண்டியன். பல விநாடிகள் கண்மூடி நின்றான். அதற்குள் நான்கு பேரும் சூழ்ந்து கொண்டனர் பறல் ஆடி வீரனை.

அவன் கண் திறக்கும் மட்டும் அமைதியாய் முகத்தை விழி அசைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றனர். மெல்ல கண் திறந்தான்.

"தம்பி" என்றழைத்தார் ஒருவர்.

"என்ன.." என்றான் சுரத்தில்லாமல்.

"உனக்கு சொந்தம் என்று இருந்த பாட்டியும் இறந்து விட்டாள். அவள் ஒரே சொத்தான வீடும் அழிந்து விட்டது. இனி உனக்கு.."

"யார் இருக்கிறார்கள்.. ஒருவரும் இல்லை"என்றான் எரிச்சலாய்.

"இனி எங்கள் கிராமத்துக்கு.." தொண்டையில் சிக்கியது வார்த்தை.

"வரவேண்டாம், எங்காவது ஒழிந்து போ என்று சொல்கிறீர்கள். அப்படித்தானே.." கோபமாய் கேட்டான்.

"தம்பி கோபிக்க வேண்டாம். எங்கள் நிலையையும் எண்ணிப் பாருங்கள். உங்களுக்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கும் சம்பந்தம் இருக்கிறதோ என்னவோ.. நீங்கள் இருந்த ஒரே காரணத்துக்காக கிராமத்தையே சூறையாடி விட்டார்கள். பாட்டியின் உயிரையும் பறித்து விட்டார்கள். கும்பினிச் சிப்பாய்கள், நீங்கள் இனி ஊருக்குள் வந்தால் ஊரையே

கொளுத்தி விடுவோம் என்று எச்சரித்து விட்டு சென்றிருக்கிறார்கள். மீறினால் கொளுத்தவும் தயங்க மாட்டார்கள். உங்களை கையெழுத்து கும்பிடுகிறோம். தயவு செய்து.."

"வரமாட்டேன். வெள்ளையன் தமிழ் பூமியில் இருக்கும் வரை" என்று சொல்லி விட்டு, வேகமாய் சூரியனை நோக்கி நடந்தான். எங்கிருந்தோ ஓடி வந்தது குதிரை.

**வா**னம் மேகங்களைத் தொலைத்துவிட்டு நீலமாய் நின்றது. நடுப்பகல் சூரியன் எதிர்ப்பு எதுவுமின்றி தன் கோபப் பார்வையைத் திருப்பியிருந்தான், கொடும்பாளூர் என்று பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் அழைக்கபபட்ட புதுக்கோட்டையின் மீது.

இரண்டாம் பராந்தக சோழர் காலத்தில் கொடும்பாளூர் பூதி விக்ரம கேசரியின் வீரத்தால் அந்த நகரத்தின் கீர்த்தி எட்டுதிக்கும் பரவியது. இன்று விஜயரகுநாத தொண்டைமானால் ஏற்பட்ட அபகீர்த்திதான் மிஞ்சி நிற்கின்றது.

மன்னவன் செயலுககும் எனக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்பது போல் நிமிர்ந்து நின்றது புதுகோட்டை அரண்மனை. காவலர்கள் கர்மசிரத்தையாய் காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அரண்மனை அந்தரங்க அறையில் கோபமாய் அமர்ந்திருந்தான் தொண்டைமான். அவன் கோபத்தை தணிக்க முயற்சிப்பது போல மயிற்பீலி விசிறிகளால் விசிறிக் கொண்டிருந்தனர் பணிப்பெண்கள். எதிரில் அவன் பதிலுக்காய் காத்திருப்பது போல அமர்ந்திருந்தார் அமைச்சர் ஒருவர்.

"தங்கக் காசுகளில் முகம் கழுவும் ஆர்க்காட்டு நவாப்பே இன்று வெள்ளையரின் கால்துடைக்கிறான். நான் என்ன செய்து விட முடியும். தூரத்து கோட்டையையே தூள் தூளாக்கும் பீரங்கிகளுக்கு முன்னால் நம் வாளும், வேலும் என்ன செய்து விட முடியும். அடிக்க முடியாவிட்டால் அடி படாமலாவது தப்பிக்க முடியுமா என்று பார்க்க வேண்டாமா.."



"புலிக்கொடி பறந்த தேசத்தில்.." என்று இழுத்தார் அமைச்சர்.

"யூனியன் ஜாக் கொடி பறக்கலாமா என்று கேட்கிறீர்கள். பறந்து விட்டு போகட்டுமே. அன்று புலிக்கொடிக்கு கீழ் இருந்தோம். இன்று யூனியன் ஜாக் கொடிக்கு கீழ். கொடிதான் வேறே தவிர நம் நிலை ஒன்று தானே.." - என்று சொல்லிவிட்டு சிரித்த தொண்டைமான் சாமரம் வீசிக் கொண்டிருந்த பெண்களை வெளியே போகும்படி சைகை செய்தான். மௌனமாய் வெளி யேறினர் பணிப்பெண்கள். அவர்கள் அறையை விட்டு வெளியேறியதும் மெல்லிய குரலில் கேட்டார் அமைச்சர்:

"தமிழனுக்கு கீழ் தமிழன். தவறில்லை. வெள்ளையனோ கடல் கடந்து வந்திருக்கும் அந்நியன். அவனுக்கு கீழ் ஒரு தமிழ் மன்னன் இருப்பது முறையா..?"

"முறையைப் பார்த்தால் வெள்ளை நாரைகளுக்கு இரையாக வேண்டியதுதான். மண்டியிட்டாவது மகுடத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நேரம் இது. நான் 'நட்பு' என்ற வார்த்தையிலேயே தனி அரசாக புதுக் கோட்டையை நிமிர்ந்து நிற்க வைத்திருக்கிறேன். வெள்ளையர் என் நண்பர்கள். அதனால்தான் கட்டபொம்மனை அவர்கள் கையில் ஒப்படைத்தேன். இதைப் புரிந்து கொள்ளாதவர் போல் நீரும் சில திங்களாய், தென்பாண்டிச் சீமை பாளையங்கள் ஒன்று சேர்ந்தால் கும்பினிகாரர்களை விரட்டிவிடலாம் என்கிறீர்.. யாருடன் என்னை கை கோர்க்கச் சொல்கிறீர்..? மருதுபாண்டியர் களிடம் தானே..?"

- என்று கேட்டான் தொண்டைமான்.

"ஆம்" என்றார் அமைதியாய்.

"நானும் மருதிருவரும் ஒன்றா. சிவகங்கை மன்னர் முத்து வடுகநாத உடையத் தேவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்த சின்ன மருது, இன்று சிவகங்கை அரசன். வேட்டை நாயைப் பரமரித்துக் கொண்டிருந்த பெரிய மருது சிவகங்கை சீமானாம். நேற்று அடைப்பக்காரனாய் இருந்தவன் இன்று மன்னன் வேடம் போட்டுவிட்டால் எனக்கு சமமாகி விடுவானா. அரச குலத்தில் உதித்த நானும் மருதிருவரும் ஒன்றா_?" - உஷ்ணமாய் வந்தது கேள்வி. பதில் எதுவும் சொல்லாமல் மௌனமாய் இருந்தார் அமைச்சர்.

"நாலு வேலி நிலத்தை வளைத்து போட்டவனெல்லாம் மன்னனாகி விட்டான் இந்த தமிழ் மண்ணில். கடல் கடந்து வந்தவர்கள் வெள்ளையர்கள் என்றால், நாடு விட்டு நாடு வந்தவர்கள் கம்பளத்தார்கள். இருவருமே தமிழ் மண்ணுக்கு சொந்தக்காரன் இல்லை. ஏவிய வேலையை செய்ய வந்த கட்டபொம்மன் குடும்பம் தமிழ் மண்ணை ஆளலாம். வியாபாரம் செய்ய வந்த வெள்ளையன் தமிழ் மண்ணை ஆளக் கூடாதா?.. சொல்லுங்கள் அமைச்சரே!" என்றான் புதுக்கோட்டை மன்னன். ஏதோ சொல் வதற்கு வாயைத திறந்தார் அமைச்சர்.

"எதுவும் சொல்ல வேண்டாம். உமது வாயிலிருந்து எது வந்தாலும் தவறாகத்தான் வருகிறது. மருது சகோதரர்கள் அரசாளும் சிவகங்கை பூமி கௌரி வல்லப உடையத் தேவனுக்குச் சொந்தமானது. ராணி வேலு நாச்சியாரை ஏமாற்றி, அரியணையைப் பகிர்ந்து கொண்டனர் மருது சகோதரர்கள். சிவகங்கையைப் பிடுங்கி உடையத் தேவன் கையில் கொடுக்கப்போகிற நாள் வெகு தொலைவில் இல்லை. அதை நிச்சயம் செய்யும் கும்பினி. ஊமைத்துரை



சிறையிலேயே சமாதி ஆகிவிடுவான். வேறு எவன் இருக்கிறான் தென்பாண்டிச் சீமையில், வெள்ளையரை எதிர்க்க? உம் பேச்சைக் கேட்டு நான் வெள்ளையரை எதிர்த்து போர்க் கொடி தூக்கினால் நீர் கோழி வியாபார மும், நான் கோழி முட்டை வியாபாரமும் தான் பார்க்க வேண்டும். புரிகிறதா என மதி மந்திரியே?" - என்று சொல்லிவிட்டு இடி இடிப்பது போல சிரித்தான், புதுக்கோட்டை மன்னன் விஜய ரகுநாத தொண்டைமான். தலை குனிந்தபடி அமர்ந்திருந்தார் அமைச்சர்.

"இந்த விஷயத்தில் தங்களது புத்திமதி எனக்குத் தேவை யில்லை அமைச்சரே. நாளை மறுதினம் வெள்ளை அதிகாரி களின் மனைவிகளும் குழந்தைகளும் நமது பாளையத்தை சுற்றிப்பார்க்க வருகிறார்களாம். அவர்கள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை கவனியுங்கள்!"

"உத்தரவு மன்னா."

"இனி நீங்கள் விடை பெறலாம்" என்றான் புன்னகை யுடன்.

"வருகிறேன்," - என்று தீனமான குரலில் சொல்லிவிட்டு தளர்ந்த நடையுடன் வாசலை நோக்கி நடந்தார் அமைச்சர்.

அதே நேரம் -

வேகமாய் உள்ளே நுழைந்தான் புதுக்கோட்டை வீரன் ஒருவன்.

36680
5378937

## 12

## கட்ட பொம்மன் கூத்து

அவசரமாய் உள்ளே நுழைந்த காவலன் விஜயரகுநாத தொண்டைமானை வணங்கினான்.

"மன்னர் மன்னா, தங்களைக் காண பாளையங் கோட்டையிலிருந்து மெக்காலே தொரையின் தூதுவர் வந்திருக்கிறார்" என்றான்.

"வரச்சொல். அரண்மனை * துவிபாஷியை அந்தரங்க ஆலோசனைக் கூடத்துக்கு நான் அழைத்ததாகக் கூறு."

"ஆகட்டும் மன்னா" என்றவன் மீண்டும் ஒருமுறை வணங்கிவிட்டு வெளியேறினான்.

கால் நாழிகைக்குள் அந்தரங்க ஆலோசனைக் கூடத்துக்குள் நுழைந்தான் மேஜர் மெக்காலேயின் தூதுவனாக வந்திருந்த லெப்டினன்ட் கார்வென்ஸ். அவனைத் தொடர்ந்து உள்ளே வந்தார் துவிபாஷி.

"குட்மார்னிங் தொண்டி மான்!" என்றான் வெள்ளை அதிகாரி.

"குட்மார்னிங்.. குட்மார்னிங்" என்றான் தொண்டைமான். நாற்காலி ஒன்றில் அமரும்படி சைகை செய்தான். கார்வென்ஸ் நாற்காலியை தொண்டைமான் அருகில் இழுத்து போட்டு அமர்ந்தான். தன் மேல்

* மொழி பெயர்ப்பாளர்



சட்டையின் உள் மடிப்புக்குள் இருந்து மடல் ஒன்றை எடுத்து புதுக்கோட்டை மன்னனின் கையில் கொடுத்தான்.

அகமும் முகமும் மலர மடலை கையில் வாங்கிக் கொண்டான் தொண்டைமான். 'மெக்காலே துரை நலமா' என்று கேட்டான். 'நலம்' என்றான் கார்வென்ஸ்.

அருகில் நின்றுகொண்டிருந்த துவிபாஷியிடம் தன் கையிலிருந்த மடலைக் கொடுத்து படிக்கச் சொன்னான். ஆங்கிலத்தில் இருந்த மடலை மனதுக்குள் படித்து தமிழில் சொன்னார்.

"பெருமதிப்பிற்குரிய புதுக்கோட்டை பாளையக்காரர்
விஜயரகுநாத தொண்டைமான் அவர்கட்கு,
வணக்கங்கள் பல.
திருநெல்வேலி சீமையில் கட்டபொம்மன் பற்றி பாடும் தெருக்கூத்துக்களுக்கு தடை விதித்திருக்கிறோம். தங்கள் பாளையத்திலும் மேற்குறிப்பிட்ட தடையை அமுல் படுத்தும்படி வேண்டுகிறேன்.
மேஜர் மெக்காலே
பாளையங்கோட்டை"

- "இதற்கு காகிதம் எதற்கு... ஒரு வார்த்தை சொன்னால் போதுமே.. இரவோடு இரவாக கூத்துக்காரர்களை சிறையில் தள்ளி விட மாட்டேனா.. கட்டபொம்மனைப் பற்றி பாட்டென்ன, மூச்சு விட்டாலே நிறுத்தி விடுவேன்!" - என்றான் தொண்டைமான். மன்னன் சொன்னதை அப்படியே மொழிபெயர்த்து கார்வென்ஸிடம் சொன்னான் துவிபாஷி. கார்வென்ஸ் இருக்கையை விட்டு எழுந்து விஜய ரகுநாத தொண்டைமானை அப்படியே சேர்த்தணைத்துக் கொண்டான்.

திருநெல்வேலி சீமையிலே, வெள்ளையரின் காலடியில் அதிகம் தொடாத பருத்தி தோட்டம் என்ற குக்கிராமத்தின் கரிசல் மண் அன்று விபரீதத்தை சந்திப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது. வறுத்த நிலக் கடலையும், அவித்த பாசிப் பயிற்றையும் சிலைத துணிகளில் கட்டிக் கொண்டு பக்கத்து கிராமத்துக்கு ஆட்கள் கூட்டம்கூட்டமாய் வந்தனர் அந்த குக்கிராமத்தை நோக்கி.

அந்த கிராமத்தின் வடதிசையில் இருந்தது முத்தாரம்மன் கோயில். அதன் முன்னால் விரிந்து பரந்திருந்த வளாகத்தில் ஊர் மொத்தமும் கூடியிருந்தது. நடக்க முடியாதவர்களைக்கூட தங்கள் தோள்களில் சுமந்து வந்து கோவில் முன் இறக்கியிருந்தார்கள் அந்த ஊர் இளைஞர்கள். புற்கள், இரவு முழுவதும் பனிக்குடங்களை தலையில் சுமந்து, பகலில் கதிரவனுக்கு கொடுக்கின்ற பனிக்காலம் அது என்பது குறித்து கவலைப்படாமல், அந்த இரவு நேரத்தில், தங்கள் மூன்று மாத கைக் குழந்தைகளுக்கு - பால்கொடுத்தபடி அமர்ந்திருந்தனர் சில பெண்கள். பலர் உட்கார மனமில்லாமல் நின்று கொண்டிருந்தனர். விநாடிக்கு விநாடி அந்த திடலில் கூடியிருந்தவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டேயிருந்தது.

வானத்து துண்டு நிலவு ஓடி ஓடி மேகத்துணுக்குகளிடம் ஏதோ ரகசியம் சொல்லிக் கொண்டிருந்தன. விண்மீன்கள் கண்களை இமைத்து அந்த திடலையே பார்த்துக் கொண்டிருந்தது. அம்மன் கோவில் அருகேயிருந்த மரங்களில் தங்கள் பின்புற விளக்குகளைச் சுமந்தபடி அமர்ந்திருந்தன மின்மினிப்பூச்சிகள்.

அந்த திடலின் மையப்பகுதியில் இரண்டு பெரிய தீப்பந்துங்களைச் சுமந்தபடி இரண்டு பேர் நின்று கொண்டிருந்தனர். தீப்பந்தங்களுக்கு உடனுக்குடன் எண்ணெய் ஊற்ற எண்ணெய்ச் சட்டிகளுடன் இரண்டு பேர் அருகே அமர்ந்திருந்தார்கள்.



திடீரென்று கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. கூட்டத்திலிருந்த பல் இல்லாத கிழவர் ஒருவர் எழுந்து, "பூனை வெள்ளி முளைச்சாச்சி, கூத்தை ஆரம்பிங்க" என்றார்.

"தாத்தா உட்காருங்கோ.. கூத்து ஆரம்பிச்சாச்சி" - என்றான் கட்டியக்காரன்.

அதே நேரம் - கறுப்பாய் இருந்த ஒரு இளம் பெண்ணின் கரத்தைப் பிடித்தபடி திடலுக்குள் நுழைந்தாள் மல்லம்மா என்ற அழுகுச்சிலை. தங்கத்தில் வார்த்தெடுத்த பதுமை.

தன் மலர்பாதங்களால் தரையை சமப்படுத்தி விட்டு அமர்ந்தாள். கூத்து நடக்கப் போகின்ற இடத்தையே கண் இமைக்காமல் பார்த்தபடி நின்ற கறுப்புப் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்து தன் அருகில் அமரச்செய்தாள்.

கூட்டத்தின் ஆண்கள் பகுதியிலிருந்து குடித்து சிவந்த இரண்டு கண்கள் மல்லம்மாவின் மேனியை தாகமாய் கவனித்தன. கண்களில் கொழுந்து விட்டெரிந்தது மோகத்தீ.

அதை கவனிக்காத மல்லம்மாவின் பார்வை திடலின் மையப் பகுதியில் இருந்த வெளிச்ச வட்டத்தில் விழுந்தது.

கட்டியக்காரன் நின்று கொண்டிருந்தான். கட்டியக்காரனுக்குப் பின் பக்கம் நீளமாய் ஒரு பலகை கிடந்தது. பலகையில் மிருதங்கம், சுருதிப் பெட்டி, ஜால்ராவுடன் மூன்று பேர் அமர்ந்திருந்தார்கள். அருகில் அரிதாரம் பூசிய நடிகர்களும், பின்பாட்டுக்காரர்களும் அமர்ந்திருந்தார்கள். சற்று தள்ளி பெரிய உரல் ஒன்று கிடந்தது.

மீண்டும் கூட்டத்தில் சலசலப்பு எழுந்தது. இசைக் கலைஞர்களை நோக்கி கையசைத்து விட்டு தன்னுடைய கனத்த குரலில் பாடத் தொடங்கினான் கட்டியக்காரன்.

"வந்தனம் வந்தனம் வந்தனம்

வந்த ஜனம் எல்லாம்

குந்தணும் குந்தணும் குந்தணும்.."

அவன் பாடிய பாடல்களை பின்பாட்டுக்காரர்களும் உற்சாகமாய் பாடினார்கள். சுற்றி நின்றிருந்த கூட்டம் பாட்டுக்கு கட்டுப்பட்டது போல நின்ற இடத்தில் அப்படி அப்படியே அமர்ந்தது.

கட்டியக்காரன் அம்மன் கோவில் இருந்த திசையில் திரும்பி இருகரம் கூப்பி வணங்கி-

"மூலையிலே குந்தியிருக்கும் விக்னேஸ்வரா
மாலை சாத்தி வணங்குகிறோம் விக்னேஸ்வரா
குழந்தை ஆடும் நாடகத்தை விக்னேஸ்வரா
குறையற நடத்த வேணும் விக்னேஸ்வரா.."

என்று உரத்த குரலில் பாடினான். கூட்டத்தில் அமைதி வந்திருந்தது. கூட்டத்தின் மொத்த கவனமும் கட்டியக்காரனின் மேல் விழுந்திருந்தது. இரண்டு கண்களின் பார்வை மட்டும், இருட்டில் மங்கலாய் தெரிந்த மல்லம்மாவின் அழகு முகத்தில் இருந்தது.

கட்டியக்காரன் தன்னைப் பற்றி கூட்டத்துக்கு அறிமுகம் செய்வது போல பாட்டொன்றை பாடினான்.

"*கட்ட கட்ட புளியமரம் தென்புறத்திலே
காராங்கி நெல் விளையும் பட்டணத்திலே
பட்டணத்து ராஜாதான் எங்களையா
பாளையங்கோட்டை சேலைக்காரி எங்களம்மா.
வெள்ளரிக்கா கூடைக்காரி எங்களம்மா
வெள்ளாடு மேய்க்கிறது எங்களண்ணன்

* நாட்டுபுறத் தொழிற் பாடல்கள்.
பதிப்பாசிரியர்: லேனா தமிழ்வாணன் எம்.ஏ
முதல் பதிப்பு, பக்கம் 73.



சிட்டுக் குருவி அடிக்கிறது என் தம்பி
சிட்டுக் குருவி திங்கிறது நான்தானே"

- கூட்டம் மொத்தமாய் சிரித்தது.

அங்கும் இங்கும் குதித்து கட்டியக்காரன் ஆடினான். இரண்டு பேர் ஒரு வெள்ளைத் துணியைக் கொண்டு வந்து விரித்துப் பிடித்தனர். துணி முன் வந்து நின்று கதையை ஆரம்பித்தான் கட்டியக்காரன்.

"அயோத்தி என்றொரு ராச்சியமாம்
அதனை தசரதன் ஆண்டாராம்
அவருக்கு மூன்று மனைவியராம்
அருமைப் புத்திரர் நால்வர்களாம்.."

- என்று சொல்லி முடிக்கவும், வெள்ளைத் துணி அகன்றது. அரிதாரம் பூசிய நடிகர்கள் தசரதனாகவும் ராமராகவும் நடிக்கத் தொடங்கினர். கூட்டம் அமைதி காத்தது. கூத்துக்கு இடையில் கட்டியக்காரன் வந்து-

"கானங்காடு கருவாட்டுக்கு
கழுத்திலே புள்ளே
உங்க அக்காளுக்கு
வயித்திலே புள்ளே"

- என்று பாடினான் கட்டியக்காரன். பெண்கள் கூட்டத்தில் சிரிப்பலைகள் எழுந்தன. கூத்து தொடர்ந்தது. மீண்டும் குறுக்கே வந்து -

"என்னைப்போல மைனருக்கு முகத்திலே மீசை
பக்கத்திலே கள்ளுகடை தோசை
கேட்டியானா செருப்படி பூசை"

- என்று பாடினான் உரத்தக்குரலில்.

'ஏஹ்ஹோ' என்று கூட்டம் ஆர்ப்பரித்து சிரித்தது. சிரிப்பலைகள் ஓய்ந்ததும் மீண்டும் கூத்து தொடர்ந்தது.

தூரத்தில் இருந்து மல்லம்மாவையே கவனித்துக் கொண்டிருந்தவன், கூட்டத்தின் ஆர்ப்பரிப்புக்கிடையில் மெல்ல நகர்ந்தான் மல்லம்மா இருந்த இடம்நோக்கி. மல்லம்மாவோ கூத்தையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இராமாயணம் கூத்தில் சூர்ப்பனகை வந்தாள். கூட்டத்தில் உற்சாகம் தெரிந்தது.

மல்லம்மாவுக்கும் அந்த காமுகனுக்கும் இடையில் இருந்த தூரம் வெகுவாய் குறைந்திருந்தது. தரையில் சிறிய கல் ஒன்றை தடவி எடுத்து மல்லம்மாவின் மார்புக்கு குறி வைத்து எறிந்தான்.

எறியப்பட்ட சிறிய கல் - மல்லம்மாவின் பக்கத்திலிருந்த கறுப்புப் பெண்ணின் தோளில் பட்டது. திடுக்கிட்டு திரும்பினாள்.

கல் வந்த திசையில் - திருட்டு விழிப் பார்வையுடன் கறுப்பாய் ஒருவன் அமர்ந்திருந்தான். பக்கத்திலிருந்த மல்லம்மாவின் தோளில் தட்டி, "மல்லம்மா.. என் மீது கல் எறிந்து விட்டான் ஒருவன்" என்றாள் பயக்குரலில்.

"எவ்ன்..?"- என்றாள் கோபத்தில்.

கறுப்புப் பெண் கல் வந்த திசையில் சுட்டிக் காட்டினாள்.

திரும்பிப் பார்த்தாள் .மல்லம்மா.

கறுப்பாய் ஒருவ்ன் வெளுப்பாய் சிரித்தான்.

"அவன்தான்.. அவன்தான்" என்றாள் பக்கத்திலிருந்தவள்.



"அவன் பக்கம் திரும்பாதே. கூத்து முடிந்ததும் கூட்டத்தோடு கூட்டமாய் சென்று விடலாம். பேசாமலிரு" என்றாள் மல்லம்மா.

இருவரும் உற்சாகம் வழிந்தவர்களாய் வெளிச்ச வட்டத்தைப் பார்த்தனர். இராமனை சுற்றி சுற்றி வந்து சூர்பனகை குலைட்ட ஆரம்பித்தாள். கூட்டம் ரசிப்புத் தன்மையை இழந்து மெல்ல பேசத் தொடங்கினர். இதை கவனித்த கட்டியக்காரன் குறுக்கே வந்து-

"பெண்டுகளின் கையிலே

உண்டை வாங்கித் தின்ன பண்டாரக் குடுக்கை

உனக்கென்ன திண்ணை மேலே படுக்கை"

- உரத்த குரலில் பாடினான். கூட்டம் கரவொலி எழுப்பி உற்சாகம் செய்தது. ஒரு கல் வந்து மல்லம்மாவின் முதுகில் விழுந்தது.

வேகமாய் எழுந்தார் பெரியவர் ஒருவர். "இராமாயணம் போட்டது போதும். கட்டபொம்மு மகாராஜா கதையை ஆடு"- என்றார் கட்டளை போல. கூட்டமும் "கட்டபொம்மன்" "கட்டபொம்மன்" என்று குரல் எழுப்பியது.

மீண்டும் இரண்டு பேரால் வெள்ளைத் துணி கொண்டு வரப்பட்டு திரையாய் பிடிக்கப்பட்டது. சற்று தள்ளி கிடந்த பெரிய உரல் சிம்மாசனத்திற்காக உருட்டி கொண்டு வரப்பட்டது வேக வேகமாய்.

அடுத்த சில நொடிகளில் வெண்திரை விலகியது. கிரீடம் வாகுவலயம், புஜகீர்த்தி, கன்னப்பூக்களுடன் அரிதாரம் பூசிய 'கட்டபொம்மன்' வந்தார். கையிலே மரக்கத்தி ஆட, கண்களில் வீரம் பொங்க, முகத்திலே கோபம் கொப்பளிக்க, ஆடிப்பாடி ஆர்ப்பாட்டத்தோடே வந்தார்.

அங்கும் இங்கும் மாக்கத்தியை சுழற்றியபடி, சுழன்று சுழன்று ஆடிக் குதித்தார். காலில் கட்டியிருந்த சலங்கைகள் 'ச்சலங்' என்ற ஒலியெழுப்பி அச்ச உணர்வை தோற்றுவித்தன. சற்றுத்தள்ளி பயந்து நடுங்கியபடி நின்று கொண்டிருந்தான் அரிதாரம் பூசிய 'வெள்ளைக்காரன்.'

அவனை நோக்கி கோபக்குரலில் பாடினார் 'கட்டபொம்மன்'

"வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் என் காணிக்கு ஏது பணம்
கால மழையில் முப்போகம் விளையுது
கட்டன் என் காணிக்கு ஏது பணம்
கோடை மழையில் முப்போகம் விளையுது
கொற்றவன் காணிக்கு ஏது பணம்
மாரிகள் பெய்வதும், பெய்யாமலும் போவதை
மாற்றுவதற்கோ பணம் வாங்குகிறீர்
......... ....... ...... ......"

பாடலை பின்பாட்டுக்காரர்கள் திரும்ப பாட, இசைவாணர்கள் மிருதங்கள், ஜால்ரா, சுருதிப் பெட்டி இசைக்க, 'கட்டபொம்மன்' கழுத்தசைவு, கையசைவு அபிநயங்களுடன் குதித்து குதித்து ஆடினான்.

மல்லம்மாவையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த கறுப்பன் எழுந்தான். அவிழ்ந்த வேஷ்டியை இறுக்கமாய் கட்டிக் கொண்டான். மீசையை ஒருமுறை தடவிக் கொண்டான். பின் மெல்ல நடந்து 'கட்டபொம்மன்' வேடம் போட்டிருந்தவரிடம் சென்று கையில் ஏதோ திணித்து விட்டு மல்லம்மாவுக்கு நேர் பின்னால் வந்து அமர்ந்தான். மல்லம்மா மனம் பயத்தால் நடுங்கியது.





கட்டியக்காரன் உற்சாகமான குரலில் பேச ஆரம்பித்தான்:

"அகோ, கேளுங்கள் சபையோர்களே.. பருத்தித் தோட்டம் கிராமத்தில் கோவில் கொண்டுள்ள முத்தாரம்மன் அருளால் கட்டபொம்மு கூத்தாடும் கூத்தாளங்களுக்கு ஒத்த பனை கிராமம் மகாப்பிரபு கட்டையேறும் பெருமாள் கொடுத்த சுபோஷயம் அஞ்சி பணம். அவரும் அவரோட சந்ததியாரும் சுகபோக வாழ்வு பெற முத்தாரம்மன் அருளுவதாக" - என்று சொல்லி முடித்ததும், விட்ட இடத்தின் இருந்து மீண்டும் கூத்து ஆரம்பித்தது.

மல்லம்மாவின் நாசியை பனங்கள்ளின் நெடி தொட்டது. மூக்கைப் பிடித்தபடி அமர்ந்திருந்தாள். முதுகில் ஏதோ ஊர்வதை உணர்ந்தாள். அவசரமாய் திரும்பினாள். இருட்டில் விகாரச் சிரிப்புடன் அமர்ந்திருந்தான் அந்த கறுப்பன். கோபமாய் பற்களைக் கடித்தபடி கையை ஓங்கினாள்.

"ஆ" - என்று அலறினான் கறுப்பன்.

அவன் அலறியதுக்கு காரணம் இல்லாமல் இல்லை.

நீளமான சவுக்கு ஒன்று அவன் முதுகில் இரத்தக் கோடு போட்டது.

## 13

### காரியைக் காப்பாற்றிய குறுவாள்!

மல்லம்மா கையை ஓங்கவும், அவளைத் தொட்டவன் அலறினான் முதுகில் விழுந்த சவுக்கடியால். திகைத்து போனான். அண்ணாந்து பார்த்தவன் அதிர்ந்தான்.

அலறல் சத்தத்தில் திரும்பிப் பார்த்த கூட்டம் அதிர்ச்சியில் வாய் பிளந்தது.

கூத்தாடிகளோ பயத்தில் உறைந்து போயினர். ஆட்டம், பாட்டு, தாளம் எல்லாம் அவசரமாய் நின்றது. அத்தனை பேர் கண்களும் ஒரே திசையில் நிலை குத்தி நின்றது.

பார்வை குத்திட்டு நின்ற இடத்தில் கையில் சவுக்குடன், நீலக் கண்களில் கோபம் எட்டிப் பார்க்க அராபிய குதிரையின் முதுகில் அமர்ந்திருந்தான் கார்வென்ஸ். அவனுக்கு மிக அருகில் உருவிய வாளுடன் வெள்ளைச சிப்பாய் ஒருவன் குதிரையில் அமர்ந்திருந்தான். சற்று பின்னால் பத்து, பதினைந்து புரவிகள் நின்று கொண்டிருந்தன. அவற்றின் முதுகில் இந்திய முக பிரிட்டிஷ் சிப்பாய்கள். அவர்கள் கரங்களில் சீறத் தயாராய் இருக்கும் சவுக்குகள்.

"கட்ட பொம்மன் கூத்தா நடக்குது.." - கொச்சைத் தமிழில் கேட்டான் கார்வென்ஸ்.

கூட்டம் அமைதி காத்தது. கோபத்தில் முகம் சிவக்க மீண்டும் கத்தினான்.



"பதில் சொல்லுங்க நாய்களா.."

அதற்கும் பதில் வராமல் போகவே கையிலிருந்த சவுக்கை கூட்டத்தின் மேல் கோபமாய் சீறவிட்டான். கூட்டம் பயத்தில் அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டையாய் சிதறியது. எந்த திசையில் ஓடுவது என்ற நோக்கம் இல்லாமல் அங்கும் இங்கும் ஓடியது. தன்னுடன் வந்த கறுப்புப் பெண்ணை கையில் பிடித்துக் கொண்டு மல்லம்மாவும் ஒரு திசையில் ஓடினாள். கூத்து ஆட்கள் மட்டும் திகைப்பு மாறாமல் நின்று கொண்டிருந்தனர். அவர்களையும் ஓடச் செய்தது கார்வென்ஸ் வாயிலிருந்து விழுந்த வார்த்தைகள்.

"கூத்துக்காரர்களை பிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள்" என்றான் கூத்துக்காரர்கள் நின்றிருந்த திசையில் கை நீட்டி.

துணிகளை அள்ளிக்கொண்டு ஓடினார்கள் கூத்துக் காரர்கள். கட்டியக்காரன் ஒரு கையில் மிருதங்கம், இன்னொரு கையில் ஜால்ராவுடன் ஓடினான்.

பத்துப் பதினைந்து குதிரைகளுடன் கூட்டத்துக்குள் புகுந்து கூத்தாடிகளை விரட்டினர். எதிர்ப்பட்ட மக்களை சவுக்கால் அடித்தனர். பதட்டத்தில் ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர்.

வயதான சிலர் விழுந்த இடத்திலிருந்து எழுந்திருக்க, முயற்சிப்பதற்குள் கூட்டம் அவர்களை மிதித்துக்கொண்டு ஓடியது. கிரீடம் அணிந்த கூத்துக்காரன் ஒருவன் ஓட, அவனை அடையாளம் கண்டு துரத்தினான் குதிரை வீரன். எதிர்திசையில் ஓடினான் கூத்தான்.

கூட்ட நெரிசலில் தன் கைப்பிடியிலிருந்து உடன் வந்த பெண் நழுவிவிட தென் திசையில் கூட்டத்தோடு கூட்டமாய் ஓடிக்கொண்டிருந்தாள் மல்லம்மா. அவளை ஓடவிடாமல் குறுக்கே வந்து நின்றது அராபிய புரவி.

"அய்.. அழகான பொண்ணு.." என்றான் தமிழில், குதிரையின் மேல் அமர்ந்திருந்த கார்வெல்ஸ். அந்தப் பகுதி முழுவதும் இருட்டின் பிடியில் இருந்ததால் அவன் நீல கண்களில் தெரிந்த மது வெறியை யும் காம வெறியையும் கவனிக்க முடியவில்லை.

ஓட முடியாமல் நின்று விட்ட மல்லம்மாவை நெருங்கி, தோள் மீது கை வைத்தான் கார்வெல்ஸ். வேகமாய் கையை உதறினாள். நிலமையின் விபரீதம் புரிய மின்னலாய் ஓடத் தொடங்கினாள்.

முள் செடி, மேடு பள்ளம் எதைப் பற்றியும் கவலைப் படாமல் ஓடினாள்.. ஓடினாள்... ஓடிக் கொண்டேயிருந்தாள் கால்கள் மறுப்பு கூறும் வரை ஓடினாள்.

யாரும் பின்னால் துரத்தி வருவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. பின்னால் திரும்பிப் பார்த்தாள். எதுவும் புலப்பட வில்லை. ஓடுவதை நிறுத்தி விட்டு மெல்ல நடக்க ஆரம்பித்தாள்.

எவ்வளவு தூரம் ஓடி வந்தோம்.. எந்த இடத்தில் இருக்கிறோம் என்ற கேள்விகளுக்கு விடை தெரியாமல் நடந்தாள். மூச்சு நெஞ்சகத்தை தாலாட்டிக் கொண்டி ருந்தது.

நடந்தவள் நின்றாள். தென்திசையில் மெலிதாய் கேட்டது நீரின் சலசலப்பு.

தென் திசை நோக்கி நடந்தாள். சிறிய மண் மேடு வந்தது. மண் மேட்டைத் தாண்டியதும் சிறிய ஓடையில் முழங்கால் அளவுக்கு தண்ணீர் ஓடிக்கொண்டிருப்பது தெரிந்தது.

ஓடையில் இறங்கினாள். நீர் ஜில்லிப்பாய் இருந்தது. இரண்டு கைகளிலும் நீர் அள்ளி முகத்தைக் கழுவினாள்.



சுகமாய் இருந்தது. ஒரு கையால் நீரை அள்ளி ஆசை தீர பருகினாள். ஓடி வந்த களைப்பு ஓடிப் போயிருந்தது.

நிமிர்ந்தாள். அதிர்ந்தாள்.

எதிர் மண் மேட்டில் இரண்டு அராபிய குதிரைகள் நின்று கொண்டிருந்தன. அவற்றின் முதுகில் நீலக் கண்களில் காமம் வழிய, உதட்டோரத்தில் குரூரச் சிரிப்பு தெளிய அமர்ந்திருந்தனர் இரண்டு வெள்ளையர்கள்.

மல்லம்மா சுதாரித்துக் கொண்டாள்.

சட்டென்று திரும்பி ஓட ஆரம்பித்தாள்.

மின்னல் வேகத்தில் குதிரையிலிருந்து குதித்து இறங்கிய கார்வெல்ஸ் ஒரே பாய்ச்சலாய் பாய்ந்து சென்று, மல்லம்மாவின் தோள்பட்டையை பிடித்து நிறுத்தினான்.

ஆவேசமாய் அவனை உதறினாள். அவன் பிடியிலிருந்து நழுவி ஓடைத் தண்ணீருக்குள் விழுந்தாள்.

விழுந்தவள் ஓட எத்தனிக்கவும், அவள் கரத்தைப் பிடித்து இழுத்து நிறுத்தினான். பயத்தில் அவள் மேனி நடுங்கியது.

தண்ணீரில் விழுந்ததால் நனைந்து போயிருந்த அவள் ஆடைகள் மேனியோடு ஒட்டிக் கொண்டதால், அழகுகளை வெளிச்சம் போட்டுக் காட்டின. நனைந்த ஆடையில் அவள் நின்ற கோலம், அந்த வெள்ளைக் காமுகனின் உடலில் காமத் தீயாய் சுட்டது.

ஆவேசமாய் அவளைப் பற்றி, இறுக்க முற்பட்டான். அவளோ தன் பெண்மையின் சக்தியெல்லாம் திரட்டி தன்னை விடுவிக்கப் போரிட்டாள்.

போராட்டத்தில் தோல்வியின் பிடியில் பெண்மை; காம வெற்றியின் எக்களிப்பில் ஆண்மை.

மல்லம்மாவை தன் உடலோடு சேர்த்து, அவள் அதரங்களுக்காய் ஆவேசமாய் குனிந்த கார்வெள்ஸ்,

"ஓ.. அலொஸ்" என்று அலறினான்.

வலது கையில் குத்தி நின்றது குறுவாள் ஒன்று. மல்லம்மாவை பிடித்திருந்த பிடி மெல்ல நழுவுவதற்கும், அவன் முழு பலத்தைப் பிரயோகித்து உதறுவதற்கும் சரியாக இருந்தது. 'த்தட்டால்' என்ற சத்தத்துடன் தண்ணீரைச் சிதற அடித்தபடி ஓடைக்குள் மல்லாந்து விழுந்தான் கார்வெள்ஸ். அவன் கையிலிருந்து பொங்கி வந்த இரத்தம் ஓடைத் தண்ணீரை நிறமாற்றம் செய்தது

குறுவாள் வந்த திசையில் நீலக் கண்கள் நான்கும், வனிதையின் விழி இரண்டும் திரும்பின. மண்மேட்டில் கம்பீரமாய் நின்று கொண்டி ருந்தது புரவி ஒன்று. அதன் முதுகில் அமர்ந்திருந்தான் வீரன் ஒருவன்.

"அட.. பெண்ணை விரட்டும் ஆங்கில பேடிகளா.." என்று முணுமுணுத்தன அவன் உதடுகள்.

அதுவரை குதிரையில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஆங்கிலச் சிப்பாய் உருவிய வாளுடன் அந்த வீரனை நோக்கி நகர்ந்தான்.

வெள்ளையனின் கையிலிருந்த வாளின் கூர்நுனி வீரனின் மார்புப் பிரதேசத்தை குறிவைத்து நீண்டது. வீரனின் இடுப்பில் அமைதியாய் தொங்கிக் கொண்டிருந்த உறை வாள், மந்திரத்துக்கு கட்டுப்பட்டது போல் கரத்துக்கு வந்து வேகமாய் சுழன்று வெள்ளையனின் வாளை முத்தமிட்டு நிறுத்தியது.

கோபத்தின் வசப்பட்ட சிப்பாய் தன் கைவாளை கழுத்து, இடுப்பு, தலை என குறிவைத்து பிரயோகித்தான். அந்த கோபவாள் நீண்ட திசையெங்கும் தடுத்து நிறுத்தப் பட்டது, வீரனின் மெல்லிய நீண்ட வாளால்.



அடுத்த சில விநாடிகளில் உடலெங்கும் இரத்தக் கோடுகளை வாங்கியிருந்தான் வெள்ளை சிப்பாய். கடைசி முயற்சி போல் தன் முழு பலத்தையும் பிரயோகித்து, வீரனின் கழுத்தைக் குறிவைத்து வீசினான் வாளை,

கண் இமை மூடு பொழுதுக்குள் வெள்ளையனின் கை வாளை அந்தரத்தில் பறக்கச் செய்தான் வீரன். வாள் காற்றில் மிதந்து ஓடைத் தண்ணீரில் விழுந்து மறைந்தது.

"ஏய்.. வெள்ளை மடையா! இனி என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான் வீரன், நிராயுத பாணியாகி விட்ட வெள்ளைச் சிப்பாய் காயமடைந்த தன் தலைவன் உதவிக்கு வருவானா என்ற எண்ணத்தில் திரும்பி பார்த்தான்.

"பார்த்தாயா உன் தலைவனின் அழகை, ஆனந்தம் என்றால் பங்கு கேட்பான். ஆபத்து என்றால் ஓடிவிடுவான்" என்று சொல்லிவிட்டு சிரித்தான் வீரன்.

கண்களில் பயத்துடன் நின்று கொண்டருந்தான் செந்தலையன். எதிர்பாராத தருணத்தில் ஒருமுறை பேசியது வீரனின் வாள். வெள்ளை முகத்தில் ஆழமாய் ஒரு கோடு விழுந்தது. கோட்டில் அவசரமாய் துளிர்த்தது இரத்தம்.

"உன் முகத்தை கண்ணாடியில் பார்க்கும் பொழுதெல்லாம் தமிழ் பெண்ணை தொட்டதற்கு கிடைத்த தண்டனை இது என்பது ஞாபகம் வரட்டும். பிழைத்து போ செந்தலை நாயே.. ஓடு அவனிடம் போய் சேர்ந்து கொள்" என்றான் வீரன்.

அவசர கதியில் குதிரையை திருப்பி, கார்வெள்ஸ் சென்ற திசையில் தன் குதிரையை அதி வேகமாய் ஓடவிட்டான்.

குதிரை சென்ற திசையை சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்த வீரனை கலைத்தது குயில் குரல்.

"ஐயா..."

திரும்பினான். பதுமையாய் நின்று கொண்டிருந்தாள் மல்லம்மா.

"தக்க சமயத்தில் வந்து என்னை காப்பாற்றினீர்கள் நன்றி ஐயா, நன்றி!"

என்றாள் நாத் தழுதழுக்க.

குதிரையிலிருந்து குதித்து இறங்கினான் வீரன். அவளிடம் எதுவும் பேசாமல் ஓடையை நோக்கி நடந்தான். வாளில் ஒட்டியிருந்த இரத்தத்தை கழுவி, வாளை உறையில் செருகியபடி மல்லம்மாவை நோக்கி வந்தான். அவளை நெருங்கி, "பெண்ணே நீ யார்... உனக்கு எந்த ஊர்.. இவர்களிடம் எப்படி..." என்று கேட்டான்.

"என் பெயர் மல்லம்மா. என்சொந்த ஊர் பாஞ்சாலங் குறிச்சி."

"என்ன பாஞ்சாலங்குறிச்சியா.." வியப்பாய் கேட்டான்.

"ஆம். பாஞ்சாலங்குறிச்சிதான். கோட்டை வெள்ளையர் கையில் அகப்பட்ட போது தப்பி யோடினோம். அந்த நேரத்தில் என் உறவினர்களைப் பிரிந்தேன். ஒரு விவசாயக் குடும்பம் அடைக்கலம் தந்தது. பாஞ்சாலங்குறிச்சி அரசு மாளிகைப் பஞ்சணையில் படுத்தவள், பருத்தித் தோட்ட குடிசையில் கட்டாந்தரையில் உறங்க என்னைத் தயார் படுத்திக் கொண்டேன். அந்த குடும்பத்து உறுப்பினராகவே மாறிப் போனேன். இன்று அந்த கிராமத்தில் 'கட்டபொம்மு மகாராஜா' கூத்து நடந்தது. பார்க்கச் சென்றிருந்தேன். திடீரென்று கூட்டத்தில் புகுந்து சவுக்கால் அடித்தனர் கும்பினிச் சிப்பாய்கள். கூட்டம் அங்குமிங்கும் ஓடியது. நானும் ஓடினேன். என்னை விரட்டினார்கள் இரண்டு வெள்ளையர்கள். அவர்கள் கையில் சிக்கிக் கொண்டேன். தக்க சமயத்தில் வந்து என்னை காப்பாற்றி விட்டீர்கள்



பறல் ஆடி வீரரே" என்றாள் மல்லம்மா. திடுக்கிட்டுப் போனான் இளைய பாண்டியன்.

"என்னை எப்படி உனக்கு.."

"தெரியுமா என்று கேட்கிறீர்கள். உங்கள் வீரம் பாஞ்சாலங்குறிச்சி அரச குடும்பத்து பெண்களால் அடிக் கடி பேசப்படுகிற ஒன்று. ஜக்கம்மா தேவி திருவிழாவில் 'மஞ்சு விரட்டு' நடக்கும் பொழுது உங்களை பார்த்திருக்கிறேன்" என்றாள். "நீங்கள் யார்..?" என்று கேட்டான் இளைய பாண்டியன். மரியாதை கலந்த குரலில்.

"நீ என்றே என்னை அழைக்கலாம். வயதில் சிறியவள் தான் தவறில்லை.. கடற்கரை நாயக்கரை உங்களுக்கு தெரிந்திருக்கும். அவருடைய தங்கை பேத்தி நான்" என்றாள் மல்லம்மா.

"கடற்கரை நாயக்கரை பார்க்கத்தான் செல்கிறேன். நீயும் என்னுடன் வரலாம்"

"தாத்தா இருக்குமிடம் உங்களுக்குத் தெரியுமா.." சந்தோசம் பொங்க கேட்டான்.

"தெரியும். அவரிடம் கொண்டு சேர்த்து விடுகிறேன்" என்றான் இளையபாண்டியன். மகிழ்ச்சியில் மலர்ந்தது மல்லம்மாவின் முகம். அவள் மகிழ்ச்சியைக் கெடுப்பது போல் இருட்டில் முளைத்தன சில வெளிச்சப் புள்ளிகள்.

"அதோ, நம்மைத் தேடி வந்து விட்டார்கள்" என்றான் பறல் ஆடி வீரன்.

# 14

## வீரனின் கோவில்

மல்லாவின் மகிழ்ச்சி அரை விநாடியில் காணாமல் போனது. இளைய பாண்டின் சுட்டிக்காட்டிய திசையில் - அவர்களை நோக்கி வேகமாய் வந்து கொண்டிருந்தது தீப்பந்த வெளிச்சங்கள்.

"ஓடியவன் ஆட்களை திரட்டிக் கொண்டு வருகிறான்" என்றான் இளைய பாண்டியன்.

"என்ன செய்வது..? என்று கேட்டாள் மல்லம்மா.

"உன்னை குதிரையில் ஏற்றி அனுப்பி விடுகிறேன். பிறகு நான் வந்து சேர்ந்து கொள்கிறேன்" என்றான் நிதானமான குரலில்.

"என்னை எங்கே அனுப்பப் போகிறீர்கள்..?"

"அதோ மேற்கே தெரிகிறது பார் காடு.. அதன் நடுவில் மண்டபம் ஒன்று இருக்கிறது அங்கே உன்னைக் கொண்டு சேர்த்து விடும் என் குதிரை" - என்றான் நம்பிக்கையுடன்.

"நீங்கள்..?" - கேள்வியில் பயம் தொனித்தது.

"கவலை வேண்டாம். எப்படியும் மண்டபத்திற்கு வந்து சேர்ந்து விடுவேன்" - என்றவன், உதடுகளை குவித்து ஒலி எழுப்பினான். உதட்டொலி கேட்ட பறல் ஆடி வீரனின் குதிரை வேகமாய் ஓடி வந்து அவர்கள் முன்னால் நின்றது.



"ம்.. குதிரை மீது ஏறு" - என்றான். தயக்கத்துடன் நின்றாள்.

"தயக்கம் வேண்டாம். அருகில் வந்து விட்டது ஆபத்து" - என்றவன் வலக்கரம் கொடுத்து உதவினான். மல்லம்மா சிரமப்பட்டு குதிரை மீது ஏறி அமர்ந்தாள். இளைய பாண்டியன் குதிரையின் காதருகே வந்து - "குமுதா.. வீரனின் கோவிலில் கொண்டு இவளைச் சேர்த்து விடு. நான் வரும்வரை நீதான் இவளுக்கு காவல்" - என்றான்.

ஆமோதிப்பது போல பலமாகத் தலையாட்டியது குதிரை. அதன் முகவாயைத் தட்டிக் கொடுத்தான்.

"ம்.. போ" - என்றான்.

எஜமானன் குரலுக்கு கட்டுப்பட்டு, மல்லம்மாவை சுமந்து கொண்டு காட்டை நோக்கி வேகமாய் ஓட ஆரம்பித்தது இளைய பாண்டியனின் குதிரை.

நள்ளிரவு. பாளையங்கோட்டை இருளின் பிடியில் இருந்தது. மெக்காலேயின் மாளிகை இருந்த வளாகத்தின் முன் வாசலில் வில் வண்டி ஒன்று வந்து நின்றது.

கும்பினிச் சிப்பாய்கள் மின்னல் வேகத்தில் வண்டியைச் சூழ்ந்து கொண்டார்கள். சிப்பாய் ஒருவனின் நீள குழல் துப்பாக்கி வண்டியோட்டியின் மார்புக்கு நேராய் நீண்டது. வண்டியோட்டியின் கால்கள் மெலிதாய் நடுங்க ஆரம்பித்தது.

"உள்ளே யார் இருக்கிறார்கள்..? - அதிகாரக் குரலில் கேட்டான் ஒரு சிப்பாய்.

"அது.. வந்து.. ராத்திரி.. கருப்பு.."

வண்டியோட்டியிடமிருந்து உளறலாய் வந்தது பதில்.

வீரன் ஒருவன் வேகமாய் வண்டியை நெருங்கி, முன் திரையை வேகமாய் இழுத்தான்.

வெளியே எட்டிப் பார்த்தது நிலவு முகம் ஒன்று.

"நாட்டிய ராணி ரஞ்சிதா" - சிப்பாயின் கண்கள் அகலமாய் விரிந்தது. மருதாணி பூசிய கரங்கள் திரையை இழுத்து முகத்தை மறைத்துக் கொண்டது.

அதே நேரம் - பின்னால் தொங்கிய திரை விலகியது. அவசரமாய் வெளியே எட்டிப் பார்த்தது கறுப்பு முகம் ஒன்று.

அந்த முகத்துக்கு சொந்தக்காரன் - முத்துக்கருப்பன்

சிப்பாய் கூட்டம் வண்டியின் பின் பக்கம் ஓடியது.

"முத்துக்கருப்பா நாட்டிய ராணி ரஞ்சிதா எங்களுக்கெல்லாம் நாட்டிய விருந்து அளிக்கப் போகிறாளா!" என்று கேட்டார் பல் விழுந்த சிப்பாய் ஒருவர்.

"விருந்து உங்களுக்கு அல்ல. கார்வென்ஸ் துரைக்கு" - என்றான் முத்துக்கருப்பன்.

"கார்வென்ஸ் தொரைதான் ஊரில் இல்லையே.." - மகிழ்ச்சி பொங்க சொன்னான் ஒருவன்.

"எப்பொழுது சென்றார்..?" - வருத்தமாய் கேட்டான் முத்துக்கருப்பன்.

"முதல் சாமத்தின் ஆரம்பத்தில்" - பதில் சொன்னான் ஒருவன்.

"பொங்கி வைத்த சாப்பாடு ஏன் வீணாக வேண்டும். இரவு முழுவதும் எங்கள் முன் ஆடச்சொல். சம்பளம் தந்ததும் கால்பங்கை உன்னிடம் தந்து விடுகிறோம்" - என்றான் கிழட்டுச் சிப்பாய்.

காவலர் கூட்டம் அவர் தீர்மானத்தை ஏகமனதாய் ஆதரித்தது.



"பார்க்கலாம். நான் அவசர காரியமாய் மேஜரை பார்க்க வேண்டியிருக்கிறது. வந்து பேசிக் கொள்வோம்" - என்றான் மழுப்பலாய்.

"சரி.. நீ போய் பேசிவிட்டு வா. ரஞ்சிதாவை என்னிடம் விட்டு விட்டு போ" - என்றார் கிழட்டுச் சிப்பாய். சுற்றி இருந்தவர்களிடம் சிரிப்பலை எழுந்தது.

"பூனையை நம்பி கருவாட்டை வைத்து விட்டுப் போக முடியுமா..” - என்று கேட்டான் முத்துக்கருப்பன். சிப்பாய் கூட்டம் மீண்டும் சிரித்தது.

"பல்லில்லாத கிழட்டு பூனையால் கருவாட்டுக்கு எந்த ஆபத்துமில்லை" என்றார் பல்லில்லாத சிப்பாய்.

"பல்லில்லாத பூனை கடிக்காது. நம்பலாம். நக்கவும் செய்யாது என்பதற்கு யார் உத்தரவாதம்" - என்று கூட்டத்தில் ஒரு குரல் கேட்க, 'க்ளுக்' கென்று சிரித்தாள் வண்டிக்குள்ளிருந்த மோகனாங்கி. சிரிப்பில் உறைந்து போனது சிப்பாய் கூட்டம்.

"ம்.. நேரமாகிறது. வழி காட்டுங்கள்" - என்றான் முத்துக்கருப்பன் எரிச்சலாய். கண்களில் ஏக்கத்துடன் சிப்பாய் கூட்டம் விலகி வழி விட்டது. வண்டி மெல்ல உள்ளே நுழைந்தது.

பெரிய கட்டிடத்தின் முகப்பில் கொண்டு போய் வண்டியை நிறுத்தினான் வண்டியோட்டி. வண்டிக்குள் இருந்த இரும்பு பெட்டியை கையில் எடுத்துக் கொண்டு கீழே இறங்கினான் முத்துக்கருப்பன்.

"முத்தா" - கொஞ்சலாய் அழைத்தாள் கோதை.

"என்ன ரஞ்சி..?" - செல்லமாய் கேட்டான் முத்து.

"நான் என்ன செய்யட்டும்.." - கேட்டாள் கண்களைச் சொக்கி.

"நீ ஒன்றும் செய்ய வேண்டாம். அரை நாழிகை நேரம் அசையாமல் இரு. அதற்குள் வந்து விடுவேன்.. சரிதானா கண்ணே!"

"ம்.ம்.குங்.." - சிணுங்கினாள் சிங்காரி. கூச்சத்தால் நெளிந்தான் வண்டிக்காரன்.

"உன்னைப் பற்றி மேஜரிடம் சொல்லப் போகிறேன். அவர் மட்டும் தலையசைத்து விட்டால் நீ நாட்டியத்துக்கு மட்டும் ராணியல்ல, இந்த நாட்டுக்கே ராணி"-அவள் கன்னத்தைக் கிள்ளி விட்டுச் சென்றான் முத்துக் கருப்பன். வண்டியோட்டிக்கு வியர்த்தது.

மேஜர் மெக்காலேயின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அறைமுழுவதும் காகிதங்கள் சிதறிக் கிடந்தன. வேகவேகமாய் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

இரும்புப் பெட்டியுடன் உள்ளே நுழைந்தான் முத்துக் கருப்பன். குரல் அரவத்தில் நிமிர்ந்தார். அகலமாய்ச் சிரித்தான்.

"என்ன முட்கார்ப்பு, ராத்திரி நேரத்தில் வந்திருக்கிறாய்..?" - வியப்பாய் கேட்டார் மெக்காலே.

"கட்டபொம்மன் சொத்தை உங்கள் காலடியில் சேர்க்க இரவோடு இரவாக ஓடி வந்திருக்கிறேன்" - என்றவன் இரும்புப் பெட்டியை அவர் காலடியில் வைத்தான்.

மெக்காலே முகம் சூரியனைக் கண்ட தாமரையாய் மலர்ந்தது.

"உள்ளே என்ன இருக்கிறது முட்கார்ப்பு.." - குரலில் ஆவல் மிதமிஞ்சி இருந்தது.

"இரும்புப் பெட்டிக்குள் இருக்கிறது சந்தனப்பேழை. பேழைக்குள் இருக்கிறது பொக்கிஷம்" - என்றான் உற்சாகமாக.



"உடனே திற" - என்றார் ஆர்வமாய். முத்துக் கருப்பன் மண்டியிட்டு அமர்ந்து பெட்டியைத் திறந்தான்.

பெட்டிக்குள் எதுவும் இல்லை. வெறுமையாய் இருந்தது.

பருவகாற்று சாந்தமாய் வீசிக் கொண்டிருந்தது. மண்டபத்தின் படிக்கட்டில் அமர்ந்திருந்தாள் மல்லம்மா. அவள் முகத்தில் கவலை அப்பியிருந்தது. சற்று தள்ளி நின்று கொண்டிருந்த குதிரை அவளையே கவனித்துக் கொண்டிருந்தது.

ஒரு உருவம் மண்டபத்தை நோக்கி வருவதை கண்டதும் அவசரமாய் எழுந்தாள். நெருங்கி வர வர தெளிவாய் தெரிந்தது.

அது, இளையபாண்டியன். அவன் நடையில் சோர்வு தெரிந்தது.

"அப்பாடா, வந்து விட்டீர்கள்"- நிம்மதி பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது அவளிடமிருந்து.

"அவர்கள் உங்களைப் பார்க்க வில்லையா.."

"அவர்கள் வருவதற்குள் பனைமரம் ஒன்றில் ஏறி அடர்ந்த ஓலைகளுக்கிடையில் மறைந்து கொண்டேன். தேடிப் பார்த்துவிட்டு திரும்பி விட்டார்கள்"- என்ற இளைய பாண்டியன், மண்டபத்தின் தூண் ஒன்றில் சரிந்தபடி அமர்ந்தான். அருகில் அமர்ந்து கொண்டாள் மல்லம்மா.

மெல்ல வாய் திறந்து - "என்னால் உங்களுக்கும் தொல்லை" - என்றாள்.

"பாஞ்சாலங்குறிச்சி மண்ணில் பிறந்த ஒரு பெண்ணை காப்பாற்றுவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதே.. அதுவே என் பெருமை" - என்றான் இளைய பாண்டியன்.

"நீங்கள் என்னை இங்கே வந்து காத்திருக்கச் சொல்லி விட்டீர்கள்.. இன்னும் கொஞ்சம் நேரம் நீங்கள் வரா விட்டால் பயத்திலேயே செத்துப் போயிருப்பேன்" என்றாள் மல்லம்மா.

"பயப்பட என்ன இருக்கிறது.."

"இந்த மண்டபத்தைப் பாருங்கள்" - என்று சொன்னதும் புதிதாய் பார்ப்பவன் போல அந்த கட்டடத்தைப் பார்த்தான்.

அந்த கட்டடம் அங்கங்கே காரை பெயர்ந்து, பறவை கள் எச்சத்தை உடலில் வாங்கிக் கொண்டு சில இடங்களில் மரம் முளைத்து பரிதாபமாய் காட்சியளித்து, இருட்டு நேரமாதலால் அச்ச உணர்வையும் தோற்றுவித்தது.

"எதற்காக எழுப்பப்பட்ட மண்டபம் இது தெரியுமா.." கேள்வி கேட்டான் மல்லாம்மாவிடம்.

'தெரியாது' என்பது போல குறுக்கே தலை அசைத்தாள்.

"பாண்டிய வீரனின் பள்ளிபடை, பாண்டியர்கள் திக்கெட்டும் புகழ் பரப்பி இருந்த காலத்தில் நடந்த போரில் உயிர் நீத்த பாண்டிய வீரன் நினைவாக கட்டி வைத்த நடுகற்கோவில் அந்த மாவீரனின் பள்ளிபடை இன்று கவனிப்பாரின்றி அழிந்து கொண்டிருக்கிறது" - என்றவன் நெஞ்சை பெருமூச்சு ஒன்று தாலாட்டியது.

"நடுகற் கோவில் என்றால் கல்லறைதான்.." - கேட்டாள் சந்தேகத்துடன்.

"கல்லறைதான். ஆனால் வீரனின் கல்லறை" - என்றான் பறல் ஆடி வீரன். மல்லம்மா வந்த கொட்டாவியை அடக்க முயன்று தோற்றான்.

"மல்லம்மாவுக்கு உறக்கம் வந்து விட்டது. சிறிது நேரம் படுத்திருந்து விட்டு விடிகாலையில் எழுந்து நடப்போம்" - என்றான்.



"நான் எங்கே படுப்பது.." - என்று கேட்டாள். அவள் விழிகளில் உறக்கம் வந்திருந்தது.

"நீ மண்டபத்தின் உள்ளே படுத்துக்கொள். நான் வாசலில் படுத்துக் கொள்கிறேன்" - என்று சொல்லிவிட்டு இருந்த இடத்திலேயே சுருண்டு படுத்துக் கொண்டான்.

மல்லம்மா மண்டபத்துக்குள் நுழைந்தாள். அதே வேகத்தில் வெளியே ஓடிவந்தாள்.

"சே.. ஒரே வௌவால் நாற்றம்.. பயங்கர இருட்டு. எனக்கு பயமாய் இருக்கிறது. என்னால் உள்ளே ஒரு விநாடியும் படுத்திருக்க முடியாது. நான் இங்கேயே படுத்தக் கொள்கிறேன்"- என்றவள் பதிலை எதிர்பார்க்காமல் அவன் படுத்திருந்த இடத்திற்கு சற்று தள்ளி ஒருக்களித்து படுத்தாள். அவனுக்கு முதுகை காட்டியபடி படுத்திருந்தவள் படுத்த சில நிமிடங்களில் தூங்கிப்போனாள்.

இளைய பாண்டியனுக்கோ - நெடுநேரம் தூக்கம் வரவில்லை.

கோபத்தில் மெக்காலே முகம் சிவந்து போயிருந்தது. அவரால் வீசியெறியப்பட்ட இரும்புப் பெட்டி வாசலில் கிடந்தது. தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்தான் முத்துக்கருப்பன்.

"முட்டாள்.. என் கண் முன்னால் நிற்காதே. பெட்டியை தூக்கிக் கொண்டு வெளியே போ" - கத்தினார் மெக்காலே.

மௌனமாய் இரும்புப் பெட்டியை தூக்கிக் கொண்டு வெளியே வந்தான் முத்துக்கருப்பன். 'எங்கே போயிற்று சந்தனப் பேழை?' ஒரே கேள்வி சம்மட்டி அடி போல மனதில் திரும்பத் திரும்ப மோதியது.

வில்வண்டி அவிழ்த்து வைக்கப்பட்டிருந்தது. சற்று தள்ளியிருந்த மரத்தில் மாடுகளைக் கட்டிப் போட்டிருந்தது. 'இரும்புக் கம்பு சாக்கில்' தலை வைத்து படுத்திருந்தான் வண்டியோட்டி.

வேகமாய் வண்டியை நெருங்கி - திரையை விலக்கினான் முத்துக்கருப்பன்.

நாட்டிய ராணி ரஞ்சிதாவைக் காணவில்லை.

உறக்கம் மெல்ல கலைந்தது. புரண்டு படுத்தான். தூரத்தில் மரம் வெட்டுபவர்களின் பாட்டொலி காதில் விழுந்தது.

*"மத்தங்கா பில்லு வெட்டி
மலையோரம் போற பொண்ணே
மலை மேலே பேஞ்ச மழை - என்
கண்ணே ரத்தினமே உன்
மாரு நனையலையே - என் பொண்ணே ரத்தினமே
கோடாலிக் கொண்டை போட்டு
கோவிலுக்குப் போற பொண்ணே
கோவிலிலே பெஞ்ச மழை -
என் கண்ணே ரத்தினமே -உன்
கொண்டை நனையலையே -
என் பொண்ணே ரத்தினமே"

எழுந்து அமர்ந்தான். சூரியனின் மஞ்சள் ஒளியில் நனைந்து கொண்டிருந்தன மரங்கள்.

*நாடோடிப் பாடல்கள். தொகுப்பாசிரியர், ஆர். அய்யாசாமி. முதற் பதிப்பு, பக்கம் 23.



திரும்பி மல்லம்மா படுத்திருந்த இடத்தை பார்த்தான். வெற்றிடமாய் இருந்தது. தூக்கத்தில் உருண்டு சுவரோரம் போயிருந்தாள். ஆழ்ந்த உறக்கம். மார்பகம் உயர்ந்து தாழ்ந்து கொண்டிருந்தது.

பக்கவாட்டில் கையை ஊன்றினவன்- அதிர்ந்தான் - இன்ப அதிர்ச்சி கண் எதிரே இருந்தது சந்தனப் பேழை.

ஆசையாய் கையில் எடுத்தான். பேழைக்கு கீழே ஓலை ஒன்று இருந்தது. எடுத்துப் பார்த்தான்.

'குதிரை மோகினி' என்று எழுதியிருந்தது.

# 15

## வேங்கைப் பெண்

கடற்கரை நாயக்கர் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனார். மல்லம்மாவின் தோள்களை ஆதரவாய் பற்றி உச்சி முகர்ந்தார்.

"இதுவரை நடந்த கதையைச் சொல், உன் தாத்தா தெரிந்துகொள்கிறேன்" என்று கேட்டார் அவருடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி நின்றது.

மல்லம்மா, கோட்டை விழுந்த நேரத்தில் மாளிகையை விட்டு ஓடியதிலிருந்து, இளைய பாண்டியன் வெள்ளையர் கையிலிருந்து காப்பாற்றியது வரை சொல்லி முடித்தாள். தெளிந்த நீரோடை போல. நன்றிப் பெருக்குடன் பறல் ஆடி வீரனைப் பார்த்தார். பின் மல்லம்மா பக்கம் திரும்பி, "மல்லம்மா இனி எதற்கும் நீ பயப்பட வேண்டாம். உனக்கொரு அண்ணன் கிடைத்து விட்டான். உன் அண்ணனின் காலில் விழுந்து வணங்கம்மா" - என்றார்

அவர் சொன்ன மாத்திரத்தில் இளைய பாண்டியன் காலில் விழுந்து வணங்கினாள் மல்லம்மா. தோள் தொட்டு தூக்கினான். இருவர் கண்களிலும் கண்ணீர்.

"பறல் ஆடி வீரா சந்தனப் பெட்டியை காட்டுகிறாயா.." - என்று கேட்டார். கண்களைத் துடைத்தவன் அறையின் மூலையில் இலை, தழைகளால் சுற்றி வைக்கப் பட்டிருந்த சந்தனப் பேழையைப் பிரித்தெடுத்து அவர்



கையில் கொண்டு கொடுத்தான். சந்தனப் பேழையை பத்துநாள் குழந்தையை வாங்கிக் கொள்ளும் பாவத்துடன் வாங்கிக் கொண்டார். மெலிதாக வீசியது சந்தனவாடை. பேழையை அங்கும் இங்கும் புரட்டிப் பார்த்தார். நடனம் ஆடும் கோலத்தில் இருக்கும் சந்தன சிற்பங்களையும் பார்த்தார்.

"ஊமைத் துரைக்குத்தான் இதன் சூட்சுமம் தெரியும். அவன் வெளியில் வந்த பிறகே திறந்து கொள்ளட்டும்" - என்றவர் பேழையை பக்கவாட்டில் வைத்தார்.

கதவை திறந்து கொண்டு இளைஞன் ஒருவன் உள்ளே வந்தான்.

"ஐயா, வரச்சொல்லவா.." என்று கேட்டான்.

"ம்.. வரச்சொல்" - என்றார் சற்று யோசித்து. அந்த வாலிபன் அவசரமாய் வெளியே போனான்.

அடுத்த சில விநாடிகளில் உள்ளே நுழைந்தனர் கல்யாணத் தேவர், பூபதி நாடார், தோமாச்சி முதலியார், பெருமாள் கவுண்டர், பெருமாள்சாமி பிள்ளை, உத்தமநாத படையாச்சியார்.

"வரவேண்டும் வரவேண்டும்" - என்று வரவேற்றார் நாயக்கர் ஆசனங்களில் அமரும்படி உபசரித்தான் இளையபாண்டியன். வந்தவர்கள் ஆளுக்கொரு ஆசனத்தில் அமர்ந்தனர். புன்முறுவலுடன் பேச ஆரம்பித்தார் நாயக்கர்.

"பறல் ஆடி வீரனுக்கு அறிமுகம் தேவையில்லை. இங்கு வந்திருக்கும் உங்களையும் யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நீங்கள் விரல் நீட்டிய திசையில் பாய்ந்து செல்ல உங்கள் கிராமங்களில் உள்ள வாலிபர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். நாடு அறியும். நம் சுதந்திர பூமியில் ஆதாய மீன் பிடிக்க கால் ஊன்றி

யிருக்கும் வெள்ளை நாரைகளை விரட்ட நாம் ஒன்று சேர்ந்திருக்கிறோம். எவர் கலைத்தாலும் நாம் கோர்த்திருக்கின்ற கைகள் பிரிந்து விடக்கூடாது."

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று என்ற செந்நாப் போதரின் வார்த்தைகள் அறிந்த கட்டபொம்மன் பிறந்த மண்ணில் பிறந்தவர்கள் நாங்கள். எந்தக்காற்று அடித்தாலும் திசை மாறமாட்டோம்" - என்றார் உறுதியான குரலில் தோமாச்சி முதலியார்.

அதை ஆமோதிப்பது போல தலையை ஆட்டினார் பெருமாள் சாமி பிள்ளை. "கப்பம் என்று வாய் திறந்தால் கத்தியை உருவி காட்டுவான் மறவன், கிஸ்தி என்று கேட்டால் ஈட்டியை உயர்த்துவான் தமிழன் என்று திருநெல்வேலி சீமை முழுவதும் மக்கள் பேசுகிறார்கள். நாம் மறத் தமிழர்கள். புரட்சிப் படைக்கு தமிழர் படை என்று பெயர் சூட்டுவோம். வெள்ளையனுக்கு யாரும் கிஸ்தி கட்டாத நிலையை உருவாக்குவோம்" - என்றார் கல்யாணத் தேவர்.

"நாம் தமிழர். நாம் உருவாக்கப் போகும் புரட்சிப் படை தமிழர் படை. அதுவெல்லாம் சரிதான். நாம் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கும் ஊமைத்துரை தமிழர் இல்லையே.. வெள்ளையன் அந்நியன் என்றால் அவரும் அந்நியர்தானே.. என்று எந்த புரட்சி வீரனாவது கேள்வி எழுப்பினால்.." - தாழ்ந்த குரலில் கேட்டார் பெருமாள் கவுண்டர்.

அந்த அறையில் இருந்த அத்தனை பேருடைய முகமும் கண் இமை மூடு பொழுதுக்குள் நிறம் மாறியது. முகத்திலிருந்த மலர்ச்சி தொலைந்து போயிருந்தது. ஆவேசம் வந்தவர் போல எழுந்து பேசத் தொடங்கினார் பூபதி நாடார்.



"வீரபாண்டிய கட்டபொம்மனும், ஊமைத்துரையும் பிறந்த நாடு தமிழ்நாடு. அவர்கள் பேசியது தமிழ்மொழி. அவர்கள் வளர்ந்து வாழ்ந்த பண்பாடு தமிழ்ப் பண்பாடு. அது மட்டுமா... அவர்கள் எந்த தமிழ் மண்ணில் பிறந்தார்களோ, அந்த தமிழ் மண்ணுக்காவே வாழ்ந்து, அந்த தமிழ் மண்ணின் சுதந்திரத்திற்காகவே போரிட்டார்கள். அந்த போராட்டத்தில் மடிந்து விட்டான் வீரபாண்டியன். சிறைப் பறவையாக இருக்கிறான் ஊமைத்துரை. அவர்கள்தான் உண்மையான தமிழர்கள். தமிழுக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் தன் உயிர், பொருள், ஆவி எதையும் தியாகம் செய்யத் தயாராய் இருக்கின்றவன் தான் தமிழன். தமிழ் மண்ணில் பிறந்தும் தன் நலத்துக்காக தன் இனத்தையே காட்டிக் கொடுப்பவன் பிறப்பால் தமிழனாய் இருந்தாலும் அந்நியன்தான்" - என்று சொல்லிவிட்டு அமர்ந்தார்.

உற்சாகமாய் கைத் தட்டினார் கல்யாணத் தேவர். அந்த அறைக்குள் மீண்டும் உற்சாகம் வந்தது.

"பத்து பூபதி நாடார் இருந்தால்போதும், தமிழ் மண்ணை விட்டே வெள்ளையனை விரட்டி விடலாம்" - என்றார் கடற்கரை நாயக்கர்.

"சிவத்தையா எங்கே..?" - என்று கேட்டான் இளைய பாண்டியன்.

"புரட்சிப் படையில் வீரர்களை சேர்க்க கிராமம் கிராமமாய் சென்றிருக்கிறார்கள். அடுத்த பௌணர்மியின் பின் இரவில் ரகசிய கூட்டம் ஒன்று நடத்த முடிவு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த கூட்டத்தில் இளைய பாண்டியன் கலந்து கொள்ளப்போவதில்லை" - என்றார் கடற்கரை நாயக்கர்.

"ஏன்?" - அதிர்ச்சியுடன் கேட்டான் இளைய பாண்டியன்.

"நாளை நீ சிவகெங்கைக்கு போகப் போகிறாய்.."

"எதற்காக?"

"நான் ஒரு ஓலை தருவேன். அதை சின்ன மருதுவிடம் சேர்ப்பித்து விடு. ஊமைத் துரையை விடுதலை செய்ய முடிவு செய்திருப்பதை"

"என்ன!" - ஆச்சர்யம் சுமந்து எழுந்தன குரல்கள்.

"ஆம். தைத்திங்கள் புரட்சிப் படையின் உதவிகொண்டு சிறையை உடைத்து விட வேண்டியதுதான். அதையும் சின்ன மருதுவிடம் தெரியப்படுத்து. நிச்சயம் சின்ன மருது பண உதவி செய்வார்" - என்றார் நாயக்கர் நம்பிக்கையுடன்.

"பெரிய மருதுவிடம் தெரிவிக்க வேண்டாமா" என்று கேட்டார் தோமாச்சி முதலியார்.

"அரியணையில் இருப்பதுதான் பெரியமருது. ஆட்சியை நடத்துவது என்னவோ சின்ன மருது தான். * தனக்கு ஆபத்து வராத வரையில் வெள்ளையருக்கு கப்பம் கட்ட தயங்க மாட்டார். சின்ன மருது அப்படியல்ல. சுதந்திர தாகம் உடையவர்" - என்றார் கடற்கரை நாயக்கர்.

"தொண்டைமான் மனம் மாறியிருக்குமா, புரட்சிப் படைக்கு உதவிக் கரம் நீட்டுவாரா?" - என்று கேட்டார் உத்தமநாத படையாச்சியார்.

"தூங்கியவனைப் பிடித்து விட்டு துரத்திப் பிடித்தேன் என்று சொன்னவன் தொண்டைமான். அவனிடம் மாற்றம் இருக்காது. அவனும் எட்டப்பனும் ஒன்றுதான். எவர் உதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அடுத்த ரகசிய கூட்டத்துக்கு வருகின்றவர்களிடம் சிறையை உடைத்து

* பெரிய மருது ஆட்சி பொறுப்பிலிருப்பினும், உண்மையில் ஆட்சியை நடத்தியது ஆற்றல் மிக்க சின்ன மருதுதான்.

- ம.பொ. சிவஞானம்,* விடுதலைப் போரில் தமிழகம் முதல் தொகுதி, இரண்டாம் பதிப்பு, பக்கம் 42.



ஊமைத்துரையை விடுவிக்க வேண்டும் என்பதைக் கூறுவோம். கிராமம் கிராமமாய் புரட்சி வீரர்களை திரட்டுவோம், பணி முடிப்போம்" - என்றார் கடற்கரை நாயக்கர்.

"புரட்சிப் படையில் பெண்களுக்கு இடம் உண்டா?" கேள்வி வந்தது கல்யாணத் தேவரிடமிருந்து.

"உண்டு. நிச்சயம் உண்டு. புரட்சிப் பெண்களுக்கு தலைமை தாங்க வேங்கைப் பெண் ஒருத்தி வந்திருக்கிறாள்"

"எங்கே.. எங்கே" - கேள்விகள் எழுந்தன.

"மல்லம்மா, உள்ளறைக் கதவை இரண்டு முறை தட்டு."

மல்லம்மா எழுந்து உள்ளறைக் கதவில் ஆட்காட்டி விரலால் இரண்டுமுறை ஒலி எழுப்பினாள்.

கதவு திறந்து கொண்டது.

வெளியே வந்தாள் - அழகு பெண்ணொருத்தி.

அவள் - குதிரை மோகினி.

# 16

## காமன் கணைகள்

குதிரை மோகினியைக் கண்டதும் அதிர்ச்சியில் வாய் பிளந்தான் இளைய பாண்டியன். மற்றவர்கள் வியப்பில் இருந்தார்கள். 'இந்த அழகுச் சிலையா போரிடப் போகிறது.. இந்த பூங்கரங்களா வாள் தூக்கப் போகிறது.. இந்த தளிர்க் கால்களா எதிரியை எட்டி உதைக்கப் போகிறது...' சந்தேகம் ஊர்வலம் சென்றது.

அந்த அறையில் அமர்ந்திருந்தவர்களின் மனநிலையை புரிந்து கொண்ட கடற்கரை நாயக்கர்- "இவள் யாரென்று தெரிந்தால், உங்கள் சந்தேகம் காற்றில் பறந்து விடும்" என்றார்.

அவசரமாய் இளைய பாண்டியன் வாய் திறந்தான். "எனக்கு முன்பே.."

"தெரியும் என்று சொல்கிறாயா இளைய பாண்டியா.. நிச்சயம் இவளை நீ பார்த்திருக்க முடியாது. இவளுடன்! குதிரை மோகினியும் சேர்ந்து விட்டால் எதையும் சாதிக்கும் பெண் படை கிடைக்கும்."



"ஐயா இவள் தான்.." என்று ஆரம்பித்த இளைய பாண்டியனை 'சொல்ல வேண்டாம்' என்று கண்களால் கெஞ்சினாள் குதிரை மோகினி.

"ம்.. சொல்.." என்றார்.

"இல்லை.. இல்லை அவள் இவள் இல்லை!" என்ற இளைய பாண்டியனை நோக்கி புன்னகைத் தாள் குதிரை மோகினி.

"இவள் பெயர் மோகனவல்லி. நாகாலாபுரம் பாளையக் காரரின் அன்புத் தங்கை. புரட்சிப் படையில் அங்கம் வகிப்பதற்காகவே அண்ணனையும் மீறி வந்திருக்கிறாள்" என்றார் கடற்கரை நாயக்கர்.

"நாகலாபுரம் பாளையக்காரருக்கு தங்கை கிடையாதே.."

கேள்வி எழுப்பினார் பெருமாள் கவுண்டர்.

"நாகலாபுரம் பாளையக்காரரின் சிற்றன்னை தத்து எடுத்து வளர்த்த குழந்தை. இன்று போராட வந்திருக்கிறது" என்றார் நாயக்கர். மோகனவல்லியை வியப்புடன் கண்கள் நோக்கின. அவர்களின் மனநிலையை அறிந்து கொண்ட மோகனவல்லி வாய் திறந்தாள்.

"ஒரு பெண் போராட வந்திருப்பது வியப்பாய் இருக்கலாம். ராணி வேலு நாச்சியார் வாள் தூக்கிய போதும் உலகம் வியப்பாய்த்தான் பார்த்தது. நாச்சியார் வாள் தூக்கியது மண்ணுக்காக. நான் வாள் தூக்கியிருப்பது பழிக்கு பழி வாங்க. என் அண்ணன் சௌந்தர பாண்டி யனைக் கைது செய்து, விசாரிப்பது போல் நாடகமாடி விட்டு, கோபாலபுரத்தில் தூக்கு கயிற்றில் தொங்க

விட்டான் பானர்மென்* அவன் இனத்தை பழிக்குப் பழி வாங்க வேண்டும். அதற்காகத்தான் உங்கள் புரட்சிப் படையில் சேர வந்திருக்கிறேன்" என்றாள் உணர்ச்சி பொங்க.

"காரணம் எதுவாயிருந்தாலும் நாம் கூடியிருக்கும் நோக்கம் ஒன்றுதான். வெள்ளையரை நம் அன்னை பூமியில் இருந்து விரட்ட வேண்டும் என்பதுதான் நம் இலட்சியம். மோகனவல்லி, மல்லம்மாவை அழைத்துச் செல். வெகு தூரத்திலிருந்து வந்திருக்கின்றாள். சற்று ஓய்வெடுக்கட்டும்". என்றார் கடற்கரை நாயக்கர்.

மோகனவல்லியும், மல்லாவும் விடை பெற்றுச் சென்றார்கள். போகின்ற நேரத்தில் இளைய பாண்டியன் பக்கம் திரும்பி உதட்டை சுழித்து விட்டுச் சென்றாள் மோகனவல்லி. இளைய பாண்டியன் தலையில் பூமாரி பொழிந்தனர் காதல் தேவதைகள்.

"இளைய பாண்டியா" என்றழைத்தார் நாயக்கர்.

"என்ன" என்றான் கனவுலகத்தில் மிதப்பது போல.

"பறல் ஆடி வீரனுக்கு மயக்கம் வந்து விட்டது" என்றார் கடற்கரை நாயக்கர்.

*தானாதிபதி பிள்ளை சிக்கி விட்டார். அவருடன் நாகலாபுரம் பாளையக்காரர் தம்பி சௌந்தர பாண்டியனையும் கைது செய்து, இராணுவக்கோர்ட் முன் விசாரணை நடத்தினான் பானர்மேன். அவ்விருவருக்கும் மரண தண்டனை.

ம.பொ. சிவஞானம், விடுதலை போரில் தமிழகம்,
முதல் தொகுதி, இரண்டாம் பதிப்பு, பக்கம் 50.

நாகலாபுரம் சௌந்தர பாண்டிய நாயக்கன் கோபாலபுரம் என்னும் ஊரில் தூக்கிலிடப்பட்டான்.

தமிழ்வாணன், கட்டபொம்மன் கொள்ளைக்காரன்.,
இரண்டாம் பதிப்பு, பக்கம் 206



"என்ன மயக்கம்?" என்று கேட்டார் பெருமாள் கவுண்டர்.

"பசி மயக்கம். உடனே நீராடி விட்டு, உணவருந்துவது நல்லது.. நாளை அல்ல, இன்றே சிவகெங்கைக்கு புறப்படுவது அவசியம் என்று கருதுகிறேன். புறப்பட வேண்டிய ஏற்பாடுகளை கவனி இளைய பாண்டியா" என்று உத்தரவிட்டார் நாயக்கர். இதுவரை சிரிக்காத புதுவகைச் சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு வெளியேறி னான் இளைய பாண்டியன்.

துணிகளை ஒவ்வொன்றாய்க் கழற்றி பவழ மல்லிகை செடி மீது வீசினாள் மோகனவல்லி. மெல்லிய ஆடை ஒன்றை எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டாள். உடம்பின் மேல் பகுதியில் கச்சை மட்டுமே காவல் இருந்தது. அதையும் துறந்து விடலாமா என்று சிந்தனை வந்தது. 'எந்த ஆண்மகனும் இந்த பிரதேசத்தில் இல்லைதான். குயில்களும் மயில்களும் திரிகிறதே.. அவை பார்க்காதா' வெட்கம் வர கச்சையுடன் நீர்நிலையை நோக்கி நடந்தாள்.

தடாகத்தில் தாமரைகள் மலர்ந்திருந்தன. குவளைகள் விழித்திருந்தன. அவற்றுடன் இந்த பெண் மலரும் கலந்து விட்டாள். முகமலரை மட்டும் நனைக்காமல் நீருக்குள் அங்கும் இங்கும் மீனாய் துள்ளித் திரிந்தாள்.

நீரின் ஜில்லிப்பை முழுவதும் மேனியில் ஏற்றிக் கொள்ள ஆசைப்பட்டது போல நீருக்குள் மூழ்கினாள். தடாகத்தில் அங்கும் இங்கும் முகமலர் நீட்டி காற்றை உறிஞ்சிவிட்டு நீருக்குள் மூழ்கினாள்.

ஒரு நாழிகை நேரம் நீரில் விளையாட்டு விளையாடி விட்டு நிமிர்ந்தவள் அதிர்ந்தாள். தடாகத்தின் கரையில் புன்னகையுடன் நின்றிருந்தான் இளைய பாண்டியன்.

அவசரமாய் நெகிழ்ந்திருந்த இடுப்பு ஆடையை இறுக்கமாய்க் கட்டினாள். கச்சைத் துணி கச்சிதமாய் இருக்கிறதா என்று ஒருமுறை தொட்டுப் பார்த்துக் கொண்டாள் கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு.

"பெண்கள் குளிக்கும் இடத்தில் உங்களுக்கு என்ன வேலை..ம்.. போங்கள்"

- என்றாள் கோபமாய்.

"பெண்கள் மட்டும் தான் குளிக்க வேண்டும் என்று யாராவது உத்தரவு போட்டிருக்கிறார்களா.. யாரும் குளிக்கலாம்.. நானும் குளிக்கத்தான் வந்திருக்கிறேன்" - என்றான் இளைய பாண்டியன்.

"நான் குளித்து விட்டு போனபின் நீங்கள் வந்து குளிக்கலாம். உடனே இந்த இடத்தைவிட்டு நகருங்கள்" - என்றாள்

"எனக்கு நேரமாகி விட்டது. நானும் தடாகத்தின் ஒரு ஓரமாய் குளித்து விட்டுப் போய் விடுகிறேன்" - என்றவன் விடுவிடுவென்று தடாகத்தை நெருங்கி, நீருக்குள் இறங்க முற்பட்டான்.

"ஏய். என்ன விளையாடுகிறாயா..'' - கண்களை உருட்டினாள் கோபமாய்.

"என்ன மரியாதை குறைகிறது?'' - கேள்வி வந்தது இளைய பாண்டியனிடமிருந்து.

"பெண்கள் குளிக்கும் இடத்தில் வம்பு செய்யும் துஷ்டனுக்கு மரியாதை யார் கொடுப்பார்கள்" - என்று கேட்டாள் மொய்குழலாள். "

அப்படியென்ன வம்பு செய்து விட்டேன். எனக்கு அவசரமாய் குளித்தாக வேண்டும்'' - என்றான் புன்னகையுடன்.



"நான் வெளியே வந்து விடுகிறேன். நீங்கள் தாராளமாய் குளித்து விட்டுப் போங்கள்"

''சரி உடனே எழும்பி வெளியே வா. நான் குளிக்கட்டும்.''

வெளியே எழுந்து வர எத்தனித்த மோகனவல்லி அப்படியே நின்றாள். 'ஈர ஆடையோடு எப்படி ஒரு ஆண் மகன் முன்னால் போகமுடியும். அதுவும் அரைகுறை ஆடையோடு... மீண்டும் கழுத்தளவு தண்ணீருக்குள் நின்று கொண்டாள்.

''நீங்கள் மரத்தின் மறைவுக்கு செல்லுங்கள் நான் வெளியே வருகிறேன்'' என்றாள் கெஞ்சும் குரலில்.

''நான் இந்த இடத்தை விட்டு நகருவதாயில்லை. வேண்டுமென்றால் திரும்பி நின்று கொள்கிறேன்'' என்றான் விட்டுக் கொடுக்கும் பாவனையில்.

"சரி. திரும்பி நின்று தொலையுங்கள். நான் திரும்பலாம் என்று சொல்லும் மட்டும் திரும்பக் கூடாது.. சரிதானா."

''சம்மதிக்கிறேன்!''

"ம். திரும்புங்கள்!"

தடாகத்துக்கு முதுகை காட்டியபடி நின்றான் இளைய பாண்டியன்.. மெல்ல தலையைத் திருப்புவது போல் நடித்தான்.

"ம்.." என்று மிரட்டியது பூவையின் குரல்.

மீண்டும் தலையை நேரே வைத்துக் கொண்டு "திரும்பட்டுமா" என்று கேட்டான். பதில் இல்லை.

"மோகனவல்லி" என்றான். இந்த முறையும் பதில் இல்லை. மெல்ல திரும்பி பார்த்தான். தடாகத்தில் பூங்கொடிகள் தான் இருந்தன. கொடி இடையாளைக் காணவில்லை.

"க்ளுக்" கென்று சிரிப்பொலி கேட்டது. அவசரமாய் திரும்பினான்.

புன்னகையுடன் நின்று கொண்டிருந்தாள் மோகன வல்லி.

பனியில் நனைந்த மலராய், சிற்றாடை கட்டிய நிலவாய் அதற்குள் மின்னலாய் உடை மாற்றியிருந்தாள். ஈரக் கூந்தலிலும் ஒரு சார்ப்பு இருந்தது.

"மோகனவல்லி" - என்றான் மோகமாய்.

"ம்" - என்றாள் தாபமாய். "நன்றி". என்றான் காளை

"எதற்கு" என்றாள் பாவை. "பேழையை மீட்டுத் தந்ததற்கு" என்றான் வீரன்.

"நன்றியை நீங்கள் சொல்வதாயிருந்தால் ரஞ்சிதாவுக்கு சொல்லுங்கள்"

"யார் அவள்..?"

"நாட்டியக்காரி"

"அவளுக்கு எதற்கு நன்றி..?"

"அவள்தான் முத்துக்கருப்பனிடமிருந்து பேழையை தந்திரமாய் எடுத்துத் தந்தவள்!"

"ஓ" - என்றான்.

"நன்றி" - என்றாள் பூவை.

"எதற்கு" - என்றான் ஆண்மகன்.

"காட்டிக் கொடுக்காதற்கு" - என்றாள் காரிகை

"எதை..?" - என்றான் இளையவன்

"நான் குதிரை மோகினி என்பதை.."

"ஓ அதுவா"



இருவரும் ஏதோ ஒன்றில் சிக்கிக் கொண்டிருப்பது போல் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அசையாமல் நின்றனர். அவர்கள் சிக்கிக் கொண்டிருந்தது காதல். அவர்கள் இதயங்களைத் துளைக்கத் தொடங்கின காமனின் கணைகள்.

"யார் கண்ணில் தூசி விழுந்திருக்கிறது..?" என்று கேட்டது ஒரு குரல்.

அவசரமாய் விலகினார்கள்.

அவர்களை நோக்கி வந்தார் கடற்கரை நாயக்கர்.

"இளைய பாண்டியா நீ இன்னும் புறப்படவில்லையா.." - என்று கேட்டார் கேலி தொனிக்கும் குரலில்.

அவசர மாய் தடாகத்துக்குள் குதித்தான் இளைய பாண்டியன். நாணத்துடன் துள்ளி ஓடினாள் மோகனவல்லி.

முகத்தில் களைப்பும் கவலையும் வருத்தமும் சேர்ந்து தெரிந்தது இளைய பாண்டியனுக்கு. அவன் வருத்தச் சுமையை தானும் வாங்கிக் கொண்டது போல மெல்ல நடந்தது குதிரை.

சிவகெங்கைச் சீமைக்கு சென்று விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிக் கொண்டிருந்தான். 'ஊமைத்துரை வெளியில் வந்ததும் பார்த்துக் கொள்ளலாம்' - ஓரேவரியில் பதில் சொல்லி அனுப்பி விட்டார் பெரிய மருது. சின்ன மருதுவை சந்திக்க முடியவில்லை. சந்திக்க விட்டாலதானே சந்திப்பதற்கு..

அவனைக் கண்டதும் ஓடோடி வந்தான் புரட்சி வீரன் ஒருவன்.

"சிவத்தையா உங்களை அவசரமாய் ஓட்ட நத்தம் வரச்சொன்னார்" - என்றான் அவசர குரலில்.

# 17

## இறுதி முடிவு

1801-ஆம் ஆண்டு. தை மாதத்தின் ஆரம்ப தினங்களில் ஒன்று. காற்று மெல்ல வீசிக் கொண்டிருந்தது. வானம் தூசி விழுந்து விட்டது போல நட்சத்திர கண்களை இமைத்துக் கொண்டிருந்தன. அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தன மேகத் துணுக்குகள்.

இரண்டாவது சாமம் ஆரம்பித்திருந்தது.

திருநெல்வேலி சீமையில் அமைந்திருக்கும் மணியாச்சி யிலிருந்து மூன்று கல் தூரத்தில் இருக்கும் ஒட்டநத்தம் கிராமம் விழித்திருந்தது. தெருக்களில் இருந்த கல்தூண் தலைகளில் கண்ணாடிச் சிறை விளக்குகள் யாருக்கோ காத்திருந்தன.

மின்மினிப் பூச்சிகளும் தங்கள் பங்குக்கு பின்புற விளக்குகளைத் தூக்கிக் கொண்டு திரிந்தன.

ஒட்டநத்தம் கிராமத்தை சுற்றி ஐம்பது வாலிப வீரர்கள் காவல் அரண்போல நின்று கொண்டிருந்தனர்.

ஊருக்குள் இருந்து யாரும் வெளியே செல்லாதபடி கண்காணித்துக் கொண்டனர்.

ஊரை நோக்கி மூன்று பேர், நான்குபேர் வந்து கொண்டிருந்தனர்.



வந்தவர்களை நிறுத்தி அடையாளம் கண்டு கொண்ட பின்னே ஊருக்குள் அனுப்பினர். புரட்சி வீரர்கள் வடிவில் புல்லுருவிகளும் வெள்ளையருக்கு உளவு சொல்வோரும் ஊருக்குள் நுழைந்து விடாமல் தடுக்கவே இந்த ஏற்பாட்டை செய்திருந்தான் சிவத்தையா, ஒட்டநத்தமே திருவிழாக் கோலம் கண்டது போல ஆட்கள் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தனர். தங்களுக்குக் கிசுகிசுப்பாய் ஏதோ பேசிக் கொண்டனர்.

கிராமத்துப் பெண்கள் கண்களில் வந்த உறக்கத்தை விரட்டிவிட்டுக் காத்திருந்தனர் எதையோ எதிர்பார்த்து.

அந்த நேரமும் வந்தது.

ஊரின் மையப் பகுதியில் கல்தூண் விளக்கொன்றின் அருகில் வீடு ஒன்று அழிந்து, மழை நீரால் கரைந்து மண் மேடாகியிருந்தது.

இரண்டு இளைஞர்கள் மண் மேட்டில் நான்கு மர நாற்காலிகளைக் கொண்டு போட்டனர்.

நாற்காலிகளில் ஒட்டநத்தம் ஊர்த் தலைவரும், காடல்குடி பாளையத்தின் அமைச்சரும், குளத்தூர் பாளையக் காரரின் ஒன்று விட்ட சகோதரரும், கடற்கரை நாயக்கரும் வந்து அமர்ந்தனர். மண் மேட்டுக்கு எதிரில் விரிந்து கிடந்த மணல்வெளியில் புரட்சிக் கனல் நெஞ்சில் ஏந்தி நீற்கும் வாலிப வீரர்கள் அமர்ந்திருந்தனர். வீதியின் ஓரங்களில் நின்று கொண்டிருந்த பெண்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். கூட்டத்தில் இருந்தவர்களும் ஆளுக்கு ஆள் பேச ஆரம்பித்திருந்தார்கள்.

தன் ஆசனத்தை விட்டு எழுந்தார் ஊர்த் தலைவர். கூடியிருந்தவர்கள் அவசரமாய் பேச்சை நிறுத்தினர். அத்தனை கண்களும் மண் மேட்டின் திசையில் திரும்பின.

ஊர்த் தலைவர் அருகில் அமர்ந்திருந்த கடற்கரை நாயக்கரை ஒருமுறை பார்த்து விட்டு பேசத் தொடங்கினார்.

"இங்கு கூடி வந்திருப்பவர்கள் ஒட்டநத்தம் கிராமத்துக்கு அழியாப் புகழ் வாங்கித் தர வந்திருக்கிறீர்கள். உங்கள் வீரத்தால் சரித்திரத்தில் ஒட்டநத்தத்திற்கு ஒரு நிரந்தர இடம் கிடைக்கும் என நம்புகிறேன். கூட்டம் நடத்துவதற்கு இடமும் தந்து புரட்சி வீரர்களுக்கு உணவும் தர சம்மதித்திருக்கிறீர்கள். 'உங்களுக்கு என் நன்றி' என்றார் பெரியவர் கடற்கரை நாயக்கர். நீங்கள் யாரும் எங்களுக்கு நன்றி சொல்ல வேண்டாம். நாங்கள் தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். சரித்திரத்தை மாற்றப்போகும் முதல் யுத்தத்திற்கு எங்கள் ஒட்டநத்தத்தில் விதை ஊன்றப் போகிறீர்கள். அதற்கு பிரிந்து கிடந்த சமுதாயங்களை இன்று ஒன்று சேர்ந்திருக்கிறோம். நம் தலைவராய் ஏற்றுக் கொண்டுள்ள ஊமைத்துரை வெள்ளையன் பிடியில் இருக்கிறார். நம் தலைவரை நம்மிடம் கொண்டு வரத்தான் கூடியிருக்கிறோம். நம் முதல் யுத்தம் நிச்சயம் வெற்றி பெறும். அது நம் மண்ணுக்கு நாம் தரும் முத்தமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் அமர்கிறேன்." என்று சொல்லிவிட்டு இருக்கையில் அமர்ந்தார்.

கூட்டம் உற்சாகமாய் கைதட்ட ஆரம்பித்தது. 'வேண்டாம்' என்பதற்கு அடையாளமாய் கையசைத்தார் கடற்கரை நாயக்கர். மகுடியின் நாதம் கேட்ட பாம்பு போல அமைதி காத்தது புரட்சி வீரர்கள் கூட்டம்.

கூட்டத்தின் முன் வட்டத்தில் அமர்ந்திருந்தனர் மல்லம்மாவும் மோகனவல்லியும். சற்று தள்ளி சிவத்தையாவும், இளைய பாண்டியனும் முத்து வீரனும் அமர்ந்திருந்தனர். அடிக்கடி மோகனவல்லியின் கண்களும், இளைய பாண்டியன் கண்களும் ரகசியமாய் சந்தித்துக்



கொண்டன. கூட்டத்தில் மீண்டும் சலசலப்பு வர கடற்கரை நாயக்கர் எழுந்தார். தொண்டையை ஒருமுறை கனைத்துக் கொண்டு தன் கனத்த குரலில் பேசத் தொடங்கினார்.

"என் நண்பர்களே, சகோதர நெஞ்சங்களே, புரட்சி வீரர்களே, ஒரு புதிய வரலாறு படைக்க நாம் இன்று கூடியிருக்கிறோம். வெள்ளையரை விரட்டி அடிக்க முதல் யுத்தத்தை தொடங்க இருக்கிறோம். பாளையங்கோட்டை சிறை உடைக்க முடிவு செய்துவிட்டோம். அதை செயலாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. ஜல்லிப்பட்டி விருப்பாட்சி பாளையக்காரர் கோபால நாயக்கரும் அவரது மகன் முத்துவேல் நாயக்கரும் நமக்கு ஆதரவுக் கரம் தூக்கி இருக்கிறார்கள். தறசமயம் எதுவும் முடியாதென்றும் ஊமைத்துரை வெளியே வந்ததும் பண உதவி செய்வதாக வெள்ளை மருது சொல்லியிருக்கிறார். அவரைச் அத்தனை உறுதியாய் நம்ப முடியாது. சின்ன மருது நிச்சயம் உதவி செய்வார். அவரை சந்திக்க இயலவில்லை. பின்னால் பார்த்துக் கொள்வோம். நம் முதல் யுத்தம் வெற்றி பெற்றதும் ஆற்றங்கரை நாடு, இரவுசேரி நாடு, குன்னங்கோட்டை நாடு, தேர்போகி நாடு போன்ற கள்ளர் நாடுகளின் ஆதரவையும் பெற வேண்டும். கட்டபொம்மு வெள்ளையருடன் போரிட்ட போது பக்கத்து பாளையங்களின் உதவி நமக்கு கிடைக்கவில்லை. இன்று பாளையக்காரர்கள் உதவ முன் வராவிட்டாலும் அங்குள்ள இளைஞர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். இங்கு அதிக அளவில் காடல் குடி, குளத்தூர், ஏழாயிரம்பண்ணை பாளையங்களைச் சேர்ந்த வாலிபர்கள் வந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல" - என்றவர் பின்னால் திரும்பி விரலால் சைகை காட்டினார். குவளை ஒன்றில் தண்ணீர் கொடுக்கப்பட்டது. கடகட

வென்று தண்ணீரைக் குடித்துவிட்டு பேச்சைத் தொடர்ந்தார்.

"கும்பளத்தாருக்கும் மற்ற சமுதாயத்துக்கும் சிறுசிறு மனக்கசப்பு இருந்தது உண்மை. இன்று கதிரவனைக் கண்ட பனி போல் விலகி ஓடிவிட்டது. கல்யாணத் தேவர், பூபதி நாடார், பெருமாள் கவுண்டர், படையாச்சியார், தோமாசி முதலியார், பெருமாள்சாமி பிள்ளை, கந்தசாமி குடும்பர் போன்றவர்கள் இங்கு வந்திருப்பதே சான்று. இனி பயமில்லை. நாம் வெற்றி பெறுவது உறுதி. இந்தக் கிழவன் புரட்சித் திட்டத்தை விளக்கிச் சொல்வதைவிட இளைய தலைமுறையினர் சொன்னால்தான் பொருத்தமாயிருக்கும். அதற்குமுன் சிலரை உங்களுக்கு அறிமுகப்படுத்தி விடுவது என் கடமை" - என்றவர் முன் பகுதியில் அமர்ந்திருந்த மூன்று பேரை விரல்களால் காற்றில் பொட்டு வைத்து அழைத்தார்.

இளைய பாண்டின், சிவத்தையா, மோகனவல்லி மூன்று பேரும் எழுந்து கடற்கரை நாயக்கரின் அருகில் வந்து நின்றனர். இளைப் பாண்டியன் தோளில் கரம் வைத்து, -

"பறல் ஆடி வீரன். பெயர் இளையப் பாண்டியன். வீரபாண்டிய கட்டபொம்முவுடன் பல போர்க்களத்தை சந்தித்தவன். தற்காலிகமாக பாஞ்சையம்பதி படையின் தளபதியாக நியமித்திருக்கிறேன். இவன் சிவத்தையா. தூத்துக்குடி தந்த நல்முத்து. இந்தப் போராட்டத்தில் பெரும் பங்கு வகிப்பவன். பாளையங்கோட்டையில் நடக்க விருக்கும் முதல் யுத்தத்தில் புரட்சிப் படைக்கு தலைமை தாங்கப் போகிறவன். இவள் மோகனவல்லி. நாகலாபுரம் பாளையக்காரரின் தங்கை. இவள்தான் வெள்ளையரின் கண்களில் விரலை விட்டு ஆட்டும் குதிரை மோகினி" - என்றார் கடற்கரை நாயக்கர்.



5398737

கூட்டம் ஆச்சரியத்தில் வாய் பிளந்தது. கோபமாய் இளைய பாண்டியனை முறைத்தாள் மோகன வல்லி. அவனோ கள்ளச்சிரிப்பு சிரித்தான்.

"குதிரை மோகினி உங்களிடத்தில் ஓரிரு வார்த்தைகள் பேசுவாள்."

மோகன வல்லியை நோக்கி சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு அமர்ந்தார் எழுபத்திரண்டு வயது கடற்கரை நாயக்கர்.

மோகனவல்லி திகைத்துப் போனாள். பேசுவதற்கு தயக்கமாய் இருந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசினாள்.

''எல்லோருக்கும் என் வணக்கம். நான் என் அண்ணனை இழந்திருக்கிறேன். நிறைய குடும்பங்கள் தலை மகனை இழந்திருக்கிறது. எண்ணற்ற பெண்கள் தங்கள் பூவை இழந்திருக்கிறார்கள். அதற்குப் பழிக்குப் பழி வாங்கு வோம். வெள்ளையரின் ரத்தத்தால் தமிழ் அன்னையின் பாதம் நனைப்போம். பாளையங்கோட்டை நம் முதல களம்'' - என்று வீராவேசமாய் பேசியவள் தன் வலக்கரம் உயர்த்தினாள் வான் நோக்கி. கூடியிருந்த கூட்டமும் தன் வலக்கரம் தூக்கி தங்கள் உடன்பாட்டைக் காட்டியது.

அடுத்து பேச வந்தான் பறல் ஆடி வீரன் இளைய பாண்டியன்.

"பறல் ஆடியில் இருந்து அனாதையாக வந்த என்னை வீரனாக்கியது பாஞ்சாலங்குறிச்சி. படைப்பிரிவின் தலைவராக்கினார் கட்டபொம்மு மகாராஜா. இன்று தளபதி பொறுப்பை தந்திருக்கிறார் பெரியவர் கடற்கரை நாயக்கர். ஆனால் கோட்டை இல்லை, கொத்தளம் இல்லை. நம் தலைவனும் நம்மிடம் இல்லை. முன்னோர்கள் அரசை உருவாக்கிய காலம் மாறி மக்கள் அரசை நிலை நிறுத்த

வேண்டிய நேரம் வந்திருக்கிறது. அதன் முதல் கல்தான் பாஞ்சாலங்குறிச்சி. முதலில் இளையவர் ஊமைத்துரையை சுதந்திரப் பறவையாக்க வேண்டும். இரண்டாவது விழுந்த கோட்டையை மீண்டும் நிமிர்ந்து நிறகச் செய்ய வேண்டும். மூன்றாவது போர் வெள்ளையனை விரட்டும் போர், இரத்தப்போர். போர் முடிந்தால்தான் தெரியும் நம் பெயர் இறந்தவர்களின் பட்டியலில் இருக்கிறதா.. இருப்பவர்களின் வரிசையில் இருக்கிறதா என்பது. அன்னை பூமியின் அடிமை விலங்கொடிக்க என் உயிரைக் கொடுக்க நான் தயார்— நீங்கள்..?"

"தயார்" "தயார்" என்றன புரட்சிக் குரல்கள்.

"உங்கள் குரல் எனககு மகிழ்ச்சியைத் தருகின்றது. இன்னும் ஒரு கருத்தை உங்கள் முன் வைக்கிறேன். ஓட்ட நத்தத்திற்குள் நுழையும் போது வந்தவர்கள் விசாரிக்கப் பட்டு உள்ளே அனுப்பப்பட்டார்கள். அது குறித்து சில புரட்சி வீரர்கள் வருத்தப்பட்டார்கள் என்று கேள்வி பட்டேன். ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாஞ்சாலங்குறிச்சி வீழ்ந்தது எதிரிகளின் பலத்தாலோ, நம் பலவீனத்தாலோ அல்ல. நம்மிடையே முளைத்த இனத் துரோகிகளின் துரோகத்தால்தான். பகதூர் வெள்ளையத் தேவரை, அவருடைய சொந்த மாமனே காட்டிக் கொடுத் தான் காசுக்காக.* நம்மிடையே நமக்குத் தெரியாமலே துரோகிகள் இருப்பார்கள். அதனால்தான் கவனமாய் இருக்க வேண்டும். நம்மோடு எதிரிகளின் ஒற்றர்கள் ஊருக்குள் வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் ஊர்

*தன் மாமனால் காட்டிக் கொடுக்கப்பட்டு வெள்ளையத் தேவன் கைதியானான்.

ம.பொ. சிவஞானம், விடுதலைப் போரில் தமிழகம்,

முதல் தொகுதி. இரண்டாம் பதிப்பு, பக்கம் 43.



எல்லையில் சோதனை. இளையவர் சிறையிலிருந்து விடுவிக்கப்படும் மட்டும் யாரும் எதுவும் வெளியில் பேச வேண்டாம். புரட்சி வெடிக்கப் போகின்ற நாளையும், நாம் செய்ய வேண்டியதையும் தூத்துக்குடி சிவத்தையா கூறுவார்." என்று சொல்லி முடித்தான்.

சிவத்தையா பேசத் தயார் ஆனதும் கூட்டத்தின் முதுகுகள் நிமிர்ந்தன. கண்கள் இமைக்க மறந்தன. காதுகள் தங்களை தயார்படுத்திக் கொண்டன. புரட்சித் தலைவன் சிவத்தையாவிடமிருந்து கனலாய் வந்தன வார்த்தைகள்.

"பெரியவர்களே, அன்னை பூமியை காக்க தங்கள் உயிரையே காணிக்கையாக்கத் தயாராயிருக்கும் புரட்சி வீரர்களே, வீராங்கனைகளே, என் சிரம் தாழ்ந்த வணக்கம். வீரபாண்டிய கட்டபொம்மு மகாராஜாவின் தோளோடு தோள் நின்றவர்கள் சிலுக்கன்பட்டி சின்னப்ப நாயக்கன், ஆத்தூரு அருளப்ப நாயக்கன், எப்போதும்வென்றான் குமரனடி நாயக்கன், மஞ்சநாயக்கன்பட்டி வாலகுரு, கோட்டை காவல் தலைவன் முத்துக் குடும்பன், செக்காரக்குடி பெரிய நாயக்கர், கொண்டைமான் கோட்டை தளவாய்த் தேவன், பறல் ஆடி பால்பாண்டிய நாடான். இன்று அவர்கள் உயிருடன் இல்லை. அதனால் பாஞ்சாலங்குறிச்சியே இனி இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டான் வெள்ளையன் மெக்காலே. திருநெல்வேலிச் சீமையில் இனி தைரியமாய் மூச்சுவிட ஆளில்லை என்ற எண்ணத்தில் வெள்ளைப் படையின் பெரும்பகுதி திருச்சிக் குச் சென்றுவிட்டது. மீதிப்படை கயத்தாறு, சங்கரன் நயினார் கோவில், பாளையங்கோட்டை என்று சிதறிக் கிடக்கிறது. இது நமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பு. காத்திருந்தோம் இதுநாள் வரை. காலம் வந்து விட்டது. தை பிறந்துவிட்டது. வழியும் பிறந்திருக்கிறது. தை மாதம் இருபதாம் நாள் பாளையங்கோட்டை சிறை உடைப்போம்

நம் தலைவர் ஊமைத்துரையை அழைத்து வருவோம். புதிதாய் கோட்டையை முளைக்கச் செய்வோம். தை இருபதில் பாளையங்கோட்டை சந்தை கூடுகிறது. வாருங்கள் ஆளுக்கொரு வேடத்தில். சந்தையில் சந்திப்போம். நமது புரட்சிச் சின்னம் பதித்த பாளையங்கோட்டை வீடுகளில் நம் வீரர்களுக்கு உதவியும் ஆயுதமும் கிடைக்கும். அங்கே உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்ற செய்தியும் கிடைக்கும். வாருங்கள். சிறை உடைத்து புரட்சித் தீயை எரியச் செய்வோம்." பேசி முடித்தான் முத்தாய்ப்பாக.

கடற்கரை நாயக்கர் எழுந்தார். உடனே கூட்டம் மொத்தமும் எழுந்தது.

அவசரமாய் எழுந்த ஊர்த் தலைவர் உரத்த குரலில், "புரட்சி வீரர்களுக்கு மிளகு சம்பா அரிசி சோறும் செம்மறி கிடா இறைச்சியும் தயார் ஆகிக்கொண்டிருக் கிறது. இரண்டு நாழிகைக்குள் பரிமாறி விடுவோம். அதுவரை ஓய்வு எடுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

புரட்சி வீரர்கள் ஆளுக்கொரு திசையாய் நகர்ந்தனர் சிறை உடைப்பை பற்றி பேசிக்கொண்டே, விருந்து ஏற்பாடுகளை கவனிக்கச் சென்றுவிட்டார் ஊர் தலைவர். சில வீரர்களை அழைத்துக் கொண்டு சென்று விட்டனர் சிவத்தையாவும், முத்து வீரனும்.

மோகனவல்லியை காணவில்லை.

"எங்கே மோகனவல்லி..?" - மல்லம்மாவிடம் கேட்டார் கடற்கரை நாயக்கர்.

"அண்ணனிடம் கேட்க வேண்டிய கேள்வி" - என்றாள் மல்லம்மா.

"யார் தொலைந்தாலும் என் தலைதான் உருள்கிறதா.." என்று கேட்டபடி வந்தான் இளைய பாண்டியன்.

"வா ஓடைக் கரைக்குப் போகலாம்."



மூவரும் ஓடையை நோக்கி நடந்தார்கள்.

"நாங்கள் வரக்கூடாதா.." என்ற குரலில் திரும்பினா.

கல்யாணத் தேவரும் பூபதி நாடாரும் வேகமாய் வந்து சேர்ந்து கொண்டனர்.

சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது ஓடை. அதற்குச் சற்று தள்ளி மணல் நிறைந்த பகுதியில் அமர்ந்தனர் ஐந்து பேரும்.

"யாராவது ஒரு கதை சொல்லுங்களேன்" - என்று கேட்டாள் மல்லம்மா.

"நான் சொல்கிறேன் ஒரு பழைய கதை. நிலா வெளிச்சத்தில் தெருவோரத் திண்ணைகளில் மக்கள் பேசும் கதை. ஒரு தாயின் சாபத்தில் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை விழுந்த கதை" - என்றார் கல்யாணத் தேவர்.

அதே நேரம்

ஓடைத் தண்ணீர் சிதறும் ஒலி கேட்டது. திடுக்கிட்டு திரும்பினார்கள். யாரோ அவர்களை நோக்கி ஓடிவருவது தெரிந்தது. இளையபாண்டியனின் கை இடுப்பு வாள் தொட்டது.

## 18

## இருட்டில் சொன்ன கதை

மையிருட்டு. யாரோ ஓடைத் தண்ணீரை சிதறடித்துக் கொண்டு ஓடிவரும் ஒலிதான் கேட்டதே தவிர உருவம் தெரியவில்லை. ஒலிவந்த திசையில் இருட்டை இமைக் காமல் பார்த்துக்கொண்டிருந்தனர் நால்வரும். இளைய பாண்டியனின் வலது கரம் இடுப்பிலிருந்த குறுவாளின் பிடியில் இருந்தது.

சில விநாடிகளில் அந்த உருவம் தெளிவாய்த் தெரிந்தது. ஓடி வந்தது ஒரு பெண்.

அந்தப் பெண் ஓடி வந்து அவர்கள் முன்னால் நின்றதும் ஐந்து பேருக்கும் சிரிப்பு வந்தது.

அந்த பெண் - மோகனவல்லி.

ஓடிவந்ததால் மூச்சு வாங்கியது. கச்சை சிரமப்பட்டது.

"எங்களை பயமுறுத்தவா இப்படி ஓடிவந்தாய்..?" - என்று கேட்டார் கடற்கரை நாயக்கர்.

"புரட்சிப் படையில் சேர வந்திருக்கும் இளம் பெண் களைச் சந்தித்து விட்டு பார்த்தால் உங்கள் நால்வரையும் காணவில்லை. விசாரித்து இங்கே தேடி வந்திருக்கிறேன்."

"தேடி வந்தது எங்களையா... பறல் ஆடி வீரனையா" - என்று கேட்டு விட்டு இடிஇடியென்று சிரித்தார் கடற்கரை



நாயக்கர். வெட்கத்தில் தலைகுனிந்தாள் மோகன வல்லி. அப்படியே அவர்கள் அருகில் அமர்ந்தாள்.

"அவனைத்தான் தேடி வந்திருப்பார்கள்" என்றாள் மல்லம்மா.

"குதிரை மோகினிக்கு வெட்கப்படவும் தெரியுமா.." - என்று கேட்டார் கல்யாணத் தேவர்.

"மல்லம்மாவுக்கு மட்டும்தான் வெட்கம் வரும். எனக்கு வராதா!" - சிணுங்கலாய் கேட்டாள் மோகனவல்லி.

"உன்னைக் கேட்டால் நீ எதற்கு மல்லம்மாவை இழுக்கிறாய்..?" என்று கேட்டார் கடற்கரை நாயக்கர்.

"என்னைவிட்டு விட்டு ஏதோ கதை பேசப் போகிறீர் கள், என்று ஓடி வந்தேன். நீங்கள் என்னிடமே வம்புக்கு வருகிறீர்கள். நான் வந்தது பிடிக்கவில்லை யென்றால் இப்பொழுதே போய் விடுகிறேன்." - பொய்க் கோபத்துடன் எழுந்தாள் மோகனவல்லி. அவள் வலது கரத்தை பிடித்து இழுத்து உட்கார வைத்தான் இளைய பாண்டியன். வெட்கத்தில் சிவந்தது மொய் குழலாளின் வதனம்.

"கதை கேட்க மோகனவல்லியும் வந்து விட்டாள். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை விழுந்ததற்கு ஒரு தாயின் சாபம்தான் காரணம் என்று சொன்னீர்கள்... அந்தக் கதையை கூறுங்கள் தேவரே!" - ஆவலாய் கேட்டான் இளைய பாண்டியன். எல்லாம் அறிந்தவர் போல அமர்ந்திருந்தார் கடற்கரை நாயக்கர். மற்ற மூன்று பேர் கண்களும் கல்யாணத் தேவர் முகத்தை நோக்கின. கல்யாணத் தேவர் சொல்ல ஆரம்பித்தார்.

அமாவாசை இருட்டு எங்கும் பரவியிருந்தது. இருட்டை விரட்ட சிறு பிள்ளைத் தனமாய் முயற்சி செய்து கொண்டிருந்தன மின்மினிப் பூச்சிகள். பயப் பார்வை

பார்த்துக் கொண்டிருந்தன நட்சத்திரங்கள். வடகிழக்கு பருவக்காற்று பயந்து பயந்து வீசிக் கொண்டிருந்தது.

நூற்றுக் கணக்கில் பொதி சுமக்கும் மாடுகள் வேகமாய் நடந்து கொண்டிருந்தன ஸ்ரீவைகுண்டத்தை நோக்கி. மாடுகளுக்குப் பின்னால் ஓட்டமும் நடையுமாக நடந்து கொண்டிருந்தனர் மேலாடை அணியாத ஆண்கள். இவர்களைச் சுற்றி பாதுகாப்பு வளையம் போல வந்து கொண்டிருந்தனர் பாஞ்சாலங்குறிச்சி குதிரை வீரர்கள்.

சற்று பின்னால் ஆடி அசைந்து வந்து கொண்டிருந்தது சிவிகை ஒன்று. அதை உரச முயற்சிப்பது போல மிக நெருக்கமாய் வந்து கொண்டிருந்தது ஒரு கரும்புரவி. அதன் முதுகில் அமர்ந்திருந்தான் முத்துக் குடும்பன். அவன் கையிலிருந்த சூழ்ந்து கழியில் நெருப்பு ஊமையாய் கனன்று கொண்டிருந்தது.

சிவிகைத் திரையை விலக்கி ஒரு உருவம் உள்ளேயிருந்து வெளியே எட்டிப் பார்த்தது. அதன் கண்கள் சிவந்து கிடந்தது மையிருட்டில் தெரிவதற்கு நியாயமில்லை. தன் நீண்ட நாசியை ஒருமுறை தடவிப் பார்த்துக் கொண்டது.

"முத்து" - என்றழைத்தது அதிகாரக் குரலில்

குதிரையின் முதுகிலிருந்த முத்துக் குடும்பன் பணிவாய் குனிந்து, "சொல்லுங்கள்" - என்றான்.

"முத்து, நாம் சரியான பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறோமோ..?"

கேள்விக்கு பதில் சொல்லாமல் கையிலிருந்த சூழ்ந்து கழியை காற்றில் வீசினான். கனன்று கொண்டிருந்த நெருப்பு, திடீரென்று பற்றிக் கொண்டது. தீப்பந்த வெளிச்சத்தில் பாதையோரங்களைக் கூர்ந்து பார்த்துவிட்டு



திருப்தியான புன்னகையுடன், "சரியான பாதைதான். சந்தேகம் இல்லை" என்றான்.

இடது கையிலிருந்த தீப்பந்தத்தை வலது கைக்கு மாற்றினான். நெருப்பு வெளிச்சத்தில் சிவிகைக்குள் இருந்த உருவத்தின் முகம் தெளிவாய் தெரிந்தது.

அந்த உருவம் -

பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் பிரதம அமைச்சனும், சிம்மக் குரலோன் வீரபாண்டிய கட்ட பொம்முவையே தன் நாவசைவில் நிறுத்தி வைக்கக் கூடியவன் என்று பாளையங்களுக்கிடையில் பேசப்படுகிறவனும், ராஜதந்திர கலையைக் கற்றுத் தேர்ந்தவனுமாகிய தானாபதிப் பிள்ளை. அவன் உதடுகளில் விஷமப் புன்னகை ஒன்று உறைந்து போயிருந்தது. விழிகளில் எதையோ எதிர்பார்க்கும் ஆர்வம் ஒன்று மினுக்கியது.

"இன்னும் எத்தனை நேரம் பிடிக்கும் முத்து" - கேள்வி வந்தது தானாதிபதியிடமிருந்து.

"இரண்டு நாழிகைக்குள் ஸ்ரீவைகுண்டத்தை தொட்டு விடலாம்" - என்றான் முத்துக் குடும்பன்.

"ஸ்ரீவைகுண்டத்தின் மேற்கு எல்லையில் இருக்கும் கருசக் கொட்டாரம் என்னை வாவாவென்று அழைக்கிறது முத்து. காலோடிகளிடம், மாடுகளை விரட்டச் சொல். எத்தனை சீக்கிரமாய் கொட்டாரத்து வாசலுக்குப் போக முடியுமோ அத்தனைச் சீக்கிரமாய் போயாக வேண்டும். மூன்றாவது சாமம் முடிவதற்குள் கருசக் கொட்டாரத்திலிருந்து திரும்பியாக வேண்டும். ஏன்... நான் சொல்வது புரிகிறதா முத்து?"

பிரதம அமைச்சனின் பேச்சுக்கு பலமாகத் தலையாட்டிய முத்துக் குடும்பன், ஓட்டமும் நடையுமாக மாடு

களுக்குப் பின்னால் சென்று கொண்டிருந்த காலோடிகளை நோக்கி உரத்த குரலில் சுத்தவும் செய்தான்.

"ம்.. விரட்டுங்கள்.. வேகமாய் போகட்டும் மாடுகள்!"

குரலுக்குக் கட்டுப்பட்ட காலோடிகள் மாடுகளை இன்னும் வேகமாய் விரட்டத் தொடங்கினர். ஒன்றுக்கு பின் ஒன்றாக மாடுகள் ஓடின, 'எங்கே போகிறோம்' என்பது தெரியாமல். குதிரை வீரர்கள் பின் தொடர்ந்தனர் சிரத்தையாய். தானாபதி பிள்ளை அமர்ந்திருந்த சிவிகையை சுமந்து வந்த பல்லக்கு தூக்கிகள் கிட்டதட்ட ஓடத் தொடங்கினர்.

ஸ்ரீவைகுண்டத்தின் மேல்புரத்தில் இருந்த கருசக் கொட்டாரத்தின் வாசலில் போய் நின்றது பல்லக்கு. தானாபதி பிள்ளையின் கையசைப்பைப் புரிந்து கொண்ட சிவிகைத் தூக்கிகள் பல்லக்கை தரையில் வைத்தனர்.

புன்னகையுடன் கீழே இறங்கினார் பாஞ்சாலங் குறிச்சியின் பிரதம அமைச்சர்.

உயர்ந்து நின்ற கோட்டை பூட்டிக் கிடந்தது. வேகமாய் குதிரை வீரன் ஒருவன் கோட்டைக் கதவை நெருங்கி வலது காலால் உதைத்து விட்டு, தானாபதியின் அருகே வந்து குதித்து இறங்கினான்.

தலைதாழ்த்தி வணங்கி விட்டு, "அமைச்சர் பெருமானே.. கோட்டைக் கதவுப் பூட்டிக் கிடக்கிறது. கதவு பலகை மோசமாகத்தான் இருக்கிறது. உடைத்து விடவா..?" - என்று பணிவான குரலில் கேட்டான்.

"கேள்வி கேட்கும் நேரமா இது. உடைத்தெறி, வெள்ளைப் பரதேசிகள் நட்டு வைத்திருக்கும் கதவை. நம்



மாடுகள் சுதந்திரமாய் உள்ளே நுழையட்டும்" - என்றார் தானாபதிபிள்ளை.

நான்கு வீரர்கள் பெரிய மரத்துண்டு ஒன்றை எடுத்து கோட்டைக் கதவின் மேல் வேகமாய் மோதினர். கதவு அதிர்ந்தது.

"ஏய்.. யாரது.. அங்கே என்ன செய்கிறீர்கள்..?" - சற்று நடுக்கமாய் ஒரு குரல் கேட்டது.

அத்தனை கண்களும் குரல் வந்த திசையில் திரும்பின. கறுப்பாய் ஒருவன் ஓடி வந்தான். வேகமாய் வந்தவனை தடுத்து நிறுத்தியது தானாபதி பிள்ளையின் வெள்ளிப்பூண் போட்ட பிரம்பு.

"யார் நீங்கள்" - என்று கேட்டான் ஓடி வந்தவன். அவன் கண்களில் மிரட்சி தெரிந்தது.

"மறவர் பாளையத்து தலைமகன்கள் கூட என்னை யார் என்று அடையாளம் கேட்டதில்லை. கூலிக்கு மாரடிக் கும் நீ கேட்கிறாய் யார் என்று. என்னிடம் பதில் வாங்காத கேள்விகளே இல்லை. அதனால் இந்த கேள்விக்கும் பதில் சொல்லி விடுகிறேன். தலைவணங்கா பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் பிரதம அமைச்சன் தானாபதி பிள்ளை நான்" - என்ற பதிலில் எதிரே நின்ற கறுப்பன் ஒரு கணம் ஆடிப் போனான். அவன் கண்கள் அவசரமாய் அமைச் சருக்கு பின் பக்கம் தாவியது.

இருட்டில் நிழல் உருவங்களாய் நின்ற குதிரை வீரர்களும், காலோடிகளும் அவன் கண்ணில் பட்டது. உள்ளூர அவனுக்கு பெரும் நடுக்கத்தை கொடுத்தது. சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உரத்த குரலில் கேட்டான்:

"இந்த அகால நேரத்தில் கொள்ளையடிக்க வந்திருப்பது போல எதற்காக வந்திருக்கிறீர்கள்" - என்று கேள்வியை கேட்டு அவன் வாய் மூடுவதற்குள் பெரிய ஹாஸ்யம் ஒன்றை கேட்டு விட்டது போல கடகடவென்று சிரிக்க ஆரம்பித்தார் தானாபதி பிள்ளை.

"கேட்ட கேள்விக்கு பதில்" - என்றான் எரிச்சலாய் கறுப்பன்.

"முட்டாள்! உன் கேள்வியிலேயே பதிலும் இருக்கிறது. இந்த அகால நேரத்தில் இருநூறு குதிரை வீரர்களுடன் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து புறப்பட்டு ஸ்ரீவைகுண்டத்துக்கு கிளியாந்தட்டு விளையாடவா வந்திருக்கிறோம் என்று நினைத்தாய். முட்டாள். வெள்ளை நாரை சேர்த்து வைத்திருக்கும் நெல்லை அள்ளிச் செல்லத்தான் பொதி மாடுகளுடன் வந்திருக்கின்றேன். ம்.. நகரு. உன்னிடம் பேசிக் கொண்டிருக்க இது சமயமல்ல" - என்று சொல்லிவிட்டு கையசைவில் வீரர்களுக்கு உத்தரவிட்டார் தானாபதி பிள்ளை.

வீரர்கள் மீண்டும் மரத் துண்டினால் கோட்டைக் கதவின் மீது மோதத் தொடங்கினர். கறுப்பன் கோபமாய் கத்தினான்:

"தானாபதி, வீணாய் அழிந்து போக வேண்டாம். கோட்டைக் காவல் தலைவன் பாண்டியத்தேவன் அறிந்தால் உங்களை கொல்லாமல் விட மாட்டான். மரியாதையாய்.."

"என்னடா சொன்னாய்..?" - தானாபதி கரத்திலிருந்த பிரம்பு எதிரில் நின்ற கறுப்பனின் நெற்றியை குறி வைத்து சுழன்றது.



"ஆ" - என்று அலறினான் கறுப்பன். நெற்றிப் பொட்டிலிருந்து 'குபுக்' கென்று ரத்தம் வழிந்து, வலது கண்ணை மறைத்தது.

பிரம்பின் அடுத்த வீச்சு 'ஷ்.ஷ்' என்று கறுப்பனின் தலையை குறி வைத்து வந்தது. அவசரமாய் குனிந்து பிரம்புக்குத் தப்பியவன், அசுர வேகத்தில் ஓடினான் இருட்டை நோக்கி.

# 19

## பாண்டியத் தேவனின் கோபம்

இருட்டை நோக்கி ஓடிய கறுப்பனை பின் தொடர முயன்ற வீரர்களைத் தடுத்து நிறுத்தியது தானாபதி பிள்ளையின் குரல்.

"வேண்டாம். அந்த காவல் நாயை விட்டு விடுங்கள்."

கறுப்பன் ஓடிய திசையையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றனர் பாஞ்சை வீரர்கள். சில விநாடிகளில் இருட்டு அவனை விழுங்கிக் கொண்டது.

"டமால்" - என்ற பெருஞ்சத்தத்துடன் மல்லாந்து விழுந்தது கோட்டையின் பெருங்கதவு. திபுதிபுவென்று உள்ளே நுழைந்தனர் பாஞ்சை வீரர்கள். கையிலிருந்த வெள்ளிப் பூண் போட்ட பிரம்பைச் சுழற்றியபடி உற்சாகமாய் உள்ளே நுழைந்தார் தானாபதி.

எங்கு பார்த்தாலும் குவியல் குவியலாய் நெல் மேடுகள். வகை வகையாய் நெல்கள் வித்தியாசமான வண்ணங்களில் மினுக்கின.

குவிந்து கிடந்த நெற்குவியல்களைப் பார்த்த தானாபதி பிள்ளை பொங்கி வந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாய் ஓவென்று பெருங்குரல் எடுத்து சிரித்தார். அவர் சிரிப்பை எதிரொலித்தது கோட்டையின் சுற்றுச் சுவர்கள்.



"முத்து, பார்த்தாயா, எத்தனை நெல் வகைகள். காடை குளத்தான், கல்லுரண்டை, பனைமர நெல்லு, மட்ட வெள்ளை, வெந்தயச் சம்பா, மூளகி நெல்லு, அத்தனையும் எனக்காகவே சேர்த்து வைத்திருந்தான் *பின்கெட் துரை" என்றவர், இரண்டு கை நிறைய நெல்லை அள்ளி பூவாணமாய் சிதறினார்.

"ஐயா, உங்க மகன் வெள்ளைச்சாமி கல்யாணத்துக் காகவே வெள்ளைக்காரன் கருங்குளம், ஆத்தூரு நெல் அறுத்து மொத்தமா கொண்டு வைச்சிருக்கான்" - என்றான் முத்துக் குடும்பன்.

"ஆமாம்" "ஆமாம்" - என்றவன் தானாபதி சிரிப்புக்கிடையில், சற்று தள்ளியிருந்த நெற்குவியலில் ஒரு கை அள்ளி வந்தான் முத்துக் குடும்பன்.

"ஐயா, ஆத்தூரு ஆனைக் கொம்பன் நெல்லு இது. பலகாரத்துக்கு பிரமாதமாய் இருக்கும்."

"இதை முதலில் அளந்து போடு. கொண்டு வா மரக்காலை!"

"இதோ வந்திட்டேன். ஆடாம அசையாம ஒக்காந்திரு அதுக்குள்ள பசி உன்னை வானத்துக்கா தூக்கிட்டு போயிட போவுது" - என்று சமையலறைக்குள் இருந்து குரல் கொடுத்தாள் முத்துக்கருப்பாயி.

எண்ணெய் தேய்த்துக் குளித்து விட்டு திறந்த மாரபுடன் பனை ஓலை பாயில் அமர்ந்திருந்தான் பாண்டியத்தேவன். அவன் முன்னால் விரித்த தலை வாழை இலையும், அதற்கு காவலாய் தண்ணீர் சொம்பும் இருந்தது.

---

* கிழக்கிந்திய கம்பெனியின் நெல் களஞ்சிய அதிகாரி.

"உள்ளே என்னம்மா செய்கிறாய். நீ அடுப்பங்கரையில் இருந்து வெளியே வருவதற்குள் குழம்புக்குள் கிடக்கும் கோழியே எழுந்து வெளியே வந்துரும்!"

"வந்துட்டேம்பா.. வந்துட்டேன்" - பாத்திரங்களை தூக்கியபடி வெளியே வந்தாள் முத்துக்கருப்பாயி. ஒரு பாத்திரம் நிறைய சம்பா நெல் சோறு வெண் பூக்களாய் இருந்தது. இன்னொரு பாத்திரத்தில் கறுத்த பெட்டைக்கோழி கறிக்குழம்பு இருந்தது.

"ம்.. வை சீக்கிரம்.. வயிறு கபகபவென்று எரியுது" - என்ற பாண்டியத்தேவன். சோற்றைத் திரட்டி அவசரமாய் குவித்தான். சோற்றுக் குவியலின் தலையில் பள்ளம் ஒன்றை உண்டாக்கினான். சோற்றுப் பள்ளத்தில் கோழிக் குழம்பைக் கொட்டினாள் முத்துக்கருப்பாயி.

அவசரமாய் சோற்றை குழம்பில் குழைத்து ஒரு கை சோற்றை அள்ளி வாயருகே கொண்டு போன கை அப்படியே நின்றது.

வெளியே - அலறலாய் அழைத்தது ஒரு குரல்.

"மச்சான்"

- குரலுக்கு பின்னாலேயே ஓடி உள்ளே வந்தான் கறுப்பன். வேகமாய் ஓடி வந்ததால் மூச்சிரைத்தது.

"என்னாலே முத்துக்கருப்பா.. கோட்டை காவலை உன்னை நம்பி விட்டுட்டு வந்தேன். நீ கோட்டையை போட்டுட்டு ஓடி வந்திருக்கே கோழிக்கறிக்கு" - என்றான் கோபமாய்.

"மச்சான் நாம மோசம் போயிட்டோம். பாஞ்சாலங் குறிச்சி தானாபதி பிள்ளை கருசக் கொட்டாரத்து நெல்லையெல்லாம் கொள்ளையடிச்சிட்டிருக்கான். தட்டிக் கேட்ட என்னை அடிச்சிட்டான். அவன் கைக்கு தப்பி



ஓடி வந்திருக்கேன்" என்றான் கறுப்பன். அவன் நெற்றியில் இருந்த உறைந்து போன இரத்தத்தை கவனித்த பாண்டியத் தேவன் கண்கள் கோபத்தில் சிவந்தது. உதடுகள் துடித்தன. அதன் அசைவில் அவன் மீசையும் துடித்தது. கையிலிருந்த சோறு உதறி எழுந்தான்.

"என்னப்பா.. எழுந்திட்டே..?" - ஓடி வந்தாள் பாண்டியத்தேவனின் தாய். அவளுக்கு எந்தவித பதிலும் சொல்லாமல் இடுப்பு பட்டையை எடுத்துக் கட்டினான். இடுப்பில் இரண்டு பக்கமும் இரண்டு குறுவாள்களை எடுத்து செருகினான். வீட்டின் மூலை யிலிருந்த இரும்பு பூண் போட்ட கம்பை கையில் எடுத்தான்.

"பாண்டி, ஆசையாய் கோழிகறி வைக்கச் சொல்லி விட்டு சொல்லாம கொள்ளாம எங்கப்பா புறப்பட்டுட்டே" - கேட்டது தாயின் உள்ளம்.

"கருசக் கொட்டாரம் வரை போகிறேன்."

"போய் வருகிறேன் என்று சொல்லாமல் போகிறேன் என்று சொல்கிறாயே என் கண்ணு. கருப்பன், தானாபதி. கொள்ளை அது இது என்று சொல்கிறான். எதுவும் எப்படியும் போகட்டும்.. விடிந்ததும் போ ராஜா.. தானாபதி பொல்லாதவன் என்று ஊரெல்லாம் பேச்சு.. நீ போக வேண்டாம் கண்ணு. இந்த கும்பினிக்காரன் வேலை போனா போகட்டும். ஆத்தா கதிர் அறுத்தாவது உனக்கு கஞ்சி தண்ணி ஊத்துவேன்." கெஞ்சினாள் முத்துக்கருப்பாயி

"முடிந்தால் சாப்பாட்டை அங்கே கொண்டு வா." திரும்பிப் பார்க்காமல் வேகமாய் வெளியே வந்தவன், பூவரச மரத்தடியில் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்தான். பின்னாலே ஓடி வந்தான் கறுப்பன்.

"எலேய் கருப்பா, பாளையங்கோட்டைக்கு ஓடிப் போ.. தானாபதி பிள்ளை கருசக் கொட்டாரத்தைக் கொள்ளை அடிக்க வந்திருக்கிறான் என்று மேஜர் மெக்காலே துரையிடம் பாண்டியத்தேவன் சொன்னதாக சொல்" - என்று சொல்லிவிட்டு, குதிரையில் தாவி ஏறினான் பாண்டியத்தேவன். குதிரை அவனை சுமந்து கொண்டு கருசக் கொட்டாரத்தை நோக்கி பாய்ந்து சென்றது மின்னல் வேகத்தில்.

"நடக்கிற மாட்டுக்கு ஒரு கோட்டை, நடக்காத மாட்டுக்கு அரைக் கோட்டை, சண்டி மாட்டுக்கு கால் கோட்டை என்று கட்டி வரிசையாய் அனுப்புங்கள். யாருக்காகவும் யாரும் காத்திருக்க வேண்டாம்" - என்று கட்டளையிட்டார் தானாபதி பிள்ளை. வரிசையாய் அழைத்து வரப்பட்டன பொதி மாடுகள். அவசர அவசரமாய் சுமைகள் மாடுகள் முதுகில் ஏற்றப்பட்டன.

சுமைகள் ஏற்றப்பட்ட மாடுகள் வெளியே போக மாட்டுக்கொரு காலோடிகள் பின் சென்றனர்.

மர ஆசனம் ஒன்றில் அமர்ந்து நெல்லை சுமந்து செல்லும் பொதி மாடுகளை புன்னகையுடன் கவனித்துக் கொண்டிருந்தார் பாஞ்சாலங்குறிச்சி பிரதம அமைச்சர்.

முத்துக் குடும்பன் வேகவேகமாய் நெல்லை மரக்காலில் அள்ளிப்போட, காலோடிகள் அவசர அவசரமாய் மூட்டையாக்கிக் கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் -

"ஏய்" - என்று அதட்டும் ஒலி கேட்டது.

தானாபதி பிள்ளையின் முகம் அவசரமாய் திரும்பியது. முத்துக் குடும்பனின் கையிலிருந்த மரக்கால் நழுவி தரையில் விழுந்தது. வீரர்கள் திடுக்கிட்டு திரும்பினர். பொதி மாடுகள் பயத்தில் மிரண்டு ஓடத்தலைப்பட்டன.



வாசலில் கோப முகத்துடன் நின்று கொண்டிருந்தான் பாண்டியத்தேவன். அவன் கை இறுக்கத்தில் இரும்பு தொப்பிப்போட்ட கழி.

"தானாபதி பிள்ளை" - கோபத்தில் இரைந்தான்.

"யார் நீ..?" புன்சிரிப்புடன் மாறாமல் கேட்டார் தானாபதி பிள்ளை.

"யாரா.. கருசக் கொட்டாரத்தின் காவல் தலைவன் பாண்டியத்தேவன். மரியாதையாய் எடுத்த நெல்லை போட்டுவிட்டு பாஞ்சாலங்குறிச்சி நோக்கி ஓடிவிடு. கும்பினியை பகைத்து உயிரை இழந்து விடாதே" - என்றான் பாண்டியத் தேவன்.

"அட.. உயிர்" - என்ற தானாபதி கடகடவென்று சிரித்தார். சட்டென்று சிரிப்பை நிறுத்திவிட்டு, பேச்சை ஆரம்பித்தார்.

"எடுத்த நெல்லை போட்டு விட்டு ஓடவா பாஞ்சாலங் குறிச்சியில் இருந்து வந்திருக்கிறேன். எந்த வெள்ளையனுக்கும் பயப்படாது பாஞ்சாலங்குறிச்சி. நீ உன் விசுவாசத்தை காட்ட வேண்டுமென்றால் ஓடிப்போய் மெக்காலே துரையிடமோ, இல்லை பின்கெட்டிடமோ சொல்லிக் கொள்.. போ.. இந்த இடத்தை விட்டு விட்டு ஓடி விடு. தானாபதிக்கு எதிர் வார்த்தை பேசியவனை இதுவரை நான் உயிரோடு அனுப்பியதில்லை. உன்னை உயிரோடு அனுப்புகிறேன் என்றால் அதற்கும் காரணம் இருக்கிறது. திருமணத்துக்கு நெல் எடுத்துச் செல்லும் போது இரத்த பழி வேண்டாம் என்றுதான். போ.. ஓடிப் போ.. உயிர் உனக்கு வேண்டுமென்றால்.." - என்றார் எச்சரிக்கை தொனியில்..

தானாபதியின் கண்கள் குரூரமாய் மினுக்கியது.

"தானாபதி, நான் பாண்டியத்தேவன். உண்ட உப்புக்காய் உயிரையும் கொடுப்பவன். இந்தக் கோட்டையின்

காவல் நாய் உள்ளே அத்துமீறி நுழைந்தவர்களை கடிக்காமல் விடமாட்டேன். நான் உயிரைப் பற்றி கவலைப் படுபவன் அல்ல. என்றோ போகப் போகிற உயிர் இன்று போகட்டும். அள்ளிய நெல்லைப் போட்டு விட்டு போகப் போகிறாயா இல்லையா." - உறுதியான குரலில் கேட்டான்.

"பாண்டியத்தேவா.. எண்ணிப்பார்.. உனக்கு இரண்டு கால், இரண்டு கை. எங்களுக்கு பார், எண்ணமுடியாத கால்கள், எண்ண முடியாத கைகள், உன்னை ஒரு நொடியில் நசுக்கிவிட முடியும்... மன்னித்தேன்.. போ.. என்ன முத்து பிடித்து வைத்த களிமண் போல நிற்கிறாய்.. நெல்லை அள்ளிபோடு" - என்றார் தானாபதி பிள்ளை, அலட்சிய பாவத்துடன்.

முத்துக் குடும்பன் குனிந்து மரக்காலில் நெல்லை அள்ளினான். கோபமாய் உள்ளே பாய்ந்து வந்தான். பாண்டியத் தேவன். அவன் கையிலிருந்த கம்பு சுழன்று கருப்பனின் மணிக்கட்டைத் தாக்கியது.

"ஆ" - என்ற வலிமுனகலுடன் மரக்காலை தவற விட்டான். அது தரையில் விழுந்து உருண்டோடியது.

கம்பின் அடுத்த வீச்சு அவன் தலையை குறி வைத்து. அவசரமாய் பின்வாங்கியவன் நெல் குவியலில் மல்லாந்து விழுந்தான்.

பாஞ்சை வீரன் ஒருவன் உருவிய வாளுடன், பாண்டியத் தேவன் நெஞ்சைக் குறிவைத்து ஓடி வந்தான்.

# 20

## தாயின் சாபம்

பாஞ்சை வீரன் ஒருவன் உருவிய வாளுடன, தன நெஞ்சைக் குறிவைத்து பாய்ந்து வருவதைக் கண்ட பாண்டியத்தேவன், அவசரமாய் நகர்ந்து வாளை பிடித்திருந்த வீரனின் கையை நோக்கி வீசினான் கழியை.

"ஆ" - என்ற அலறலுடன் வாளை உதறினான் பாஞ்சை வீரன். வாள் நெற்குவியலில் போய் விழுந்தது.

சில இமை மூடு பொழுதுக்குள் பாண்டியத் தேவனை சூழ்ந்து கொண்டனர் பாஞ்சை வீரர்கள். அவர்கள் கை வாள்கள் ஆவேசமாய் அவனை நோக்கி நகர, அரை வட்ட மடித்து சுழன்று பாண்டியத்தேவனின் கை கம்பு விஷ்-விஷ் என்று காற்றில் ரகசியம் பேசியது

அடுத்து வந்த கை நொடியில் சுழன்ற கம்பின் இரும்பு பூண் வரிசையாய் இரத்த முத்தங்களைப் பெற்றது. ஆ-ஆ என்று அலறல்கள் எழுந்தன பாஞ்சை வீரர்களிடமிருந்து. அவர்களின் நெற்றியில் புதிதாக முளைத்திருந்தன இரத்தத் திலகங்கள்.

விழி பிதுங்கலுடன் நின்று கவனித்துக் கொண்டிருந்த தானாபதி பிள்ளை, பாண்டியத்தேவன் கண்ணில் தெரிய இடுப்பிலிருந்த குறுவாளை எடுத்துக் குறி வைத்து எறிந்தான்.

பாய்ந்து வந்த குறுவாளை கவனித்த, தானாபதி பதட்டமாய் குனிய, தலைக்கு மேல பயணித்து குறுவாள் நெற்குவியலில் போய் விழுந்தது.

"நாத்தான்" - என்று கத்தினார் தானாபதி. அடுத்த விநாடியே வெளியேயிருந்து பாய்ந்து வந்தது கரும் புரவி ஒன்று. பாண்டியத்தேவனை நோக்கி, அதன் முதுகில் கம்பீரமாய் அமர்ந்திருந்தவன், முகத்தின் குறுக்கே கறுப்புத் துணி.

பாண்டியத்தேவன் சட்டென்று இடுப்பில் இருந்த இன்னொரு குறுவாளையும் எடுத்து வீசினான். குறி தப்ப வில்லை. குறுவாளை வயிற்றில் வாங்கிக் கொண்டு சரிந்தது கரும்புரவி.

அதற்குள் குதித்து இறங்கி விட்டான் அந்த வீரன். அவன் கையிலிருந்த அகலமான வாள் ஒருமுறை மின்னலாய் இயங்கியது. பாண்டியத் தேவன் கைகம்பு முக்காலாய் சுருங்கியது. அடுத்த வாள் வீச்சில், சிறு துண்டு கம்பு மட்டுமே பாண்டியத்தேவன் கையில் இருந்தது. அந்த சந்தர்ப்பத்பதை பயன்படுத்திக் கொண்டனர் பாஞ்சை வீரர்கள்.

அடுத்த சில விநாடிகளில் ரத்தமாய் கீழே விழுந்தான் பாண்டியத் தேவன். உணர்வுகள் தொலைந்து மயக்கத்துக்கு போயிருந்தான். இரண்டு வீரர்கள் அவன் காலைப் பிடித்து இழுத்துக் கொண்டு உள்பக்கமாய் போனார்கள்.

"விழுந்தவன் எழுந்து விடப்போகிறான். இவன் மேல் நெல் மூட்டைகளை அடுக்குங்கள்"* - என்று கட்டளை

* பாண்டிய தேவன் காயமுற்று கீழே விழ்ந்தான். அவனை உள்ளே இழுத்துச் சென்று, அவன் மீது நெல் மூட்டைகளை அடுக்கச் சொன்னான் சண்டாளன் தானாபதி பிள்ளை.

- தமிழ்வாணன், கட்டபொம்மன் கொள்ளைக்காரன், இரண்டாம் பதிப்பு, பக்கம் 196.



யிட்டார தானாபதி பிள்ளை. பாண்டியத்தேவனை கவிழ்ந்த நிலையின படுக்க வைத்து, நெல் மூட்டைகளை அடுக்கினா பாஞ்சை வீரர்கள். பாண்டியத்தேவனின் வாயிலிருந்து ரத்தம் வழிந்தது. உயிர் பிரிந்தது. #

பாண்டியத்தேவனின தாய் முத்துக்கருப்பாயி மண கலசத்தில் சம்பா அரிசி சோற்றையும், கோழிக கறியையும் எடுத்துக் கொண்டு நெற்களஞ்சியத்தை நோக்கி நடந்தாள்.

"கெச்ச., கெச்சி" - என்று கெவுளி பல்லி சப்தமிட்டது கீழ்திசையில் இருந்து. 'ஐயய்யோ, இது கெட்ட சகுனம்' என்று மனம் அரற்றியது. உள்ளம் படபடக்க வேக நடை நடந்தாள்.

இருட்டில் சோகமாய் நின்று கொண்டிருந்தது நெற் களஞ்சியம். முத்துக்கருப்பாயியின் பார்வையில் உடைந்து விழுந்திருந்த கதவு தெரிந்தது. 'முருகா- முருகா" என்று ஆண்டவனை துணைக்கழைத்தபடி நுழைந்தாள் அந்த மூதாட்டி.

தரை எங்கும் சிதறிய நெல் மணிகள், காலில் அழுந்த கண்களைச் சுருக்கி வெளிச்சத்தை தேடிக் கொண்டே நடந்த முதியவளின் நெஞ்சுக்குள் பயப்பறவை சிறகடித்தது. நடுங்கிய கையிலிருந்த மண பாத்திரங்களும் நடுங்கியது.

''எலேய் பாண்டி'' - அழைத்தாள் அந்த தாய். இருபத்தாறு வருடங்களாய் கூப்பிட்ட குரலிக்கு பதில் கொடுத்த அந்த மகன் இன்று வாய் திறக்கவில்லை. பதறியது

# தானாபதி பிள்ளை தம் ஆட்களை ஏவி, ஸ்ரீவைகுண்டம் நெற்களஞ் சியத்தை கொள்ளையடிக்கச் செய்தார் இந்தக் கிளர்ச்சியின் போது. களஞ்சியத்தைக் காவல் புரிந்தவன் கொல்லப்பட்டான்.

- ம.பொ.சிவஞானம், விடுதலைப் போரில் தமிழகம், முதல் தொகுதி, இரண்டாம் பதிப்பு, பக்கம் - 47.

அன்னை நெஞ்சம். மீண்டும் தன் சக்தியெல்லாம் திரட்டி - "பாண்டி" - என்றாள் உரத்த குரலில். பதில் வந்தது.

"பாண்டி... பாண்டி" என்று களஞ்சிய சுவர்கள் எதிரொலித்தன அந்த முதியவளின் குரலை.

"ஐயோ என் மகனுக்கு என்ன ஆயிற்று.. கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவானே என் ராசா." மனம் பதை பதைக்க சிதறிக் கிடந்த நெற்குவியல்களுக்கு இடையில் வேகமாய் நடந்தவள், ஏதோ ஒரு பொருளின் மீது கால் தடுக்கி, முகம் குப்புற விழுந்தாள். கையிலிருந்த மண் பாத்திரங்கள் தரையில் விழுந்து சிதறியது. வெண் சோறு மண் சோறானது. குழம்பு நெல்லோடும் மண்ணோடும் குழம்பிப் போனது.

விழுந்தவளுக்கு எழுந்திருக்க முடியவில்லை. இடறிய காலில் ஏதோ பிசுபிசுப்பாய் உணர்ந்து தொட்டுப் பார்த்தாள். நாசியருகே கொண்டு வந்தாள். மனித இரத்தம்.

தன் காலை இடறச் செய்த பொருளை மெல்ல தடவிப் பார்த்தாள். ஓவென்று கதறி அழ ஆரம்பித்து விட்டாள். பெற்ற தாயின் தொடு உணர்ச்சிக்கு தெரிந்து விட்டது அது தன் மகனின் முகம் என்று.

பொங்கிப் பொங்கி அழுதாள் கடல் போல. துயரம் அவளிடமே திரும்பிச் சென்றது அலை போல.

"முல்லை மலரே முருகம்பூ வாயழகா
மல்லிகை ரோசாவே வாடா மருக்கொழுந்தே
கோனாக் கொடி மரமே குன்றாத வாசகமே
வாடா செண்பகமே மங்கை உன்னை பார்ப்பதெப்போ
அடடா சண்டாளா.."



நெஞ்சில் அடித்து அடித்து அழுதாள். தலையை தரையில் மோதினாள். அத்தனையும் ஒரு விநாடியில் நின்றது. மண் பொம்மை போல் இருந்தாள். இறந்து கிடந்த பாண்டியத்தேவனின் வலது கரத்தை தன் கையில் எடுத்தாள்.

"என் மகனே, பாண்டியத் தேவா, ஒரு நாள் சண்டையில் உன் உடன்பிறப்பை இழந்தேன். இன்று உன்னையும் இழந்துவிட்டேன். தானாபதி வாளுக்கு பலி கொடுக்கவா, உன்னை பத்து மாதம் சுமந்து, சீராட்டி வளர்த்தேன். நான் விடமாட்டேன், என் மகனை கொன்றவனை விட மாட்டேன். தானாபதி மெத்த படித்தும் உனக்கு புத்தி கட்டையாய் போச்சுது பார். நீ இனி அழிந்து தான் போக வேண்டும். ஏய் தானாபதி நீ படுத்துறங்கும் வீடும், உனக்கு குதிரை தந்திருக்கும் பாஞ்சாலங்குறிச்சியையும் மண்ணோடு என் காலால் தடவா விட்டால் நான் ஒரு தகப்பனுக்கு பிறந்தவள் அல்ல. இது சத்தியம்" * - என்று தன் மகன் கரத்தில் அடித்து சத்தியம் செய்தாள் பாண்டியத் தேவனின் தாய் முத்துக்கருப்பாயி.

கதையை சொல்லி முடித்தார் கல்யாணத் தேவர். யாரும் எதுவும் பேசவில்லை. தூரத்து ஓடையின் சலசலப்பு மட்டும் மெலிதாக கேட்டது. இறுகப் பிடித்திருந்த அமைதியைக் கலைத்தான் பறல் ஆடி வீரன் இளைய பாண்டியன்.

* கட்டை மண்ணாக்கி திரத்திக் காலாலே ஒப்புரவு செய்யாவிட்டால்
- கட்டபொம்மன் கதைப்பாடல்.
- பதிப்பாசிரியர் நா. வானமாமலை, பக்கம் - 95.

"அந்த தாயின் சாபம்தான் பாஞ்சாலங்குறிச்சியை மண் மேடாக்கிவிட்டது என்று சொல்கிறீர்களா_" "நான் சொல்லவில்லை. ஊர் சொல்கிறது"

"இந்த நிகழ்ச்சியால்தான் பாஞ்சாலங்குறிச்சிக்கும் வெள்ளையருக்கும் பகை வந்ததா.."

- கேட்டாள் மோகனவல்லி.

"வரவில்லை. வளர்ந்தது. வீரபாண்டியரின் தாத்தா காலத்திலேயே பகை வந்து விட்டது. கப்பம் கட்ட மறுத்தால்" - என்றார் கல்யாணத் தேவர்.

"சாபத்தால் சரியவில்லை பாஞ்சாலங்குறிச்சி. எட்டப்பன் போன்றவர்களின் துரோகத்தால் சரிந்தது. கப்பம் கட்டமாட்டான் கட்டபொம்மன் என்று வீர பாண்டியன் சிம்மமாய் கர்ஜித்த போது குள்ள நரி வேலை செய்தான் சொந்த இனத்தான். கோழைத்தனத்துக்கு பரிசு கிரீடம், மானத்தை விற்றால் மகுடம் என்று வெள்ளையன் சொன்னதும் ஓடிப் போய் வாங்கிக் கொண்டனர் எட்டப்பனும், புதுக்கோட்டையனும். தன்மானம் வேண்டு மென்றால் தலையைக் கொடுத்தாக வேண்டும். வெள்ளை அரசாங்கத்தில் வீரனுக்கு பரிசு மரணம் என்ற நிலை வந்தபோது தயங்காமல், புன்னகை முகத்துடன் மரணத்தை முத்தமிட்டவன் வீரபாண்டியன். இழிபிறவிகள் போல அவனும் நடந்திருந்தால் கோட்டை பிழைத்திருக்கும். சாபத்தைப் பற்றி மக்கள் மத்தியிலும் பேச்சிருக்காது" - என்றார் கடற்கரை நாயக்கர்.

"இதுதான் உண்மை" - என்றாள் மோகனவல்லி.

"கொள்ளையடிக்க எப்படி சம்மதித்தார் வீரபாண்டியர்.?" - கேள்வி வந்தது கல்யாணத் தேவரிடமிருந்து.



"கட்ட பொம்மனுக்குத் தெரியாமல்தான் தானாபதி பிள்ளை இந்த கொள்ளையை நடத்தியிருக்கிறார்கள்*" என்றார் கடற்கரை நாயக்கர்.

"வீரர்கள் எப்படி உடன் பட்டார்கள்.?" மோகனவல்லி கேட்டாள்.

"அதுதான் தானாபதியின் சாதுர்யம்!"

"அந்த கொள்ளைக்கு பின்னரும் தானாபதி பிள்ளை எப்படி அமைச்சராய் நீடித்தார்" - கேட்டார் பூபதி நாடார்.

"அது கட்ட பொம்மனின் மன்னிக்கும் குணம். அது மட்டுமல்ல. தானாபதியின் ராஜ தந்திரம் பாளையத்துக்கும் தேவையாயிருந்தது" - என்று கூறி முற்று புள்ளி வைத்தார் நாயக்கர்.

"பாஞ்சாலங்குறிச்சி மண்ணுக்கு தாயின் சாபம் மட்டும் அல்ல. கன்னி ஒருத்தியின் சாபமும் இருக்கிறது. அந்த கதை தெரியுமா உங்களுக்கு..?" - என்று கேட்டார் பூபதி நாடார்.

"சொல்லுங்கள்.. சொல்லுங்கள்" - என்றாள் மோகனவல்லி.

தொண்டையை செருமியபடி கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

* தானாபதி பிள்ளை... கட்டபொம்மனுக்குத் தெரியாமல் ஸ்ரீவைகுண்டம் நெல் கொள்ளையை நடத்தினார்.

- கட்டபொம்மன் கதைப்பாடல்.. சிதம்பரம் சுவாமிகள்

# 21

## நிலவுக்காய் காத்திருந்த கதிரவன்

சிற்றாடை கட்டிய இளம்பெண் போல நளினத்துடன், ஜில்லிப்பாய் ஓடிக் கொண்டிருந்தது பங்குனி மாதத்து தாமிரவருணி நதி. கோடை காலமாதலால் பரந்த மணல் பரப்பை உதாசினப்படுத்தி விட்டு, அந்த ஆறு ஒரு ஓரமாய் ஓடியது. வெட்கப்பட்டு ஓடும் பருவப் பெண்ணை கண்ணில் கொண்டு வந்தது.

மேகங்கள் துரத்த ஓடிக்கொண்டிருந்த குறை நிலவு தன் மஞ்சள் கிரணங்களை அள்ளி, நீர்ப் பரப்பின்மீது வீசி தண்ணீரை நிறமாற்றம் செய்திருந்தது. அந்த மஞ்சள் நீர்ப் பரப்பில் தங்க நிலா ஒன்று தத்தளித்துக் கொண்டிருந்தது. நிழலை நிஜம் என்று எண்ணிய சிறுமீன்களின் கூட்டம் ஒன்று, அந்த நிழல் நிலவை தண்ணீருக்குள் இழுத்துச் செல்ல முயற்சி செய்து கொண்டிருந்தது. நிலவை கடிக் கிறேன் பார் என்று நீரைக் கடித்தன அறியாச் சிறுமீன்கள். அதை கவனிக்காதது போல அசையாமல் நின்று கொண்டிருந்தன கரையோர கறுப்பு பனைமரங்கள். அவற்றின் காதுகளில் தூக்கினாங்குருவியின் கூடுகள் காதணி போல் காற்றில் ஆடிக்கொண்டிருந்தன.



எங்கோ தூரத்தில் பூத்த இரவுப் பூக்களின் நறுமணத்தை கவர்ந்து வந்த தென்றல் வழியிலேயே விநியோகம் செய்து கொண்டிருந்தது. முள் மரத்து சில் வண்டு ஒன்று தென்றல் செய்வது அநீதி என்று விடாமல் கத்திக் கொண்டிருந்தது.

பின்புற விளக்குகளைச் சுமந்து கொண்டு மின்மினிப் பூச்சிகள் எங்கோ ஆர்வமாய் சென்று கொண்டிருந்தன. கரையோர இரட்டை பனை மரத்தின் நிழல்கள் நீண்டு ஆற்று மணலில் விழுந்து கிடந்தன. அவற்றின் இணைந்த தலைப்பகுதிகள், ஒரு யானை ஆற்றில் வெண் மணலில் படுத்துக்கிடப்பது போல ஒரு இருட்டு நிழல் உருவம் சிருஷ்டித்திருந்தன.

அந்தப் பனை நிழலின் இருட்டு மையப் பகுதியில் மல்லாந்து படுத்திருந்தான் ஒரு வாலிப வீரன். அவன் கைகள் மடங்கி தலையணையாகியிருந்தன. கண்கள் வானத்து விண்மீன்களை எண்ணும் முயற்சியில் ஈடுபட்டு தோற்றுக் கொண்டிருந்தது. மனமோ பூஞ்சோலையை நினைத்துக் கொண்டிருந்தது.

பூஞ்சோலை இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பாள்.. உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பாளோ.. இல்லை சொன்னதை மறந்து, வாய் பிளந்து வெண்பற்கள் தெரிய உறங்கிக் கொண்டிருப் பாளோ.. அவள் அண்ணனிடம் மாட்டி விழித்துக் கொண்டிருப்பாளோ.. சிந்தனைகள் கிளை கிளையாய் பிரிந்து நீண்டு கொண்டே சென்றது.

"த்தொட்டீர்" - ஏதோ மணலில் விழுந்த சத்தத்தில் சிந்தனை அறுந்தது. 'பனம்பழம் விழுந்திருக்கும். சட்டென்று

எழுந்து அமர்ந்தான். வெண்மணல் பரப்பைப் பார்த்தான். எதுவும் தென்படவில்லை. மோகினிப் பேய் இப்படி ஏமாற்றும் என்று சொல்வார்களே 'சே.. இது என்ன மூட நம்பிக்கை' கைகளில் ஒட்டியிருந்த மணலை உதறினான்.

சற்று தள்ளி சலசலத்துக் கொண்டிருந்த ஆற்று நீர்ப்பரப்பின் மீது 'ச்செலங்' என்ற ஒலியுடன் ஒரு பொருள் விழுந்து, நீரை சிதறடித்து மறைந்தது.

அவசரமாய் எழுந்து கொண்டான். கண்கள் சுற்றிலும் ஒருமுறை வட்டமாய் சுழன்றது. யாரும் இல்லை. எட்டு திசையிலும் மௌனம் மட்டுமே அமர்ந்திருந்தது. நதியின் சலசலப்பு மட்டும் மெதுவாய் காதில் விழுந்தது. தூரத்து நரி ஒன்றின் ஊளை செவிப்பறையைத் தொட்டது.

மீண்டும் ஒருமுறை சுற்றிலும் பார்வையை ஓட விட்டான். நதி மீது ஆடும் நிலா, கரும் பிசாசு போல மௌனமாய் நிற்கும் பனை மரங்கள். வேறு வேறு.. எதுவும் இல்லை.

இன்னும் பயம் அவனை விட்டு சற்று விலகியே நின்றது. அவன் வலதுகை இடுப்பு வாள் தொட்டது.

அந்த வாலிப வீரன் திகைத்துப் போய் நின்ற அந்த இரவு நேரத்தில்- 'க்ளுக்' கென்ற சிரிப்பொலி காற்றில் தவழ்ந்து வந்தது. அவன் மேனி ஒருமுறை சிலிர்த்தது. நகைப்பொலி வந்த திசையில் கண்கள் திரும்பின.

கறுப்பு பனை மரத்தின் பின்னாலிருந்து சிவப்பாய் ஒரு இளம்பெண் வந்தாள். மழை மேகத்துக்குள்ளிருந்து வெளியே வரும் முழுமதி போல.



"பூவு நீயா..?" - என்று முணுமுணுத்தன அந்த வாலிப வீரனின் உதடுகள். சிரிப்பைச் சிந்தின கண்கள். கால்கள் அவளை நோக்கி வேகமாய் அடி எடுத்து வைத்தன.

ஆற்றின் கரையிலிருந்து மானின் துள்ளலுடன் மணலில் குதித்து அவனை நோக்கி ஓடி வந்தாள் அந்தப் பாவை.

இருவருக்கும் இடையில் இருந்த தூரத்தை ஆளுக்கு பாதியாய் கடந்தனர். இடைவெளி காணாமல் போனது. இருவரும் ஒன்றாயினர். அவள் அதரங்கள் அவன் வசம். ஒருவருக்கு ஒருவர் கொழு கொம்பாயினர். இருவருக்கும் இடையில் புகமுயன்று தோற்றுப்போனது தென்றல்.

இந்தக் காட்சியைக் கண்டு வெட்கப்பட்ட நிலவு அவசரமாய் முகில் எடுத்து முகம் மறைத்தது. நட்சத்திரங்கள் கண்சிமிட்டி உற்சாகப்படுத்தின. அந்த இளசுகளை ஆற்றின் நீர்மட்டத்துக்கு மேல் வந்து எட்டிப் பார்த்த ஆற்று சிறு மீன்கள் கண்ட காட்சியில் மெய்மறந்து பல விநாடிகள் நின்று பின் ஆழத்தை நோக்கி நீந்தின தன் இணையைத் தேடி.

"பூவு" - என்றழைத்தான் அந்த மல்லிகைப் பூ மனத்தான்.

"ம்.." - என்று முனகினாள் அந்தக் காரிகை. அதற்கு காரணம் இருந்தது. அவன் உதடுகள் அசைந்தது அவள் காது மடல்களில். வெட்கத்தில் சிவந்து போயிருந்தது அவள் வதனம்.

"பூவு" - என்றான் மீண்டும். இந்தமுறை அவளிடமிருந்து எந்தவித பதிலும் வரவில்லை. கண்களை உயர்த்தி அவன்

முகம் பார்க்க துணிந்தவள், வெட்கம் வர நிமிர்ந்து பார்க்க சக்தியற்றவளாய் தலை குனிந்தாள்.

"பூ எந்த பாதையில் வந்தாய்..?" - என்று கேட்டான் மெல்லிய குரலில். அவன் கை அந்த மொய் குழலாளின் கூந்தல் நீளத்தை அளவெடுப்பது போல பாவனையாய் பின்புற எழில்களை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. அவளோ பேசத் தோன்றாதவளாய் அந்த ஆடவனின் பரந்த மார்பில் முகம் புதைத்துக் கிடந்தாள்.

"பூவு, என் கேள்விக்கு பதிலே இல்லை!"

"என்ன கேட்டாய்..?" - என்றாள் வியப்பாய்.

"என்ன கேட்டேன் என்றா கேட்கிறாய்.." - அவன் கேள்வியில் நகைப்பு தெரிந்தது.

"எந்தப் பாதையில் வந்தாய் என்று கேட்டேன்"

"ஓ.. அதுவா பால் பாண்டி நாடார் பருத்தி விளைக்கு கிழ்ப் பக்கமா வந்தேன்" - என்றாள் வனிதை.

"பூஞ்சோலை எதுக்காக தலையைச் சுற்றி மூக்கைத் தொட வேண்டும். குதிரை மறிச்சான் ஓடை வழியாக வந்திருக்கலாமே" - என்று அந்த காளை கேட்கவும் அவன் பிடியிலிருந்து அவசரமாய் விலகினாள். கோபமாய் வந்தன வார்த்தைகள்.

"நான் உயிரோடு இருக்கிறது பிடிக்கலியா உனக்கு. ஓடை வழியா வரச் சொல்றியே, வர்ற வழியில எங்க இரட்டை பனை மரத்து வயல்ல பருத்தி காவல் இருக்கிற எங்க அண்ணன் கண்ணில் பட்டா, பாளை அரிவாளால



இரண்டா வவுந்து எலுமிச்சை மரத்து மூட்ல வைச்சிப்புடும் தெரியுமல!"

"இவ்வளவு பயம் இருக்கிற நீ காதலிச்சிருக்கவே கூடாது!"

"என்னய்யா செய்றது. இந்த பாழாப் போன காதல் என் மேல் வந்து இந்த பாடுபடுத்துது. உன்னை ஆத்து மணல்ல போட்டுட்டு என்னால நார்க் கட்டில்ல படுத்திருக்க முடியல்ல. கண்ணைத் திறந்திருக்கும் போதும் உன் நினைப்புதான். கண்ணை மூடியிருக்கும் போதும் உன் நினைப்புதான்" - என்றாள் பூஞ்சோலை.

அப்படியே ஆதரவாய் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான் கதிரவன். மேகக் கதவுக்கு பின்னாலிருந்து மெல்ல எட்டிப் பார்த்தது மஞ்சள் நிலவு.

சந்திரன் ஒளிக்கு அச்சப்பட்ட காதலர்கள் சற்று தள்ளி விழுந்திருந்த பனை மரத்து நிழலை நோக்கி நடந்தனர். அமர்ந்தனர்.

பனைமரத்து நிழல் இருட்டில் - வெண்மணல் விரிப்பை பாயாக்கி - பூஞ்சோலை மடியை தலைக்காக்கி - படுத்திருந்தான் கதிரவன். அந்த ஆண்பிள்ளையின் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அந்தப் பாவை. மின்மினிப் பூச்சிகள் நெருங்கி வந்து அவர்கள் முகம் பார்த்து 'ஏன் இந்த கள்ளத்தனம்' என்ற கேள்வியை கேட்காமல் அடுத்த நிழல் நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

"கதிர்" - என்று அழைத்தான் பூஞ்சோலை.

"என்ன பூவு" - என்றான் கதிரவன்.

"என்ன மாதம் தெரியுமா..?"

"பகல் வழி போகக் கூடாத பங்குனி"

"வைகாசி பிறக்க இடையில் ஒருமாதம்தான் இருக்கிறது"

"ஆம். ஒரு மாதம்தான் இருக்கிறது"

"இப்படிச் சொல்லி விட்டால் போதுமா"

"பிறகு என்ன சொல்ல வேண்டும் பூவு"

"என்ன.. சொல்ல.. வேண்டுமா.. எனக்கு வைகாசியில் திருமணம் செய்ய என் அண்ணன் முடிவு செய்து விட்டான்.. நாளைக்கு உன் தந்தையை என் அண்ணனிடம் வந்து பெண் கேட்கச் சொல்.. புரிகிறதா?"

"என் தந்தையிடம் சம்மதம் வாங்கி விடலாம். உன் அண்ணனை நினைக்கும் பொழுதுதான் சங்கடமாய் இருக்கிறது. நாங்கள் பெரிய குடும்பம் என்று மார் தட்டுவானே. எனக்கு இத்தனை நூறு பனை இருக்கிறது என்று நெஞ்சு நிமிர்த்துவானே. என்னிடம் வந்து பெண் கேட்க உனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று பல்லில் நாக்கு போட்டு உன் அண்ணன் ஒரு கேள்வி கேட்டால், என்னால் தாங்கிக் கொள்ள முடியாதே பூவு. நீட்டிய கரத்தை முறித்திட வேண்டும். திட்டிய நாக்கை வெட்டிட வேண்டும் என்ற எண்ணத்தை மணல் வீடு கட்டும் பருவத்திலேயே மனதில் இருத்திக் கொண்டு தலை குனிந்து வர முடியாதே பூவு. என்னச் செய்ய சொல்கிறாய்..?" - பரிதாபமாய் கேட்டான் கதிரவன்.



"காதலிக்க தெரிந்தவருக்கு, கைபிடிக்கத் தைரியம் வர வேண்டாமா. வந்து கேளுங்கள். என் அண்ணன் சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும் நான் உங்கள் மனைவிதான். ஒரு பொண்ணு ஒருத்தனை மனசில நினைச்சிட்டா அவ மண்ணோடு மண்ணா போகும் மட்டும் அவன் மனசில இருந்து அவன் நினைவைப் பிரிக்க முடியாது. நான் கழுத்தை நீட்டினா கதிரவன் கைத்தாலிக்குத்தான் நீட்டுவேன்னு எங்க அண்ணன் கிட்ட சொல்லிடப்போறேன். நீயும் நாளைக்கு வந்து 'நான் பூஞ்சோலை கழுத்திலதான் தாலி கட்டுவேன்னு..." - அவன் பேச்சு பாதியில் அறுந்தது.

கண்கள் அசைவற்று நின்றன. பயத்தில் முகம் வெளிறியது.

# 22

## அழைத்த ஆபத்து

“பூவு” - என்றழைத்தான் கதிரவன். எந்தவித பதிலும் சொல்லாமல் தூரத்து இருட்டையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். ‘பேசிக் கொண்டிருந்தவள் பேச்சை பாதியில் நிறுத்தி விட்டு, ஏன் இப்படி அசைவற்று இருக்கிறாள்’ சந்தேகம் வந்தது.

“என்ன பூவு...”

இரண்டு தோள்களையும் பிடித்து உலுக்கினான் கதிரவன். தூரத்து இருட்டை நோக்கி கை நீட்டினாள் பூஞ்சோலை. அவள் கை நீட்டிய திசையில் பார்வையை ஓடவிட்டான். சில வெளிச்சப் புள்ளிகள் அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டிருந்தன.

“தீப்பந்தங்கள்” - என்றான் கதிரவன்.

“கொள்ளையர்களாயிருக்குமோ” - வந்தது கேள்வி நடுக்கத்துடன்.

“பனங்காட்டில் கொள்ளையடிக்க என்ன இருக்கிறது?”

“ஊரை நோக்கி போகப் போகிறார்களோ என்னவோ”



“வா, அருகில் போய் பார்க்கலாம்,” - அழைத்தான் ஆண்மகன்.

“வேண்டாம். ஆபத்தை விலை கொடுத்து வாங்க வேண்டாம்.” - தடுத்தாள் பெண் அவள்.

“வா தூரத்தில் நின்றே கவனிப்போம்.”

“கதிர், வேண்டாம்.” - என்றவளின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளிச்சப் புள்ளிகளை நோக்கி நடந்தான் கதிரவன்.

பனை மறைவுகளிலேயே நடந்து வெளிச்சப் புள்ளிகளை நெருங்கினார்கள். புள்ளிகள் விரிந்து தீப்பந்தங்களாய் உருமாறியிருந்தது. தீப்பந்தங்களை பிடித்திருந்த வீரர்களையும், அவர்களைச் சுமந்து நின்ற குதிரைகளையும் தெளிவாய்க் காண முடிந்தது. அந்த வீரர்கள் அணிந்திருந்த உடை பாஞ்சாலங்குறிச்சி - பாளையத்தை சேர்ந்தவர்கள் என்பதைச் சொல்லாமல் சொன்னது.

அந்தக் குதிரை வீரர்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கும், கதிரவனும், பூஞ்சோலையும் மறைவாய் நின்றிருந்த இடத்திற்கும் அதிக தூரம் இல்லை. கூப்பிடு தொலைவுதான் இருக்கும். கதிரவனின் முதுகோடு முதுகாய் ஒட்டிக் கொண்டாள் பூஞ்சோலை. அவள் மூச்சுக்காற்று அவன் முதுகில் சுட்டது.

“இவர்கள் யார்..?” - என்று கேட்டாள் நடுங்கும் குரலில்.

“பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள்” - என்றான் கிசுகிசுப்பாய்.

“எதற்காக வந்திருக்கிறார்கள்..?”

“பொறு பார்க்கலாம்” - என்றவனின் கண்களில் சற்று

தள்ளி ஒற்றை கால் ஊன்றி நின்று கொண்டிருக்கும் 'ஜக்கடா' வண்டிகள் தெரிந்தன. அருகிலேயே வண்டி இழுக்கும் காளை மாடுகள். 'வண்டிகளை எதற்காக இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நடு இரவில் எதற்காக வண்டிகளை இந்த பனங்காட்டில் கொண்டு அவிழ்க்க வேண்டும். அதுவும் பாஞ்சாலங்குறிச்சி வீரர்களுக்கு இங்கு என்ன வேலை இருக்க முடியும்?' அவன் மனதில் பிறந்த கேள்விகளுக்கு பதில் சொல்வதுபோல் அமைந்தது பாஞ்சாலங்குறிச்சி வீரன் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள்.

"ம். வெட்டுங்கள் வேகமாய்..."

- குரல் காதில் விழுந்த இமை மூடு பொழுதுக்குள் புற்றிலிருந்து கிளம்பிய ஈசல்கள் போல் பத்து, இருபது பேர் முளைத்தனர். திடகாத்திரமான உருவங்கள். கையில் பளபளக்கும் ஆயுதங்கள்.

அந்தக் குதிரை வீரன் கட்டளைக்கு பணிந்தது போல அவன் கை காட்டிய திசையில் கை ஆயுதத்துடன் நடந்தனர் அந்த முரடர்கள்.

ஒவ்வொரு முரடனும் ஆளுக்கொரு பனைமரத்தின் அடியில் போய் நின்றனர். கையிலிருந்த ஆயுதத்தின் பின் பகுதியில் பனை மரத்தை தட்டிப் பார்த்தனர். அதிலிருந்து கிளம்பிய ஓசையில் திருப்தி அடைந்தவர்களாய் தலை அசைத்தனர்.

அடுத்த விநாடி - தங்கள் கைக் கோடரியை தலைக்கு மேல் ஓங்கி பனையின் அடி மரத்தில் வெட்டினார்கள்.



"டடங்" - என்ற ஒலி கதிரவனின் இதயத்தை உடைப்பது போல் இருந்தது. அப்படியே ஒரு கணம் அசைவற்று நின்றான்.

"டடங்" - அடுத்த வெட்டின் ஒலி அவனை தன் நிலைக்கு கொண்டு வந்தது. முகம் கோபத்தில் சிவந்தது. பற்கள் ஒன்றுக்கொன்று மோதி ஒலி எழுப்பியது. அவர்களை நோக்கி வேகமாய் நடந்தான். இழுத்து நிறுத்தினாள் பூஞ்சோலை.

"நீ தனி ஆள். அவர்கள் நூறு பேருக்கு மேல் இருப்பார்கள். அவர்களை எதிர்த்து உன்னால் எதுவும் செய்ய முடியாது."

"பூஞ்சோலை அவர்கள் செய்வது..."

"தவறுதான். பிறருக்கு சொந்தமான பனை மரங்களை இரவோடு இரவாக வெட்டி திருடிச் செல்வது தவறுதான். அவர்களோ பாஞ்சாலங்குறிச்சி பாளையபட்டு வீரர்கள். அவர்கள் எண்ணிக்கை நூறுக்கு மேல். தனி ஒரு ஆளால் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியுமா..?"

"என்னதான் செய்ய வேண்டும் என்கிறாய்..?"

"பேசாமல் திரும்பி விட வேண்டியதுதான் வந்த வழியில்."

"பூவு, நமது சொத்தை எவனோ திருடிச் செல்ல என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ம்.. ஒன்று செய்.. உடனே ஊருக்கு ஓடிப் போய் விஷயத்தை சொல்லி நம் ஊர் ஆட்களை அழைத்துவா."

"நானா..?"

"நீயேதான். உடனே ஓடிப்போ!" என்றான் படபடப்பாய்.

"நான் ஊருக்கு போய் ஆட்களை அழைத்து வருகிறேன். அதுவரை நீங்கள் இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது."

"சரி போ!" என்றான். தயக்கத்துடன் ஒருமுறை கதிரவனை பார்த்துவிட்டு, வேகமாய் இரண்டடி வைத்தவள், அதே வேகத்தில் திரும்பினாள்.

"ஆற்றுக்கு தெற்கே நடப்பது உனக்கெப்படி தெரியும். நீ எதற்கு அங்கு போனாய் என்று கேட்டால் என்ன சொல்வேன்..?" பரிதாபமாய் கேட்டாள்.

"ஏதாவது சொல். இன்னும் அரை நாழிகைக்குள் மொத்த ஊரும் ஆற்றங்கரையில் இருக்க வேண்டும்" - என்றான் சற்று கோபம் கலந்த குரலில். அவசரமய் தலையசைத்து விட்டு வேகமாய் ஓடத் தொடங்கினாள் ஊரை நோக்கி.

காலில் நெருஞ்சி முட்கள் குத்தி தடை செய்தன. அதைப் பொருட்படுத்தாமல் ஓடினாள் மூச்சிறைக்க. தூரத்தில் நிழலுருவாய் தெரிந்தன வீடுகள். 'கதிரவன் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருப்பானா' பயம் பந்தாய் எழுந்தது மனதில்.

கதிரவன் அவர்களின் அசைவுகளை கண் சிவக்க பார்த்துக் கொண்டு நின்றான். வீரர்கள் தங்கள் கையிலிருந்த தீப்பந்தங்களை அணைத்திருந்தனர்.

முதல் பனைமரம் வினோத சப்தத்துடன் முறிந்து சரசரவென்று சரிந்து தரையில் விழுந்தது. அதன் தலையில்



தொங்கிக் கொண்டிருந்த பதநீர் சுமக்கும் மண் கலசங்கள் தரையில் மோதி உடைந்து சிதறியது. பதநீர் மண்ணை நனைத்தது. பனை ஓலைகளில் ஒட்டிக் கொண்டிருந்த கூடுகளில் இருந்த தூக்கிணாங்குருவி குஞ்சுகள் நடந்தது அறியாமல் தன் தாயாரை அழைத்தன அவசரமாய்.

மரத்தின் பொந்தில் இருந்த தேனீக்கள் கூடு கலைந்த ஆத்திரத்தில் சீற்றமாய் வெளியே வந்து பனையை வீழ்த்திய முரடனை விஷமுள்ளால் பதம் பார்த்தன.

"ஆ" - என்று அலறினான் அந்த பனை வெட்டி தேனீக்களுக்கு பயந்து சற்று விலகி சென்றனர் குதிரை வீரர்கள். கோபம் கொண்ட தேனீக்கள் நான்கு திசைக்கும் வேகமாய் பறந்து தாக்கின.

ஒரு கூட்டம் தேனீக்கள் பனை மறைவில் நின்று கொண்டிருந்த கதிரவனை சூழ்ந்து கொண்டன. திகைத்துப் போனான். வாய் மூடி அசைவற்று நின்றான். தேனீக்கள் அவன் தலையை சுற்றத் தொடங்கின. ஒரு தேனீ அவன் மூக்கில் அமர்ந்து தன் பின்புற விஷ முள்ளால்...

"ஆ" - என்று அலறினாள் பூஞ்சோலை.

# 23

## கன்னியின் சாபம்

**வ**லியுடன் குனிந்து பார்த்தாள் பூஞ்சோலை. உள்ளங் காலில் 'காக்கா' முள் ஒன்று ஆழமாய் குத்தியிருந்தது. முழு பலத்தை பிரயோகித்து பிடுங்கினாள். ரத்தம் குபுக்கிட்டு வெளியே வந்தது. அதைப் பொருட்படுத்தாமல் முள்ளை தூரமாய் வீசிவிட்டு ஊருக்குள் ஓடினாள்.

ஊர் அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தது. 'ஜக்கடா' வண்டிகள் தெருவோரங்களில் தலையை ஊன்றிப் படுத்துக் கிடந்தன.

தெருக் கோடியில் இருந்த ஊர்த் தலைவர் ரெத்தின பாண்டி நாடார் வீட்டு முன் போய் நின்றாள். அவள் நெஞ்சகத்தை மூச்சு வேகமாய் தாலாட்டியது. கதவை நெருங்கி படபடவென தட்டினாள்.

"சின்னய்யா.. சின்னய்யா..."

- என்று பெரிதாய் கூவினாள். மீண்டும் கதவை பலமாய் தட்டினாள். அடுத்த சில விநாடிகளில் கதவு திறந்து கொண்டது. இடுப்பில் வேஷ்டி, திறந்த மார்புடன் ஆறடி உயரமாய் ரெத்தின பாண்டி நாடார் வெளியே வந்தார். அவர் கண்களில் தூக்கம் இன்னும் மீதமிருந்தது.





"என்ன புள்ள பூஞ்சோலை. இந்த ராத்திரி வேளையில. ஐயாவுக்கு எதுவும் உடம்பு சொகமில்லையா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை சின்னய்யா. ஆத்தோரம் நிறைய தீப்பந்தம் தெரியுது. பனை முறிஞ்சு விழுற சத்தமும் கேட்குது" - என்றாள் மூச்சிரைப்புக்கிடையில்.

"உனக்கெப்படித் தெரியும்?" - என்றார் குரலில் கொக்கியோடு.

"வயித்துக்கு சரியில்லை சின்னய்யா. வலது பக்கம் போயிருந்தேன். ஆத்து பக்கம் சத்தம் கேட்டுது. புள்ளி புள்ளியாய் வெளிச்சம் தெரிந்தது. உடனே ஓடி வந்தேன். என்றாள் அவசரமாய். அவள் பேசி முடிக்கும் முன் திரும்பி வீட்டுக்குள் நுழைந்தார். சில விநாடிகளில் இரப்பில் செருகியிருந்த கோழிக்கால் அரிவாளுடன் வெளியே வந்தார்.

"எலேய் தீக் கொளுத்தி. மண்ணாங்கட்டி. கடற்கரை ஆண்டி" - அழைத்தார் சிம்மக் குரலில்.

அவசரமாய் திறந்து கொண்டன கதவுகள். விழித்துக் கொண்டன பல ஜோடிக் கண்கள். வீடுகளின் மூலை முடுக்குகளில் கிடந்த அரிவாள்களும், சுருள் வாள்களும், குத்தீட்டிகளும் கரங்களில் வந்திருந்தன.

அடுத்த நாழிகையின் ஆரம்பத்தில் ஊரே திரண்டு ஆற்றை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. அவர்கள் கைப்பந்தங்களில் கோபமுகங்கள் தெரிந்தது. அவர்களுக்கு பின்னால் ஓடிக் கொண்டிருந்தாள் பூஞ்சோலை தன் இதயத்தை கையில் பிடித்துக் கொண்டு.

கதிரவன் ஊர் இருந்த திசையில் திரும்பிப் பார்த்தான். யாரும் வருவதற்கான எந்தவித அறிகுறியும் இல்லை. 'பூஞ்சோலை என்ன ஆனாள். ஊரில் போய் சொல்லவே இல்லையா. பயந்து போய் படுத்து விட்டாளா' கவலை மனதை அரித்தது.

அதற்குள் பத்து, இருபது பனைகள் தரையில் விழுந்திருந்தன. தலை துண்டிக்கப்பட்டு பனை மரங்கள் இரண்டு வண்டியில் ஏற்றபட்டது. அவசரமாய் காளைகள் பூட்டப்பட்டது.

"ம்.. போகட்டும்" - காளைகள் பூட்டிய முதல் வண்டி சிரமத்துடன் மெல் நகர்ந்தது.

கதிரவனுக்கு அதற்கு மேல் காத்திருக்க பொறுமை யில்லை. பனைமரத்து மறைவிலிருந்து வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல பாய்ந்தான் 'ஜக்கடா' வண்டியை நோக்கி.

வேகமாய் ஓடி நகர்ந்து கொண்டிருந்த வண்டியின் நுகத்தைப் பிடித்து நிறுத்தினான். மின்னல் வேகத்தில் இடுப்புக் கத்தியை எடுத்து பூட்டாங்கயிற்றை அறுத்தான். விடுபட்ட மாடு ஓட ஆரம்பித்தது வேகமாய். ஒரு பக்கமாய் சரிந்தது வண்டி. கதிரவனின் முகத்தை நோக்கி சொடுக்கியது வண்டியோட்டின் சவுக்கு. அவசரமாய் பின் வாங்கினான்.

அந்த சில விநாடிகளுக்குள் கதிரவனை நோக்கி பாய்ந்து வந்தது ஏழெட்டு குதிரைகள். என்ன செய்வது என்று தீர்மானிப்பதற்குள் அவனை சூழ்ந்து கொண்டன போர்ப் புரவிகள்.



"டேய் யார் நீ" - கோபமாய் கேட்டான் வீரன் ஒருவன்.

"யார்.. மனிதன். நீங்கள் திருடிச் செல்லும் பனை களுக்குச் சொந்தக்காரன். எங்கள் ஊரில் மண்ணில் முளைத்தவைகளை தொட உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது. நீங்கள் யார் முதலில் அதைச் சொல்லுங்கள்" - என்று கேட்டான் கலங்காதவனாய்.

"முட்டாள்.. மகாராஜா வீரபாண்டிய கட்ட பொம்மு வின் வீரர்களைப் பார்த்தா யாரென்று கேட்கிறாய். என்ன தைரியம் இருந்தால் மகாராஜாவின் வண்டியை தடுத்து நிறுத்தியிருப்பாய். என்ன திமிர் இருந்தால் பூட்டாங் கயிற்றை அறுத்து காளையை துரத்தி இருப்பாய். ம்.. பதில் சொல்.." - உறுமினான் பாஞ்சையம்பதி வீரன்.

"வண்டி உங்கள் மகாராஜாவுக்கு சொந்தமாக இருக்கலாம். அதில் நீங்கள் கொண்டு போவது திருட்டுப் பொருள். அதுவும் எங்கள் பொருள். ஊர் விட்டு ஊர் வந்து திருடி விட்டு அதிகாரமும் பண்ணுவது வேடிக்கை யாய் இருக்கிறது" - என்றான் கதிரவன்.

"உன்னை இத்தனை நேரம் உயிரோடு விட்டு, அதிக பிரசங்கித்தனமாய் பேசவும் விட்டிருக்கிறோமே, உனக்கு வேடிக்கையாகத்தான் இருக்கும். செய்த தவறுக்கு மண்டியிட்டு மன்னிப்பு கேட்டால் உன்னை உயிரோடு விட்டு விட்டுச் செல்வோம்..."

"இல்லையென்றால்... இழுத்துச் சென்று அடைத்து வைப்போம் பாஞ்சாலங் குறிச்சி பாதாளச் சிறையில்"

"நீதிபதிகள் குற்றவாளியாய் கைகட்டி வாய்பொத்தி நிற்க திருடர்கள் நீதிபதி இருக்கையில் அமர்ந்திருப்பது

போல் இருக்கிறது உங்கள் கதை. மரியாதையாய் வெட்டிய பனையை தரையில் போட்டு விட்டு பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி ஓடிப்போய் விடுங்கள். உங்கள் உயிர் பிழைக்கும்."

"என்னடா சொன்னாய்..?"

கோபத்தில் வந்தன வார்த்தைகள். வேகமாய் நீண்டது. உடைவாள் ஒன்று கதிரவன் நெஞ்சைக் குறி வைத்து.

அவசரமாய் நகர்ந்தான். அடுத்த வீச்சு அவன் தலையை குறி வைத்து வந்தது. சட்டென்று குனிந்தான். முடிக் கற்றையை தடவிச் சென்றது வாளின் நுனி.

தன் கையிலிருந்த குறுவாளை அந்த பாஞ்சை வீரனின் நெஞ்சை குறிவைத்து வீசினான் கதிரவன். குறுவாளுக்குத் தப்ப பக்கவாட்டில் சரிந்து வீரன் தலைக்குப்புற விழுந்தான் குதிரையிலிருந்து.

மின்னல் வேகத்தில் அந்த குதிரையின் முதுகில் தாவி ஏறினான் கதிரவன். அவன் முதுகை குறி வைத்து பாய்ந்தது குத்திட்டி ஒன்று.

ஆரவாரித்து ஓடி வந்தது கூட்டம். ஊர்த் தலைவனின் தோள் துண்டு தலைப்பாகையாய் உருமாறி இருந்தது. அவர் இடுப்பில் தொங்கி ஊசலாட்டம் ஆடிக் கொண்டிருந்தது 'கோழிக்கால்' அரிவாள்.

ஓட்டத்தின் துரிதத்தில் அசைந்தன குத்திட்டிகள். நிலவின் மஞ்சள் ஒளியில் மினுக்கின அரிவாள்கள். கண்களில் மின்னும் பயத்துடன் மூச்சிரைக்க ஓடினாள் பூஞ்சோலை. மனம் 'கதிரவன்.. கதிரவன்' என்று திரும்ப திரும்ப உச்சரித்தது. 'என்னவருக்கு எதுவும் நேர்ந்து விடக்



கூடாது தாயே' என்று வாய் முணுமுணுப்பாய் கரையடி இசக்கியை வேண்டிக் கொண்டது.

குதிரை மறிச்சான் ஓடைக்குள் இறங்கி ஓடியது கோபக் கூட்டம். அவர்கள் கண்களில் தூரத்து ஜக்கடா வண்டிகளின் நிழல் உருவங்களும், குதிரைகளின் அசைவுகளும் தெரிந்தன.

"அதோ.. அதோ" - என்றன குரல்கள்.

அவர்கள் கண் எதிரே சடசட வென்று ஒலியுடன் சரிந்து விழுந்தது பனைமரம் ஒன்று. கூட்டத்தின் கோபக் கனல் குபீரென்று பற்றி எரிந்தது.

"எலேய் பொறம்போக்குக்கு பிறந்த பயல்களா.." - ஆவேசமாய் கத்திக் கொண்டே முன்னால் ஓடினார் ரெத்தினபாண்டி நாடார். அவர் வலது கரத்துக்கு வந்திருந்தது 'கோழிக்கால்' அரிவாள். அவரை பின் தொடர்ந்து ஓடியது ஆயுதக் கூட்டம்.

அடுத்த சில விநாடிகளில் பாஞ்சை வீரர்களும் பொங்கி வந்த கூட்டமும் மோதிக் கொண்டன. ஆயுதங்கள் 'ட்ணடங்' 'ட்ணிங்' சத்தத்துடன் பேசிக்கொண்டன. கறுப்பு பனை மரங்களின் உடலெங்களும் சிவப்பு இரத்த புள்ளிகள்.

ஓடை மணலில் ஓட முடியாமல் ஓடி வந்து கொண்டிருந்த பூஞ்சோலை, ஏதோ ஒரு பொருளில் கால் தடுக்கி முகம் குப்புற விழுந்தாள். அவசரமாய் கை ஊன்றி எழுந்தாள். தலை எங்கும் மண்ணின் துகள்கள். 'எது தடுக்கியது..? திரும்பிப் பார்த்தாள். ஒரு உருவம் கவிழ்ந்து கிடந்தது. நெருங்கிப் பார்த்தாள். அதன் முதுகில் சிவப்பாய் இரத்தத் திட்டு.

பதட்டமாய் அந்த உருவத்தைப் புரட்டியவள் அதிர்ந்தாள். அந்த உருவம் கதிரவன் . உயிர் பிரிந்திருந்தது.

ஓவென்று அலறியபடி தரையில் விழுந்தாள், புரண்டாள். எழுந்தாள். கதிரவனின் உடலை அள்ளி மடியில் போட்டுக் கொண்டு ஹோவென்று பெருங்குரல் எடுத்து அழுதாள்.

"கதிர்.. கதிர்.. நாளைக்கு என்னை பொண்ணு கேட்டு வருவியா கதிர்.. வாய் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டியா கதிர்.. என்னைத் தனியா விட்டுட்டு எங்கே பாயிட்டே கதிர்.. பேசு கதிர்.. கண்ணைத திறந்து பாரு கதிர்.."

கதிரவனின் உடலை வேகமாய் உலுக்கினாள் உயிரற்ற உடல் வேகமாய் அங்கும் இங்கும் அசைந்தது.

சற்று தள்ளி மண்மேட்டில் சண்டை உக்கிரமாய் நடந்தது. அலறல் ஒலிகள் பயமுறுத்தின உறக்கம் வராத ஆந்தைகளை. ஆயுதங்கள் ஆனந்தமாய் சிவப்பு பூசிக் கொண்டன. நட்சத்திர கண்கள் படபடத்தன. பயத்தில் நிலவு அவசரமாய் மேகத்துக்குள் ஒளிந்தது.

ஆவேசம் வந்தவளாய் எழுந்தாள் பூஞ்சோலை. பொங்கி வந்த கண்ணீர் மளமளவென்று வழிந்தது.

"கரையடி இசக்கியாத்தா.. உன்னை நம்பி இருந்தவனை நிர்க்கதியாய் விட்டுட்டியே தாயே. கதிரவன் சிந்தின இரத்தம் நீ சிந்தின இரத்தம்.. அவன் உன்னோட பிள்ளை.. அவனை உன் மண்ணில, உன் கண் முன்னாலேயே துடிதுடிக்க குத்தி கொண்ணுட்டான் பாஞ்சாலங்குறிச்சிக் காரன் உன் ஜனங்க உன் கண் முன்னாலேயே இரத்தம் சிந்திட்டிருக்காங்க. இதுக்கு ஒரு முடிவு கட்டு தாயே.



இன்றிலிருந்து வெள்ளைச் சேலை கட்டி விரதம் இருந்து வர்ற அமாவாசைக்கு என்னையே உனக்கு பலி கொடுக்கப் போறேன். என்னை ஏத்துக்கிட்டு பாஞ்சாலங்குறிச்சியை மண் மேடாக்கம்மா. கோட்டை இருந்த இடம் குபபை மேடாகட்டும். எருக்கு முளைக்கட்டும். உப்பு விளையட்டும். இது சத்தியம். கரையடி தாயே உன் மேல் ஆணை" என்றவள் மயங்கி கதிரவன் உடல் மீது சரிந்தாள பூஞ்சோலை.

மல்லம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் மளமள வென்று வழிந்தது. மோகனவல்லியின் விழிகள் அழுவதற்கு தயார் நிலையில் இருந்தன.

"கதையே கண்ணீரை வரவழைத்து விட்டது" - என்றால் மோகனவல்லி.

"பெண் பிள்ளைகள் என்றால் அழவேண்டும் என்று ஏதாவது நியதி இருக்கிறதா..?" - என்று கேட்டார் கடற்கரை நாயக்கர்.

"பூஞ்சோலை நிலை எனக்கு வந்திருந்தால் சாபம் இட்டிருக்க மாட்டேன். சாட்டையைத் தூக்கியிருப்பேன்" - என்றாள் மோகனவல்லி.

"'பாஞ்சாலங்குறிச்சி வீரர்களே நேரில் சென்றிருக் கிறார்கள் திருட்டுப் பனையை வண்டிகளில் ஏற்றி வருவதற் காக. எதிர்த்தவர்களை ஈவு இரக்கமின்றி கொன்றிருக் கிறார்கள். பனைகள் வெட்டி வரப்பட்டன. வந்த பனைகள் எதற்காக பயன்படுத்தப்பட்டன. இந்த நடவடிக்கைகள் பாஞ்சை அரசுக்கும் உடன் பாடான ஒன்றுதானா. தாங்கள் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்"

- பூபதி நாடார் பணிவான குரலில் கேட்டார் கடற்கரை நாயக்கரை நோக்கி. அவர் சிறிது நேரம் மௌனமாய் இருந்தார். தூரத்து இருட்டை வெறித்துப் பார்த்தார். பின் நாக்கால் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"தெரிந்து சில தவறு நடந்திருக்கும். தெரியாமல் சில தவறுகள் நடந்திருக்கலாம். அப்படி நடந்தவற்றில் ஒன்று தான் இந்த நிகழ்ச்சி. திருச்செந்தூர் முருகன் கோவிலில் பூசை நடக்கும் அதே நேரத்தில் பாஞ்சாலங்குறிச்சியில் பூசை நடத்தப்பட வேண்டும் என ஆசைப்பட்டார் வீரபாண்டியர். அதை செயல்படுத்த திருச்செந்தூருக்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கும் இடையில் வரிசையாய் மணி மண்டபங்கள் கட்டுவதென்று முடிவு செய்தார். ஒரு மண்டபத்துக்கும் இன்னொரு மண்டபத்துக்கும் உள்ள இடைவெளி ஒரு நகரா ஒலி காதுக்கு எட்டும் தூரமாய் வரையறுக்கப்பட்டது. திருச்செந்தூர் முருகன் அருகிலுள்ள நகரா ஒலிக்கும் தொடர் ஒலியாய் நகரா ஒலி பாஞ்சாலங் குறிச்சி அரண்மனையைத் தொடும். உடனே வீரபாண்டியர் பூசை செய்வதற்கு ஏற்பாடு. அதன்படி வேகமாய் பணி நடந்தது. மணி மண்டபங்கள் என்று அழைக்கப்படும் முரசு மண்டபங்கள் எழுப்பப்பட்டன. பாஞ்சைக் காவலன் ஆசைப்படி பூசையும் நடந்தது'' - என்று சொல்லி நிறுத்தினார்.

''இதற்கும் பனை மரத்துக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது'' - வியப்பாய் கேட்டாள் மோகனவல்லி.

"சம்பந்தம் நிறைய இருக்கிறது மோகனவல்லி. இன்று இடிந்து குட்டிச் சுவராய் கழுதைகள் முதுகு உராயும்



36680 5398937

நிலையில் இருக்கும் மணி மண்டபத்துக்கு தொடர்பிருக்கிறது. அந்த மணி மண்டபங்களுக்கு கூரை அமைக்க பனங்கம்புகள்தான் பயன்படுத்தப்பட்டன. அந்தப் பனங்கம்புகளுக்காக திருடப்பட்டதுதான் அந்த பனை மரங்கள்" - என்றவரிடமிருந்து நீளமாய் ஒரு பெருமூச்சு எழுந்தது.

"பனைமரங்களுக்கு அரசு கஜானாவில் இருந்து பணம் வாங்கிக் கொண்ட அதிகாரிகள், வீரர்களுக்கு கையூட்டு கொடுத்து நடத்திய திருட்டு இது என்று பேசிக் கொள் கிறார்கள். இந்த செய்தி பின்னர்தான் வீரபாண்டியன் காதை எட்டியதாம். இது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்கு தெளிவாய் தெரியவில்லை. பாஞ்சாலங்குறிச்சி சாபத்துக்கு உள்ளானதோ என்னவோ, சிலருடைய கோபத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

இதனால் சில சமூகத்தின் வெறுப்புக்கு உள்ளாகியிருக் கின்றான் வீரபாண்டியன். அதுவும் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாய் அமைந்திருக்கலாம்" - என்றார் கடற்கரை நாயக்கர்.

- "இன்று நிலைமை மாறிவிட்டது" என்றான் இளைய பாண்டியன்.

"உண்மை, கட்டபொம்மனை வெறுத்தவர்கள் கூட ஊமைத்துரையை தலைவனாக ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள். தங்கள் கோப தாபங்களை மறந்து ஒரே அணியில் திரண்டிருக்கிறோம். புரட்சிப் படையில் கல்யாணத்தேவரும், பூபதி நாடாரும், தோமாச்சி முதலியாரும், பெருமாள் கவுண்டரும், பெருமாள்சாமி பிள்ளை

யும், சேர்ந்திருப்பதே இதற்கு சாட்சி. இந்த படை நிச்சயம் விரட்டும் வெள்ளையனை" - என்றார் கடற்கரை நாயக்கர்.

"சாபங்களை பொய்க்கச் செய்வோம். மூட நம்பிக்கையை தகர்த்தெறிவோம். மீண்டும் பாஞ்சாலங்குறிச்சியை நிமிர்ந்து நிற்கச் செய்வோம். முதல் புரட்சி வெடி பாளையங்கோட்டையில் வெடிக்கட்டும்" - என்றாள் உணர்ச்சி மயமான குரலில் மோகனவல்லி.

# 24

## வேஷங்கள் பலவிதம்

1801-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் இரண்டாம் நாள்.

தை மாதத்துச் சூரியன் இரத்தச் சிவப்பாய் கீழ் வானத்தில் தெரிந்தான். பறவைகள் பயக்குரல் எழுப்பி பறந்தன.

பாளையங்கோட்டை நகர் மக்கள் வழக்கம் போல் கண் விழித்தனர். வானம் மேக ஆடைகளை துறந்து விட்டு நிர்வாண நீலத்தில் இருந்தது.

அன்று நடக்கப் போகும் விபரீதம் தெரியாமல் பொன்றினிந்த புனல் பெருகும் பொருநையெனும் திருநதியான தாமிரவருணி நதி துள்ளிக் குதித்து ஓடிக் கொண்டிருந்தது. கரையோர நாணல்கள் ஆற்றின் வேகத்துக்கு தலை வணங்கி நின்றன.

பாளையங்கோட்டைச் சிறைச்சாலை அமைதியா யிருந்தது கோட்டை வாயிலில் காவல் நின்ற சிப்பாய், நீண்ட துப்பாக்கியை மதில் சுவரில் சரித்து வைத்து விட்டு பல் குத்திக் கொண்டிருந்தான்.

அதேநேரம் பாளையங்கோட்டை நகருக்குள் நுழைந்தன நான்கு 'ஜக்கடா' வண்டிகள். மாடுகளின் கழுத்தசைப்பில்

மணிகளின் ஒலியும் காற்றில் மிதந்து வந்தன. அத்தோடு இனிமையான குரலில் பாட்டும் வந்தது.

"மாடு ரெண்டும் மதுரை வெள்ளை
மணிகள் ரெண்டும் திருநெல்வேலி
குப்பி ரெண்டும் கும்பகோணம்
குலுங்குதம்மா சாலைப் பாதை
..................................................
.................................................."

வண்டி ஓட்டிகள் இளமையைத் தாண்டியவர்கள். நரைக்கத் தொடங்கிய பருவம். இறுக்கமாய் தலைப்பாகை கட்டியிருந்தனர் தங்கள் மேல் துண்டால். அவர்கள் கண்கள் அங்கும் இங்கும் அலைந்தன யாரையோ எதிர்பார்ப்பது போல.

நான்கு வண்டிகளிலும் வைக்கோலால் பத்திரப்படுத்தப் பட்ட ஓலைப் பெட்டிகள் அடுக்கப்பட்டிருந்தன. அந்த வண்டிகளிலிருந்து கருப்புக் கட்டி மணமும், மாம்பழ மணமும் கருவாட்டு நாற்றமும் காற்றில் கலந்து வீசியது.

வண்டிகளில் அடுக்கப்பட்டிருக்கும் ஓலைப் பெட்டிகளை நகர்த்திப் பார்த்தால், அடியில் மணக்கும் மாம்பழமோ, முகத்தை சுளிக்க வைக்கும் கருவாடோ இருக்காது. வாயைப் பிளக்க வைக்கும் உயிர் குடிக்கும் ஆயுதங்கள் இருந்தன. குத்திட்டி, சுருள் வாள், வீச்சரிவாள் என்று வரிசையாய் அடுக்கப்பட்டிருந்தன வைக்கோலுக்குள்.



மாம்பழ வியாபாரிகளுக்கு குத்திட்டி எதற்கு. கருவாடு வெட்டிக் கொடுக்க சுருள்வாள் வேண்டுமா என்ன. இப்படி அடுக்கடுக்காய் சந்தேகங்கள் வருபவர்கள் வண்டிக் காரர்களின் முகத்தை உற்றுப் பார்த்தால் சந்தேகங்களை தூக்கி தூரமாய் எறிந்து விடுவார்கள்.

நெருங்கிப் பார்த்தால் தெரியும் முதல் வண்டியை ஓட்டிச் செல்பவர் கல்யாணத் தேவர். அடுத்த வண்டி பூபதி நாடார். அடுத்து தோமாச்சி முதலியார். கடைசி வண்டி பெருமாள் கவுண்டர்.

வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாய் உற்சாகமாய் சென்றன சந்தைத் திடலை நோக்கி. கல்யாணத் தேவர் பாட்டுக்கு வண்டி மாடுகள் கூட தலையசைத்து கழுத்து மணிகளை இசைத்தன.

"மச்சான் வாரார் மச்சான் வாரார்
தேவர் மாம்பழ வண்டியில
மயக்கி போட்ற பொண்ணு வாரா
நாடார் கருப்பட்டி வண்டியில."

"யோவ் தேவரே.. பாட்டு பாட்றது சரி, வண்டியை கொண்டு உழப்பில உட்டுராதேயும்.. எவனாவது வந்து மறிச்சிடப் போறான்."

"கல்யாணத் தேவன் வண்டியை மடக்கி போட்றதுக்கு இனிதான் ஒரு குஞ்சு முளைச்ச பையன் பிறந்து வரணும் நாடாரே" - என்று கல்யாணத் தேவர் சொல்லி முடிப்பதற்கும், வண்டிக்கு குறுக்கே குதிரை வீரன் ஒருவன் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

அவசரமாய் மாட்டின் கயிறுகளை இழுத்து பிடித்தார். அவன் கையிலிருந்த கூர்மையான வேல் கல்யாணத் தேவரின் நெஞ்சை குறி வைத்து நீண்டது.

"உள்ளே என்ன இருக்கிறது" அதிகார குரலில் கேட்டான் கும்பினிச் சிப்பாய்.

"சேலத்து மாம்பழம் ஐயா. பாளையங்கோட்டையில் கூடும் சந்தைக்காகவே ஓலைப் பெட்டியில் அடைத்து கொண்டு வருகிறோம். உங்களுக்கு வேண்டுமென்றால்.."

குரலை இழுத்தார் கல்யாணத் தேவர். அகலமாய்ச் சிரித்தான் சிப்பாய். கயிற்றால் சுற்றி கட்டப்பட்டிருந்த ஓலைப் பெட்டி ஒன்றை தூக்கி நீட்டினார். கையிலிருந்த வேலை தரையில் போட்டுவிட்டு மாம்பழ பெட்டியை அவசரமாய் வாங்கிக் கொண்டான்.

"பின் வண்டியில் என்ன இருக்கிறது?"

- என்று கேட்டான் கண்கள் பளபளக்க.

"ஊறக் கருவாடு இருக்கிறது ஐயா, உங்களுக்கு தேவையென்றால்.." - உரத்த குரலில் கேட்டார் பூபதி நாடார்.

"வேண்டாம், வேண்டாம், போகட்டும் வண்டி" - என்றான் கும்பினிச் சிப்பாய். நான்கு வண்டிகளும் நகர்ந்தன வேகமாய் சந்தைத் திடலை நோக்கி.

சற்று நேரத்தில் மேலும் நான்கு வண்டிகள் நகருக்குள் நுழைந்தன. அசைந்து வந்த வண்டிகளின் முதுகில் மண்ணினால் செய்த பானைகள், குடங்கள் தெரிந்தன. ஒன்றன் மீது ஒன்றாய் மண் பானைகளை அடுக்கி கட்டி



யிருந்த அழகு, தேன்கூடு போல் இருந்தது. கீழே விழுந்தால் உடைந்து போகும் மண்பாண்டங்களுக்கு அடியில் கோட்டையைச் சிதறடிக்க கூடிய வெடி குண்டுகள் இருந்தன.

தெருவோரமாய் நின்று வண்டிகளைப் பார்த்துக் கொண்டு நின்ற நகர வாசிகள் இருவர் வியப்பாய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"பொங்கல்தான் முடிந்து விட்டதே. இந்த வார சந்தைக்கு ஏன் இத்தனை கூட்டமாய் வியாபாரிகள் வருகிறார்கள்..?" என்று சொல்லிவிட்டு கடகடவென்று சிரித்தார். பக்கத்தில் நின்றிருந்தவரும் சிரிப்பில் கலந்து கொண்டார். நாளை விடிந்ததும் சிரிக்க முடியாது என்பது இருவருமே அறிந்திருக்கவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாய் புரட்சி வீரர்கள் பல்வேறு வேடங்களில் நகருக்குள் நுழைந்த வண்ணமிருந்தனர்.

தலையில் கள் பானைகளைச் சுமந்து கொண்டு சட்டை அணியாத ஆடவர்கள் சந்தைத் திடலை நோக்கி நடந்தனர். அவர்கள் இடுப்பில் விஷத்தில் தோய்ந்த கத்திகள் இருந்தன.

விறகுக் கட்டுகளை தலையில் வைத்துக் கொண்டு நகர வீதிகளில் கூவித் திரிந்தனர் குறுவாட்கள்.

ஒரு கூடையில் கை வெடிகுண்டும், இன்னொரு கூடையில் பாம்புமாய் அலைந்தனர் சில பாம்பு வித்தைக் காரர்கள். பாம்பு கூட்டத்தில் குழப்பம் உண்டாக்க, கை வெடிகுண்டு சிறைச்சாலை கதவுகளுக்கு.

காவடிகளையும், கமண்டலங்களையும் தூக்கிக் கொண்டு 'முருகா, முருகா' என்று அழைத்துக் கொண்டே

திரிந்தனர் திருநீறு பூச்சாண்டிகள். அழைப்பு புரிந்த மோர் விற்கும் புரட்சிப்பெண்கள், வணங்கி திருநீறு பெற்றனர். ரகசிய செய்திகளையும் பரிமாறிக் கொண்டனர்.

பிச்சைக்காரர்கள் வேடத்தில் பிச்சை பாத்திரங்களை ஏந்தித் திரிந்தனர் சில இளைஞர்கள்.

தூர தேசத்து சுற்றுலா பயணிகள் போல, உணவும் இடமும் தரும் மடங்களில் இடம் பிடித்தனர் சிலர்.

சூரியன் வான் உச்சியிலிருந்து நழுவ ஆரம்பிப்பதற்குள் சிறைச்சாலைக்கு முன் இருந்த சந்தைத் திடல் நிரம்பி வழிய ஆரம்பித்தது. வாங்க வந்தவர்களை விட விற்க வந்தவர்களே அதிகம் இருந்தது போல் இருந்தது.

வழக்கமாய் சந்தைக்கு வரும் வியாபாரிகள், புதிது புதிதாய் காய்கறி வியாபாரிகளும், எண்ணெய் வணிகர்களும் வந்திருப்பதைக் கண்டு வியப்படைந்தனர். காரணத்தை அறிந்து கொள்ள புரட்சி வீரர்களை நெருங்கினர். கிடைத்த பதிலில் திருப்தி அடையாமல் தங்கள் இடத்துக்கு திரும்பினர். சரியான பதில் கிடைக்காததால் அடிக்கொருதரம் அவர்களை உன்னிப்பாய் பார்ப்பதும், வியாபாரத்தை கவனிப்பதுமாய் இருந்தனர்.

வெள்ளைச் சிப்பாய்களோ, வெள்ளை அதிகாரிகளோ எந்தவித சந்தேகமுமின்றி தங்கள் பணிகளை கவனித்தனர்.

பாளையங்கோட்டை நகரத்து சீமாட்டி ஒருத்தி மாம்பழக் குவியல் முன் அமர்ந்திருந்த பூபதி நாடாரை நெருங்கி- "ஒரு மாம்பழம் என்ன விலை?" - ன்று கேட்டாள்.

"எட்டு அணா" - என்றார்.



"மாம்பழத்து விலை கேட்டால் மாமரத்து விலை சொல்கிறாய்!"

"கொட்டைக்கு விலையோ, பழத்துக்கு விலையோ, இஷ்டம் இருந்தால் வாங்குங்கள். கஷ்டம் இருந்தால் திரும்புங்கள்" - என்றார் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு.

"வியாபாரம் செய்பவர் சிரித்த முகமாக இருக்க வேண்டாமா.."

"சந்தையில் சிரித்தால் கதவுக்கு தாழ்போட்டு என்னை சந்தியில் நிறுத்தி விடுவாள் என் பொண்டாட்டி"

"உம் நிலையை நினைத்தால் சிரிப்பும் வருகிறது. அழுகையும் வருகிறது"

"இரண்டும் ஒரே நேரத்தில் வந்தால் வைத்தியரிடம் கவனிப்பது நல்லது"

"ம்.. உம்மிடம் பேசி ஜெயிக்க முடியாது. முடிவாய் சொல்லும் ஒரு பெட்டி பழம் வேண்டும். என்ன விலை?"

"கடைசி விலை. ஒரே விலை. ஏழு ரூபாய் கொடுத்து விடுங்கள்." - என்றார்.

"ஏழு ரூபாய்க்கு முழு குதிரையே வாங்கிவிடலாம். ம்.. வருகிறேன். பைத்தியக்கார வியாபாரிகள் நிறைய பேர் இன்று சந்தைக்கு வந்திருக்கிறார்கள்" என்று முணுமுணுத்தபடி நகர்ந்தாள் அந்த பெண்.

"ஒரு கூடை மாம்பழத்தில் எத்தனை மாங்கொட்டை கிடைக்கும் அத்தனை மாங்கொட்டைகளையும் மண்ணில் புதைத்தால் எத்தனை மாமரங்கள் முளைக்கும். குதிரை

கொட்டையை மண்ணில் புதைத்தால் குதிரை முளைக்குமா, விபரம் கெட்ட பொம்பளையாய் இருக்கிறாளே" என்றார் பூபதி நாடார். கல்யாணத் தேவர் உட்பட அனைவரும் சிரித்தனர் 'கொல்' லென்று.

புரட்சி வீரர்கள் தாங்கள் வைத்திருந்த புல்லுக்கும், விறகுக்கும், மற்ற பொருட்களுக்கும் அதிகவிலை கூறி பொழுது சாயும் நேரம் வரை தங்கள் பொருட்களை விற்றுவிட்டாமல் பார்த்துக் கொண்டனர்.

பொருட்களை விற்று விட்டால் சந்தையை விட்டு நகர்ந்து விட வேண்டுமே. நகராமல் இருந்தால் காவல் சிப்பாய்கள் சந்தேகப்படக் கூடும். அதற்காகத்தான் 'அதிக விலை' நாடகம்.

சில புரட்சி வீரர்களும், புரட்சிப் பெண்களும் குறைந்த விலைக்கு விற்றனர், தாங்கள் கொண்டு வந்த பொருட்களை.

அவர்கள் - கள் விற்றார்களும், சோளக் கதிர் விற்றவர்களும்.

அதற்கும் காரணம் இருந்தது.

புரட்சி வீரர்கள் பெரிய பெரிய மண்பானைகளில் ஊற்றி வைத்திருந்த பனங்கள்ளில் கிறங்க வைக்கும் மருந்தை கலந்து வைத்திருந்தனர்.

அதனால் தாராள மனதுடன் குறைந்த விலைக்கு ஊற்றிக் கொடுத்தனர் சிப்பாய்களுக்கு.

அருகிலேயே இளம் பெண்கள், சோளக் கதிர்களில் அளவுக்கு அதிகமாய் உப்பு தடவி, அதிக காரமாய் மிளகாய்



வற்றல் தூள் தடவி நெருப்பில் வாட்டிக் கொடுத்தனர் சகாய விலையில்.

வாங்கித் தின்ற கும்பினிச் சிப்பாய்களுக்கு சோளக் கதிரில் தடவியிருந்த அதிக உப்பும், அதிக உறைப்பும் தாகத்தை அதிகப்படுத்தின. கொளுத்தும் வெயிலும் துணை சேர்ந்து கொண்டது.

தாகத்தில் தவித்த சிப்பாய்கள், மீண்டும் மீண்டும் புரட்சி வீரர்கள் கிறக்க மருந்து கலந்து வைத்திருந்த கள்ளை பட்டை பட்டையாய் வாங்கிக் குடித்தனர்.

மாலை மயங்கும் நேரம். சிறைச்சாலை காவல் சிப்பாய் களையும் மயக்கம் சூழ ஆரம்பித்திருந்தது.

சிறைச்சாலைக்கு எதிரே இருந்த சந்தை திடல் இன்னும் கலகலப்பு குறையாமல் இருந்தது. புரட்சி வீரர்களின் கண்களில் ஏதோ ஒரு எதிர்ப்பு தெரிந்தது.

அந்த நேரம் - சந்தைக்குள் நுழைந்தார் சிவனடியார் ஒருவர். நரைத்து வெளுத்த தலைமுடி.. நீண்ட நரை தாடி அவரைக் கண்டதும் தேவர் முகத்தில் புன்னகை பிறந்தது.

"கடற்கரை நாயக்கர் வந்து விட்டார்" - என்றார் கிசுகிசுப்பாய் பூபதி நாடாரிடம்.

# 25

## பொட்டு மேல பொட்டு

சிவனடியார் வேடத்தில் கடற்கரை நாயக்கர் சந்தை திடலுக்குள் காலடி எடுத்து வைத்ததும் மாறுவேடத்தில் இருந்த புரட்சி வீரர்களுக்கு புது உற்சாகம் வந்திருந்தது.

அவருக்குப் பின்னால் சற்று பணிவாய் சீடர்கள் போல காவி அங்கி அணிந்து, நெற்றியிலே அகலமாய் திருநீறு இட்டு, கழுத்திலே ருத்திராட்ச மாலை அணிந்து 'சிவ சிவ' என்று உச்சரித்துக் கொண்டு வந்தனர் சிவத்தையாவும் முத்து வீரனும்.

கல்யாணத் தேவர் அவசரமாய் எழுந்து, தோளில் கிடந்த துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு கடற்கரை நாயக்கரின் காலடியில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்.

"கைலாச நாதர் துணையிருப்பான், எழுந்திரு மகனே" - என்றார் சாந்தமான குரலில். எழுந்தார் கல்யாணத் தேவர்.

"வண்டி வண்டியா கொண்டு வந்ததை எப்ப தூக்கணும் சாமி" - பணிவான குரலில் கேட்டார், குவியலாய் கொட்டிக் கிடந்த மாம்பழங்களைச் சுட்டிக் காட்டி.



"இருள் வரும் கீழ்திசையில் ஒலிவரும், தென்திசையில் ஒளி ஆடும். நீயும் விளையாடு மகனே" என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு இடுப்பிலிருந்து இரண்டு பைகளை எடுத்தார். ஒரு பைக்குள் துழாவி சிறிது திருநீறை எடுத்து கல்யாணத் தேவரின் உள்ளங்கையில் வைத்து விட்டு நகர்ந்தார் சிவனடியார் வேடத்திலிருந்த கடற்கரை நாயக்கர். அவரை பின் தொடர்ந்தனர் காவி அணிந்திருந்த முத்து வீரனும், சிவத்தையாவும். காவி ஆடைக்குள் மறைந்திருந்தன கைத் துப்பாக்கிகள்.

அவர்கள் நடந்து செல்வதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த கல்யாணத் தேவர் திடுக்கிட்டு திரும்பினார் தன் காதருகே கேட்ட குரலால்.

"சாமீ., கும்பிடறேன் சாமீ. ஊசி, பாசி மாலை, நரிக்கொம்பு, புலிப் பல்லு வேணுமா சாமீ." - முத்துப்பல் காட்டியபடி நின்று கொண்டிருந்தாள் மோகனவல்லி. நரிக்குறத்தி வேடம் அவளுக்கு கன கச்சிதமாய் பொருந்தி இருந்தது.

அவள் அருகில் கழுத்தில் புலி நகம், கைபுஜத்தில் நரிப்பல், மணிக்கட்டில் தாயத்து, பாம்பு விரலில் யானை முடியுடன் நின்று கொண்டிருந்தான் இளைய பாண்டியன். குறத்திக்கேற்ற குறவன்.

"என்ன சாமீ.. புலிப் பல் வேண்டாமா.." - என்று கேட்டாள் மோகனவல்லி.

"பாட்டு ஒண்ணு படிச்சா, புலிப் பல் ஒண்ணு வாங்குவோம் என்ன பாட்டு படிக்கறியா.." - என்று கேட்டார் ஒரு வியாபாரி.

"படிக்கிறோம் சாமீ" - என்றான் இளைய பாண்டியன். சுற்றியிருந்தவர்கள் உற்சாகப்படுத்த பாடத் தொடங்கினான்.

"*பொட்டு மேலே பொட்டு இடும்

போக்கிரி பெண்ணைக் கட்டிக்கிட்டேன்

பொட்டுக் கலைந்த தென்னடி?

ஏ குறத்தி

பொய் புரட்டு வந்த தென்னடி?"

பதில் பாட்டு படித்தாள் மோகனவல்லி:

"தெருப்பக்கத் திண்ணையிலே

தெரியாம தூங்கிட்டேன்

நெத்தி வேர்வை பட்டு அல்லோ

ஏ குறவா

நீலப் பொட்டு கலைஞ்சு போச்சுய்யா!" - பாட்டுக்கு தாளம் போட்டனர். சந்தை வியாபாரிகளும், மக்களும். மோகனவல்லியை சுற்றி சுற்றி வந்து தோள் பட்டையில் இடித்துப் பாடினான் பறல் ஆடி வீரன். பதில் பாட்டு பாடினாள் வனிதை. இருமல் வந்து பாடல் பாதியில் அறுந்தது.

"ஆராவது ஒரு மடக்கு தண்ணி குடு சாமீ" - என்று கேட்டாள் மோகனவல்லி.

* நாட்டுப்புறத் தொழிற் பாடல்கள் பதிப்பாசிரியர்: லேனா தமிழ்வாணன் எம்.ஏ.

முதற் பதிப்பு, பக்கம் 65.



"கார மிளகாய் போட்ட காரம்பசு மோர் வேணும்?" - குவளை ததும்ப மோரை நீட்டினாள் மோர் கூடைக்காரி.

"துட்டு வேண்டாமா..."

"துட்டு எதுக்கு.. இரண்டு ஊசி குடு- இல்லாட்டி பாசி குடு" - என்றாள மோர்க்காரி.

குவளையை வாங்கி பாதி குடித்துவிட்டு வெட்கத்துடன் மீதியை இளைய பாண்டியனிடம் நீட்டினாள். புன்னகையுடன் வாங்கிக் குடித்தான்.

"நீங்க இரண்டு பேரும் சிரிக்கிற சிரிப்பை பார்த்தா கல்யாணம் ஆன மாதிரி தெரியலியே" - என்று ஒரு கண்ணை மூடி திறந்து சிரித்தாள் மோர்க்காரி வேடத்தில் இருந்த மல்லம்மா.

மெல்ல மெல்ல வெளிச்சம் ஓடத் தொடங்கியிருந்தது இருட்டு அதைவிட வேகமாய் விரட்டிக் கொண்டு வந்தது. சந்தைக்கு வந்த மக்கள் 'இன்று விலையும் அதிகம் வியாபாரிகளின் கூட்டமும் அதிகம்' என்று முணுமுணுத்தபடி தங்கள் இல்லங்களை நோக்கி திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்கள் அறிந்திருக்கவில்லை சந்தைத் திடல் இரத்தமாகப் போகும் விபரீதத்தை. பறவைகள் உறங்குவதற்கு தங்களை ஆயத்தம் செய்துகொண்டிருந்தன, நடு இரவில் தங்கள் உறக்கம் கெடப் போகிறது என்பதை அறியாமல்.

இருள் முழுவதுமாய் பாளையங்கோட்டையை பிடித்துக் கொண்டது. வானத்தில் பயங் கலந்த முகத்துடன் தெரிந்தது வெண்ணிலவு. தைரியம் இழந்த நட்சத்திரங்கள் கண் இமைத்துக் கொண்டிருந்தன ஓட இயலாமல்.

மேகங்கள் ஒன்று கூடி 'தூர தேசம் போய் விடலாமா' என்று ஆலோசித்துக் கொண்டிருந்தன.

தூரத்து முள்உடை மரங்களில் அமர்ந்திருந்த துரோக சில் வண்டுகள் 'ஆபத்து ஆபத்து' என்று விடாமல் கத்திக் கொண்டிருந்தன. பாளையங்கோட்டை சிறைக் காவலர்கள் இவை எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை. மது மயக்கத்தில் இருந்தனர். சிலர் கோட்டைச் சுவரில் சாய்ந்து நின்று தங்களைத் திடப்படுத்திக் கொள்ள முயன்றனர். சில சிப்பாய்கள் அதுவும் இயலாமல் தரையில் அமர்ந்து விட்டனர். பனங்கள் சாப்பிடாத சில காவலர்கள் மட்டும் கோட்டை வாயிலில் ஏந்திய துப்பாக்கியுடன் கவனமின்றி நின்று கொண்டிருந்தனர். அவர்களின் நினைவுகள் தங்கள் மனைவியை தேடிச்சென்றிருந்தன.

பலவிதமான வேடங்களில் வந்திருந்த புரட்சி வீரர்கள் சந்தைத் திடலிலும், மரங்களின் அடர் இருட்டிலும் தெருவோர திண்ணைகளிலும் தங்கள் 'ஜக்கடா' வண்டிகளின் கீழும் சுருண்டு படுத்திருந்தனர். ஆனால் அவர்கள் கண்களை தூக்கம் நெருங்க முடியவில்லை. கண்களில் மிதக்கும் புரட்சிக் கனலை தூக்கத்தால் விழுங்க முடியுமா...?

# 26

## பறந்தது சிறைப்பறவை

அதே நேரம் - சிறையிலிருந்து இரண்டு கல் தொலைவில் இருந்த மேஜர் மெக்காலேயின் மாளிகையில் உற்சாகம் குமிழியிட்டுக் கொண்டிருந்தது. வெண்ணிற அங்கியும் சிவப்பு பட்டையும் அணிந்த வேலைக்காரர்கள் எறும்புகளுக்கு இணையாக அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தனர் சுறுசுறுப்பாய்.

மேற்கத்திய இசைக்கேற்ப வெள்ளையர்கள் தாளம் தப்பாமல் ஆடிக்கொண்டிருந்தனர்.

அடுத்தவன் மனைவியின் இடுப்பை கோர்த்தபடி மேஜர் மெக்காலே தன் கையிலிருந்த மதுக்கிண்ணத்தை எதிரில் வருகின்றவர்கள் மதுக் கிண்ணத்தோடு மோதி 'பிரிட்டிஷ் பேரரசின் வெற்றிக்காக' என்று சொல்லி அகலமாய் சிரித்து சிரித்தே நிறைய குடித்திருந்தார். நீலமும் சிவப்பும் கலந்து மினுக்கின கண்கள்.

ஆடிக்கொண்டிருப்பவர்கள் ஆடி முடித்தவுடன் சாப்பிடுவதற்காக காத்திருந்தன பொரித்த வான் கோழிகள், வெண் ஆடை உடுத்தியிருந்த இடுப்புயர மேஜைகளில்.

திடீரென இசைக் கருவிகள் அதிர்ந்தன. முழங்கின.

உச்சத் தவனியில் ஒலித்தன.

நிதானமாய் அசைந்து கொண்டிருந்த வெள்ளை ஆண்களும், பெண்களும் வேகமாய் சுழன்று சுழன்று ஆடினர்.

மின்னல் வேகத்தில் முத்தங்களையும் பரிமாறிக் கொண்டனர்.

அதே வேளையில் -

தங்கள் ஜோடிகளையும் மாற்றிக் கொண்டனர்.

மீண்டும் முத்த பரிமாற்றம்

அந்தக் கூட்டத்தில் உற்சாகம் குமிழி குமிழியாய் எழுந்து எங்கும் பறந்து கொண்டிருந்தது.

மேஜர் மெக்காலே எந்தக் கவலையுமில்லாமல் கையில் மதுக்கோப்பையுடன் சிரித்துக் கொண்டிருந்தார்.

லெப்டினண்ட் கார்வெள்ஸூம் முத்துக் கருப்பனும் மாளிகையை விட்டு மெல்ல நழுவி, இரண்டு குதிரைகளில் சிறைச்சாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர், இரவுப் பெண் ஒருத்தியை சந்திப்பதற்காக.

கடற்கரை நாயக்கர் எழுந்து அமர்ந்தார். கீழ் வானத்தை நோக்கினார். அவர் எதிர்பார்த்த நட்சத்திரம் முளைத்திருந்தது. தாடிக்கிடையில் புன்னகை நெளிந்தது. காவிக்குள் மறைத்து வைத்திருந்த வாளை வெளியே எடுத்தார். கைப்பிடியில் முத்தம் ஒன்றைப் பதித்தார்.

அதே நேரம் - தென் திசையில் வெளிச்ச புள்ளி ஒன்று தெரிந்தது.



அது மெல்ல அசைந்தது மேலும் கீழும்.

திடீரென்று - கீழ் திசையில் பெரிதாய் ஒலி ஒன்று எழுந்தது.

"தகர தகர தம்.. தகர தகர தம்" - தாரைத் தப்பட்டங்கள் வானத்து இடியின் குரல் எடுத்து முழங்கின.

அதைத் தொடர்ந்து - சிறைச்சாலை இருந்த இடத்தைச் சுற்றியுள்ள பூமியில் மனித கம்பங்கள் முளைத்தன. மின்னல் வேகத்தில் இடியாய் ஓடின கோட்டை வாயிலை நோக்கி.

"அலையும் கடல் உண்டு - முருகா

ஆனந்த வேலுமுண்டு - அரோகரா"

- கடற்கரை நாயக்கரின் குரல் ஓங்கி ஒலித்தது. அடுத்து பொங்கி வந்தது புரட்சி வீரர்கள் குரல்.

சிவத்தையா தன் கையிலிருந்த கைவெடிகுண்டின் வெடிக்கும் சக்தியை அழுத்தி வைத்திருந்த பகுதியை பல்லால் கடித்து விடுவித்தான். மறுவினாடி கோட்டைக் கதவை குறிவைத்து எறிந்தான்.

"ட்டொமால்" - என்ற பெருஞ்சத்தத்துடன் கதவு தகர்ந்து சிதறியது. உள்ளே புயலாய் நுழைந்தது புரட்சிப் படை. விழித்துக் கொண்டனர் சிறைக் காவலர்கள்.

தங்கள் கரத்திலிருந்த துப்பாக்கிகளை புரட்சி வீரர்களின் நெஞ்சுக்குத் திரும்பினர். குண்டுகளை உமிழ்ந்தன. வேக வேகமாய் புரட்சி வீரர்களின் கைத் துப்பாக்கிகளும் சீறின.

சிறைச்சாலைக்குள் பாய்ந்த புரட்சி வீரர்கள் கண்ணில் எதிர்ப்பட்ட கும்பினிச் சிப்பாய்களை வெட்டி வீழ்த்தினர்.

சிறைச்சாலை மைதானமெங்கும் புரட்சி ஒலிகளும், சிறைக் காவல் வீரர்களின் அலறல் ஒலிகளும் கேட்டன.

நிலைமையின் விபரீதம் புரிந்த ஒரு கும்பினிச் சிப்பாய் அவசரமாய் ஓடினான் மைதானத்தில் நின்று கொண்டிருந்த பீரங்கியை நோக்கி.

ஓடிச் சென்ற வேகத்தில் அந்த சிப்பாய் பன்னிரெண்டு பவுண்டு பீரங்கி மீது விழுந்தான். ஒன்பது பவுண்டு குண்டை வயிற்றில் வைத்திருந்தது அந்த பீரங்கி.

புற்றிலிருந்து வெளிவரும் ஈசல் கூட்டம் போல கோட்டை வாயில் வழியே உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர் புரட்சி வீரர்கள். அவர்களை நோக்கித் திரும்பினான் பீரங்கியை. இயக்கினான் விசுவாச வேகத்தோடு.

கறுப்பு எமனாய் புறப்பட்ட ஒன்பது பவுண்டு குண்டு உற்சாக ஒலி எழுப்பி வான் காற்றில் மிதந்து நெருப்புக் கோளமாய் புரட்சி வீரர்கள் மத்தியில் விழுந்து மிகப் பெரிய சத்தத்துடன் வெடித்து சிதறியது. அன்னை மண்ணுக்காய் உயிர் இழந்தனர் சில புரட்சி வீரர்கள்.

வெற்றிப் பெருமிதத்துடன் பீரங்கியை அடுத்த வீச்சுக்கு கெட்டித்து தயார் செய்த கும்பினிச் சிப்பாய் - "ஆ"

- என்ற அலறலுடன் மல்லாந்து விழுந்தான். அவன் நெஞ்சில் குத்தி நின்றது கூர் ஈட்டி ஒன்று. கடைசி ஆசையாய் ஈட்டி வந்த திசையை திரும்பி பார்த்தன அவன் கண்கள்.

"குதிரை மோகினி" - என்று உச்சரித்து ஓய்ந்தன உதடுகள்.

"டிங்.. டிங்.. டிங்.." - வெண்கல எச்சரிக்கை மணி ஒலித்தது. பக்கத்து கான்வஸ் துணி கூடாரங்களில் தூங்கிக் கொண்டிருந்த வெள்ளைப் படை எழுந்து ஓடி வந்தது.



மோகன வல்லியின் கவனம் எச்சரிக்கை மணியை அடித்துக் கொண்டிருந்த வெள்ளைச் சிப்பாயின் மீது பாய்ந்தது. தன் குதிரையை அந்த திசையில் ஓட விட்டாள்.

அதற்குள் அந்த இடத்திற்கு வந்திருந்தான் இளைய பாண்டியன். கை வாள் சுழன்றது. 'ஆ' என்ற அலறலுடன் வெட்டுண்ட கையை உதறினான் வெள்ளைச் சிப்பாய். நழுவி விழுந்தது கத்தியல். வாளின் அடுத்த வீச்சில் கயிறு அறுந்து வெண்கல மணி தரையில் விழுந்து ஒலி எழுப்பியது.

வேகமாய் வந்த வெள்ளைப்படை இரண்டாக பிரிந்தது அவசரமாய். சிறைவாசலை அடைத்துக் கொண்டு நின்றது ஒரு பிரிவு. வெள்ளைப் படையின் மற்றொரு பிரிவு துப்பாக்கியைச் சீற விட்டது, சிறையின் கதவுகளை உடைக்க முயன்ற புரட்சி வீரர்கள் மீது.

இளைய பாண்டியன் வாளும் மோகனவல்லியின் வாளும் ஒருமுறை முத்தமிட்டுப் பிரிந்தன.

மோகனவல்லியின் குதிரை கோபமாய் பாய்ந்தது வெள்ளைப் படை நின்ற திசை நோக்கி.

இளைய பாண்டியன் விரட்டி விரட்டி வெள்ளைத் தலைகளை மண்ணில் வீழ்த்திக் கொண்டிருந்தான். அவன் வாளில் சீமை எலிகளின் சிவப்பு இரத்தம்.

எங்கும் ஆ.. ஆ.. என்ற அலறல் ஒலிகளும் துப்பாக்கி களின் தடதட ஒலியும், வெள்ளை நாரைகளின் ஆங்கில கூச்சலும், புரட்சி வீரர்களின் உற்சாக ஒலியும் கேட்டன.

அந்த இடத்தில் மேகத்துக்கு போட்டியாய் புழுதிப் படலமும், பீரங்கி விட்ட பெருமூச்சாய் கறுப்பு புகைப் படலமும் எழுந்தது. எங்கும் வெடிமருந்தின் கந்தக வாசனை காற்றில் கலந்திருந்தது.

இந்த நேரத்தில் எங்கிருந்தோ பாய்ந்து வந்தது புரட்சிப் படை பிரிவு ஒன்று. தலைமை தாங்கி வந்தனர் சிவத்தையாவும், முத்துவீரனும்.

வீரர்களின் கை வெடிகுண்டுகள் கோபமாய் மோதி சிதறடித்தன சிறைச்சாலை சுவர்களை.

சிறை வாசலை சூழ்ந்து நின்ற வெள்ளைப் படையை வெட்டி வீழ்த்தி விட்டு ஆவேசமாய் உள்ளே நுழைந்தது புரட்சிப்படை.

சிறையின் அறைக் கதவுகள் உடைத்து திறக்கப்பட்டன. காத்திருந்தவர்கள் போல உற்சாகக் குரல் எழுப்பி ஓடினர் கைதிகள்.

ஊமைத்துரையை அடைத்திருந்த சிறைக்கதவும் உடைக்கப்பட்டது. அதற்கு தன் கை விலங்கை உடைத்திருந்த ஊமைத்துரை ஆவேசமாய் வெளியே வந்தார். ஒரு புரட்சிவீரன் கையிலிருந்த வாளை அவசரமாய் கையில் வாங்கிக் கொண்டு வெறி வந்தவர்போல வெளியே ஓடிவந்தார்.

இருபுறமும் ஓடி வந்தனர் முத்துவீரனும், சிவத்தையாவும். அவர்களைப் பின் தொடர்ந்தனர் வீரர்களும், கைதிகளும்.

எதிரில் வந்த கும்பினிச் சிப்பாய்களின் தலைகள் ஊமைத்துரையின் வாள்வீச்சில் தரை தொட்டன.

எதிர்ப்புகளை எல்லாம் வீழ்த்திவிட்டு வெளியே வந்தது புரட்சிக் கூட்டம். அருகிலிருந்த குதிரைக் கொட்டடி உடைக்கப்பட்டு கொண்டு வரப்பட்ட குதிரைகளுடன் காத்திருந்தார் கடற்கரை நாயக்கர்.

தயாராய் இருந்த குதிரை ஒன்றில் தாவி ஏறினார் ஊமைத்துரை.



கையில் குதிரைச் சவுக்குடன் குதிரையில் - குறுக்கே வந்தான் லெப்டினண்ட் கார்வென்ஸ். அவனுக்கு பின்னால் முத்துக்கருப்பன்.

ஊமைத்துரை கைவாள் கோபமாய் சுழன்றது.

தலை இல்லாத கார்வென்ஸ் உடலை சுமந்து கொண்டு ஓடியது குதிரை. சிவத்தையாவின் குறுவாளை இடுப்பில் வாங்கிக் கொண்டு குதிரையிலிருந்து தலைகுப்புற விழுந்தான் முத்துக் கருப்பன்.

அடுத்த விநாடி -

ஊமைத் துரையை சுமந்து கொண்டு ஓட ஆரம்பித்தது குதிரை. பின் தொடர்ந்தனர் புரட்சி வீரர்கள். அவர்களுடன் மல்லம்மா இருந்தாள்.

கடைசியில் இளைய பாண்டியனை சுமந்தபடி ஓடியது ஒரு கரும்புரவி.

''வீரரே'' - என்று பக்கவாட்டில் குரல் கேட்க திரும்பினான்.

தலையில் இரத்தம் வழிய ஓடிவந்தாள் மோகனவல்லி. அவளை அப்படியே தூக்கி குதிரையில் வைத்துக் கொண்டான். இருவரையும் சுமந்து கொண்டு வேகமாய் ஓட ஆரம்பித்தது கரும்புரவி பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி.

36650
539873